சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்

திருப்பரங்குன்றம்

சிவஸ்ரீ M. சுவாமிநாதபட்டர் - ஸ்ரீமதீ S. ஸரஸ்வதீ

தம்பதிகள்

மணி விழா மலர்

01-02-2010

சிவநெறிக் கழகம்

பிள்ளையார்பட்டி.



ஈசான சிவசக்தி
ஸ்ரீமதி S.ஸரஸ்வதீ

அகோர சிவாசார்யர்
சிவஸ்ரீ M. சுவாமிநாத பட்டர்

ஷஷ்ட்யப்த பூர்த்தி சாந்தி வைபவம்

மணிவிழா மலர்

தைமாதம் 19ம் நாள் 01.02.2010. திங்கட்கிழமை

சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்

<u>தம்பதிகள்</u>

திருப்பரங்குன்றம்

சிவஸ்ரீ. M. சுவாமிநாத பட்டர்

ஸ்ரீமதீ S. ஸரஸ்வதீ

மணிவிழா மலர்

01-02-2010

சிவநெறிக் கழகம்

பிள்ளையார்பட்டி

நூல் விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்
தொகுப்பு ஆசிரியர்	:	சிவஸ்ரீ. G. கார்த்திகேயசிவம்
மொழி	:	தமிழ்
எழுத்து	:	தமிழ், க்ரந்தம், தேவநாகரி
பொருள்	:	சைவாகம விளக்கம்
பதிப்பு ஆண்டு	:	2010
பிரதிகள்	:	500
தாள்	:	Dy. 8 kg. மேப்லித்தோ
நூல் அளவு	:	Dy. 1/8
பக்கங்கள்	:	284
கணினி வடிவமைப்பு & அச்சிட்டோர்	:	சங்கரா ஆய்வு நிறுவனம், தென்காசி
வெளியீடு	:	சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி

உ

மதுரை ஆதீனம்
292ஆவது குருமஹாஸன்னிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணகிரிநாத தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
ஆதீனகர்த்தர், மதுரை.

வாழ்த்துரை

திருப்பரங்குன்றம், ஆண்டவர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முதல் ஸ்தானிகரும், திருப்பரங்குன்றம் முன்னாள் நகர்மன்றத் தலைவரும் நமது அன்பிற்கினியவருமான **சிவஸ்ரீ M. சுவாமிநாத பட்டர் ஸ்ரீமதீ S. ஸரஸ்வதீ** தம்பதிகளின் **அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா 01.02.2010** அன்று நடைபெற இருப்பதும், அவ்விழாவில் **சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்** என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிடுவதையும் அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மணிவிழா நன்கு நடைபெறவும், தம்பதிகள் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், நூல்வெளியீடு சிறக்கவும், அங்கையற்கன்னி உடனமர் ஆலவாயண்ணலின் திருவருளைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

- ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானுடைய திருவருளால் நடைபெறும், திருப்பரங்குன்றம், ஆண்டவர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முதல் ஸ்தானிகரும், திருப்பரங்குன்றம் முன்னாள் நகர்மன்றத் தலைவரும் நமது அன்பிற்கினிய சம்பந்தியுமான **சிவஸ்ரீ M. சுவாமிநாத பட்டர் ஸ்ரீமதீ S. ஸரஸ்வதீ** தம்பதிகளின் **அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா** நடைபெறும் 01.02.2010 நன்னாளில் **சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்** என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த நூற்றாண்டில், தமிழகத்தின் தலைசிறந்த சிவாகம வல்லுனர்களாகவும், நம் சமுதாய முன்னோடிகளாகவும் விளங்கி, சிவாகமங்களைக் கட்டிக்காத்து, சமூகசேவைகள் பலபுரிந்து, ஆயிரக்கணக்கான மக்களுக்கு சிவதீக்ஷை செய்வித்து, போற்றத்தக்க குருமார்களாக விளங்கிய, சென்னிமலை ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகள், திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணி சிவம், தருமபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யார், திருவாவடுதுறை சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யார், கண்டனூர். சிவஸ்ரீ ராமலிங்கக் குருக்கள், சென்னை. சிவஸ்ரீ ஸபாரத்ன சிவாசார்யார், இலங்கை, அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள், நயினை சிவஸ்ரீ கைலாசநாத குருக்கள், ஆகியோரது அரிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன.

அதேபோல இந்த நூற்றாண்டில், சைவாகம வல்லுனர்களாக விளங்கும் காஞ்சீபுரம் சிவஸ்ரீ ராஜப்பா சிவாசார்யார், சென்னை சிவஸ்ரீ ஸபாரத்ன சிவாசார்யார், திருப்பரங்குன்றம் சிவஸ்ரீ ராஜா பட்டர், மயிலாடுதுறை சிவஸ்ரீ ரவிசுவாமிநாத சிவாசார்யார், சென்னை சிவஸ்ரீ அருணசுந்தர சிவாசார்யார் ஆகியோரது அருமையான கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

1936ம் ஆண்டுகளில் இருந்து வெளிவந்த பல மாத இதழ்களையும், கும்பாபிஷேக மலர்களையும், கட்டுரைகளையும் தேடி அரும்பாடுபட்டு, இக்கட்டுரைகள் தொகுக்ககப்பட்டுள்ளன. நம் சைவசமய அன்பர்கள் யாவரும் படித்துப் பயனடையவேண்டும், இதுபோன்ற பழைய கட்டுரைகள் யாவும் வெளிவரவேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூலானது வெளியிடப்படுகிறது.

இந்நூல் வெளியீடு நல்லமுறையில் வெளிவரப் பணியாற்றிய, நமது அன்பிற்கினிய, திருப்பரங்குன்றம் சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம் அவர்களுக்கும், நூலை நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த தென்காசி சங்கரா டிரஸ்ட் நிறுவனத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, மணிவிழா தம்பதிகளுக்கும், நூல்வெளியீட்டுப் பணியில் ஈடுபட்ட மற்ற அனைவருக்கும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

அன்புடன்

சிவஸ்ரீ. K பிச்சை சிவாசார்யார்

ஸ்தாபகர்,

சிவநெறிக்கழகம்,

பிள்ளையார்பட்டி.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

சிவமயம்

யேந யேந ஹி ரூபேண ஸாதக: ஸம்ஸ்மரேத் ஸதா !

தஸ்ய தந்மயதாம் யாதி சிந்தாமணிரிவேச்வர: !!

ஸர்வ - ஸ்ரோத - ஸங்க்ரஹ - ஸார:

முன்னுரை

"சிவாகமக் கட்டுரைக் களஞ்சியம்" என்ற தலைப்பில் சிவாகம அறிஞர்கள் பலரின், பழைய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட வேண்டும் என்பது எனது நீண்டநாள் அவா.

அடியேன் சிங்கப்பூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் பணியாற்றும் போது எங்களது ஆலயத்தின் எதிர்த்தெருவில் { CUFF ROAD } அமைந்துள்ள E.V.S எனும் புத்தகாலயத்திற்கு அடியேன் அடிக்கடிச் செல்வதுண்டு. அப்படிச் செல்லும்போது ஒருநாள் அங்கு நடைபெற்ற ஆலயங்களின் கும்பாபிஷேகமலர் சிலவற்றைப் பார்க்க நேரிட்டது. அதனுள் "திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணி சிவம்", "தருமபுரம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசார்யார்" போன்ற பெரியோர்கள் பலரால் எழுதப்பட்ட பல அரிய கட்டுரைகள் இருப்பதைக் கண்டு, அந்தக் கடையின் உரிமையாளர் அவர்களிடம் இதுபோன்ற நூல்கள் வேறு எங்காவது இருந்தால் அதையும் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டேன். அவரும் அதற்கிணங்க சிங்கப்பூர், மலேஷியா மற்றும் இலங்கை நாடுகளில் நடைபெற்ற பல ஆலயங்களின் கும்பாபிஷேக மலர்களை வாங்கித்தந்தார். அன்று அவர் அவ்வுதவியைச் செய்யவில்லையென்றால் இன்று பல கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றிருக்காது. அவர் இன்று இருக்கிறாரா என்பது தெரியவில்லை. அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகள் எழுதிய சைவசித்தாந்தம் எனும் கட்டுரையும், கண்டனூர் சிவாகம வித்வான் சிவஸ்ரீ அரு. ராமநாதக் குருக்கள்

எழுதிய ஆகமம் எனும் கட்டுரையும், கோயமுத்தூர், ஆதிசைவ சபையினர் 1936களில் நடத்திக் கொண்டிருந்த "சிவாகம வித்யா" என்ற மாதாந்திரப் பத்திரிகையில் இருந்து எடுக்கப்பட்டவை. இச்சபையினர் பல ஆண்டுகாலம் ஆதிசைவ சமுதாயத்திற்குப் பல்வேறு நற்பணிகளைச் செய்துள்ளனர். மிகவும் போற்றத்தக்கது அவர்களது பணி.

சிவாகம வித்யா என்ற பத்திரிகையை அவர்கள் எவ்வளவு காலம் நடத்தினார்கள் என்றுத் தெரியவில்லை. ஆனால் அவற்றுள் பல பெரியவர்கள், பல்வேறு அரிய பெரிய விஷயங்களைப் பற்றி அருமையாக எழுதியுள்ளார்கள். அவற்றை எல்லாம் மீண்டும் வெளியிடுதல் அவசியம். அவற்றின் ப்ரதிகள் அனைத்தும் கிடைத்தால்தான் அது சாத்தியமாகும். அடியேன் பலவாறு முயன்றும் அவைக் கிடைக்கவில்லை. அரும்பாடுபட்டு அவற்றுள் சில ப்ரதிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றை எனக்கு வழங்கிய "தென்சேரிமலை, சிவாகம ஞானபானு, சிவஸ்ரீ பாலகணபதி சிவம்" அவர்களுக்கும், "சென்னிமலை, சிவாகம பாஸ்கர, சிவஸ்ரீ உமாபதி சிவம்" அவர்களுக்கும், "திருச்செங்கோடு சிவஸ்ரீ விஜயஸுப்ரஹ்மண்ய சிவாசார்யார்" அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கடலூர் சிவஸ்ரீ சம்பந்த சிவாசார்யார்" அவர்களால் வெளியிடப்பட்டுக்கொண்டிருந்த "சைவ ஆலயம்" என்ற மாதப் பத்திரிகையிலும் பல அரிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவை தொடராக வந்துகொண்டிருந்த காரணத்தால், எனக்குக் கிடைத்த பாகங்களுள் அவை முழுமையாகக் கிடைக்கவில்லை. எனவே அவற்றை வெளியிட முடியவில்லை. இதைக் காணும் அன்பர்கள் தங்களிடம் "சிவாகம வித்யா" அல்லது "சைவஆலயம்" ஆகிய பத்திரிகைகள் இருந்தால் தயவுசெய்து அதை எனக்கு அனுப்பித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல காலமாகச் சேகரித்து வந்த நூல்களுள் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பல இன்று மீண்டும் வெளிவருகிறது என்பதை நினைக்கும்போது மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கிறது.

இந்நிலையில் இப்படி ஒருநூலை வெளியிட வேண்டும் என்றுக் கூறி, அதற்கான பணியில் என்னை அமர்த்திய, பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ கி. பிச்சை சிவாசார்ய ஸ்வாமிகள் அவர்களது திருவடித்தாமரைகளை வணங்கி மகிழ்கிறேன்.

அவரது வழிகாட்டுதலின் வண்ணம் "சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்" என்ற பெயரில் சுமார் 20 கட்டுரைகள் தற்போது வெளிவருகின்றன.

இவற்றுள் 'பஞ்ச பர்வங்கள்' மற்றும் 'செந்திநாதையரின் வாழ்வும் பணியும்' என்ற இரு கட்டுரைகளைத் தவிர, பிற அனைத்தும் முன்னரே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

இப்படி ஒரு அருமையான நூலை எங்களது திருப்பரங்குன்றம் முதல் ஸ்தானிகரும், முன்னாள் பஞ்சாயத்துத் தலைவருமான சிவஸ்ரீ M.சுவாமிநாத பட்டர், ஸ்ரீமதீ ஸரஸ்வதீ தம்பதிகளின் மணிவிழாமலராக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். கட்டுரை எழுதிய ஆசிரியப் பெருமக்களுக்கும், அதை வெளியிட்ட வெளியீட்டாளர்களுக்கும், நூலை நல்ல முறையில் வடிவமைத்துத் தந்த தென்காசி சங்கரா ஆய்வு நிறுவனத்தாருக்கும், அழகான முறையில் அச்சிட்டுத்தந்த தென்காசி அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நூலாக்கப்பணியில் உதவிய ஸ்ரீ ஸ்கந்தகுருவித்யாலய மாணவச் செல்வங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
பழைய வைதிகசைவம் பரக்கவே
ஹர நம: பார்வதீ பதயே ஹர ஹர மஹாதேவ

பேரன்புடன்

..சிவசரண கமலைக சரண்யன்
சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம்
ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்,
திருப்பரங்குன்றம்.

இந்நிலையில் இங்கு, ஒருநாவல் வெளியிட வேண்டுமே என்று எண்ணி, அதற்கான பணியில் ஈடுபட்டேன், அதற்குத் துணை புரிந்தவர்களுக்கு எனது நன்றி. பிரசுர வேலையில் ஈடுபட்டு பெரும் உதவிகள் செய்த நண்பர்கள் பலருக்கும் நன்றி.

எனது முதலாவது நாவலான 'வீடற்றவன்' போன்ற கதைகளும் எனது பெயரில் சுமார் 20 வருடங்களாக வெளிவந்து விட்டன.

இந்நூலை அச்சுப் பதிப்பில் மற்றும் 'கொழும்பு' ஆகிய பதிப்புகளில் வெளியிட ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றி.

இப்படி ஒரு நாவலை எழுதத் தூண்டிய எனது இலக்கிய நண்பர்களுக்கும், இது போன்று பல நாவல்களை எழுத உற்சாகமூட்டிய எனது குடும்பத்தினருக்கும், அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் எனது நன்றி. நூலைப் படித்து உங்கள் கருத்துக்களை எழுதுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்நாவலின் ஆக்கத்திற்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாசகர்களின் விமர்சனங்களை எதிர்பார்க்கும்

அன்புடன்

சி. இராமநாதன்

உ

சிவமயம்

விழா நாயகரின் வாழ்வும் பணியும்

நகரச் சிறப்பு :

"குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாகக் குவலயத்தோர் வழிபடட்டும்" என்ற பார்வதி தேவியாரின் ஆணையின்படி, குன்றங்களின் அரசனாக விளங்குகின்றான் முருகப்பெருமான். அப்படி விளங்குகின்ற தலங்களுள் முதன்மையாகக் கருதப்படுபவை அறுபடை வீடுகள் என வழங்கப்பெறும். அவற்றுள் முதல் படை வீடாகவும் தெய்வானைத் திருமணம் நடைபெற்ற தலமாகவும் விளங்குவது திருப்பரங்குன்றம்.

இத்தலத்து இறைவன் பரங்கிரிநாதர் எனும் ஸத்யகிரீச்வரர். இறைவி ஆவுடைநாயகி எனும் கோவர்த்தனாம்பிகை. ஆதியில் சிவத்தலமாக இருந்தாலும், அம்பிகையின் ஆணையால் இன்று முருகப் பெருமானின் க்ஷேத்திரமாகவே விளங்குகின்றது. இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மும்மைச் சிறப்புகளும் பெற்ற இத்தலம் மூவரால் பாடல் பெற்றது. நக்கீரர், அருணகிரிநாதர் ஆகியோராலும் போற்றப் பெற்றது.

இத்தலத்து இறைவனையும் இறைவியையும் தொட்டுத் திருமுழுக்காட்டும், முப்போதும் திருமேனி தீண்டுவார் என்றும் ஆதிசைவர் என்றும் வழங்கப்படும் சிவாசார்ய வம்சத்தில், ஆலய சேவையோடு 20 ஆண்டுகாலம் நகர்மன்றத் தலைவராக இருந்து, சுற்றுப்பட்டி கிராம மக்களின் மனதில் இன்றும் தெய்வமாக வாழும் அமரர் சிவஸ்ரீ. முத்துசுப்பிரமணிய பட்டர் (பிச்சை பட்டர்), ஸ்ரீமதீ அனந்தலக்ஷ்மீ தம்பதிகளுக்கு மூத்த மகனாக சென்ற விரோதி வருடம் தைமாதம் பூரநக்ஷத்ரத்தன்று (04-02-1950) தோன்றினார் நமது விழா நாயகர் சிவஸ்ரீ M. சுவாமிநாத பட்டர் அவர்கள். இவருடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் ஆவர். அவர்கள் அனைவருமே பலதுறைகளில் சிறந்து விளங்குகிறார்கள்.

இளவயதிலேயே மிகவும் துடிப்புடன் விளங்கிய இவர் பின்னாளில் தந்தையைப் போலவே சமூகப்பணி ஆற்றுவார் யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். இவர் தனது தொடக்கக் கல்வியை திருப்பரங்குன்றம் ஆரம்பப்பள்ளியிலும் நடுநிலைக் கல்வியை முத்துத்தேவர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியிலும் P.U.C முதல் பட்டப்படிப்பு (B.A) வரை மதுரைக் கல்லூரியில் பயின்றார்.

விளையாட்டில் அதிக ஆர்வம் கொண்ட இவர் பள்ளியிலும் கல்லூரியிலும் கால்பந்து, ஹாக்கி, கிரிக்கெட், கேரம் மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில் பங்குபெற்று மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பல பரிசுகளைப் பெற்றவர். குறிப்பாக கால்பந்து, மற்றும் ஹாக்கி விளையாட்டுகளில் பல்கலைக்கழக வீரராகத் திகழ்ந்தவர்.

மதுரை மாவட்டக் கேரம் சங்கத்தலைவராக 10 ஆண்டுகள் பணியாற்றி தேசிய அளவில் சிறந்த வீரர்களை உருவாக்கியுள்ளார். தற்போது M.S.P. “முத்து சுப்பிரமணிய பட்டர் கேரம் கிளப்” என்று தனது தந்தையாரின் பெயரில் கேரம் கிளப் அமைத்து நடத்தி வருகிறார். அச்சங்கம் மாவட்ட அளவில் சிறந்த சங்கமாக விளங்குகிறது.

வாழ்க்கையின் ஆரம்பப்பகுதியை நிறைவுசெய்து இல்லறமல்லது நல்லறமன்று என்ற காரணத்தினால் பெற்றோர்களின் நல்லாசியுடன் 08.07.1974 ஸௌபாக்யவதீ ஸரஸ்வதீ எனும் கன்னிகையை கரம் பிடித்து, இல்லறமாகிய நல்லறத்தை நடத்தத் தொடங்கினார்.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு - என்ற வாக்கிற்கிணங்க,

இறைவனருளால் சுமதி என்ற பெண்ணையும், சங்கர் என்ற ஆண்மகனையும் பெற்றார். இவர்களுள் மகள் சுமதி, கணவர் சதீஷ்குமார் மகன் ரிஷிக்குமார் ஆகியோருடன் அமெரிக்காவில் வசித்துவருகிறார். மகன் சிவஸ்ரீ சங்கர் சிவம், தைவிக விவாகமாக தனது குருநாதர் பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ பிச்சை சிவாசார்யாரின் இரண்டாவது திருமகள் ஸ்ரீமதீ கற்பகத்தை மணந்து, அபர்ணா

எனும் குமாரத்தியுடன் லண்டன் சிவயோகம் அறக்கட்டளையின் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் அர்ச்சகராகப் பணியாற்றுகிறார்.

1974 முதல் 1986 வரை திருக்கோயில் பணியைச் செம்மையாக செய்துவந்த இவரை, தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் அவரது பணியைத் தொடரவைத்தது காலம். 1986ல் தந்தையைப்போலவே சுயேச்சையாக நின்று அதிக வாக்குகள் வித்தியாஸத்தில் வெற்றிபெற்று நகர்மன்றத் தலைவரானார்.

1986 முதல் 2001 வரை 15 ஆண்டுகள் இவர் தலைவராக இருந்து இப்பகுதி மக்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து தந்துள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

1. தமிழக அரசின் நிதியுதவியுடன் திருப்பரங்குன்றத்தின் அனைத்துத் தெருக்களுக்கும் சிமெண்ட் சாலை அமைத்தது.
2. பொதுச்சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல பொதுக் கழிப்பறைகள் கட்டியது.
3. பக்தர்கள் பௌர்ணமியன்று கிரிவலம் வருவதற்கு உதவியாக மலையைச் சுற்றிலும் தார்ச்சாலை அமைத்து சோடியம் விளக்குகள் அமைத்தது.
4. மக்களின் அத்தியாவச்யமான குடிநீர் திட்டத்தை குறுகிய காலத்தில் விரிவுப்படுத்தியது.
5. புறநகர் விரிவாக்க நடவடிக்கைகள் எடுத்தது - ஆகியவை ஆகும்.

இவரது சமூகசேவையை பாராட்டி பல்வேறு அமைப்புகள் இவருக்கு பட்டங்கள் வழங்கியுள்ளன.

மதுரை அகில இந்திய நுகர்வோர் பாதுகாப்புக்கழகம், இவரது சமூகப்பணியை பாராட்டி 1998ல் The Best Outstanding President என்ற விருதை வழங்கியுள்ளது.

பெங்களூரிலிருந்து செயல்படும் INTERNATIONAL INTEGRATIVE PEACE SOCIETY என்ற அமைப்பின் வழியாக

The Best Outstanding Chairman in Tamil Nadu என்பதற்காக 2000ல் “பாரத்ஜோதி” எனும் விருது வழங்கியுள்ளது.

நகர் முரசு என்ற மதுரையைச் சேர்ந்த பத்திரிகை நிறுவனமானது இவரது பொதுச்சேவையைப் பாராட்டி “ஜோசப்” விருதை 2001ல் வழங்கியுள்ளது.

மதுரையிலிருந்து செயல்படும் “பாரதி யுவகேந்த்ரா” என்ற நிறுவனம் இவரது ஆன்மீகச் சேவையைப் பாராட்டி “பாரதி புரஸ்கார்” எனும் விருதை 2003 ஆண்டு வழங்கியது.

இப்படி பல்வேறு பணிகளையும் செய்து பட்டங்கள் பெற்று நிறைவான மனிதராக வாழும் சிவஸ்ரீ M. சுவாமிநாத பட்டர், தாயார் ஸ்ரீமதீ.S. ஸரஸ்வதீ ஆகியோரின் மணிவிழாவில் இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஆசியுடன்

விழாக்குழுவினரின் சார்பாக

சிவஸ்ரீ M. கல்யாணசுந்தர பட்டர்

மதுரை

விழா நாயகரின் தந்தையார்
சிவஸ்ரீ முத்துசுப்ரமண்ய பட்டர்

கல்லூரி மாணவனாக

உபநயன விழாவில்

கால்பந்து விளையாட்டில்
மாவட்ட அளவிலான பரிசு பெறுதல்

திருமணக் கோலத்தில்

திருப்பரங்குன்றம் தேரோட்டத்தில்



ஆசார்யாபிஷேக விழாவில்

தேர்த் திருவிழாவில்
முதல் மரியாதை பெறுதல்

கேரம் கிளப்பில் பரிசு வழங்குதல்

உரையாற்றுதல்

சமூக விழாவில்

மகனின் நிச்சயதார்த்த விழாவில்

பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ K. பிச்சை சிவாசார்யா
மற்றும் அமெரிக்கா ஹரிஹரன் அவர்களுடன்

பிள்ளையார்பட்டி அண்ணாவுடன்

தேனி ஸ்ரீமத் ஓங்காரானந்த
ஸரஸ்வதி ஸ்வாமிகளுடன்

மகளும் மருமகனும்

மகனும் மருமகளும்



பேரன் ரிஷி குமார்

பேத்தி அபர்ணா

க
க
க
க
க்
க
க
க
க
க
க
க
க
க
க
க

உ

சிவமயம்

திருப்பரங்குன்றம்

ஆண்டவர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

முதல் ஸ்தானிகர்,

திருப்பரங்குன்றம் முன்னாள் நகர்மன்றத் தலைவர்

சிவஸ்ரீ M. சுவாமிநாத பட்டர் ஸ்ரீமதீ S. ஸரஸ்வதீ

தம்பதிகளின்

அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா

குழுவினர்

தலைவர்

சிவஸ்ரீ M. கல்யாணசுந்தர பட்டர், மதுரை

உறுப்பினர்கள்

சிவஸ்ரீ K. பிச்சை சிவாசார்யார், பிள்ளையார்பட்டி
சிவஸ்ரீ D. சுப்பிரமணிய பட்டர், திருப்பரங்குன்றம்.
சிவஸ்ரீ S.K ராஜாபட்டர், திருப்பரங்குன்றம்.
சிவஸ்ரீ S. சொக்குசுப்பிரமணிய பட்டர், திருப்பரங்குன்றம்
சிவஸ்ரீ S. ஷண்முகசுந்தர பட்டர், திருப்பரங்குன்றம்
சிவஸ்ரீ S. ராமலிங்கக் குருக்கள், தஞ்சாவூர்
சிவஸ்ரீ S. உக்ரபாண்டிய பட்டர், மதுரை
சிவஸ்ரீ M. சோமசுந்தர குருக்கள், பிள்ளையார்பட்டி
சிவஸ்ரீ V. சேதுராமக் குருக்கள், க்ஷேத்ரபாலபுரம்
சிவஸ்ரீ S. கண்ணன் குருக்கள், புதுக்கோட்டை
சிவஸ்ரீ S. முத்துச்சாமி பட்டர், சிவகாசி
சிவஸ்ரீ P. பாலசுப்ரமண்ய பட்டர், ஆரல்வாய்மொழி
சிவஸ்ரீ D. தெய்வசிகாமணி பட்டர், மானாமதுரை
சிவஸ்ரீ M. சிவானந்த பட்டர், மதுரை
சிவஸ்ரீ H. சோமசுந்தர பட்டர், சிங்கம்பட்டி
சிவஸ்ரீ G. கார்த்திகேய சிவம், திருப்பரங்குன்றம்.

சிவநெறிக் கட்டுரைக் களஞ்சியம்

பொருளடக்கம்

எண்	கட்டுரைத் தலைப்பு	பக்க எண்
1	சமயமும் சமுதாயமும் மதுரை ஆதீனம் 292ஆவது குருமஹாஸன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.	1
2	உள்ளொளி பெருக்கும் வழி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசார்ய ஸ்வாமிகள், குன்றக்குடி	9
3	ஈசர் பாகத்து நேரிழை திருப்பனந்தாள், காசித்திருமடம், ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் ஸ்வாமிகள் திருப்பனந்தாள்.	15
4	சைவகாலப்பகுப்பு சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள், அச்சுவேலி	21
5	சைவ ஸித்தாந்தம் சைவசித்தாந்த சரபம் காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகள், பழனி	49
6	ஆகமம் சிவாகம வித்வான் சிவஸ்ரீ.அரு. இராமநாத குருக்கள், கண்டனூர்.	63
7	கும்பாபிஷேக க்ரியா விளக்கம் ப்ரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாஸநாத குருக்கள், நயினாதீவு.	71
8	நித்யபூஜையும் அதன் தத்துவமும் சிவாகம ரத்னாகரம் சிவபுரம் சிவஸ்ரீ ச. சுவாமிநாத சிவசார்யார், மயிலாடுதுறை.	83

9 மஹோத்ஸவ விளக்கம் 97
சைவாகமமணி சிவஸ்ரீ ஐயாமணி சிவம்,
திருவாடானை

10 மாரியம்மன் மஹிமை 105
சிவாகம ரத்னம் சிவஸ்ரீ சுவாமிநாத சிவசார்யார்,
திருவாவடுதுறை.

11 உண்மை நெறி விளக்கம் 113
சாஸ்த்ரசூடாமணி K.A ஸபாரத்ன சிவாசார்யார்,
சென்னை

12 சிவாகமங்களின் சிறப்பு 133
சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கி. பிச்சை சிவாசார்யார்,
பிள்ளையார்பட்டி

13 மஹோத்ஸவம் 141
சிவாகம ரத்னாகரம்
சிவஸ்ரீ சாளவ ராஜப்பா சிவாசார்யார். காஞ்சீபுரம்

14 பஞ்ச பர்வங்கள் 16
சிவாகம சிரோமணி சிவஸ்ரீ க. ராஜா பட்டர்,
திருப்பரங்குன்றம்

15 ஆதிசைவர்மரபும் ஆகமங்களும் 17
சிவாகம, சிற்பாகம கலாநிதி
சிவஸ்ரீ S. P ஸபாரத்ன சிவாசார்யார், சென்னை

16 சிவாகமங்களும் சிவதீக்ஷைகளும் 18
சிவாகம ப்ரவீணர்
சிவஸ்ரீ A.V சுவாமிநாத சிவசார்யார்,
மயிலாடுதுறை.

17 சிவாகமங்களில் சைவஸித்தாந்தம் 21
வ்யாகரண சிரோமணி, சிவாகமச் செல்வர்
சிவஸ்ரீ ஸே. அருணஸீந்தர சிவாசார்யார், சென்னை

18 காசிவாஸி சாம்பவஸ்ரீ செந்திநாதையர்
வாழ்வும் பணியும் 23
சிவாகம பாஸ்கர சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம்
திருப்பரங்குன்றம்.

சமயமும் சமுதாயமும்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
ஆதீனகர்த்தர், மதுரை ஆதீனம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சமயமும் சமுதாயமும்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
ஆதீனகர்த்தர், மதுரை ஆதீனம்

உலக மக்கள் அனைவரும் சமயநெறியில் ஈடுபட்டு, இன்ப வாழ்வினைப் பெற்று உய்ய வேண்டும் என்னும் பெரு நோக்கங் கொண்டே, நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்தனர். அதனாலேயே, தாங்கள் படைத்த சாத்திர, தோத்திர, இதிகாச, புராண இலக்கியங்களில் எல்லாம், கடவுள் வாழ்த்துக் கூறும்போது, உலகத்தை நினைத்தே பாடியிருப்பதைக் காணமுடிகிறது.

எடுத்துக்காட்டாக, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்", "உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்", உலகம் உவப்பவலன் ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு", "ஆதிபகவன் முதற்றே உலகு" முதலிய தொடர்களைக் குறிப்பிடலாம்.

பழங்காலம் முதலே, நமது முன்னோர்களுக்குத் தங்களது வாழ்வில் ஒழுங்கு, அமைதி, நீதி, இன்பம், அன்பு, பண்பாடு, மனிதத் தன்மை ஆகியவை இருத்தல் வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வத்தின் தூண்டுதலே சமயமாக மலர்ந்தது.

சமயச் சிந்தனை

சமயம் என்பது, மனிதனின் மனத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்துவது, அவனுடைய வாழ்வில் நிகழும் ஆவேச உணர்வு, பரபரப்பு உணர்வு, பிறருக்குத் துன்பம் இழைக்கும் தீய உணர்வு ஆகியவற்றை அடக்கி, அவனை நல்வாழ்க்கைக்குப் பக்குவப்படுத்துவது,

சமயம் என்பது சமுதாயத்தை ஒட்டியதே ஆகும். சமயம் வேறு சமுதாயம் வேறு அல்ல, சமுதாயமானது, சமயத்தை ஏற்று

வாழ்வதுதான் சமய வளர்ச்சி என்று கொள்ளல் வேண்டும். சமயமின்றிச் சமுதாயமோ, சமுதாயமின்றிச் சமயமோ இல்லை என்று கூறலாம்.

நம்முடைய சமய வாழ்க்கைக்காகக் கடந்த 2000 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறள் தோன்றியது. அதன்பின்னர் திருமுறைகளும் தோன்றின. அவை, வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் தந்தன. தராதது ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட சமயம், நம்முடைய சமுதாயத்தில் இன்னும் முழு அளவில் ஊடுருவி வளர்ச்சி பெறவில்லை.

அப்படி வளர்ச்சி பெறுவதற்கு, நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பல உள்ளன. வயது வந்தவர்கள் ஒருபுறம் இருக்க, வளரும் சமுதாயத்தின் முதற்படியில் இருப்பவர்கள் நமது மாணவர் சமுதாயமே. அதாவது இளந் தலைமுறையினர். இந்த இளந் தலைமுறையினரை முதலில் சமயநெறியில் ஈடுபடுத்துதல் வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவ மாணவிகட்குச் சமய நெறியினைப் போதிக்க வேண்டும்.

மனிதத் தன்மையும், சிந்தனையும், பண்பாடும், பிறரை மதிக்கும் பெருங் குணமும், பெருந்தன்மையும் அவர்களிடத்தில் வளர்ந்திடுதல் வேண்டும். அதற்கேற்ப சமயப் பற்றும், இறை உணர்வும், நல்லொழுக்கமும் மிகுந்தவர்கள் ஆசிரியர்களாக வரவேண்டும். நன்னூல் ஆசிரியரும், ஆசிரியர் இலக்கணம் கூறும்போது, "தெய்வ நம்பிக்கை" உடையவராக இருத்தல் வேண்டும் என்று

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை'

- (நன்-பாயிரம் 26)

என்னும் அடியின் மூலம் குறிப்பிடுகிறார்.

இத்தகைய பணிகளை மேற்கொள்வதற்கு, தற்காலச் சமுதாயமும், ஆட்சியாளர்களும் ஒன்றியிருந்து ஏற்பாடுகளைச் செய்திடல் வேண்டும். எனவே இளந் தலைமுறையினரைத் திருத்தும் பணிதான் அனைவராலும் முதன் முதல் செய்யப்பட வேண்டிய அடிப்படைப் பணியாகும்.

எங்கும் நிறைந்தவனை வழிபடுவோம்

எங்கும் நிறைந்தவன் இறைவன், "பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணாந்தமே", "அங்கிங்கெனாதபடி, எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது" என்று தாயுமான சுவாமிகள் கூறுவார்.

அப்படிப்பட்ட எம்பெருமான், கிடைத்ததற்கரிய மனிதப் பிறவியான நமக்கு இரண்டு உடம்புகளைத் தந்திருக்கிறான். ஒன்று நாம் வெளியில் காண்கின்ற தூல உடம்பு, மற்றொன்று சொப்பனத்தில் தொழிற்படுகின்ற உள் உடம்பு, அந்த உள்உடம்பில்தான் உயிர் இருக்கின்றது. இது, தோலால் ஆகிய உதைபந்து. பந்துக்குள் பிளாடர் பிளாடருக்குள் காற்று என்பதுபோல ஆகிறது.

எனவே, அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நிறைந்திருக்கின்ற இறைவன், நாம் செய்து வருகின்ற எல்லா நன்மை தீமைகளுக்கும், சாட்சி மாத்திரமாகவே இருந்து, நம்மை ஆட்சிபுரிந்து வருகின்றான்.

அவன் எங்கும் இருக்கின்றான். ஆனால் ஞானிகள் திருவுள்ளத்திலும், திருக்கோயில்களிலும் சிறப்பாக விளங்கித் தோன்றுகின்றான். மற்ற இடங்களில் மறைதிருக்கின்றான்.

"ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே"

என்று மாணிக்கவாசகரும்,

"உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர் தொறும்.
ஒளித்து நின்ற கள்வன்"

என்று பரஞ்சோதி முனிவரும் கூறுவர்.

மூர்த்தி வழிபாடு

திருக்கோயில்களிலும், ஆகமங்களிலும், சாத்திரங் களிலும், தோத்திரங்களிலும், வேத உபநிஷத்துக்களிலும் விவரித்திருக்கின்ற மூர்த்திகள், சிற்பசாத்திர முறைப்படி சிலைகளாகத் தயாரிக்கப் பெற்று ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப் பெற்றவையாகும்.

எனவே, இப்பூவுலகில் நாம் வழிபடும் மூர்த்திகள் அனைத்தும் மேல் உலகங்களில் உள்ள மூர்த்திகளே ஆகும். அம்மூர்த்திகளின் வடிவங்களின் விவரத்தை விளக்குவதே சிற்பசாத்திரங்கள். அம்மூர்த்திகளின் பிரதிஷ்டை முறைகளை விளக்குவதுவே ஆகம சாத்திரங்கள். அம்மூர்த்திகள் அனைத்தும், மனிதன் தன்னுடைய கற்பனையினால் உண்டாக்கிய உருவங்கள் அல்ல; இந்துமதப் புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை மூலமும், இறந்தவர்கள் மூலமும் சான்றுகளைப் பெறுகிறோம்.

(1) பெரிய புராணத்தில் காரைக்கால் அம்மையார் ஊனுடம்பைக் களைந்து விட்டுப் பேயுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு சிவலோகம் சென்றதாகவும், அங்கு உமா மகேச்வரராகிய சிவபெருமான், "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காணும் உமையே" என்று உமாதேவியாருக்கு அறிவித்ததாகவும் காண்கிறோம். மேலும், பேயுடம்போடு இருந்தபோது பாடியவைதான் அற்புதத் திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையும் என்றும் அறிகின்றோம்.

(2) சுந்தரமூர்த்தி நாயனார் ஊனுடம்பைக் களைந்து விட்டு உள்ளுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு விண்ணுலகத்திலிருந்து வந்த வெள்ளை யானையின் மேல் ஏறிக்கொண்டு சிவலோகம் சென்றதும், அங்கு உமையொரு பாகனாகிய சிவபெருமான் அவரை நோக்கி, "ஊரனே வந்தனையா?" என்று கேட்டதும், அங்கு அவர் பாடிய "நொடித்தான் மலைத்" திருப்பதிகத்தையும் அவர் இப்பூவுலகத்துக்கு வந்த வரலாற்றினையும் காண்கிறோம்.

(3) அடுத்து, மகாபாரதத்தை எடுத்துக் கொண்டால், இந்திரன் தருமபுத்திரரை பரவாசுதேவர் எழுந்தருளியுள்ள நகரத்திற்கு அழைத்துப் போய், அங்கு வைகுண்ட நாதரையும், கிருஷ்ண பகவான் அஷ்டலெட்சுமியுடன் விளங்குவதையும் இறந்துபோன கர்ணன், பீமன், திரௌபதி, இளம்பாண்டவர் ஆகியோரையும் காட்டினான் என்றும், மகாவிஷ்ணு தம் அருகில் அமரும்படி அனுக்கிரகம் செய்தருளினார் என்றும் அந்தக் காட்சியைக் கண்டு யாவரும் மகிழ்ந்த புண்ணியத்தின் மகிமையை எண்ணிப் பூரித்தனர் என்றும் கூறி இருப்பதைக் காண்கிறோம்.

இவற்றிலிருந்து சிவலோகத்தில் சிவபெருமானும், வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவும், புண்ணியம் செய்த அருளாளர்கள் காணுமாறும், அவர்களோடு உரையாடுமாறும் இருந்து அருள்பாலிக்கிறார்கள் என்பதும் தெளிவாகும். அல்லாமலும், பக்தி உடையவர்களும், புண்ணிய சீலர்களும் இப்பூலோகத்தில் இறந்தபின், மேலுலகத்தில் கனவில் தொழிற்படுகின்ற பாரமில்லாத அவயவங்களோடு கூடிய உள்ளுடம்போடும், அவரவர்களுக்குரிய முந்திய பெயரோடும் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் தெளிவாகும்.

வழிபடு மூர்த்தியின் ஆற்றல்

அடுத்து, கல்லாலோ, செம்பாலோ, பிறவற்றாலோ செய்த உருவச் சிலைகள், பிரதிஷ்டை செய்வதற்கு முன்னர் சாதாரண சிலைகளாக இருக்க, பிரதிஷ்டை செய்த பின்னர் சக்தி பெற்றனவாக மாறுகின்றனவே அது எப்படி? சாதாரண மனிதராக இருந்த ஒருவர் சம்பிரதாய முறைப்படி, பலவகை மந்திர தீட்சைகள், ஆசாரிய அபிஷேகங்கள் முதலியவற்றால், பல பேர் வணங்கத்தக்க முறையில் மடாதிபதியாக ஆகிறார். அதுபோலவே, சாதாரண கற்களாலும், உலோகங்களாலும் செய்த உருவங்களை, வேதாகம முறைப்படி செய்கின்ற சில மந்திர அபிஷேகங்கள் விசேஷ சக்தியுள்ளனவாக மாற்றிவிடுகின்றன. அதே போலத்தான், சட்டப்படி ஜனாதிபதிப்பதவியும், மந்திரிப் பதவியும், பிற அரசாங்கப் பதவிகளும் அமைகின்றன.

அடுத்து, நம்மையெல்லாம் இயக்குகின்ற இறைவன் ஒருவன்தான் என்றாலும், அவனது அதிகாரம் பெற்ற அதிதெய்வங்கள் பல இருகின்றன. இதற்கு உதாரணமாக, இந்திய அரசாங்கம் என்பது ஒன்றுதான். ஆனால், அதன் அதிகாரம் பெற்ற அதிகாரிகள் பலர் இருக்கின்றனர். ஓர் அதிகாரியிடம் மனுக் கொடுத்தால், அது அரசாங்கத்திற்குக் கொடுத்ததற்குச் சமம். அந்த அதிகாரி, அம்மனுவை ஏற்றுக் கொண்டு, அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வார் என்றால், அந்நடவடிக்கை அரசாங்கமே செய்வது என்றுதான் பொருள். அதுபோல, இறைவன் ஒருவனாக இருப்பினும், அவ்னது அதிகாரம் பெற்ற அதிதெய்வங்களாக நடராஜர், தட்சிணாமூர்த்தி, சந்திரசேகர், அம்பிகை, விநாயகர், முருகர், திருமால் போன்றவர்கள் இருந்து, ஆட்சி செய்து வருகின்றார்கள்.

வழிபடும் முறை

எனவே, நாம் தெய்வ வழிபாடு செய்யும்போது, தெய்வ பேதம், மூர்த்திபேதம் குறித்து மாறுபட்டு மலையாது, நிலையாய அன்புடன் ஒரு பொருளைத் தியானித்து வழிபடல் வேண்டும்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்பது சிவஞான சித்தியார்.

அந்த வகையில், கருணையே வடிவான எம்பெருமான் நம் மீதுள்ள இரக்கத்தினால், இந்த உடம்பை வழங்கியுள்ளான் அவன் தந்த உடம்பினால் அவனை வழிபடுவது கடமையாகும் இன்றேல் கடமையை மறந்த மடமையாகும்.

வழிபாட்டுப் பயன்

காவிரியில் ஒருவன் நீராடுவது, காவிரிக்கு நன்மை விளையும் பொருட்டன்று; தன் உடம்பில் உள்ள வெப்பம் தணியும் பொருட்டு நீராடுகின்றான். அது போல, அருட்கடலாக இருக்கிற ஆண்டவனை வழிபட்டால் நம்முடைய பிறவி வெப்பம் தணிகின்றது.

நாம் எல்லோரும் அப்பெருமானைக் காதலாகிக் கசிந்து வழிபட்டு, இகபர நலன்களை எளிதில் பெற்றுப் பிறவிப் பிணியை ஒழித்துப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நம என்று நீறு அணிந்தேன்
தருவாய்ச் சிவகதி நீ! பாதிரிப்புலியூர் அரனே.

- அப்பர் அருள்மொழி

❀ ❀ ❀ ❀ ❀

உள்ளொளி பெருக்கும் வழி

திருவண்ணாமலை ஆதீனம்
குருமஹாஸன்னிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக
பரமாசார்ய ஸ்வாமிகள், குன்றக்குடி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

உள்ளொளி பெருக்கும் வழி

திருவண்ணாமலை ஆதீனம்
குருமஹாஸன்னிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக
பரமாசார்ய ஸ்வாமிகள், குன்றக்குடி

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!

என்று கரைந்து உருகுவார் மணிவாசகப் பெருமான். இறைவா! நீ விண்ணில் இருக்கிறாய்; மண்ணில் மறைந்திருக்கின்றாய்; நீரில் கரைந்திருக்கின்றாய்; நெருப்பில் நிறைந்திருக்கின்றாய்; அண்ட சராசரங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்றாய்.

உலகம் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளுக்குத்தான் திருப்பெருந்துறையில் மணிவாசகப் பெருமான் திருக்கோயில் எழுப்பினார். உலகமே தம் கூரையாகக் கொண்ட இறைவன் மணிவாசகப் பெருமானிடம் தமக்கு ஒரு இடம் வேண்டும் என்று கேட்டிருப்பானா? திருக்கோயில் இறைவன் எழுந்து அருள்பாலிக்கும் இடம் மட்டுமல்ல. மானுட சமூகம் கூடிக்கலந்து வாழ்கின்ற அறப்பண்ணைகள்! அருள் நிலையங்கள்! மனித சமூகத்தின் மையங்கள்! கல்லெல்லாம் பேசும் பொற்சிலைகளாய், மண் எல்லாம் விண்முட்டும் கோபுரங்களாய், வண்ணங்கள் எல்லாம் உயிர்ப்புள்ள ஓவியங்களாய் உருப்பெற்றன. கட்டிடக் கலைஞர் வாழ்வு பெற்றார். சிற்பக் கலைஞர் வளம் பெற்றார்.

நம்முடைய திருக்கோயில்களில் கல்வி கற்றுத் தருகின்ற கலாசாலைகள் இருந்தன. கல்வியை வளர்த்துத் தந்த பல்கலைக்கழகங்களாக நம் திருக்கோயில்கள் விளங்கின.

திருக்கோயில்களில் மருத்துவச் சாலைகள் இருந்தன. நம்மை நாமே ஆளுகின்ற மக்களாட்சி தத்துவத்தை திருக்கோயில் இயக்கியது. மக்கள் மன்றங்கள் நடைமுறைப்படுத்தப் பெற்று திருக்கோயில் வளாகத்தில் நீதி வழங்கும் நீதி சபைகள் இயங்கின. உலக நீதியின் தலைவன் இறைவனுக்கும், நற்றமிழ்ச் சுந்தரருக்கும் வழக்கு ஏற்பட்டபொழுது திருவெண்ணெய்நல்லூர் திருக்கோயிலின் முறைமன்றத்தில் எடுத்து வைத்தான்.

நமது சமய வாழ்க்கையில் இறைவன் வாழ்த்துப் பொருள் அல்ல; வாழ்வுப் பொருள்! அம்மையாக, அப்பனாக, தோழனாக, உற்றாராக, சுற்றமாக, நம் உணர்வுகளில் உறைந்து நிற்பவன் நற்றமிழ்ச் சுந்தரருக்குத் தம்மையே தோழனாக ஒப்படைத்தவன். அதனைத்தாம் நற்றமிழ்ச் சுந்தரர் இறைவனைப் பார்த்து ஆணையிடுகின்றார்:

> நாயன்நீரே நான் உமக்கு இங்கு அடியேன்ஆகில் நீர் எனக்குத்
> தாயின் நல்ல தோழரும் தம்பிரா னாரே ஆகில்
> ஆயஅறிவும் இழந்து அழிவேன் அயர்வு நோக்கம் அவ்வளவும்
> போய் இவ்விரவே பரவை உறு புலவி தீர்த்துத் தாரும்

கழுகும் உறக்கம் எடுத்துக் கொள்ளும் நள்ளிரவில் இறைவன் தூது சென்ற காட்சியை எந்த எழுத்துக்களில் எழுதிக் காட்டமுடியும்! திருப்பனந்தாள் திருக்கோயிலில் தாடகைப் பிராட்டியாரின் மானம் காக்க திருமேனி வளைந்த இறைவனின் அன்பு உள்ளத்தை என்னவென்று சொல்வது? அன்பால் வளைந்த திருமேனியை அன்பால் நிமிர்த்திய குங்குலியக் கலிய நாயனாரின் அருள் உள்ளத்தில் இறைவன் தோற்கவில்லையா? அன்புக்கு அன்பே நிகர் என்பதைத்தானே கண்ணப்பரின் அருள் நிகழ்வுகள் காட்டுகின்றன. நாடாளும் மன்னவன் எழுப்பிய கற்றளித் திருக்கோயிலில் எழுந்தருளாத இறைவன் பூசலார் நாயனாரின் மனக்கோயிலில் எழுந்து அருள் பாலித்தான்.

இறைவன் நம்மிடம் கேட்பவை கற்கோயில்கள் மட்டும் அல்ல; மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் கற்கோயிலும், திருவாசகம் என்னும் சொற்கோவிலும் எழுப்பினார். மண்ணும் சுண்ணமும் குழைத்துக் குழைத்துக் கல்லால் எழுப்பிய கற்கோயிலைவிட அன்பால் குழைத்துக் குழைத்

எழுப்பிய திருவாசகம் என்னும் சொற்கோயிலில்தான் இறைவன் குடிபுகுந்தான். நாம் இறைவனிடம் வேண்டுவது பொன்னும், பொருளும், போகமும்! இறைவன் நம்மிடம் வேண்டுவது அன்பு வழிப்பட்ட வேண்டுதலும், நம் நெஞ்சத்தில் ஒண்டுக் குடித்தனமும். இறைவன் நம் இதயக் கோயிலில் குடியிருக்க உள்ளம் அழுது அழுது அவனைத் தொழ வேண்டும். உணர்ந்து தெரிந்து, அறிந்த மொழியால் மட்டுமே அவனை அழுது தொழ முடியும்! நாளும் அவனை அழுது தொழுவோம்! மனதின் மாசுகள் கரைய உளக்கோயிலில் நாளும் குடமுழுக்கு நிகழ்த்துவோம்! திருவாசகமும், திருமுறைகளும் ஓதி ஊனை உருக்கி உள்ளொளி பெருக்குவோம்!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!

❀ ❀ ❀ ❀ ❀

[illegible]

[illegible]

ஈசர் பாகத்து நேரிழை

கயிலை மாமுனிவர்
காசிவாசி
ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்
காசித்திருமடம், திருப்பனந்தாள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஈசர் பாகத்து நேரிழை

கயிலை மாமுனிவர்
காசிவாசி
ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்
காசித்திருமடம், திருப்பனந்தாள்

உலகம் யாவையும் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் எல்லையில்லாப் பரம்பொருள் ஆதியும், அந்தமும் இல்லாத அரும் பெரும் சக்தியாக விளங்குவதாகும். அப்பேராற்றல் அறிவு மாத்திரையாக விளங்கும்போது சிவமாகவும், ஆற்றலாக வெளிப்படுபோது சத்தியாகவும் வழங்கப்படும். ஆயினும் சிவமும் சத்தியும் என்றும் இணைபிரியாது விளங்குவனவாகும். தோத்திரம், சாத்திரம், புராணம் ஆகிய மூன்றிலும் இருப்பேருண்மை விளக்கப்பட்டுள்ளது. தீயினில், வெப்பமும் ஒளியும் இணைந்தே உள்ளன. வெப்பத்தின் பயன் வேண்டும்போது ஒளி நமக்கு நினைவு வருவதில்லை. ஒளியின் பயன் வேண்டும்போது வெப்பத்தைப் பற்றிய சிந்தனை எழுவதில்லை. அதைப்போலவே பரம்பொருள் ஆற்றலாக வெளிப்படும்போது அது சத்தியாகப் போற்றப்படுகிறது.

சிவமும் சத்தியும் இணைந்தே இருக்கும், அம்மையப்பர் திருக்கோலமே மிகப் பழமையான திருக்கோலம் ஆகும். இதனை மணிவாசகர்,

> தோலும், துகிலும் குழையும் சுருள்தோடும்
> பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
> சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
> கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய்கோத்தும்பீ"

எனக் குறிப்பிடுகிறார்.

சிவத்தோடு இணைபிரியாச் சத்தியே செயல்புரியும் ஆற்றலாகப் பெருமானின் ஆணைக்கேற்பச் செயலாற்றுவதாகும்.

இச்சத்தி பரம்பொருளை விட்டு என்றும் பிரியாது இணைந்தே செயல்படும்.

"அருளது சத்தியாகும் அரன் தனக்கு",
"சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்"

எனும் சாத்திரச்சொற்றொடர்கள் இதனை வலியுறுத்தும்.

பெருமான் அறக்கருணை புரியினும், மறக்கருணை புரியினும் சத்தி மூலமே செய்கிறான். எனவேதான் சம்பந்தர் முதலில் அம்மையப்பரைக் கண்டபோது "தோடுடைய செவியன்" என அம்மைப் பாகத்தை முன்கூறிப்பாடுகிறார். அருளை வேண்டும் போது, அம்மை பாகத்தை வேண்டுவது மரபாயுள்ளது.

சேக்கிழார் பெருமான் தம் பெரிய புராண முதல் பாடலில் "உலகெலாம்" எனத் தொடங்கி "மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என அம்மைக்குரிய சிலம்படியை= சிலம்புடைய இடது பாதத்தைப் போற்றுகிறார். மணிவாசகரும் பெருமான் தமக்கு அருள் செய்ததைக் கூறும்போது,

"வாதவூரினில் வந்தினிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்"

எனக் கூறுகிறார். சேரமான் பெருமாள் நாயனாருக்கும் பூஜை முடிவில் பெருமான் சிலம்பொலி கேட்கச் செய்தான்.

சங்க இலக்கியங்களிலும் சத்தி பற்றிப் பேசப்படுகின்றது

"இமய வில்வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன், உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன்" (கலித்தொகை) எனவும் "உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்" (திருமுருகாற்றுப்படை) எனவும் "சேர்ந்தோன் உமையே" (அகம்) எனவும், "உமையொடு புணர்ந்து" (பரிபாடல்) எனவும் "பெண் உரு ஆகின்று அவ்வுருத் தன்னுள் அடக்கிக் காக்கினும் காக்கும்" (புறநானூறு) எனவும், "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள் நீழற் கீழ் மூவகை உலகும் முகிழ்ந்தன முறையே" (ஐங்குறுநூறு) எனவும் வரும் சங்க இலக்கியப் பகுதிகள் எல்லாம் வல்ல பரம்பொருள் சத்தியோடு இணைந்தே இயங்குவதை வலியுறுத்துகின்றன.

அப்பேராற்றலைத் தனியே சத்தியாக வழிபடும் மரபு பின்னாளில் தோன்றியது. அடியவர்க்கு அருள்புரியும் அருள் சத்தியாகவும், கொடியவர்களை அழிக்கும் வேக சத்தியாகவும் வழிபாடு செய்வது வழக்கமாயிற்று. காளி, மகிடாசுரமர்த்தினி போன்ற வேக வடிவங்களாகவும் மீனாட்சி, காமாட்சி, அகிலாண்டேசுவரி, விசாலாட்சி எனப் பல அருள் வடிவங் களாகவும் அன்னை வழிபடப்படுகிறாள். "சர்வம் சத்தி மயம் ஜகத்" என வரும் வாக்கியத்தை ஒட்டிச் சத்தி வழிபாடு பெரும் வழக்காயிற்று. அச்சத்திக்குச் சிவனோடு உள்ள தொடர்பு பல்வகையாகப் பரிணமிக்கிறது. அச்சத்தி பெருமானுக்குத் தாயாகவும், மகளாகவும், தாரமாகவும், சகோதரியாகவும் விளங்குவதாகக் கூறுவர்.

"வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நற்றாரமும் ஆகுமே"

- திருமந்திரம்

"எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன்"

- திருவாசகம்

"கனகமார் கவின்செய் மன்றில்
அகை நாடற்கு எம் அன்னை
மனைவி தாய் தந்தை மகள்"

- குமரகுருபரர்

ஆகிய சான்றோர் வாக்குகளால் சிவமும் சத்தியும் இயங்கும் தன்மைகளை அறிலாம்.

அருள் சத்தியாக அம்மை விளங்குவதாலேயே கல்விக்கு உரிய கலைமகளாகவும், செல்வத்திற்கு உரிய திருமகளாகவும், வீரத்திற்கும் வெற்றிக்கும் உரிய மலைமகளாகவும், அம்மையைப் போற்றி வழிபடுகிறோம். அபிராமிப்பட்டர் அம்மையையே முழு முதற் பொருளாகக் கொண்டு வழிபட்டு அற்புதம் புரிந்து அவளருள் பெற்றுய்ந்ததை யாவரும் அறிவர்.

அவரவர் தகுதிக்கும் மனத்திற்கும் ஏற்ப அன்னை மகாமாரியாய், காளியாய், துர்க்கையாய், பிடாரியாய், ஊர்தோறும் இருந்து மக்களுக்கு வேண்டியனவற்றை வேண்டியவாறு அருள் புரிந்து காக்கும் தெய்வமாய் அருள் பாலித்து வருகிறார். மின் ஆற்றல், விளக்கில் ஒளியாகவும், ஒலிபெருக்கியில் ஒலியாகவும், விசிறியில் காற்றாகவும், அடுப்பில் வெப்பமாகவும், மாறித் தேவைக்கேற்ற சத்தியாக மிளிர்வது போல, அன்னையும் வேண்டியார்க்கு வேண்டிய உருவமும், நாமமும் பெற்று அருள்பாலிக்கிறாள்.

வேண்டுவோர் தகுதி பார்க்காமல் அனைவர்க்கும் வரையாது வரமளிக்கும் கற்பகமாய், கருணைக் கடலாய், உயிர்கள் யாவற்றிற்கும் அன்னையாய், அருட்செங்கோல் ஓச்சி வருபவள் அன்னை பராசத்தியே ஆவாள்.

சைவகாலப்பகுப்பு



சிவாகம ஞானபானு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள்,
அச்சுவேலி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சைவகாலப்பகுப்பு

சிவாகம ஞானபானு
சிவஸ்ரீ ச.குமாரசுவாமி குருக்கள்,
அச்சுவேலி

விஷயசூசிகை

1. யுகாதி
2. யுகங்களின் தோற்றம்
3. பிரமகாலப்பகுப்பு
4. மனுவினெல்லை
5. மகா கற்பம்
6. தேவ காலப்பகுப்பு
7. தேவசந்தியாகாலம்
8. பிதிர் காலப்பகுப்பு
9. அமா பூசாபலம்
10. மக்கள் காலப்பகுப்பு, சங்கற்பம்
11. சௌரசாந்திரமாசங்கள்
12. மாசநக்ஷத்திரங்கள்
13. மாசநக்ஷத்திரப்பிரதானம்
14. மாச பூசை
15. உதயாதிகாலங்கள்
16. நித்தியபூசாகாலம்
17. எட்டுவித பூசை
18. மூன்றுவித பூசை
19. ஆறுகாலப் பூசை
20. நாழிகைப் பகுப்பு
21. காலநியமம்
22. மகோற்சவகாலம்
23. காலாதீதப் பிராயச்சித்தம்
24. நித்திய நைமித்திக காமிய பூசை

25. நயனோன்மீலனாதிகளுக்குக்காலம்
26. திரிபக்ஷபூசை
27. ஸ்நபனகாலம்
28. ஸ்நபனம் ஒன்பது பேதம்
29. சங்காபிஷேக காலமும் பலனும்

சைவகாலப்பகுப்பு

1. யுகாதிகள்

சைவாகமங்களும் அவற்றைச் சார்ந்த நூல்களும் யுகம் வருஷம் அயனம் இருது மாசங்கள் பக்ஷம் திதி முதலிய காலங்களை விவரமாக உணர்த்துகின்றன.

2. யுகங்களின் தோற்றம்

சிவபெருமான் மகா சங்கார காலத்தில் தமது சத்தியிலிருந்து தோன்றிய உலகங்களையும் பார்வதியாரையும் தம்முளொடுக்கித் தாமொருவராகவே நிலைபெற்று நின்று உலகமாகிய சுடலையில் நடனஞ்செய்தருளுவார். சங்கார முடிவில் மீளவும் முன் போல படைப்பதற்குத் திருவுள்ளம் கொண்டு இச்சை ஞானம் கிரியை என்னும் மூவகைச் சத்திகளையும் முறையே தோற்றுவித்தருளினார்.

அதன்பின் பிரமாவைச் சிருட்டித்து அவருக்கு வேதங்களைக் கொடுத்தருளினார். பின்பு விட்டுணுவையும் தேவர்களையும் உலகங்களையும் சிருட்டித்துக் காத்தருளினார் அதன்மேல் நான்கு வேதங்களுக்கு முரிய பிராமணர் முதலிய சாதியார்களையும் படைத்தருளினார். அவ்வவ் வருணங்களுக்குரிய அறம் பொருள் இன்பம் வீடு, என்னும் நான்கையும் அத்தருமம் முதலியவை நிலைத்தற்குரிய கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகமென்னும் நான்கு யுகங்களையும் உண்டாக்கினர்.

அவ்யுகங்கள் நான்கும் காஞ்சிப் பதியை அடைந்த அனந்த பத்மநாபீச்சரத்துக்குப்பக்கலாகவுள்ள வட திசையில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து சிவார்ச்சனையையும் செய்து வந்தன. வருங்காலத்தில் ஏகாம்பரநாத சுவாமியார் காமாட்சி யம்மையாருடன் இடபாருடராய் காட்சி கொடுத்தருளி, யுகங்களை

நோக்கி உங்களுக்கு உலகத்திலே வேண்டியது யாது சொல்லுங்கள் என்று அருளிச்செய்தனர்.

யுகங்கள் எழுந்து சாட்டாங்கமாக வணங்கி எழுந்து தோத்திரங்களை செய்து எமது ஆன்மநாதரே யாங்கள் இமயமலைக்குத் தென்பாலுள்ள கன்ம பூமியைப் பகுத்தாள விரும்பினோம். தேவரீரே எங்கள் நால்வருக்கும் அதைப் பாகுபடுத்தித் தரல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

சிவபெருமான் யுகங்களை நோக்கி இருவினை இயங்குமிப் பாரத கண்டத்திலே உங்களுக்குக் காலமென்கின்ற அரசுரிமையைத் தந்தோம் அதன் காலமும் நாற்பத்திரண்டு இலட்சத்து இருப்பத்துநான்காயிரம் ஆண்டுகளாகும். அதை உங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கின்றோம் என்றருளிச் செய்து பகுக்கத் தொடங்கினார்.

கிருதன் பிராமணனும், திரேதன் க்ஷத்திரியனும், துவாபரன் வைசியனும், கலியன் சூத்திரனுமாக நான்கு வருணங்களாக வகுத்து கிருதனே! நீ முத்தியைத் தரும் புத்திரனானதால் மூவர்க்கும் மூத்தோனாவாய், திரேதனே! நீ முத்தி நெறிக்கேதுவாகிய ஞானத்தைக் கொடுக்கும் தருமத்தை உண்டு பண்ணுவாயாகையால் கிருதயுகத்துக்கு இளையவனாவாய். துவாபரனே! நீ அத்தருமத்துக்கேதுவாகிய பொருளைக் கொடுக்கும் தன்மையினால் மேற்கூறிய இருவருக்கும் தம்பியாவாய். கலியனே! நீ அந்தப் பொருளையீட்டுமிடையில் காலத்தினாலுண்டாகும் மாறுபாட்டால் சிற்றினபத்தில் மயக்கத்தைத் தரும்தன்மையினால் அம் மூவருக்குமிளையோ னாவாய் என்றருளிச்செய்து மனுஷ்யமானத்தினாலே நாற்பத்திரண்டிலட்சத்து இருபத்து நான்காயிரம் வருடங்களைப் பத்துப் பங்குகளாக்கி கிருதனுக்கு நான்கு பங்கும் திரேதனுக்கு மூன்று பங்கும் துவாபரனுக்கு இரண்டு பங்கும் கலியனுக்கு ஒரு பங்குமாக நால்வருக்கும் முறையே கொடுத்து பூமியை அரசாட்சி செய்யும்படி பணித்தருளினார்.

மேலும் யுகங்களை நோக்கி எமது வாகனமாகிய தருமதேவதை கிருத யுகத்தில் நான்குபாதங்களாலும் திரேதாயுகத்தில் மூன்று பாதங்களாலும் துவாபரயுகத்தில்

இரண்டு பாதங்களாலும் கலியில் ஒரு பாதத்தாலும் உங்களுக்கு அனுக்கிரகம் செய்யுமென்று அனுக்கிரகித்து மறைந்தருளினார். என்று காஞ்சிப்புராணம் பகரும்.

3. பிரமகாலப்பகுப்பு

யுகங்கள் கிருதயுகம் தேவமானத்தால் நாலாயிரத்து எண்ணூறு (4800) வருஷம். மனுஷ்யமானத்தினால் பதினேழு லக்ஷத்து இருபத்தெண்ணாயிரம் (1728000) வருஷம். திரேதாயுகம் தேவமானத்தினால் மூவாயிரத்து அறுநூறு (3600) வருஷம். மனுஷ்யமானத்தினால் பன்னிரண்டுலக்ஷத்துப் பத்தொன்பதினாயிரம் (1219000) வருஷம். துவாபரயுகம் தேவமானத்தினால் இரண்டாயிரத்துநானூறு (2400) வருஷம். மனுஷ்யமானத்தினாலே எட்டுலக்ஷத்து முப்பத்து நாலாயிரம் (834000) வருஷம். கலியுகம் தேவமானத்தினால் ஆயிரத்து இருநூறு (1200) வருஷம். மனுஷ்யமானத்தினால் நான்கிலக்ஷத்து முப்பத்தீராயிரம் (432000) வருஷம். நான்கு யுகங்களும் தேவமானத்தினால் பன்னீராயிரம் (12000) வருஷங்களாம். மனுஷ்யமானத்தினாலே நாற்பத்திரண்டுலக்ஷத்து இருபத்து நாலாயிரம் (4224000) வருஷங்களாம்.

4. மனுவினெல்லை

பதினான்கு மனுக்கள் 1. சுவாயம்புவமனு, 2. சுவாரோசிஷமனு, 3. உத்தமனு, 4. ரைவதமனு, 5. தாமதமனு 6. சாக்ஷுஷமனு, 7. வைவசுவதமனு, 8. சூரியசாவர்ணிமனு, 9 மேருசாவர்ணிமனு, 10. தக்ஷசாவர்ணிமனு, 11. பிரமசாவர்ணிமனு 12. ருத்திரசாவர்ணிமனு, 13. ரௌச்சியசாவர்ணிமனு, 14 பாவியமனு என்பவர்கள் என்று சுப்பிரபேதம் செப்பும்.

பதினான்கு மனுக்களின் பெயர்கள் சிலவற்றைச் சிவாகமங்களும், அவற்றின் சார்பு நூல்களும் பிறவும் ஒன்றற்கொன்று மாறுபடக் கூறுகின்றனவே; அவை குற்றமாகாதோ எனில்; சிருஷ்டிபேதம் பலவாகையால் குற்றமாகாமை காண்க.

ஒவ்வொரு மன்வந்தரத்துக்கும் எழுபத்தொரு சதுர்யுகமாகும். எழுபத்தொரு சதுர்யுகம் தேவமானத்தினாலே

எட்டிலக்ஷத்து ஐம்பத்தீராயிரம் (852000) வருஷங்களாம். மனுஷ்யமானத்தினால் முப்பதுகோடியே அறுபத்தேழுலக்ஷத்து இருபதினாயிரம் (306720000) வருஷங்களாம். ஒரு மன்வந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகப் பதினான்கு மனுவினெல்லைக்கும் தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்கு (994) சதுர்யுகங்களாம். பிரமாவினுடைய பகலிலே மிஞ்சிய சதுர்யுகம் ஆறு.

இப்படிப் பதினான்கு மன்வந்தரங்களானால் பிரமாவுக்கு ஒருபகலாகும். இதன் முடிவிலே தினப்பிரளயமுண்டாகும். இப்படி ஆயிரஞ்சதுர்யுகவளவுடைய இராக்காலத்திலே பிரமா யோகநித்திரை செய்வர். அப்பொழுது சூரியசந்திரர் முதலிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும், இந்திரன் முதலிய தேவகூட்டங்களும், இப்பூவுலகும், இங்குள்ள உயிர்களும் அழியும். நாற்றிசைக்கடல்களும் விரைந்தெழுந்து உமாதேவியார் தவஞ்செய்கின்ற காஞ்சிப்பதி முதலிய தலங்களொழிந்த பூவுலகத்தை விழுங்கித் தேவருலகத்தை அழித்து, நிமிர்ந்து அப்பாலுமாகி, இவ்வாறு உலகை அழிக்கும். இது பிரமாவினுடைய தினப்பிரளயமாகும்.

கந்தபுராணம்

பத்தினொடுநூறெதிர்ப்படுத்தயுகநான்மை
யொத்தமுடிவெல்லையெனதோர்பகலதாகு
மத்தகுபகற்பொழுதுமந்தியொடுசெல்ல
நத்தமுறுநானறுயிலினண்ணுவனவ்வெல்லை

வாளுமொடுங்கும்பரிதிமாமதியொடுங்கு
நாளுமொடுங்குந்தமதுநாளுமொடுங்குற்றே
கோளுமொடுங்குங்குலிசபாணிமுதல்வானோர்
கேளுமொடுங்கும்புவனிகேடுபடுமன்றே.

பிரமா இராத்திரி கடந்தபின்பு திரும்பவும் படைத்தற்றொழில் செய்வர். பிராமாவினுடைய ஒரு பகலிலே ஒருவர் பின் ஒருவராகப் பதினான்கு இந்திரர்கள் அரசாட்சி செய்து இறப்பார்கள்.

5. மகாகற்பம்

இப்படிச் சதுர்யுகமாயிரந் திரும்பினால் பிரமாவுக்கு ஒருபகலாகும். பின்னுமாயிரந் திரும்பினால் பிரமாவுக்கு இராத்திரியாகும். ஆகவே இரண்டாயிரஞ் சதுர்யுகங்கள் கொண்டது பிரமாவுக்கு ஒரு நாளெனப்படும். இந்தநாள் முப்பது கொண்டது ஒருமாசம். இந்தமாசம் பன்னிரண்டு கொண்டது ஒருவருஷம். இந்தவருஷம் நூறானால் பிரமா லயமாவார். இவ்வியல்புடைய பிரமாக்கள் எண்ணில்லாதவர்கள் பிறந்திறந்தார்கள். ஒரு பிரமா இறக்க அது விட்டுணுவுக்கு ஒரு நாளாகும். பிரமாவினுடைய ஆயுள் பரமெனப்படும் அதிற்பாதி பரார்த்தமெனப்படும்.

6. தேவகாலப்பகுப்பு

இரண்டு மாசங்கொண்ட காலம் ஒரு இருது எனப்படும். மூன்று இருதுக்கள் கொண்ட காலம் ஒரு அயனம். இரண்டயனங்கள் கொண்ட காலம் ஒரு வருஷமாகும். இந்த மனுஷவருஷம் தேவர்களுக்கு இராப்பகல் கொண்ட ஒரு நாளாகும். உத்தராயணம் பகலும் தக்ஷிணாயனம் இரவுமாம் மனுஷவருஷம் முன்னூற்றறுப்தானால் அது தேவர்களுக்கு ஒரு வருஷமாகும். தைமாசம் முதல் ஆனி மாசம் வரையுமுள்ள ஆறுமாசங்களும் தேவர்களுக்கு ஒவ்வொருமாசம் ஐவைந்து நாழிகையாகப் பகல் முப்பது நாழிகையும், ஆடிமாசம் முதல் மார்கழி மாசம் வரையிமுள்ள ஆறுமாசங்களும் ஒவ்வோர் மாசம் ஐவைந்து நாழிகையாக இரவு முப்பது நாழிகையுமாமென்று காரணாகமம் கூறும். எனவே மனுஷருடைய பன்னிரண்டு மாசங்கள் கொண்ட காலம் தேவர்களுக்கு அறுபது நாழிகையாகும்.

சூரியன் துலா (ஐப்பசி) மாச சங்கிராந்தியிலும் மேஷ (சித்திரை) மாச சங்கிராந்தியிலும் செல்லுந்தினம் விஷுபுண்ணியகாலம் எனப்படும். விஷுஇராப்பகலொத்தகாலம் சூரியன் கர்க்கடக (ஆடி) மாச சங்கிரமத்தை அடையுந்தினம் தக்ஷிணாயன புண்ணிய காலமும், மகர (தை) மாச சங்கிரமத்தை அடையுந்தினம் உத்தராயண புண்ணியகாலமும் மெ நிச்சயிக்கப்படும்.

7. தேவசந்தியாகாலம்

தேவர்களுக்கு உத்தராயண சங்கிராந்தி புண்ணியகாலம் பிராதக்காலமென்றும், சித்திரை மாச சங்கிராந்தி விஷுபுண்ணியகாலம் மத்தியானகாலமென்றும், ஆடிமாச தக்ஷிணாயனபுண்ணிய காலம் சாயஞ்சந்தியா காலமென்றும். ஐப்பசிமாச விஷுபுண்ணியகாலம் அர்த்தயாமமென்றும் ஞானரத்தினாவளி கூறுகின்றது. ஆகையால் தேவர்கள் இந்த நான்கு காலங்களிலும் உஷக்கால முதலிய உபசந்திகளிலும் சிவபெருமானைச் சிவாகமவிதிப்படி பூசை செய்வார்கள்.

தனுர்மாச உஷக்காலம் : தேவர்களுக்கு மார்கழி மாசம் உஷக்காலம் எனப்படும் ஐந்து நாழிகை காலமாகும். ஆகையால் சூரியன் தனுராசியிற் செல்லும் மார்கழி மாசத்தில் விசேஷமாகச் சிவபிரானுக்கு உஷக்கால பூசை செய்க. இருபத்தைந்து நாழிகையில் ஆரம்பித்துச் செய்யும் உஷக்காலபூசை உத்தமம். இருபத்தேழு நாழிகையில் ஆரம்பிக்கும் உஷக்கால பூசை மத்திமமாகும். விசேஷமாக மார்கழி மாசத்தில் உஷக்காலபூசை செய்தல் வேண்டும் எனவும் ஆயிரம் வருஷகாலம் சிவபூசை செய்த பலனை மார்கழி மாசம் ஒரு தினத்திற் செய்யும் உஷக்காலபூசையால் அடைகிறான் என்று காரணாகமம் கூறும்.

சூரியோதயத்தின் முன் மூலலிங்கத்துக்கு அபிஷேகம் நைவேத்தியம்பண்ணி அப்படியே தேவிக்கும் பூசை செய்க. பூசைமுடிவில் சூரியோதயமாமென்றறிக. இது நித்திய உஷக்காலமாம்.

8. பிதிர்காலப்பகுப்பு

பதினைந்து தினங்கள் கொண்டது ஒரு பக்ஷம். இரண்டு பக்ஷங்கள் கொண்டது ஒரு மாசமாம். அவை சுக்கிலபக்ஷமும் கிருஷ்ணபக்ஷமுமாம். மனிதர்களுடைய ஒரு மாசங்கொண்ட காலம் பிதிர்தேவர்களுக்கு ஒரு நாளாகும். மனிதருடைய இராப்பகல் கொண்டகாலம் பிதிர் தேவருக்கு இரண்டு நாழிகை நேரமாகும். முப்பதுநாழிகை கொண்டகாலம் பகலும் முப்பதுநாழிகை இரவுமாக அறுபதுநாழிகை கொண்டகாலம் ஒரு நாளாகும். சுக்லபக்ஷம் பகலும் கிருஷ்ணபக்ஷம் இரவுமாம்.

அமாவாசை - பூரணை

சூரியசந்திரர்கள் சேர்ந்து எப்பொழுது ஒரு ராசியில் வருகின்றார்களோ அத்தினம் அமாவாசையென்று நிச்சயிக்கப்படும். மறுதினம் பிரதமை யாதியாகச் சுக்கில பக்ஷமென்று சொல்லப்படும். சந்திரன் ஏழாமிராசியிற் செல்லுந்தினம், பூரணகலையோடு கூடிய பூரணையென்று நிச்சயிக்கப்படும். மறுநாட் பிரதமையாதியாகக் கிருஷ்ண பக்ஷமெனப்படும்.

பிதிர்தேவருக்கு அமாவாசை பிராதசந்தியா காலமும், பூருவபக்ஷ அட்டமி மத்தியானசந்தியும், பூரணை சாயங்காலமும் அபரபக்ஷ அட்டமி அர்த்தயாமமுமாமென்று சுப்பிரபேதாகமமும் ஞானரத்தினாவளியுஞ் செப்புகின்றன.

9. அமாபூஜாபலம்

எந்த மனுஷ்யர்கள் அமாவாசையில் பிதிர்வழிபாடு செய்கின்றார்களோ, அவர்கள் பிதிர்தேவருடைய ஆசீர்வாதத்தினால் இன்பமடைகிறார்கள் என்று சுப்பிரபேதாகமம் கூறும். தேவர்களையும், பிதிர்ரையும் அமாவாசையிற் பூசிப்பவர்கள், மேலான பலனைப் பெறுகின்றார்கள். தைமாச அமாவாசையிலும், ஆடிமாச அமாவாசையிலும் சகலதேவப்பிரீதியின் பொருட்டுப் பூசை செய்தல் வேண்டும். அத்தினங்களில் பிதிரருடைய திருப்தியின் பொருட்டுச் சிராத்தகருமங்களையும் திலதர்ப்பணங்களையும் விசேஷமாகச் செய்க. தை ஆடி மாச அமாவாசைகளில் பிதிரருக்குச் சிராத்தஞ் செய்தவர்கள் கோடிக்கணக்கான தமது குலத்தவர்களை நரகத்திலிருந்து மேலெடுத்தவர்களாகின்றார்கள் என்று காரணாகமம் செப்பும்.

10. மனுஷ்யரின் காலவிபாகம் - சங்கல்பம்

சிவ சம்புவினாணையால் முயலா நின்ற ஆதிப்பிரமாவின் இரண்டாம் பரார்த்தத்தில் - சுவேத வராஹ கற்பத்திலே வைவச்சுவதமன்வந்தரத்திலே - இருபத்தெட்டாவது நடைபெறும் சதுர்யுகத்திலேயுள்ள கலியுகத்திலே - முதற்பாதத்திலே

ஜம்பூத்தீவில் - பாரதவருஷத்திலே - பரதகண்டத்திலே - மேருவின் தென்பாலிலே - சகாப்தத்தில் நிகழாநின்ற பிரபவ முதலிய அறுபது வருஷங்களுள் .....வருஷத்திலே .....அயனத்திலே ....இருதுவிலே ....மாசத்திலே ....பக்ஷத்திலே ....திதியிலே ....வாரத்திலே ....நக்ஷத்திரத்திலே சுபயோகத்தில் சுபகரணத்தில் இவ்விதப்பட்ட குண விசேஷ விசிட்டமாகிய இந்தச் சுபதிதியிலே ....செய்கிறேன்.

விளக்கம் : ஆதிப்பிரமாவின் (ஆத்யப்ரஹ்மண: என்றமையால் உபப்பிரமாக்களும் உளர் என்பது பெறப்படும். அவர்கள் ஒன்பதின்மர். (துவிதீயபரார்த்தே) இரண்டாம் பரார்த்தத்தில் - இரண்டாம் பரார்த்தமாவது யாதெனில்; கூறுதும். பிரமாவினுடைய ஆயுள் பரமெனப் பெயர்பெறும். அதிற்பாதி பரார்த்தம். தற்பொழுதிருக்கும் பிரமாவுக்கு பிரதம பரார்த்த மெனப்படும் ஐம்பது வயசு முடிந்து இரண்டாம் பரார்த்தத்தில் முதல்மாசத்தில் முதற்றினம் நடைபெறு கின்றது. ஆகையால் இது துவிதீய பரார்த்தமென்று சொல்லப்பட்டது.

(சுவேதவராஹகல்பே) சுவேதவராககற்பத்தில் - சுவேதவராக கற்பமாவது யாதெனில் கூறுதும் ஆயிரஞ் சதுர்யுகந்திரும்பினால் பிரமாவுக்கு ஒரு பகலாகும். இதன் முடிவிலே தினப்பிரளய முண்டாகும். அப்பொழுது பிரமா அப்பகலளவினதாகிய இராத்திரியிலே யோகநித்திரை செய்வர். அப்பொழுது விஷ்ணு பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டு ஓராலிலையின் மீது குழந்தை வடிவாய் நித்திரை செய்தனர். அதனைச் சனலோகத்திருந்த முனிவர்கள் புகழ அவர் விழித்தெழுந்து பூலவுகத்தைத் தேடுதலும், அது பாதாளத்தாழ்ந்ததாக அந்த விஷ்ணு வெள்ளைப் பன்றியினுருவு கொண்டு பாதாலத்திற் போய்த்தேடிப் பூமியைத் தமது கொம்பினால் எடுத்துக்கொண்டு மீண்டுவந்து, முன்போல நிறுத்திப் போயினார். விஷ்ணு வெள்ளைப் பன்றியுருக்கொண்டு பூமியை மேலே எடுத்து நிறுத்திய கற்பமாதலின் சுவேதவராக கற்பமெனப்பட்டது. பிரமாவினுடைய ஒரு பகல் கற்பமெனப்படும். கற்பமாவது சிருட்டிமுதல் பிரளயமிறுதியாகிய காலம்.

கந்த புராணம்

ஆனதொரு வேலையி லொராலிலையின் மீதே
மேனிலவு தண்மதி மிலைந்தவன் மலர்த்தா
டானக முறுத்தியோர் தனிக்குழவி யேபோற்
கானுறு துழாய் மவுலி கண்டுயிலுமாதோ.
கண்டுயிலு கின்றபடி கண்டு சனலோகத்
தண்டு முனிவோர் புகழ வாங்ஙனம் விழித்தே
பண்டை நிலனேட வதுபாதல மதாகக்
கொண்டன்மணி மேனிய னோர் கோலவுருவானான்.
கோலமெனு மோருருவு கொண்டுபில மேகி
ஞாலமெவ ணுற்றதென நாடி யதுதன்னை
வாலிய வெயிற்றினிடை வல்லைகொடு மீண்டு
மூலமெனவே நிறுவி மொய்ம்பினெடு போனான்.

வைவசுவதமன்வந்தரத்தில் - வைவச்சுவதமன்வந்தரமாவது யாதெனில்; தற்காலத்திலேயிருக்கிற பிரமாவுடைய இத்தினத்திலே சுவாயம்புமனு, சுவாரோசிஷமனு, ஔத்தமனு, சைவதமனு தாமதமனு, சாக்ஷுஷமனு, என்னுமாறு மனுக்கள் இறந்து போனார்கள். இப்பொழுது ஏழாவதாகிய வைவசுவதமனுவின் காலம் நடைபெறுகிறது. இவருடைய காலத்திலே இருபத்தேழு சதுர்யுகங்கள் சென்றன. இருபத்தெட்டாவது சதுர்யுகத்துக் கலியுகம் முதற்பாதம் நடைபெறுகின்றது. ஆகையால் இது வைவச்சுவதமன்வந்தரமெனப்பட்டது.

“ஜம்பூத்வீபே” சம்புத்தீவில் - மேருமலையின் தென்பக்கலாக நிற்கும் நாவன் மரம் அதிசயமிக்குடை தாதலில், அதன்பெயரானே சம்புத்தீவு (ஜம்பூத்தீபம்) என்று பெயராயிற்று.

பாரத்வர்ஷே -- பரதகண்டே -- முதலாவது மனுவாகிய சுவாயம்பு என்பவன் சிருஷ்டி ஆரம்பத்தில் பிரமாவின் வலப்புயத்திற்றோன்றினான். அவனுக்குப் பிரியவிரதன் என்னும் புத்திரனொருவனிருந்தான். அவன் ஜம்புத்தீவு முதல் அண்ட சுவர்வரையுமுள்ள பூமி முழுவதையும் அரசாட்சி செய்தான் அவனுக்கு அங்கிதீரன் முதலிய ஏழு புத்திரர்களிருந்தார்கள் அவர்களுள் அங்கிதீரன் என்பவன் லவண சமுத்திரத்தா

சூழப்பெற்ற நாவலந்தீவை ஆண்டான். அந்த அங்கிதீரன் தன்னுடைய புத்திரர்களாகிய பாரதன் கிம்புருஷன் அரிகேதுமாலன் பத்திராசுவன் இளாவிருதன் இரமியன் குரு என்னும் ஒன்பது புத்திரர்களுக்கும் நாவலந்தீவைப் பாரதவருஷம் கிம்புருஷவருஷம் அரிவருஷம் கேதுமாலவருஷம் பத்திராசுவவருஷம் இளாவிருதவருஷம் இரமியவருஷம் இரண்மயவருஷம் குருவருஷம் என அவரவர்கள் பெயர்களை முறையே சூட்டி ஒன்பது கண்டமாக்கி ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றாகக் கொடுத்தான். பாரத வர்ஷமொன்றே நல்வினை தீவினைகளுக்கெல்லாம் காரணமாகிய இடமாம்.

மனுகுலத்தவருமங்கிநேத்திரனுமன்னவன்றன்
றனையர்பரதனைமுதலோர்சவுரியரொன்பதின்மருளர்
இளையவராண்டமையாலெய்தியபேரெனவிவற்றை
நினைகபரதனுக்குரிமைபாரதமேநிகழ்த்துங்கால்

எனச் சிவதருமோத்தரத்து வருவது காண்க

பாரதன் என்பவனுக்கு இந்திரன் கசேருகன் தாமிரபன்னன் கபத்தி நாகன் சௌமியன் கந்தருவன் வருணன் என்னும் புத்திரர்கள் எண்மரும் குமரி என்னும் புத்திரியுமுளர், பாரதன் பாரதவருஷத்தைத் தனது எட்டுப் புத்திரர்களுக்கும் குமரி என்னும் புத்திரிக்கும் இந்திரத்தீவு கசேருகத்தீவு தாமிரத்தீவு கபத்தித்தீவு நாகத்தீவு சௌமியத்தீவு காந்தருவத்தீவு வருணத்தீவு குமரித்தீவு என அவர்கள் பெயர்களை முறையே சூட்டி ஒன்பது தீவுகளாக்கி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்தான். அவற்றுள் குமரிகண்ட மொன்றொழிந்த எட்டுக் கண்டங்களும் மிலேச் சரிடங்கள்.

அவை வியப்பில்லாதன, சிவதருமோத்திரத்தில்:-

பாரதமு நவதீவபாகமுறு மவற்றுள்ளுஞ்
சீரியது குமரியெனுந் தீவதனிற் சிறந்திருப்ப
ராரியரா மந்தணரு மல்லாரு மருமறையின்
காரியமு முறுமதனி லின்னுமுள கழறிடுவாம்

என வருவது காண்க.

கங்கை ஜமுனை முதலிய புண்ணியநதிகளையும் மகேந்திரம் பொதியம் முதலிய மலைகளையும் காசிமுதலாம் க்ஷேத்திரங்களையும் சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டையும் பிராமணர் முதலிய சாதிகள் வசிக்கும் பலதேசங்களையும், வேதாகம ஆசார ஒழுக்கத்தையும் பொருந்தி மெய்ந்நெறி சேர்ந்திருப்பது குமரிகண்டமொன்றுமேயாம். ஏனைய கண்டத்தவரும் தேவரும் முனிவர் முதலியவர்களும் தமக்கு யாதேனுங் குறையுண்டானால் அப்பாரத வருஷத்திலேயுள்ள கன்மபூமியில் வந்து தவங்களையும் பூசை முதலியவைகளையுஞ் செய்து, அவைகளை நீக்கிக் கொள்ளுவார்கள். சிவதருமோத்தரத்தில்,

கங்கை முதல் நதிபலவுங்காசிமுதற் பதிபலவும்
பொங்கு மயேந்திரம் பொதியமுதன்மலையும் பொருந்தியீடு
மங்கதற்கு யோசனையோ ராயிரமுண்டென வறிக
வெங்கொடிய மிலேச்சரிட மெட்டினு மெண்ணாயிரமே

எனவருவது கண்டு கொள்க.

11. சௌரசாந்திரமாசங்கள்

மாசமானது சௌரமாசம் சாந்திரமாசமென இருவகைப்படும். சூரியன் மேஷம் முதலிய இராசிகளிற் சஞ்சாரஞ் செய்யுங்காலம் சௌரமாசமென்று சொல்லப்படும். பூருவபக்ஷப் பிரதமை முதல் அமாவாசை அந்தமாயுள்ள முப்பது தினங்கள் கொண்டகாலம் சாந்திரமாசமெனப்படும். சிவபெருமானுக்கு எப்படிச் சௌரமாசம் விசேஷமோ, அப்படியே சந்திரனுடைய சஞ்சாரத்தாலுண்டாகிய சாந்திரமாசமும் விசேஷமுடையதாகும்.

12. மாசநக்ஷத்திரங்கள்

சித்திரை, விசாகம், மூலம், உத்தராடம், திருவோணம், உத்தரட்டாதி, அச்சுவினி, கார்த்திகை, திருவாதிரை, பூசம், மகம், உத்தரம் என்னும் நக்ஷத்திரங்கள் மேஷமுதலிய மாசங்களுக்கு முறையே நக்ஷத்திரங்களாம்.

13. மாசநக்ஷத்திரப்பிரதானம்

சௌரமாசத்திலொரு விஷேசமுண்டு. அது எதுவெனில் மாசநக்ஷத்திரப் பிரதானமாமென அறிக.

சித்திரை

மேஷமாசத்தில் சித்திராநக்ஷத்திரம் பிரதானமாகையால், மாசநக்ஷத்திரப் பெயரால் அம்மாசம் சைத்திரமாசமென்று சொல்லப்படும்.

வைகாசி

இடபமாசத்தில்வரும் விசாகம் அம்மாசநக்ஷத்திர மானதால் அம்மாசம் வைசாகமென்று சொல்லப்படுகின்றது.

ஆனி

மிதுனமாசத்தில் மூலநக்ஷத்திரம் பிரதானம், அதுபற்றி அம்மாசம் ஜ்யேஷ்டமாசமென்று சொல்லப்படுகின்றது.

ஆடி

கர்க்கடக மாசத்தில் உத்தராடம் அந்தமாச நக்ஷத்திரமானதால் அம்மாசம் ஆஷாடமாசமென்று பிரசித்தம்.

ஆவணி

சிம்மமாசத்தில் திருவோணம் மாசநக்ஷத்திரமானதால் அம்மாசம் சிராவணமாசமென்று பிரசித்தம்.

புரட்டாசி

சூரியன் கன்னிராசியை அடைந்தபொழுது வரும் உத்தரட்டாதி அம்மாசநக்ஷத்திரம். அதனால் அந்த மாசம் பாத்திரபதமாசமென்று சொல்லப்படும்.

ஐப்பசி

சூரியன் துலாராசியிற் பிரவேசித்தபொழுது வரும் அச்சுவினி நக்ஷத்திரம் விஷேசமதனால், அம்மாச நக்ஷத்திரத்தின் பெயரால் ஆச்சுவீஜ மாசமென்று பிரசித்தி பெற்றது.

கார்த்திகை

சூரியன் விருச்சிகராசியிற் செல்லும் மாசத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரம் அம்மாச நக்ஷத்திரமாதலால் அம்மாசம் கார்த்திகையென்று பிரசித்தம்.

மார்கழி

தனுமாசத் திருவாதிரை அம்மாச நக்ஷத்திரம் ஆகையால் அது மார்க்கசீர்ஷமென்று சொல்லப்படும்.

தை

மகரமாசத்துக்கு பூசம் மாசநக்ஷத்திரம். அதனால் அது புஷ்யமாசமென்று சொல்லப்படும்.

மாசி

கும்பமாசத்துக்குமகம் மாசநக்ஷத்திரம் அதனால் அது மாகமாசமென்று சொல்லப்படும்.

பங்குனி

மீன மாசத்திற்கு மாசநக்ஷத்திரம் உத்தரம். அந்த நக்ஷத்திரப் பெயரால் அம்மாசம் பாற்குனமென்று பிரசித்தமாயிற்று.

சைத்திராதியாக வழங்கப்பெறும் மாதப் பெயர்கள் சாந்திரமாசப் பெயர்களே என்றும் சாஸ்திரங்களில் சௌரமாதப் பெயராகவும் வழங்கப்பட்டுள்ளன. வென்றும் இதனால் துணியப்படும் ஆகவே சைத்திராதிகளைத் தகுதி பற்றிச் சாந்திரமாதத்திற்கோ சௌரமாசத்திற்கோ கொள்ள வேண்டுமன்றி ஒருபக்ஷத்திற்கே ஸ்திரமாகக்கொள்ளுதல் கூடாதென்றறிக.

14. மாசபூசை

மாசநக்ஷத்ர திரவிய விசேஷம்

மார்கழி நெய்யும், தையில் தேனும், மாசியில் நெய்க்கம்பலமும், பங்குனியில் தயிரும், சித்திரையில் மருக்கொழுந்தும், வைகாசியில் கந்தமும், ஆனியில் பழமும், ஆடியில் பாலும், ஆவணியில் சர்க்கரையும், புரட்டாதியில் அபூபமும், ஐப்பசியில் அன்னமும், கார்த்திகையில் தீபமுமாமென சூக்ஷ்மாகமமும் அம்சுமான் தந்திரமும் கூறுகின்றன.

மாசபூஜாபலம்

நெய்யபிஷேகத்தால் மோக்ஷமும், தேனபிஷேகத்தால் ஆயுள் விருத்தியும், கிருதகம்பளம் சாத்துவதால்

க்ஷேமாரோக்கியமும், தயிர் அபிஷேகித்து நிவேதித்துப் பூஜித்தால் புத்திரவிருத்தியும், மருக்கொழுந்தைப் (தமனம்) பூசித்துச் சாத்துவதால் இலட்சுமீ கரமும், கந்தம் சாத்துவதால் சாலோக்கிய பதவியும், பழபூசை பண்ணி அபிஷேகித்தலால் இஷ்டசித்தியும், க்ஷீர (பால்) பூசை செய்து அபிஷேகித்து நிவேதித்தலால் சத்துருநாசமும், சர்க்கரை நிவேதித்தலால் பிரீதியும், அபூப நிவேதனத்தால் தனலாபமும், அன்னாபிஷேகம் பண்ணி அன்னவகைகளை நிவேதித்தலால் அன்னவிருத்தியும், தீபதண்டபூஜையால் பாபநீக்கமும் உண்டாம், இவ்வாறு சூட்சுமாகமத்திற் சொல்லப்பட்டது.

15. உதயாதிகாலங்கள்

பிராதக்காலமும் சங்கவகாலமும், மத்தியானமும், அபரானமும், சாயான்னமுமெனப் பகற்காலமைந்து கூறாக வகுக்கப்படும். சூரியோதயமுதல் ஆறுநாழிகை அளவினதாகிய காலம் பிராதக்காலம். அதற்குமேற் பன்னிரண்டு நாழிகை வரையுமுள்ள காலம் சங்கவகாலம். அதற்குமேற் பதினெட்டு நாழிகை வரையுமுள்ள காலம் மத்தியானம். அதற்குமேல் இருபத்துநான்கு நாழிகை வரையுமுள்ள காலம் அபரானம். அதற்குமேல் முப்பது நாழிகை வரையுமுள்ள காலம் சாயான்னம் என்று காரணாகமம் கூறுகின்றது.

16. நித்திய பூஜாகாலம்

சூரியோதயமுதல் சூரியோதயம் வரையும் ஏழரைநாழிகை யளவான எட்டு யாமமாகும். ஒரு யாம அளவு கொண்ட நேரம் சந்தியா காலமென்று காமிகாகமம் கூறும்.

சூட்சுமாகமத்தில் ஏழரை நாளிகை ஒருயாமமெனவும் அந்த யாமம் எட்டுக் கொண்டது பகலுமிரவுமெனவும் எட்டுக் காலங்களிலும் செய்யப்படும் பூசை உத்தம பூசை எனவும், நான்கு காலப்பூசை மத்திமம் எனவும், மூன்றுகாலப்பூசை அதம பூசை எனவும், எட்டுக்காலப் பூசையாயின் மகாசந்தி நான்கும் உபசந்தி நான்குமாக எட்டுச்சந்தி எனவும், அவற்றுள் மூன்று காலங்களில் நித்தியயோற்சவம் செய்க எனவும் நான்கு காலமாயின் மகாசந்தி மூன்றும் உபசந்தி ஒன்றுமாமெனவும் மூன்று காலங்களிலும் நித்தியோற்சவம் செய்வது விசேஷம்

எனவும், இரண்டு சந்திகளும் பலியிடுக அல்லது ஒரு காலத்திலாவது பலி யிடுக எனவும், உபசந்திகளுக்குப் பலியிடவேண்டியது இல்லை. எனவும், உபசந்திகளில் விசேஷமாக அபிஷேகாதி நைவேத்தியாந்த பூசை செய்க அல்லது தீபாந்தம் பூசை செய்க எனவும் இங்ஙனம் நித்திய பூசையும் அதன்மேல் மகோற்சவமும் செய்க எனவும் கூறப்பட்டது.

17. எட்டுவித பூசை

அசிதாகமத்தில் நிந்தியபூசைகள் எட்டுவிதமாகுமென்று சொல்லப்பட்டது. உத்தம பூசை மூன்று விதமும், மத்திமபூசை மூன்றுவிதமும், அதமபூசை இரண்டு விதமுமாகநித்திய பூசைகள் எட்டுவிதமாகும்.

1. எட்டுக்காலப்பூசை

பகலில் நான்கு யாமப்பூசையும், இராத்திரியில் நான்கு யாமப்பூசையுமாக எட்டுக்காலப்பூசை உத்தமத்தில் உத்தமபூஜையாம்.

2. ஏழுகாலபூசை

பகலில் நான்கு யாமங்களும், இரவில் மூன்று யாமமுமாக ஏழுயாமங்களிலும் செய்யும் பூசை உத்தமத்தில் மத்திம பூசையாம்.

3. ஆறுகாலப்பூசை

பகலில் நான்கு யாமங்களிலும் இராத்திரியில் இரண்டு காலங்களிலுமாக ஆறுகாலங்களிற் செய்யப்படும் நித்திய பூசை, உத்தமத்தில் அதமபூசையாம்.

4. ஐந்துகாலப்பூசை

பகலில் பிராதக்காலம் மத்தியான்னமும், இரவில் சாயங்காலமும், அர்த்தயாமமும் உஷக்காலமுமாக ஐந்துகாலப்பூசை மத்திமத்தில் உத்தம பூசையாகும்.

5. நான்குகாலப்பூசை

அர்த்தயாம பூசையின்றி பிராதக்காலம் மத்தியான்னகாலம் சாயங்காலம் உஷக்காலமென நான்கு காலப்பூசையும் மத்திமத்தில் மத்திம பூசையாம்.

6. மூன்றுகாலப்பூசை

பிராதக்காலம், மத்தியான்னகாலம், சாயாங்காலம் என்னும் மூன்று காலங்களிலுஞ் செய்யப்படும் பூசை மத்திமத்தில் அதமபூசையாம்.

7. இரண்டுகாலப்பூசை

பிராதக்காலம் சாயாங்காலம் என்னும் இரண்டு காலங்களிற் செய்யப்படும் பூசை அதமத்தில் உத்தம பூசையாம்.

8. ஒருகாலப்பூசை

ஒருகாலத்திற் செய்யும் பூசை அதமத்தில் மத்திம பூசையாம் அதமாதம பூசை காணப்படவில்லை. இவ்வாறு எட்டுவிதமான பூசை ஆகமத்தில் நிச்சயிக்கப்பட்டது.

18. மூவிதபூஜைகள்

மேலும் அஜிதாகமம் கூறுவதாவது:- நித்தியபூஜையானது சுத்தமும் மிச்சிரமும் சங்கீரணமுமென மூன்று விதமாகச் சொல்லப்படுகின்றது. நைவேத்தியாந்தமாகச் செய்யும் பூசை சுத்தமெனவும், நித்தியோற்சவம் வரை செய்வது மிச்சிர பூசை எனவும். சுத்தநிருத்தாந்தம் சங்கீரணமெனவும் கூறப்படும்.

பிராதக்காலம் மத்தியான்னகாலம், சாயங்காலம் என்னும் மகாசந்திகளில் நித்தியயோற்சவாந்தமான மிச்சிரபூசையயாவது விசேஷமாகச் செய்க. எல்லா உபசந்திகளிலும் நைவேத்தியாந்தமான சுத்தபூசையைச் செய்க.

சூரியோத முதல் ஏழரை நாழிகைவரையுமுள்ள காலம் பூர்வசந்தி எனப்படும். அது மகாசந்தியாகாலமாகும். அதற்குமேல் மூன்றேமுக்கால் நாழிகை அளவினதாகிய காலம் உபசந்தியாகாலமாகும். அதன்மேல் மத்தியானசந்தியா காலமாகும். அது மகாசந்தி எனப்படும். அதன்மேல் மூன்றே முக்கால் நாழிகை அளவினதாகிய காலம் உபசந்தியாகாலமாகும். இவ்வாறு பகலில் செய்யப்படும் நான்குயாம பூசைகளில் மகாசந்தி இரண்டும் உபசந்திகள் இரண்டுமாம்.

இராத்திரியில் அஸ்தமனமுதல் ஏழரை நாழிகை அளவினதாகிய காலம் மகாசந்தி எனப்படும், அதன்மேல்

மூன்றே முக்கால் நாழிகையிற் செய்யப்படும் பூசை உபசந்தியாகாலமாகும். அதன்மேல் அர்த்தயாம பூசையுமாக மூன்றுகாலமுமாகும். அதன்மேல் இரவு நான்காம் யாமப்பூசையானது சூரியோதயத்துக்குமுன் ஐந்து நாழிகையிற் செய்யப்படுவதாம், இரவில் மகாசந்தி ஒன்றும், உபசந்தி மூன்றுமாம்.

இப்படியே எட்டுக்காலப் பூசாக்கிரமம் அஜிதாகமத்தில் நிச்சயிக்கப்பட்டது.

19. ஆறுகாலப்பூசை நிர்ணயம்

சூரியோதயத்தின்முன் மூன்றேமுக்கால் அளவினதாகிய நாழிகையில், உஷக்காலபூசையும், அதன்மேல் சூரியோதயம் முதல் ஏழரைநாழிகை யளவினதாகிய காலத்தினுள் காலசந்திப்பூசையும் அதன்மேல் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் உபசந்திபூசையும், உபசந்திகாலத்தை அந்தமாகக் கொண்ட ஒரு யாமத்துக்குள் மத்தியானபூசையுஞ் செய்க.

சூரியாஸ்தமனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகை அளவினதாகிய நேரம் பிரதோஷ காலமென்று சொல்லப்படும் பிரதோஷ காலத்தின் பின் மூன்றேமுக்கால் நாழிகை அளவினதாகிய காலத்துள் சாயங்கால பூசை என்றும் அதன்மேல் மூன்றேமுக்கால் நாழிகை அளவினதாகிய காலத்துள் அர்த்தயாமபூசை என்றும் சித்தாந்தசேகரம் செப்பும்.

20. நாழிகைப்பகுப்பு

மகாசந்தியா காலங்களில் அபிஷேகத்துக்கு இரண்டு நாழிகையும், பூசைக்கு ஒரு நாழிகையும், நைவேத்தியத்துக்கு அரைநாழிகையும், பலிதானத்துக்கு அரைநாழிகையும் நித்தியாக்கினி காரியத்துக்கு அரைநாழிகையும் நித்தியோத்சவத்துக்கு இரண்டு நாழிகையும், தாண்டவத்துக்கு ஒரு நாழிகையுமாம். ஆகநாழிகை ஏழரையெனக்கொள்க.

21. காலநியமம்

மூன்றேமுக்கால் நாழிகைக்குள், நைவேத்தியாந்தமாகச் செய்யப்படும் (உபசந்தி) பூசை ஆவசியகம் என்றும், ஐந்த

நாழிகை வரை நித்தியோற்சவாந்தம் செய்யப்படுவது சௌக்கியம் என்றும், ஏழரைநாழிகைக்குள் நிருத்தாந்தமாகச் செய்யப் படுவது சௌக்கியம் என்றும், பத்துநாழிகைக்குள் செய்யப்படும் உற்சவம் சௌசகம் என்றும், காலநியமம் சூட்சுமாகமத்திற் சொல்லப்பட்டது.

22. மகோற்சவகாலம்

பிராதக்காலம் (முதற்சந்தி) தொடங்கி, ஆசாரியர் ஸ்நானம் செய்து, சுவாமிக்கு அபிஷேகம் செய்க. என்று யோகஜாகமத்திலும், பிராதக்காலத்தில் பிராதக்காலபூஜை முடிவில் ஹோமம் நிறைவேறியபின் உற்சவம் செய்ய வேண்டும் என்று வாதுளாகமத்திலும் சொல்லப்பட்டது.

பகலில் துவசாரோகணம் செய்து, சாயங்காலத்தில் யாகாரம்பஞ் செய்து உற்சவத்தை ஆரம்பிக்கவேண்டும். பிராதக்காலத்தில் தீர்த்தங்கொடுத்தல் வேண்டும். இரவுற்சவம் சாயங்காலத்திலும் பகலுற்சவம் பிராதக்காலத்திலும் செய்யத்தக்கது என்று காரணாகமமும், குமாரதந்திரமும் நிச்சயிக்கின்றன.

பிராதக்கால நித்தியபூசையும், பின்னர் யாகமண்டபப் பூசையும் பின் இரதமுதலியவற்றில் எழுந்தருளச் செய்து பிரதக்ஷிணம் வந்து உற்சவம் செய்தலும், அதன்பின்னர் மத்தியான பூசையும் செய்யவேண்டும் என்று, காமிகாகமம் நிச்சயிக்கின்றது.

23. காலாதீ தப்பிராயச்சித்தம்

பூசாகாலத்திலும், உற்சவகாலத்திலும், காலமாறுபாடு உண்டாயின், ஆகமங்களில் பிராயச்சித்தம் விதிக்கப் பட்டுள்ளது.

சந்தியாகாலத்தைக் கடந்து செய்யும் பூசை அபிசாரஞ் செய்வதாக ஆகும் என்று, அம்சுமானாகமத்திலும், பிராயச்சித்தம் முதலிய நித்தியகாலத்திற் செய்தல் வேண்டும்; சந்திகாலங் கடந்து செய்வதால், அபிசார பலனுண்டாம்; நித்திய நைமித்திய பிராயச்சித்தங்கள் நித்திய சந்தியிலே செய்யப்படுவது சர்வசித்தகளையுந் தருவதாம்; சந்தியாகாலத்தைக் கடந்து

செய்யின் தோஷமும், அதற்குள்ளாயின் தோஷமின்மையுமாம்; சாஸ்திரவிதியைக் கடந்தால் எல்லாத் தோஷமுமுளதாம் என்று சூட்சுமாகமத்திலும், இலிங்கத்தில் விதிப்படி பூசை செய்யப்படுங்கால் தடையேற்படின் பிராயச்சித்தஞ் செய்யவேண்டுமென்று அஜிதாகமத்திலும், காலாதீதமாகச் செய்யும் பூசை நிஷ்பலமாகும்; பிற அரசராற் பயமுண்டாம்; நாட்டின் விருத்திக்காகச் சாந்திஹோமஞ் செய்து அகோரமந்திரம் நூறுருச் செபிக்கவேண்டும் என்று யோகஜாகமத்திலும் விதிக்கப்பட்டது.

உற்சவம் சொல்லப்பட்ட காலங்கடந்து செய்யப்படின் சாந்திஹோமம் செய்க. உரியகாலத்தில் அனுஷ்டிக்கப்படும் கிரியைகள் எல்லாப்பயனையுந் தரும் என்று காமிகாகமம் கூறும்.

24. நித்திய நைமித்திக காமியபூசை

ஆலயங்களில் ஆசாரியர் அர்ச்சகர் என இரு திறத்தாருளர் நைமித்திகக் கிரியை ஆசாரியரால் செய்யத்தக்கது நித்தியபூசை அருச்சனைகள் அருச்சகராற் செய்யத்தக்கன.

நித்தியபூசை நைமித்திகபூசை காமியபூசை எனப் பூசை மூவிதப்படும். நித்தியபூசையானது நித்தியம் ஆகந்துக நித்தியம் என இருவகையினதாம். ஆகந்துக நித்தியம் -- நித்தியாங்கம் நித்தியமானது சந்தியாகாலங்களிற் செய்யப்படும் பூசையாம் ஒவ்வொருமாசமும் வரும் புண்ணிய காலங்களிற் செய்யப்படும் விசேஷ பூசை எதுவோ, அது ஆகந்துக நித்தியம் எனப்படும் அட்டமி பூசை, பிரதோஷ பூசை, அமாவாசையிற் செய்யும் பூசை, விஷு சங்கிராந்தி பூசை ஆகந்துக நித்தியார்ச்சனை யெனப்படும். இவைகள் அர்ச்சகராற் செய்யத்தக்கன. நைமித்திக பூசையானது நைமித்திகம் நைமித்திக ஆகந்துகம் என இருவகைப்படும்.

கர்ஷணம் முதற் பிரதிஷ்டை அந்தமான கிரியை நைமித்திகம் எனப்படும். அதற்கு வேறான சகல கிரியைகளும் நைமித்திக ஆகந்துக மெனப்படும். காமிய பூசையாவது சித்திகளைப் பெறவிரும்பி விசேஷ தினங்களில் விசேஷமாகச் செய்யப்படுவதாம்.

நித்தியபூசையும், நைமித்திகபூசையும் சமகாலத்திற் செய்யத்தக்கவை. நித்திய நைமித்திகக் கிரியைகள் எந்தக் காலத்திற் செய்தல் வேண்டுமென நிச்சயிக்கப்பட்டதோ, அந்தக் காலத்தில் இரண்டு கிரியைகளும் ஆசாரியராற் செய்யத்தக்கன; ஏனைய நித்திய பூசைகளெல்லாம் அருச்சகர் செய்தல் வேண்டும்.

சந்தியாகாலந் தவறிச் செய்யும் பூசைகளெல்லாம் அபிசாரயாகஞ் செய்வதனால் உண்டாகும் பலனைக் கொடுக்கும் என்று, அம்சுமான் ஆகமம் கூறுகின்றது. இதனால் நித்தியாதிகள் விளக்கப்பட்டன.

காமியபூசை

நித்தியசந்திகாலப் பூசையோடுசேர்ந்ததாய் நைமித்திகக் கிரியைகளைச் செய்க. நித்தியபூசை சேர்ந்ததாயினும் சேராததாயினும் காமியபூசை செய்க எனச் சூட்சுமாகமம் கூறுகின்றது.

இதனால் காமியபூசைக்குக் காலநியமம் இல்லையென்பது உணர்த்தப்பட்டது.

25. நயனோன்மீலனாதிகளுக்குக் காலம்

நயனோன்மீலனகாலம்

இரண்டு கண்ணுள்ள தினத்தில் நயனோன்மீலனஞ் செய்க என்று, வீராகமமும், உதயம் முதல் மத்தியானாந்தமான காலத்துள் வரும் சுபமுகூர்த்தத்தில் செய்க என்று, காரணாகமமும் கூறுகின்றது.

ஜலாதிவாசம்

ஜலாதிவாசக் கிரியை இரவிற் றொடங்குதல் கூடாது; சயனாரம்பக்கிரியை பகலிற் றொடங்குதல் கூடாது என்று காரணாகமம் செப்புகின்றது.

மிருத்சங்கிரகணம்

பிரதிஷ்டை சம்புரோக்ஷண காலங்கள், தீக்ஷாகாலங்கள், உற்சவகாலம் முதலிய காலங்களில் மிருத்சங்கிரகணம் செய்ய

வேண்டு மெனவும், சாயான்னகாலத்தில் மிருத்சங்கிரகணஞ் செய்து, முளையின் விருத்தி பொருட்டு அங்குரார்ப்பணம் பண்ணவேண்டு மெனவும், சித்தாகமமும், காமிகாகமமும் செப்புகின்றன.

அங்குரார்ப்பண காலம்

ஸ்தாபனம், புரோக்ஷணம், ஸ்நபனம், உற்சவம் முதலிய மங்கள காரியங்களில், முன்னர் ஒன்பதாநாள், ஏழாநாள், ஐந்தாநாள், மூன்றாநாள், முதலாநாள், என்னும் நாட்களில் இரவில் அங்கு ரார்ப்பணம் செய்யவேண்டும்; சத்தியோங்குரார்ப்பணமாயின் பகலிலுஞ் செய்யலாம் என்று சுப்பிரபேதம், காரணம், அஜிதம் முதலிய ஆகமங்கள் கூறுமென்றறிக. [இங்கே ஸ்நபனமென்றது மத்திமத்திரயமும் உத்தமத்திரயமுமாகிய ஸ்நபனபேதங்களை.]

மணியடிக்குங் காலம்

அபிஷேகாதி அதனந்தம், அர்ச்சனாந்தம் நைவேத்திய தொடக்கம் உற்சவத் தொடக்கம் அதனந்தம் நிருத்தமுடிவு முதலிய காலங்களில் மணி அடித்தல் வேண்டும்.

வாத்தியகோஷ காலம்

அபிஷேக காலம் நிவேத்திய காலம், பெலிபோடுங் காலம், தூபதீபாதி சமர்ப்பிக்கும் காலம், உஷக்காலம் என்னும் ஐந்து காலங்களிலும் வாத்தியகோஷம் செய்தல் வேண்டும்.

சங்குத் தொனி காலம்

அபிஷேகாதி அதனந்தம் பூஜாந்தம் நைவேத்தியமெடுக்குங் காலம், பூஜாகாலம் என்னும் ஐந்து காலங்களிலும் விசேஷமாகச் சங்கத்தொனி செய்தல் வேண்டும்.

வேதாத்தியயன காலம்

அபிஷேக காலம், நிவேதனம் பண்ணுங் காலம், தூபதீபம் சமர்ப்பிக்கும் காலம், அதன்முடிவு என்றிக் காலங்களில் இருக்கு முதலிய வேதங்களை அத்தியயனஞ் செய்தல் வேண்டும்.

பக்தாதி ஸ்தோத்திர காலம்

அபிஷேகசமயம், நைவேத்திய காலம், தூபதீபாதி சமர்ப்பிங்குங் காலம், பூஜாந்தம் என்ற நான்கு காலங்களிலும் விசேஷமாகப் பக்தாதி ஸ்தோத்திர பாராயணம் செய்தல் வேண்டும். இப்படிக் கிரமமாய் ஒவ்வொரு சந்திகளிலுஞ் செய்தல் வேண்டும்.

26. திரிபக்ஷ பூசை

பிரதிஷ்டை முடிந்த பின்னர், ஆசாரியர் முதலியயோரைச் சந்தோஷிக்கச் செய்து, உற்சவஞ்செய்தல் வேண்டும். ஒருபக்ஷமாவது, இரண்டுபக்ஷமாவது, மூன்றுபக்ஷமாவது அபிஷேகஞ் செய்க. உபசாரங்களுடன், நித்தியமும் சாந்திஹோமம் செய்க என்று, காரணாகமத்திலும், அவ்வாகமத்திற்றானே மீண்டும், சாந்திஹோமத்தை முன்னிட்டு ஸ்நபன பஞ்சகவ்வியாபிஷேகஞ் செய்க; நாற்பதாவது தினத்தில் சங்காபிஷேகஞ் செய்யத்தக்கது; அதனால் திரு, வெற்றி, புண்ணியம், ஆயுள், ஆரோக்கிய விருத்தி உண்டாமென்று கூறப்பட்டது.

நாற்பத்தைந்தாநாள் முடிவிலாவது, நாற்பதாம் நாளிலாவது ஸ்நபனாபிஷேகம் இரட்சாபந்தன விசர்ச்சனம் செய்யத்தக்கது.

சகச்சிர (100) கலசஸ்நபனமாவது அதிற்பாதியாவது அதிற்பாதியாவது, நூற்றெட்டு (அஷ்டோத்தரசத) கலசஸ்நபனமாவது அபிஷேகம் பண்ணி சாந்திஹோமமுஞ் செய்க. கலசங்களை அபிஷேகித்து அவிசை நிவேத்திக்கவேண்டும். திரிபக்ஷபூசையையும் ஸ்நபனத்தையுஞ் செய்க. மூன்று பக்ஷமுடிவில் இரட்சாபந்தன விசர்ச்சனம் பண்ணுக; நாற்பத்தைந்து நாள்வரை நித்தியத்தைச் செய்க; நைமித்திகத்தைச் செய்யற்க.

ஸ்நபனபலன்

சகச்சிர (1000) கலசாபிஷேகம் சிவசாயுச் சியத்தைக் கொடுக்கும்; எண்பத்தொரு கலசஸ்நபனம், நூறுவயசையும். நாற்பத்தொன்பது கலசஸ்நபனம் வெற்றியையும், இருபத்தைந்து

(பஞ்சவிம்சதி கலசஸ்நபனம் தொழிற்பலனையும், ஒன்பது (நவ) கலசஸ்நபனம் குரோத நாசத்தையும், ஐந்து கலசஸ்நபனம் பூமித்தலைமையும் கொடுக்கும் என்று மகுடாகமம் கூறுகின்றது.

27. ஸ்நபனகாலம்

நித்தியம், நைமித்திகம், காம்யம் என்னுங் காலங்களிற் செய்யப்படும் ஸ்நபனம் மூன்று விதமாம். அஷ்டமி, சதுர்த்தசி, பஞ்சமி, சோமவாரம், அமாவாசை, பூரணை, சங்கிராந்திபுண்ணிய காலம், கிரகணபுண்ணிகாலம் முதலிய புண்ணிய காலங்கள் பவித்திரோற்சவகாலம், தமனோற்சவ காலம், பிரதிஷ்டையின் நான்காம்நாள், பன்னிரண்டு மாசங்களும் பூர்த்தியாகும் வருஷந்தோறும் வரும் பிம்பஸ்தாபன நக்ஷதிரக்காலம், கர்த்தா வினதும், அரசனதும் ஜன்மநக்ஷத்திரதினம், யுத்தந் தொடங்குங்காலம், வெற்றியடைந்த தினம், பட்டாபிஷேக சமயம், தீக்ஷை ஆசார்யாபிஷேக காலம், மழையில்லாத காலம், சுரத்தாற் பீடிக்கப்படுங்காலம், துஷ்டக்கிரகபீடனகாலம், பிராயச்சித்தம் உற்பாதம் வருங்காலம், நெய்க்கம்பலம் சாத்துங்கருமம் முதலாம் மாசபூஜாகாலங்கள், சாந்திகருமம், மங்களக்கிரியாகாலம், மந்திரசாதனகாலம் முதலிய காலங்களில் ஸ்நபனாபிஷேகம் செய்யத்தக்கது என்று, சித்தாந்த சேகரமும், சங்கிராந்தி சித்திரைவிக்ஷு ஐப்பசிவிஷு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், தீக்ஷைமுதலியவை நடைபெறுந்தினம், பிரதிஷ்டையினந்தம், சம்புரோக்ஷணை, உற்சவம் முதலான விசேஷகாலங்களில் ஸ்நபனாபிஷேகம் செய்ய வேண்டுமென்று மகுடாகமமும் பவித்திரோற்சவகாலம் முதலிய காலங்கள், பிரதிஷ்டை, கார்த்திகைவிளக்கீடு புதிது நைவேத்தியம் பண்ணுங்காலம் (நவநைவேத்தியகாலம்) வசந்தோற்சவகருமம், பிராயச்சித்தங்கள், ஜீர்ணோத்தாரம், முதலியகாலங்களில் ஸ்நபனாபிஷேகம் செய்க என்று அஜிதாகமமும் கூறுகின்றன.

28. ஸ்நபனம் ஒன்பது பேதம்

ஸ்நபனம் மூன்று விதம் எனவும், அவை யொவ்வொன்றும் மும்மூன்று விதமாக ஒன்பது பேதம் எனவும், ஐந்து கலசங்களை வைத்துப் பூசித்துச் செய்யும் ஸ்நபனம் அதமத்தில் அதமம்

ஒன்பது கலசஸ்நபனம் அதமத்தில் மத்திமம்; இருபததைந்து கலசஸ்நபனம் அதமத்தில் உத்தமம் எனவும், நாற்பத்தொன்பது கலசஸ்நபனாபிஷேகம் மத்திமாதமம்; எண்பத்தொன்று மத்திமத்தில் மத்திமம்; நூற்றெட்டு மத்திமத்தில் உத்தமம் எனவும் இருநூற்றுப் பதினாறு கலச ஸ்நபனாபிஷேகம் உத்தமத்தில் அதமம்; ஐஞ்நூறு உத்தமத்தில் மத்திமம்; ஆயிரம் உத்தமத்தில் உத்தமம் எனவும் சித்தாந்த சேகரத்திற் சொல்லப்பட்டது.

29. சங்காபிஷேக காலமும் அதன் பயனும்

ரோகிணி நக்ஷத்திரமும், சனிவாரமும் சேர்ந்த பொழுதினும், வியாழனும் பூசநக்ஷத்திரமும் சேர்ந்த காலத்திலும், ஞாயிறும் அத்தநக்ஷத்திரமும் கூடிய காலத்திலும், வெள்ளியும் ரேவதி நக்ஷத்திரமும் கூடிய காலத்திலும், செவ்வாயும் அச்சுவினி நட்சத்திரமும் பொருந்திய காலத்திலும், புதனும் அனுஷ நக்ஷத்திரமும் சேர்ந்த காலத்திலும், திங்களுந் திருவோண நக்ஷத்திரமும் பொருந்திய காலத்திலும், அட்டமியிலும், சதுர்த்தசியிலும், அமாவாசையிலும், சங்கிராந்தி புண்ணிய காலத்திலும், எசமானுடைய சென்மநக்ஷத்திரத்திலும் சங்காபிஷேகம் செய்க எனவும், ஆயுள், செல்வம், அவமிருத்து ஜயம், நோய்நீக்க, சத்துருக்ஷயம், புத்திர பௌத்திர விருத்தி, சாந்தி, புஷ்டி, பாபநீக்கம் என்பனவற்றைக் கொடுக்கும் ஆகையால் தர்மார்த்த காம மோக்ஷ சித்தியின் பொருட்டுச் சங்காபிஷேகமும் செய்து எனவும் அம்சுமானாகமம் சங்காபிஷேக காலத்தையும் அதனைச் செய்வதாலுளதாகும் பயனையுந் தெரிவிகின்றது.

[illegible]

19. [illegible]

[illegible]

சைவசித்தாந்தம்

சைவசித்தாந்த சரபம்
காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகள்,
பழனி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்தம்

சைவசித்தாந்த சரபம்
காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகள்,
பழனி

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 57ம் ஆண்டு நிறைவுவிழா தலைவர் காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகள் அவர்கள் தலைமைப் பேருரை :

"மலர்மிசை அயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூராவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப் பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசைவைத்து வாழும் தலைமைநந் தலைமை யாகும்"

"பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும் பிழையேயன்றி
வாயன்மை தெளிந்தசைவ சித்தாந்தநெறிதேறி யதீதவாழ்வில்
போயன்மி யைந்தெழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக்கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு நான்பெற்றேனால்"

இத்திருமந்திர நகரமென்னும் "தூத்துக்குடி"யின்கண் நின்று நிலவும் "சைவசித்தாந்த சபை" யானது "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்பது போல நம் செந்தமிழ் நாட்டிலே முதன்முதல் தோன்றிய பேரவையாகும். அம்மட்டோ! இதனைச்சார்ந்த பல சைவப்பேரவைகளைத் தோற்றுவித்துச் சைவசமயம் வளர்ந்தோங்குதற்குரிய ஆக்க வேலைகள் பல புரிந்த தாயகமாகும்; உயிர்க்குறுதி பயக்கும் மெய்த்தாயனையது; பல நல்லாசிரியர்களை ஓவாது பெற்றெடுத்த பான்மொழிக்கன்னிகை; வயது முதிர முதிர இளநலஞ் செறிந்திலகு தெய்வதவப்பாவை;

தெய்வச்சிவமணமும், சைவத்தமிழ்மணமும் இடையறாது கமழும் எழிலுடம்பினள்; இன்றுவரை நமது தமிழகத்திலே காணும் "தமிழ்ப்பற்று" "சைவாபிமானம்" முதலியவைகளுக்கு இந்தச் சபை ஆற்றிய சிறந்த பணியே காரணமெனல் மிகையாகாது. சிவமணம் வீசும் திருமந்திரநகர் எனக் கூறி மகிழ்வோம். அன்று இந்த சைவசபைக்கு அடிகோலிய சிவனடியார்கள் அன்றுதொட்டு இன்றுகாறும் இக்கழகமாம் தெய்வச்சைவப் பைங்கொடியை பரிபாலித்து வந்தவரும், செவிலித்தாயர்தம் செம்மை மனவுறுதிப்பாடும், பொருளாலும், அருளாலும் மற்றவற்றானும் போற்றிவந்த தொண்டர்தம் தொண்டும் என்றினையன தொடர்ந்துகாப்ப இன்று (57-ம்) ஆண்டு நிறைவுவிழாக்கொண்டாடும் பெறும்பேறெய்தினேம்.

கருதுவார் கருத்தறிந்து முடிப்பானாம் இறைவன் திருவருள் இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாய் நின்று முற்றுவித்ததென்று கூறவும் வேண்டுங்கொல்?

"சைவசித்தாந்தசபை" எனப்படும் ஒருயிர் ஈருடம்பின் ஒருவர்க்கு (அதாவது) தமிழ்மலர் நங்கைக்கும் அம்மலர் மண (ச்சைவ) நம்பிக்கும் சிவ நன்மணம் புணர்த்தும் இம் மணவிழா ஆண்டுதோறும் சேவுயர் கொடியுயர்த்தி செவ்வே நிகழ்வதாக. இத்திருவிழாவை ஓவாது முற்றுங்காண நோற்றிடுவார் ஒருவர் பக்கல் முழுப்பொறுப்பையுந் தந்து இச் சைவக்குழுவினர் சிவத்தில் திளைத்திருத்தலும் இயல்பே. அம்முறையில், எங்கள் உயிர்க்குயிராகிய இறைவன் திருவருள் உண்ணின்றுணர்த்த அதன்படி தாங்கள் எல்லீரும் என்பக்கல் தந்தளித்த இப்பெருநிலையை உங்கள் உயிர்க்குயிராகிய தம்பிரானாரே எளிய எம்முண்ணின்றும் ஏற்பாரென்னுந்துணிபுடையோமாதலின், நம்மை விட்டகலாது ஒற்றித்து நிற்கும் திருவருளைச் சிந்தித்து தந்த தலைமையையும், வந்த வந்தனையும், " வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் பாலே சேர்த்து இங்கு குழுமிய "அடியார் நடுவுள்ளிருக்கும் திருவருளைச்" சிந்தித்து நிற்பேனாக.

இங்கு குழுமிய அறிவின்மிக்கார் பலர் நிறைந்த கூட்டத்திலே தக்கார் பலர் கண்ணோட்டத்திலே, சாரவைத்துச் "சான்றோரினத்திரு" அவரைக் காண்பதுவும் நன்றே

அவரடிக்கமலம் பூண்பதுவும் நன்றே; அவரோடிணங்கி யிருப்பதுவும் நன்றே; அவர் குணங்களுரைப்பதுவும் நன்றே; அவர் சொற் கேட்பதுவும் நன்றே; “ செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாந் தலை” பெரியாரைச் சார்ந்து பெரியராக விரும்புவார் கேட்க;

“கற்றல் கேட்டலுடையார் பெரியார்”

“கற்றிலனாயினுங் கேட்க”

“கேள்வி வல்லார்கள்” - என்பதனால் கேள்வியின் அருமைப்பாட்டைச் சிந்தித்திடுக.

கேளாச்செவியை “கேள்வியால் தோட்கப்படாத செவி” என்றும்

“கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்கள் ஊடே
உற்றிலேன் ஆதலாலே உணர்வுக்குஞ்சேயேன் ஆனேன்”

எனவும் வருந் திருவாக்குகளை யோர்க; விரைந்து சங்கம் சார்க; வெனக்கூறி “வண்ணப்பணித்தென்னை வாவென்ற வான் கருணைக்குத் தமியேன் ஆற்றுங் கைம்மமாறு என்னே! என்னே!!

“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ வுலகு”

ஆன்றோர் கடன் “என்னையுந் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே” அப்பணி சடையனும் இப்பணி யுடையனாமே! சங்கம் சார்தலாகிய பேரறத்தின் மாண்பு என்னே! என்னே!

இவ்விறைப்பணி “தக்காருள்ளும் ஏகனாகி அறிவின் மிக்காயுழையும் ஏகனாகி” நின்றாற்றும் பணியன்றோ!

ஐம்பெரும் பணிக்கும் ஐம்பெரும் கடவுளர் தொண்டராமே? இப்பெரும் பணிக்கு நம் பெருங்கடவுளே தலைவராமே? என்னே இவ்வருளறத்தின் மாண்பு!

தேவரும் அறியாத தேவதேவன் நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நிற்றலிற் பெருவிருப்புடையோனாதலின் அவர்தம் அருளினையே நினைந்து இவ்வருட்பணியில் செல்வோமாக.

"சென்ற நெறியெல்லாம் செந்நெறியாம்படி" அவர்தம் இன்னருள் காப்பதாக.

கல்லாத புல்லறிவினேனையும் ஒரு பொருளாகக் கருதிய "கருத்தறிந்து முடிப்பானாம்" இறைவன் இவ்வரும்பணியிற் செலுத்தித் தமியேனை உய்யக்கொள்வானாக. "இப்பணியை இவன் முடிப்பானாக" இவ்வரும்பொருளை இவன் துய்ப்பானாக" இவ்வறவினையை ஒல்லும் வகையான் ஓவாதே செல்லும் வாயெல்லாம் இவன் செய்வானாக" என்ற தங்கள் நிறைமொழி வன்மையும் பரம்பரன் அருளினாலே பாவனையிறந்து நின்று பாவிக்கப்படுவதாகலின் அப்பாவகப்பயனும் தலைசிறந்து நிற்பதாக. சபாநாதன் திருவருள் துணைபுரிவதாக. இத்துணைக் கொண்டு தமியேன் எனது எளிமையும், தங்களது பேரன்பின் அருமையும் ஓவாது உணர்வேனாக. இவ்வுணர்வே தங்கள் நன்றியை அறிந்தடங்கி நிற்பதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வதாக.

சித்தாந்த சைவச் செந்நெறி கடைபிடித்தொழுகும் மெய்யன்பர்களே!

இத்தகைய சைவவிழாவில், முற்றும் ஓவாது பயன்பெறும் ஒருவர் (தலைவர்) தலைவருரை என்பதொன்றை முன்னுரையாக நிகழ்த்துதல் வழக்காற்றில் காணப்படுவதொன்று. அந்நெறி கடைபிடித்துத் தமியேனும் சிலசொற்கள் தங்கள் திருமுன்பு பேச விழைகின்றேன்.

சைவ சித்தாந்தம் - சைவம், சித்தாந்தம் எனப் பிரிக்கப்படும்

சைவம் சிவசம்பந்தமுடையது. சிவம், செம்மைப் பண்பினடியாகப் பிறந்த செம்பொருள். "செம்பொருட்டுணிவே செம்மையேயாய சிவபதம்" என்பதால் பெறப்படுகிறது.

"பதியறன் பாதந்தன்னிற் பட்டுழல் பசுநாம்" என்பதனால் பசு பாசங்களுக்கு இறைவன் ஆதாரமாய் வாரி, நீர், லவணம் போன்றிருக்கும் சம்பந்தம் (தன்மையை உணர்த்துவது) இச் சைவம்.

சைவம் " நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாய்" என்றும் வருதலால் உணரப்படும்.

சித்தாந்தம் மேலேகண்டவாறு " சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள் மூன்று" என்ற முப்பொருள்களின் உண்மையை முன்பின் மாறுகோளற எடுத்துக்காட்டி அறிவியல் உலகம் ஏற்குமாற்றால் முடித்துக்காட்டுவது சித்தாந்தமாம். இதில் கூறப்பட்ட குறைவற்ற தத்துவங்கள் பிற மதங்களில் கேட்கப்படாமையான், அவை முடிபாகா. இதில் தத்துவநிறைவு காணப்படுவதால் மற்றைக்கோட்பாடுகள் இவற்றுள் அடங்குவனவாம். ஆதலால், எல்லா முடிபுகளும் இவற்றுள் அடங்கத் தனது முடிபே முடிந்த முடிபாகக் கொள்ளப்படுவது. இதனால் " சித்தாந்தமே சித்தாந்தம்" என வருதலால் உணரப்படும். அது அத்தகைய இலக்கணம் உணருமுகத்தால் அறியப்படுமாலலால் அந்த முப்பொருள்களின் தன்மையை ஒருவாறு சிந்திப்போமாக.

இவற்றுள் பதி:- அநாதியே அமலனாகிய இறைவனாம்.
பசு:- உயிர்த்தொகுதிகளாம்.
பாசம்:- ஆணவம், கன்மம், மாயை என்பனவாம்.

பதி இலக்கணம் (பதி- இறை)

பதி- (பசுக்களை) ஆளுந்தலைவர்; "ஆளுநாயகன் கைலை" (பெரிய புராணம்)

பதி (சிவம்) தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, என்னும் அருட்குணங்கள் தங்கியிருத்த லானும், எல்லாவற்றிலும் தங்கியிருத்தலானும், " இறைவன்" என்றும், அணவுதல், பொருந்துதல், சிவணுதல்பற்றி (செம்மைப் பண்பினடியாக) 'சிவன்' என்றும் வழங்கப்படுவர். மனம் வாக்கைக் கடந்து நிற்றல் பற்றியும் (கடவுதல்) செலுத்துதல் பற்றியும், (கடவுள்) என்றும் பேசப்படுகின்றார். இன்னும் சிவபெருமான் உலகத்தைப் படைக்குங்கால் (பசு) உயிர்களிடத்தே கலப்பினால் உடலுயிரும்போல ஒன்றாய்ப் பொருளின் தன்மையால் கண்ணும் கதிரவனும் போல அவ்வுயிர்களின் வேறுமாய், உயிருக்குயிராதற் றன்மையால் கண்ணொளியும் ஆன்மபோதமும்போல் அவ்வுயிர்களோடு உடனுமாய், அவ்வுயிர்களிடத்துமேலாய் நிற்பதாகிய சக்திரூபமாகியும், சக்தியினால் கூட்டுவிக்கின்ற

இருவினைகளுக்கேற்ப எண்ணிறந்த உயிர்கள் ஐந்தொழிற்பட்டுச் செல்லுங்கால் அவ்வைந்தொழில் நடாத்துவதாகிய பதிரூபமாகியும், சத்திரூபம் பதிரூபமாகிய அத்தன்மைகளின் வேறாகியும், அத்தன்மைகளோடு பிரிப்பின்றியும் எவ்விடத்தும் தானே சுயம்பிரகாசமாம் இயல்புடையனாய் நிற்பன்.

பசு இலக்கணம் (பசு- ஆன்மா, உயிர்)

சித்தாந்த நெறிப்படி ஆன்ம இலக்கணமாவது - எவ்வாற்றாலும் அசித்தாதலில்லாத வியாபகப் பொருளாகிய இறைவன் போல பூரணவியாபகமும், அதிசூக்ஷ்மசித்தாதலின்றி சார்ந்த பொருளினிடத்து அப்பொருளளவாக வசிப்புண்டு வியாபித்திருக்கும் ஏகதேசவியாபியாய், இச்சா ஞானக் கிரியையென்னும் குணங்களை உடையதாய், உடையதாயினும் அவ்விச்சாஞானக்கிரியைகள் அநாதியே பற்றிநிற்கும் ஆணவ மலத்தினால் தொழிற்படாமல் மறைப்புண்டு கிடக்கும். அதனால் தூலசித்து எனப்படும். இவ்வாறு கட்டுற்று நிற்குங்கால் பசுவெனப்படும். இது ஒன்றினின்றும் தோன்றியதன்று;கடவுளால் படைக்கப்பட்டதும் அன்று; அனாதியானது.

ஆணவ (பாச) இலக்கணம் (பாசம் - தளை)

பாசம் - ஆணவமலம், அளவில்லாத சக்திகளையுடையது; அளவில்லாவுயிர்களுடன் சேர்ந்துநிற்பது; எப்பொழுது சேர்ந்ததெனின், ஆன்மாவுள்ள அன்றே உண்டாய், அன்றே ஆன்மாவுடன் சேர்ந்து நிற்றலால் செம்பிற் களிம்புபோல அநாதியாய்க் கலந்து நிற்பதாம். மறைக்கப்படும் உயிர்கள் பலவாதல்போல இவ்வாணவம் பலவன்று; ஒன்றேயாம். அவ்வாணவமலம் உயிர்கள் கேவலாவத்தையில் நிற்குங்கால் அறிவு தொழில்களை அவ்வுயிர்கட்கு நிகழவொட்டாது தனது மறைப்புச் சக்தியால் மறைத்து நிற்கும். கேவலத்தினின்று நீங்கித் தனு கரண புவன போகங்களுடன் கூடிச்சகலத்தில் உயிர்கள் நிற்குங்கால் அவ்வாணவமானது மோகஞ்செய்தலாகிய கீழ்ச்செலுத்துஞ் சக்தியால் போகானுபவத்திற்கு ஏற்ற கர்த்தா தன்மையை நிகழ்த்தி நிற்கும். இவ்வாறு கேவலத்திலும் சகலத்திலும் அந்த ஆணவமலமே காரணமாய் நின்று உயிர்க்கு அஜ்ஞானத்தை உண்டுபண்ணும். “யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் எனும் இக்கோணலே” மறைப்பாய் செய்வனவற்றை கன்மமென ஆக்கலால் அதன் இயல்பு கூறுவாம்

கன்ம இலக்கணம்

கன்மம் - செயல்; செய்வோனால் அமைந்தது; இது முற்பிறவியில் ஆன்மாவினால் செய்யப்படும் இதம், அகிதம் என்னும் முயற்சியாமென்பது பெறப்பட்டது. இதுவே ஆகாமியம். அம்முயற்சி பலனுக்கு வருங்காறும் கட்டுப்பட்டு அறம், பாவம் என்னும் இருவகைத்தாம். இதுவே சஞ்சிதம். அவ்வறம், பாவம் பலனுக்குவருங்கால் இன்பதுன்பமென்னும் இருவகைத்தாம். இதுவே பிராரத்தம். இவ்வாறு ஆகாமியத்தால் சஞ்சிதமும், பிராரத்தமும், அந்தப் பிராரத்தத்தை அனுபவிக்குமுறையில் மேல் ஆகாமியமும் உண்டாயின் முன்னர்ப் பிராரத்தம் உண்டாயிற்றா? ஆகாமியம் உண்டாயிற்றா? என்னும் சங்கை நிகழுமன்றே, பிராரத்தமென்பது ஆகாமியத்தின் விளைவேயன்றி வேறில்லை யாதலின், ஆகாமியமே முன்னர் என்று சொல்லல் வேண்டும். அவ்வாகாமியமாகிய இதம் அகிதத்தை முன்னர்ச் செய்தற்கு ஒரு காரணம் வேண்டும், இன்றேல், அச்செயல் நிகழாது. அதற்குக் காரணம் விருப்பு வெறுப்பேயாம். அக்காரணமாகிய மூலகன்மம் உண்டென்று காட்டுவதான அவ்வாகாமிய கன்மம் பிறப்பிறப்பில் கட்டுப்படுதலின், ஆணவ மலம் மாயாமலங்களோடு ஒத்ததால் இதுவும் மலமெனப்பட்டு காமியமலமாய் மும்மலத்துள் ஒன்றாய் வைத்தெண்ணப்படும். காமியமலமாகிய இருவினை என்பது இப்பொழுது செய்யப் படாமையால் உண்டென்பது கண்கூடாக (பிரத்தியக்ஷமாய்) அறியக்கூடாததாயினும் இன்பதுன்பமாகிய காரியத்தானும், புண்ணியபாவமாகிய காரணத்தானும் உண்டென்று அறியப்படும். மூலகன்மமே விருப்பு வெறுப்பு என்பதனை “வேண்டுதல் வேண்டாமையிலான்” என இறைவனை விசேடித்தலின் ஆன்மாவுக்கு இவை உண்டென்பதும், இவையே ஆன்மாக்களுக்கு இடும்பையாமாறும் கூறப்பட்டது, இதனை ‘இருவினைப்பாகம்’ எனவும், ‘இரண்டெனும் பழைய வினையும்’ என வருதலானும் உணரப்படும்.

அவ்வாகமிய வினையானது அழிந்தும், செய்யப்பட்டும் வருதலால் ஆதியும் அந்தமும் உடையதாம் ஆயினும், இடையறாது ஓடும் நீர்ப்பெருக்குப் போலத் தொடர்ச்சியாய்த் தோன்றுதொட்டு வருதலால், பிரவாக அநாதியாம். அது ஏனைய ஆணவமல காரியமாகிய மோக முதலிய குணங்களோடும்,

மாயாமல காரியமாகிய தனுகரண புவன போகங்களோடும் கூடிய உயிரைப் பிறப்பிறப்பிற் கட்டுப்படுத்தித் தனது காரியமாகிய இன்பதுன்பங்களின் வேறுபாட்டிற்கேற்பப் பல்வேறு வகைப்பட்ட உடல்களை இறைவன் ஆணையால் அவ்வுயிர்கு வெளிப்படாது சூக்ஷமமாய் நின்று, தோற்றுவித்து நடக்கும். இக்கன்மம் கழிதற் பொருட்டுக் கட்டுவிப்பதே மாயாமலம் ஆதலான் அதன் இயல்பு கூறுவாம்.

மாயை இலக்கணம்

மாயை, மா (ஒடுக்குவோனால்) ஒடுங்குவது; யா (தோற்றுவிப்போனால்) தோன்றுவது. அதாவது சுருங்கியும் விரிந்தும் உள்ள தன்மையது, ஒடுக்கம், தோற்றம் என்னும் இரண்டு இலக்கணங்களையுடையது. அதனால் ஒடுக்கம், தோற்றமென்னுமிரண்டனையும் இடையீடின்றிச்செய்வது. மாயேயமாய் (விரிந்த நிலையில்) உள்ளபொருள் என்றும், (ஒடுக்கம்) தோன்றாதநிலையில் இல்பொருள் என்றும்கூறுவர். பெருகலும் சுருங்கலும், உள்பொருளுக்கேயன்றி இல்பொருளுக்கின்மையால் மாயை உள்பொருளேயாகும். அது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்றாய், விஜ்ஞானகலர், பிரளயாகலர், சகலருக்குமுறையே தனுகரண புவனபோகமாயிருக்கும். சுத்தமாயைவிந்துஞானமாம். அசுத்தமாயை 'நித்தமாயருவாயேக நிலையதாய் உலகத்திற்கோர் வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர் 'சத்தியாய்' புவனபோகமும் உயிருக்காய், வைத்ததோர் மலமாய், மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே" என்பதனால்; மாயைநித்தமென்றும், சூக்ஷமமாதலால் அருவென்றும், அழிதல் இன்மையாலும் இன்றியமையாத பொருளாதலாலும் ஏகமென்றும், காணப்பட்ட இவ்வுலகத்துக்குக் காரணமாதலால் வித்தென்றும், அறிவுடையான் ஒருவனையின்றித் தொழிற்படாமையான் அசித்தென்றும், உயிர்களுக்கு எவ்விடத்தும் தனுகரண புவனபோகங்களைக் கொடுத்தலால் வியாபியாயென்றும், முதல்வன் வியாபகத்துள் அடங்கலால் முதல்வனுக்கோர் (வைப்புச்) சத்தியாயென்றும், தனுகரண புவனபோகமாய் (உயிர்களின் பொருட்டு) விரிதலால் மலமென்றும் விபரீதவுணர்வைச் செய்தலால் மயக்கமுஞ் செய்யுமென்று கூறப்பட்டது. இங்கு கூறப்பட்ட மாயையே, காணப்பட்ட

இவ்வுலகத்துக்குப் பரமகாரணமாக உள்ளது. இவ்வுலகமும் நிலம், நீர், நெருப்பு, காற்று, வான், என்னும் தூலபூதமயமானது. இன்னும் சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னும் தன்மாத்ரைகளும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியங்களும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்களும், மனம், அகங்காரம், புத்தி, பிரகிருதிமாயை என்னும் இத்தத்துவங்கள் உயிர்களின் கருவிகளாக உள்ளன. இவை போக்கியகாண்டமெனப் பெயர் பெற்றுவிளங்குவன. மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்பன போககாண்டமெனப் பெயர்பெறும்.

இவை உள்ளந்தக்கரணங்களாகும். உலகம், உடம்பு முதலியவைகளுக்கு வேண்டப்படும் பஞ்சபூதங்களும், உயிரின் அறிவு விளங்குதற்கேதுவாய கன்மேந்திரிய ஞானேந்திரியங்களும், அந்தக்கரணங்களும் இன்றியமையாதது வேண்டப்படுவது போல, உள்ளந்தக்கரணங்களாகிய (மாயையிற்) காலம்- நியதி-கலை-வித்தை- அராக முதலியனவும் இவற்றைச் செலுத்தும் சிவம், சக்தி, சாதாக்கியம், ஈச்வரம், சுத்தவித்யை பிரேரகண்டங்களும் வேண்டற்பாலனவே. இவ்வைந்து தத்துவங்களையும் திருமூலர் தமிழ்மண்டிலம் என்று கூறியுள்ளார். முன்கூறிய ஆன்ம தத்துவம், (24)ம், வித்யா தத்துவம் (7)ம் ஆகிய இவைகள், தம்முள் வன்மை மென்மையான தூலப்பொறிகளாம். இவற்றினும் சூக்குமப் (நுண்) பகுதி சிவதத்துவ முதலியனவாம். இவற்றையின்றி தூலப்பகுதிகளுக்கு யாதொரு செயலுமில்லை யென்க. இங்கு கூறிய சிவதத்துவாதிகள் விந்துவினின்றும் தோன்றியன. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, தூலவைகரி, முதலியவைகட்குக் காரணமாவன இவையே. இவற்றையின்றி ஒன்றை அறிந்து இயற்றியிடா உயிர்கள். அது:-

"மூவகையணுக்களுக்கு முறைமையின் விந்துஞான
மேவினதில்லையாகில் விளங்கிய ஞானமின்றாம்"

என்றும்

"மாயை கொடு மல மொழியப்பன் முன்னோன்"

என்றும்,

மாயாகருவிகளாகிய தத்துவச்சேர்க்கை உயிருக்கு அமைந்தமை பற்றிச் சிவஞான சித்தியாரில்

"எல்லாமாய்த் தத்துவங்க ளியைந்ததென் னணுவுக்கென்னிற்
றெல்லாய கன்மமெல்லாந் துய்ப்பித்துத் துடைத்தற்கும்பின்
நில்லாமை முற்றுவித்து நீக்கவுங் கூடிநின்ற
பொல்லாத வாணவத்தைப் போக்கவும் புகுந்ததன்றே"

என்பதனால், மேற்கூறியவாறு, முத்திறத் தத்துவங்களெல்லாம் உயிரோடு பொருந்தியது எதன்பொருட்டெனின், இன்பதுன்பப் பலன்களை அனுபவிக்கப்படும்படிச் செய்து பழைய பிராரத்தமென்னும் இருவகை வினைகளை நீக்குதற்பொருட்டும், அவ்வாறு நீக்குதலால் பருவமுண்டானவிடத்துத் தீக்கையால் (எஞ்சிய) சஞ்சிதமாய இருவகை வினைகளை மேலைக்கு வித்தாகாதவாறு, பக்குவம் வரச்செய்து கழித்தற்பொருட்டும், அவ்வாறு கழிவதனால் எல்லா அனர்த்தங்கட்கும் மூலமாய் உயிரோடு கலந்துநின்ற ஆணவமலத்தைப் போக்குதற் பொருட்டும் (உயிரோடு) தத்துவம் அமைந்ததாம் என்பதும் போதரும் என்க. இத்தகைய தத்துவக்கோட்பாடுகளே மதங்களை உருவாக்குவன. அவை ஆன்மதத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் என மூவகைப்படும். ஆன்மதத்துவம் இருபத்துநான்கேயன்றி, வித்தியாதத்துவம் சிவதத்துவ உண்மை யுணர்தலும், " செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானுமென்னும் இம்மெய்வகையான் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டெ "இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லை"யென வருதலானும்"

"அறுசமயத்திற் கடந்த சைவத்தினின்றி வீடிலது"

(கந்தபுராணம்)

என்றும் "சைவம் அல்லாது மற்றொன்றும் இல்லை" என்றே "அந்தமில் சீர்மறைகள் ஆகமங்கள் ஏனை அகில கலைப்பொருளுணர்ந்தார் அருளிச்செய்ய" என்பதனாலும், பஸ்மஜாபாலம், சுவேதாசுவர முதலிய சைவோபநிடதங்களே யன்றிமற்ற உபநிடதங்களில் வித்தியா, சிவதத்துவங்களின் பெயர் தானுங்கேட்கப்படாமையானும், ஞானேந்திரிய கன்மேந்திரியங் கட்கு அந்தக்கரணங்கள்போல உள்ளந்தக் கரணங்களாகிய வித்தியா தத்துவங்களும், இவற்றைச் செலுத்துவனவாகிய சிவதத்துவங்களும் இன்றியமையாத

வேண்டப்படுவனவாதலானும், தத்துவ எல்லையில் விளங்கும் சிவதத்துவ முதலியவைகளைத் "தமிழ் மண்டிலம்" என்று திருமூலர் அருளிச்செய்திருத்தலானும், நம் செந்தமிழ் மொழியினும் சைவசித்தாந்தத்திலும் குறைவறக் கூறப்பட்ட தத்துவம் முப்பத்தாறாம்.

"ஆகின்ற ஆறாறுஞ் சைவர் தத்துவம்" திருமந்திரம் இத்தகைய உயரிய தத்துவக் கோட்பாடுள்ள சமயம் சைவசமயம். அச்சமயத் தெய்வம் சிவபெருமான். சிவனருள் சமயம் சைவசமயம். இது உயிரின் முற்செய்தவத்தான் நிகழும் மெய்யுணர்வின் வாய்ப்பு. "சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த" நிலையிது. இதனால் "சைவசமயமே சமயம்" என்றும் "இதுவாகும் அதுவல்லவெனும் பிணக்கதின்றி நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காணநிற்பது யாதொரு சமயம் அது சமயம்" என்றும் தத்துவசிகரமாகிய சிவதத்துவங்களைத் "தமிழ்மண்டிலம்" என்று திருமந்திரம் கூறுதலால், சைவம் தமிழகத்துக்கும் தமிழுக்கும் மிக உரியனவாயிருத்தலால், தமிழ்ப்பயன் சைவம் என்றும் தமிழ் கற்றுச் சைவ உண்மைக்கு மாறாக நின்ற சமணர்களை " தமிழ்பாடித் தாளறாச் சமணர்" "செந்தமிழ்ப்பயனறிகிலார்" என்றும் 'ஆறதேறுஞ்சடையான் அருள்மேவ வீறதேறுந் தமிழால் வழிகண்டவன்' என்பதனால் இறைவன் திருவருளைத் தமிழிலே பெறவைத்தமையும், அதனால் அத்தெய்வத்தமிழ் "வீறதேறுந்தமிழ்" " பிறிதொன்றற்கில்லாத சிறப்புடைய தமிழ்" என அருளிச்செய்யப்பட்டதென்றும், சைவம் இன்றித் தமிழும், தமிழின்றிச் சைவமும் இராதென்பதனை சைவம் பரப்பிய ஞானசம்பந்தரை " நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தர்" எனப் போற்றப்படுதலால், நம் செந்தமிழ் வாயிலாக சைவம் வளர்த்தல் நம்மவர்க்கெல்லாம் இன்றியமையாத கடனாம் என்பதும், நமது சமயநூல்களின் மேலான தலைமையுரையாகலான் இது நமக்கெல்லாம் தலைமையுரையாய் அமைந்ததாமென்பதும் தெரிவித்துக்கொண்டு இவ்வளவில் இவ்வாராய்ச்சியை நிறுத்துகின்றேன்.

செந்தமிழ் வளர்க ! சைவம் ஓங்குக !!

திருச்சிற்றம்பலம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஆகமம்

சிவாகம வித்வான்
சிவஸ்ரீ அரு. இராமநாத குருக்கள், கண்டனூர்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆகமம்

சிவாகம வித்வான்
சிவஸ்ரீ அரு. இராமநாத குருக்கள், கண்டனூர்.

ஆகமமெனும் சொல்லை இரத்தினமாலையில் "ஆகமஸ்த்வாதெள" என்றிருப்பதைக் கொண்டு வருகையென்று அர்த்தஞ் செய்யுங்கால் வந்தது எது? எங்கிருந்து வந்தது? எதற்காக வந்தது? எவ்வழி வந்தது? எங்கு சென்றது? என்பனவாகிய கேள்விகளைக் கொண்டு ஆராயவேண்டி வரும்.

தற்காலம் விளம்பரங்களிலும், சீர்திருத்தப் பத்திரிக்கை களிலும், வருகிறார், புறப்படுகிறார் என்கிற கொட்டை எழுத்துக்களைக் காண்கிறோம். அதன் கீழ் என்னவிருக்கு மென்றால் 05.04.42ல் சினிமா நடிகர் .... நேரில் வருகிறார். (மேலே நாம் எழுதவேண்டியது ஒன்றுமின்று) என்றோ இன்னாரின்ன இடத்தைவிட்டுப் புறப்பட்டு இன்னின்ன திகதிகளில் இன்னின்னவிடங்களுக்குச் சென்று திரும்புவார் என்றோ காணலாம். அவர் தன்னலங்கருதாதவராயினும் சில்வர் மாலைக்கோ, வெள்ளிச் செங்கற்கோ, தங்கச்சாவிக்கோ பொதுக்கூட்டங்களில் தலைமை வகிப்பதற்காகவாவது, அஸ்திவாரக்கல் நாட்டுவதற்காகவாவது, திறப்புவிழா நடத்துவதற்காகவாவது வருபவராக இருக்கலாமன்றி வேறல்ல, நான் மேலே சொன்ன வருகை இப்படிக்கல்ல என்பதை விளக்கச் சிறிது ரூலை (வழி) விட்டுச் சென்றதை வாசகர்கள் மன்னிக்க. என்னால் மேலே கூறப்பட்ட வருகை (ஆகமம்) என்னவென்றால் பதிலும் வந்ததென்றே கூறவேண்டியிருக்கிறது.

வந்ததென்னை எனும் கேள்விக்குப் பதிலும் வந்தது (ஆகமம்) என்பீரேல் என்னை எனில் கூறுதும். மேற்கூறிய இரத்தின மாலையில் "ஆகமஸ்த்வாகதெள சாஸ்த்ரே" என்று ஆகமசப்தமானது வருகையிலும், சாஸ்த்ரத்திலும் பொருள் கிடைப்பதால் வந்ததும், வருகை (ஆகமம்) என்றே கூறவேண்டிவந்தது.

இந்த சாஸ்திரத்திற்கு வருகை என்னும் பொருளுள்ள ஆகமம் என்னும் பதம் உபயோகப்படுத்தப்பட்டதென்ன எனில் காரணப்பெயர் எனலாம்.

ஆகதம் சிவவக்த்ராச்ச கதந்து கிரிஜாமுகே !
மதம் ஸர்வமுனீனாஞ்ச தஸ்மாதாகமமுச்யதே!!

சிவமுகத்திலிருந்துவந்து அம்பிகையின் முகத்தை அடைந்து அதனால் எல்லா இருடிகளின் ஸம்மதமும் (பெற்றதனால்) ஆகமம் என்று சொல்லப்பட்டது என்பதனால் உணரலாம். பார்வதியின் முகத்தைச் சென்றது என்பது முறையே குருபரம்பரையை உணர்த்த அதனில் ஒன்றைக் கூறியதாக ஆகும். இதனை,

ஸதாசிவமனந்தஞ்ச ஸ்ரீ கண்டம்சாம்பிகா குரும் !
என்பதனாலும்,

ஸ்ரீகண்டேந சிவேநோக்த: சிவாயை ச சிவாகம: !
என்பதனாலும் உணரலாம்.

வைணவாகமம், சாக்தாகமம் என்பதுபோல விசேஷணங் கூட்டின்றி, அனன்யாபேக்ஷகம், ஸ்வதஸ்ஸித்தம் ஆகமமென வழங்கப்படுவது நமது சிவாகமமேயாகும். இன்னும் வேதாகம புராணேதிகாசம் என்னுமிடத்து நமது சிவாகமமே கொள்ளப்படுவது, சூதசங்கிதை, வாயுசங்கிதை, சனத்குமார சங்கிதை, காந்தம் முதலானவைகளாலும் அப்பய்ய தீக்ஷிதர், நீலகண்ட தீக்ஷிதர், ஹரதத்தாசாரியர் முதலானவர்களாலும் வேதசாரமென்றும் புகழப்படுவதாலும் பொது நூலாகவே விளங்குகின்றது. இன்னும் ஆகமமென்பதற்கு ஆன்மாக்களின் மலத்தை நீக்குவித்து மோக்ஷத்தையளிக்கும் எனவும் பெரியோர்கள் விவரித்துள்ளார்கள்.

பரசிவனிடத்திலே அவபோதரூபமாக இருந்த இந்த (ஆகமம்) ஞானமானது சிருஷ்டியாரம்பத்திலே சிவசம வேதையாகிய சிற்சத்தியின் ப்ரதம க்ஷோபத்தினாலே நாதரூபமாக உண்டாயது. இதனை

"அத்ருஷ்ட விக்ரஹாத்-சாந்தாத் சிவாத்பரம காரணாத்
நாதரூபம் விநிஷ்க்ராந்தம் சாஸ்த்ரம் பரமதுர்லபம் !"
என்பதனாலும் உணரலாம்.

இதனால் நமது ஆகமமானது நாதமெனவும் பெயர் கொண்டதாயிற்று. பின்பு முறையே பிந்துவும், மாத்ருகாமயமான வர்ணங்களும் உண்டாயின, அவ்வர்ணங்களிலிருந்து பதங்களும், அதிலிருந்து மந்திரங்களும் உண்டாயின. இதனாலே ஆகமமானது மந்திரமெனவும் பேசப்படும். தன்னை நினைத்து அடைபவர்களைப் பந்தத்தினின்றும் விடுவிக்கின்றது என்பதனாலே மந்திரமெனப்படுமென்று பொருள் விரிப்பர் மேலோர்.

இந்த ஆகமமானது பரமேச்வரனுடைய நிஷ்காமியேச்சை யினாலே உண்டு செய்யப்பட்டு லோகானுக்கிரகார்த்தமாக வந்த சிவஞானம் என்பதை

"அதாத்மமலமாயாக்ய கர்மபந்த விமுக்தயே !
வ்யக்தயேச சிவத்வஸ்ய சிவாஜ்ஞானம்ப்ரவர்ததே !!"

என்னும் சுவாயம்புவ சுருதியினால் உணரலாம்.

இந்த சிவஞான மந்திராத்மகமான ஆகமமானது சப்தரூபமாகச் சதாசிவமூர்த்தியின் முகத்தினின்றும் வெளிவர அதைச் சொன்னவர் கேட்டவர்களின் பேதங்களாலே, பத்தும், பதினெட்டுமாக, இருபத்தெட்டாகவும், பிறகு இருநூற்றேழாகவும் விரிந்தன. இது ஜாத்யேக வசனம். ஆகமமெனப்படும் இது வேதத்திலே இலைகளில் மறைந்த காயெனத் துலங்கும் முடிபினை கரத்தினில் துலங்கும் கனியென விளக்கும் இயல்பினது ஆதலால் சித்தாந்தமெனவும் பெயர்பெற்றது. இதனை சனற்குமார சங்கிதை

"..................ஸ்வதந்த்ரோ தசதா புரா !
ததாஷ்டாதசதாபச்சாத் ஸித்தாந்த இதி கீயதே !!

என்றும், வாயுசங்கிதை

" காமிகாதி ஸமாக்யாபி: ஸித்தஸ்ஸித்தாந்த ஸஜ்ஞிக: "

என்றும், அகஸ்தியசங்கிதை (ஆலாஸ்யமான்மியம்)

" சித்தாந்தை: காமிகாத்யைச்ச ......

என்றும் கூறுவதால் உணரலாம்.

இன்னும் இது எல்லாமதத்தையும் தன்னுள்ளடக்கித் தான் மத அரசாய் விளங்கும் தன்மையினாலே தந்திரமெனக் கூறப்பட்டது.

" தந்த்ரம் ஸ்வராஷ்ட்ர சிந்தாயாம் ஸித்தாந்தே"

என்று கூறப்பட்டது.

இவ்வுண்மையறியாது கௌதமாதி இருடிகளின் சாபவயத்தினரான

"அந்தச்சாக்தா: பஹிச்சைவாஸபாமத்யேச வைஷ்ணவா: !!"

என்கிறபடி மனோவாக்காயமென்னும் மூன்றும் முவ்வழிப்பட்டுழலும் சில குமதிகள் தந்திரமென்பதற்குச் சூழ்ச்சியென்று அர்த்தம் செய்து நிந்தித்து வருகிறார்கள்.

"வேதாந்விபூதி ருத்ராக்ஷம் ஆகமாநவிசாங்கர: !
விநிந்தயதீ மூடாத்மா சிவத்ரோஹீ ஸ ஈரித: !!"

இவர்களை காந்தபுராணம் மூடர்களென்றும், சிவத்ரோஹியென்றும் கூறுவதால் நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. தந்திரமென்பதை கிரந்த விஷயத்தில் பார்க்கும்போது சித்தாந்தத்திற்கே (ஆகமத்திற்கே) கூறப்பட்டிருக்கிறது. இதனை

"தநோதிவிபுலாநர்தாந் தந்த்ர மந்த்ர ஸமாச்ரிதாந் !
த்ராணம்சகுருதே பும்ஸாம் தேந தந்த்ரமிதி ஸ்ம்ருதம் !!"

மந்திரங்களை ஆசிருதங்களாக உடையனவான விசாலமான அர்த்தங்களைச் செய்வதனாலும், மானிடர்களுக்கு இரக்ஷணத்தைச் செய்வதனாலும் தந்திரமெனச் சொல்லப்பட்டதென கூறும் சுப்ரபேதாகம வசனத்தால் உணரலாம்.

[மேலே கூறப்பட்ட சித்தாந்தமெனப்படும் (28) ஆகமங்களின் சாங்கர்ய சந்தேகத்தைப் பற்றி எனது அபிப்பிராயத்தை பெரியோர்களின் சம்மதத்திற்கு விடுவித்து நிச்சயஞ்செய்து கொள்ளப் பின்னரெழுதுவேன்.]

[நான் மேற்கூறியபடி] பரசிவனிடத்திலே அவபோத ரூபமாகவிருந்த ஞானமானது ஸ்ருஷ்டி ஆரம்பத்திலே சிவசிற்சக்தியின் பிரதமக்ஷோபத்தால் நாதரூபமாக உத்பவித்தும் அதனின்றும் முறையே விந்துவும், வர்ணங்களும், பதங்களும்

உண்டாக அதிலிருந்து மந்திராத்மகமாகப் பரிணமித்தும், பின்பு சதாசிவனிடத்தினின்றும் அனந்தாதிகளின் வழியாக ஆகமமென வந்தும், தந்திரமென விசேஷப் பெயர் கொண்டும், முடிவு பெறப் பதிபசுபாச நிச்சயஞ்செய்வதால் சித்தாந்தமெனவும் படுமெனக் கூறிப் பின்னும் தருமமே விடைவடிவாகப் பரசிவத்தை தாங்கி இருக்கு முதலான நான்கு வேத பாதங்களோடு சஞ்சரிக்கின்றமை போல நமது சிவாகம தர்மமும் பரசிவத்தையே பதியாகத் தாங்கி சரியையாதி நான்கு பாதங்களோடு சஞ்சரிக்கின்றமையை,

"சிவாகமோதிதோ தர்மோவரிஷ்டோ நைவ ஸம்சய:"

என்று விளக்குவதனாலே தர்மசாஸ்திரமுமாகுமென்றும் இப்படி நமது ஆகமமானது, சிவஞானம், நாதம், மந்த்ரம், தந்த்ரம், சித்தாந்தம், தர்மமெனப் பிரகாசிக்கின்றதென்று கூறி முடிக்கிறேன்.

பரசிவமென்னும் இமயமலையிலிருந்து அவபோதமான (அத்ருச்யமாக) சிவஞானமென்னும் சுதாரஸ கங்காப் பிரவாகமானது சதாசிவ முகமென்கிற திருச்யபாகமாகிய கங்கோத்பத்தி ஸ்தானத்திலிருந்து பிரவாகரூபமாக அனந்த ஸ்ரீகண்டாதிகளான பிரயாகை ஹரித்வாரம், வாரணாசி முதலான ஸ்தலங்களின் வழியாக லோகோத்தாரத்தின் பொருட்டுச் சென்று கொண்டிருக்கின்றதாதலாலே நாமதிலேபடிந்து மும்மலங்களைக் கழுவி முழுமுதற்கடவுளை அடைந்து உய்வோமாக.

சுபம் ! சுபம் ! சுபம் !

[illegible]

"[illegible]"

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கும்பாபிஷேக க்ரியா விளக்கம்



ப்ரதிஷ்டா பூஷணம்
சிவஸ்ரீ ஐ. கைலாஸநாத குருக்கள்,
நயினாதீவு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கும்பாபிஷேக க்ரியா விளக்கம்

ப்ரதிஷ்டா பூஷணம்
சிவஸ்ரீ ஐ. கைலாஸநாத குருக்கள்,
நயினாதீவு.

அனாதி மல முத்த சித்துருவாகிய சிவபெருமான் கற்பனை கடந்த சோதியாகினும், அனாதி மல பெத்தர்களகிய ஆன்மாக்கள் மீது கொண்ட, கருணையினால் அவர்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்காக ஸர்வ தேவதா ஸ்வரூபமாகிய கும்பத்தில் எழுந்தருளச் செய்து, அந்த கும்பத்திற்குரிய பூஜைகளை செய்து, இறைவனுடைய திருவுருவிற்கு அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகமாகும். இதனை குடமுழுக்கு என்றும், திருக்குட நன்னீராட்டு விழா என்றும் கூறுவார்கள்.

கும்பாபிஷேகமானது ஆகமங்களில் 4 வகையாகக் கூறப்படுகிறது.

அவையாவன:-
1. ஆவர்தனம்
2. அனாவர்தனம்
3. புனராவர்தனம்
4 அந்தரிதம்

I. ஆவர்தனம்:-

முதலில் சுவாமியை பாலாலயத்தில் வைத்து பூஜித்து, புதிய இடத்தில், புதியதாக ஆலயம் அமைத்து கும்பாபிஷேகஞ் செய்வதே ஆவர்தனம் ஆகும்.

II. அனாவர்தனம்:-

வெகு காலத்திற்கு முன் கோவில் கட்டி, விமானம் கோபுரம் முதலியன பாழடைந்து, பூஜை இல்லாமல் சில காலம் இருந்த கோயிலை, சீர்திருத்தம் செய்து கும்பாபிஷேகஞ் செய்வது அனாவர்தனம் ஆகும்.

III. புனராவர்தனம்:-

கோபுரத்தில் உள்ள பாவைகளும், விமானத்து வர்ணங்களும் விக்ரஹங்களும் பழுதடைந்தால் சீர்திருத்தம் செய்து கும்பாபிஷேகம் செய்தலே புனராவர்த்தனமாகும்.

IV. அந்தரிதம்:-

ஆலயத்தில் திருடன், சண்டாளன், நாய் ஆகியவை உள்ளே வந்தால் செய்யக் கூடியது அந்தரிதம் ஆகும். இதற்கு நாள், நக்ஷத்ரம் பார்க்கத் தேவையில்லை.

அனுஜ்ஞை:-

ஆலயத்தில் உள்ள மூல விநாயகருக்குப் பூசனை செய்து, திருக்குடமுழுக்குச் செய்யத் திருவருள் பாலிக்கும்படி வேண்டுதல் செய்தலாகும். இதை உத்தரவு பெறல் என்று கூறுவார்கள்.

ப்ராம்ஹண அனுஞ்ஞை:-

தனது குருவினிடத்தும், சர்வ சாதகர், சர்வ போதகர் இடத்திலும், ப்ராம்ஹணர்களிடத்தும் திருக்குடமுழுக்கு எனும் கும்பாபிஷேகம் செய்ய அனுமதி பெறுதலே ஆகும்.

கணபதி ஹோமம்:-

திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவில் நடக்க கூடிய பூஜைகளும், வேள்விகளும் இடையூறு இன்றி நடப்பதற்காக முழுமுதற் கடவுளான விநாயகரை பிரார்த்தித்து செய்யக் கூடிய முதல் வேள்வியே கணபதி ஹோமம் என்பதாகும்.

தன பூஜை:-

கும்பாபிஷேகத்திற்கு என சேகரிக்கப்பட்ட திரவியங்களில், பலவகை சேர்க்கையினால் ஏற்படும் குற்றம் நீங்குதற்கு, அதை சுத்தப் படுத்தி, சிவரூபமாக்கி திருமகளை வழிபட்டு, மேன் மேலும் திரவியம் பெருகும் படி ப்ரார்த்தித்து, இன்னபகுதிகளுக்கு இன்னபாகம் என்று பிரித்து அதை பதினொருபாகம் பண்ணி அதில் 11 ருத்திரர்களைப் பூஜித்து, தர்ம கர்த்தாவின் கையில் ஒப்படைத்து, செலவு செய்ய அறிவித்தலே ஆகும்.

கிராம சாந்தி:-

ஸர்வலோக ஹிதம் புண்யம் வக்ஷ்யேகந்து ஷடானன!
க்ராம நூதன காலேன்து க்ஷேத்ரே வா மந்திரேபி வா!
ப்ரதிஷ்டோத்ஸவ காலே வா பூஜாம்க்ருத்வா விசேஷத: !!
என்று காரணாகமத்தில் கூறப்படுகிறது.

விளக்கம்:

சகல லோக சுகத்திற்காகவும், கிராம, நகரங்களில் எட்டு திக்குகளில் உள்ள அசுர, ராக்ஷஸ, பிரமராக்ஷஸர்களைத் திருப்தி செய்து அவர்களை வெளியேறச் செய்து எட்டு திக்குகளிலும் அஷ்ட பைரவர்களை பூஜித்தலே ஆகும்.

பிரவேச பலி:-

ஆலயத்தின் எட்டு திக்குகளிலும் உள்ள, யக்ஷ ராக்ஷஸ, பூத, பிசாச ப்ரம்ஹராக்ஷஸர் முதலான எட்டு துர்தேவதைகளையும், மலை சமுத்ரம், நதி, முச்சந்தி முதலான எட்டு இடங்களுக்கு சென்று வசிக்கும் படி கட்டளை இட்டு ஆலய முற்றில் மஹாலக்ஷ்மியை வீற்று இருக்கச் செய்து பூஜித்தலே பிரவேச பலி என்பதாகும்.

ரக்ஷோக்ன ஹோமம்:-

அஸுர, ராக்ஷஸர்களின் இடர்கள் நீங்குவதற்காக, மூன்று மேடைகள் அமைத்து நடு மேடையில் கும்பம் வைத்து, ரக்ஷோக்ன தேவதையை வடவாமுகாக்னிக்கு சமமாகப் பாவித்துப் பூஜை செய்து, தென்புற மேடையில் வெள்ளை வஸ்திரம் இட்டு தேங்காய் ஒன்று வைத்து, வடபுற மேடையில் சிவப்பு வஸ்த்ரம் வைத்து, அதன் மேல் அரிவாள் வைத்து, தேங்காயில் சிவனையும், அரிவாளில் கட்கேச்வரரையும் அரிவாளைச் சுற்றி (அஷ்ட) எட்டு பைரவர்களையும் பூஜித்து அவர்களுக்கு உரிய திரவியங்களாலும், சமித்தாலும் ஹோமம் செய்து பிறகு ஸம்யோஜித்துக் கும்ப ஜலத்தை ஆலயத்தை சுற்றித் தெளித்தலே ரக்ஷோக்ன ஹோமம் ஆகும்.

திசா ஹோமம்:-

நான்கு திசைகளிலும் முறையே பாசுபதாஸ்த்ரம், அகோராஸ்த்ரம், ப்ரத்யங்கிராஸ்த்ரம், சிவாஸ்த்ரம் முதலிய

அஸ்த்ரங்களைப் பூஜித்துக் காவல் புரியும் படிக் கட்டளை இடுதலே திசா ஹோமம் ஆகும்.

வாஸ்து சாந்தி:-

கும்பாபிஷேகத்திற்கு உரிய யாகசாலையையும், ஆலயத்தையும் சுத்திசெய்யும் பொருட்டு அதில் உள்ள அழுக்குகள், பைசாசத்தன்மை முதலிய நீங்குவதற்காகவும், தேவகார்யத்துக்கு உதவுவதற்காகவும், அயன் முதலிய 53 தேவர்களைப் பூஜித்து, அதற்குரிய பலி கொடுத்து பூமியில் உள்ள தோஷங்களை ஒரே உருவமாக்கி பூசணியை அதே போன்று நினைத்து, ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான ப்ரம்ஹாவின் கட்டளையால் பரிசுத்தமானதாக பாவித்தலே வாஸ்து சாந்தியாம். இதை கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம், யாகமண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவ காலங்கள் போன்றவைகளில் அவசியம் செய்ய வேண்டும்.

கோ பூஜை:-

வேள்வியின் அங்கமான பஞ்சகவ்யம் என்று கூறும் பூஜைக்கு தேவையான ஐந்து திரவியங்களைத்தரவல்லதும், பதினான்கு லோகங்களிலும் உள்ள தேவதைகள் மற்றும் நதிகள் முதலானவற்றின் வசிப்பிடமும் ஆன பசுவைப் பூஜித்தலே கோபூஜை ஆகும்.

ம்ருத்ஸ்ங்கிரஹணம்:-

கும்பாபிஷேகத்தால் உலகத்தில் நிகழும் சுபாசுப பலன்களை பரீக்ஷித்து அறியவும், அதற்கு ஏற்றதாக நாம் செய்யும் காரியம் நலமே வளர்ச்சி உறவும், முளையிடுதற்காக பூமா தேவியை விதிப்படிப் பூஜித்து மண்ணை சேகரித்து வருதலே ம்ருத்ஸங்க்ரஹணம் ஆகும்.

அங்குரார்ப்பணம்:-

நாம் தொடங்கும் காரியம் நலமே வளர்ச்சிபெறும் பொருட்டு நெல் முதலிய தானியங்களை பாலில் ஊற வைத்து ஓஷதி சூக்தம் ஜபித்து, அம்ருதேச்வரரான சந்திரனை பூஜித்து தானியங்களை முன் சேகரித்த மண்ணால் நிரப்பப்பட்ட பாலிகையில் முளையிடுதலே அங்குரார்ப்பணம் என்பதாகும்.

ராக்ஷா பந்தனம்:-

இந்த கும்பாபிஷேகமானது மிகவும் சிறப்புறவே நடைபெறுவற்காக ஆசார்யர் எடுத்த குறிக்கோளிலும், நடைபெறும் பூஜா கார்யங்களில் இடையூறு நேராமல் இருக்கவும், வெள்ளை முப்புரிநூலில் மஞ்சள் தடவி அதில் எட்டு நாகங்களையும் பூஜித்து பின்னர் பூஜைசெய்யக்கூடிய ஆசார்யர்களுக்கும், இறைவிக்ரகங்களுக்கும் காப்புக்கட்டுதலே ரக்ஷாபந்தனம் என்பதாகும்.

யாகசாலை தானிய ஸ்தாபனம்:-

சப்த தாதுக்களின் மயமான தானியங்களை யாகசாலையில் வேதிகையின் மேல் பரப்புதல் தான்ய ஸ்தாபனம் ஆகும்.

பிரசன்ன அபிஷேக பூஜை:-

ஆலய மூர்த்தியில் எழுந்தருளியிருக்கும் ஒளி மயமான இறைவனை நடைபெற இருக்கும் கும்பாபிஷேகத்தின் பொருட்டு முன்னிற்க வேண்டிப்- ப்ரார்த்தித்தல் ப்ரஸன்னாபிஷேகம் ஆகும்.

கட ஸ்தாபனம்:-

ஸர்வதேவதா ஸ்வருபமான குடத்தில், நூல் சுற்றி, நீரால் நிரப்பி, வாசனை திரவியங்கள் இட்டு, மாவிலை, தேங்காய் வைத்து வஸ்த்ரம் சாற்றி கூர்ச்சம், யஜ்ஞோபவீதம், சந்தனம் முதலியன சாற்றி அலங்கரிக்கப்பட்ட கும்பத்தை மாம்சமாகவும். நீரை ரத்தமாகவும், ரத்னங்கள் தாதுக்களாகவும், நூலை நாடியாகவும், வஸ்திரத்தை தோலாகவும், மந்திரங்களை மூச்சுக்காற்று போன்றும், கூர்ச்சத்தை தலையாகவும் பாவித்து கும்பத்தை ஸ்தாபனம் செய்தலே கடஸ்தாபனம் ஆகும்..

கலாகர்ஷணம் :- கலை இறக்குதல்

முன்னர் கூறிய படியே அலங்கரிக்கப்பட்ட கும்பத்தில் கருவறையில் அமைந்துள்ள பிம்பத்தில் உள்ள இறைவனது ஒளி வடிவான இறைச் சக்தியை ஆகமத்தில் கூறிய படியே ந்யாஸங்கள் மற்றும் பூஜைகள் செய்து கும்பத்திற்கு வருமாறு ஆகர்ஷித்தலே கலாகர்ஷணம் ஆகும். இதை கலை இறக்குதல் என்பர்.

யாத்ரா ஹோமம்:-

கும்பத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை, யாகசாலைக்கு எழுந்தருளச் செய்யும்போது, வழியில் எந்த வித இடையூறும் ஏற்படாமல் இருப்பதற்காகச் செய்யப்படுவதே யாத்ரா ஹோமம் ஆகும்.

யாகசாலைப் பிரவேசம்

யாக சாலை வேதிகார்சனம்:-

கலா மயமான இறைவன் எழுந்தருளியுள்ள கலாமயமான யாக சாலையின் நான்கு துவார்ரங்களையும் பூஜித்து, பின்னர் உள்ளே நான்கு கலைகள், த்ருதீயாவரண தேவர்கள், சதுர்தா வரண தேவர்கள், வாஸ்துப்ரம்ஹா, மண்டபரூப மஹாலக்ஷ்மீ, யஜ்ஞரக்ஷ மஹாகணபதி, ஸதாசிவர் முதலான ஸப்தகுரு போன்றோர்களையும் சேர்த்து 27 கும்பங்களாக விளங்கும் ஸப்தவிம்சதி கும்பங்களைப் பூஜித்து, ஞானவாள் ஏந்திய யாகேச்வரர் யாகேச்வரியையும், எட்டு திக்குகளிலும் எட்டு பைரவரையும் பின்னர் இதர தேவர்களையும் பூஜித்து, பிறகு வேதிகையின் மேல் உள்ள இறைவனுக்கு அனந்தாஸனம் ஸிம்ஹாஸனம், யோகாஸனம், பத்மாஸனம், விமலாஸனம் என்னும் ஐந்து ஆசனங்களை பூஜித்து அதன் மேல் இறைவனை பீடசக்தி மற்றும் லயாங்க, போகாங்க தேவதைகளுடன் பூஜித்தலே யாகசாலா பூஜா மற்றும் வேதிகார்சனம் ஆகும்.

ஹோமம்:-

எண் குணத்தராகிய பெருமானை அக்னியில் தனித்தனியே பிரித்து நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எண்வகையாக உரிய பூஜைகளைச் செய்து அக்னிக்கு உண்டான ஆஹுதிகளை அளித்துப் பூஜித்து கும்பத்தில் எழுந்தருளிய இறைவனை அக்னியிலும் எழுத்தருளச் செய்து அதற்கு உண்டான ஆஹுதிகளை அளித்து விசேஷ திரவியங்களை அளித்தலே ஹோமம் ஆகும்,

யந்திர ஸ்தாபனம்:-

யந்திரம் என்பது ஒரு வித அடையாளம் அல்லது முத்திரை. அதாவது மந்திர சாஸ்திரங்களில் கூறிய படி கோடுகள்

அமைத்து அக்ஷரங்களை எழுதி அந்த மந்திரங்களை லக்ஷக்கணக்கில் உருவேற்றி வழிபாடுகள் செய்து ப்ரதிஷ்டை செய்யப்படுகின்ற மூர்த்தியின் அடியில் வைத்தலே யந்த்ர ஸ்தாபனம் ஆகும். (யந்திரம் என்ற சொல்லுக்கு இயக்குவிக்கின்றது என்பதே பொருளாகும்)

இரத்தின ஸ்தாபனம்:-

மாணிக்கம், புஷ்பராகம், கோமேதகம், வைரம், வைடூரியம், நீலம், முத்து, பவளம், மரகதம் என்னும் நவரத்தினங்களை இறைவன் அமரும் பீடத்தின் உள்ளே இட்டு லோக பாலகர்களைப் பூஜித்து பத்மாஸனம் வரை பூஜித்தலே ரத்னஸ்தாபனம் ஆகும்.

தேவதா ஸ்தாபனம்:-

கருவறையை பதவிந்யாஸம் எனும் முறையில் பதமாக பங்கீடு செய்து அதனுள் பிம்பங்களை குறிப்பிட்ட இடங்களில் வைப்பது தேவதா ஸ்தாபனம் ஆகும். இதனை அம்சுமதாகமம் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

அஷ்டபந்தனம்:-

எட்டு வகையான மருந்துகள் சேர்த்து இடித்து சுவாமியையும் பீடத்தையும் சேர்த்து பலப்படுத்தி வைக்கும் ஒரு க்ரியை அஷ்டபந்தனம் ஆகும்.

சாந்தி ஹோமம்:-

பெருமானை பலரும் தொடும் குற்றம் நீங்க பஞ்சப்ரம்ஹ ஷடங்க மந்திர ஜபம் செய்து, ஹோமம் செய்து அபிஷேகித்தலே சாந்திஹோமம் ஆகும்.

பிம்ப சுத்தி:-

தீக்ஷாஹீனர்கள் முதலானோரால் ஸ்பர்சிக்கப்பட்டதோஷ நீக்கத்திற்காகவும், உஷ்ண சாந்திக்காகவும், பிம்பத்திற்கு சுத்தம் உண்டாவதற்காகவும் உதகம் (நீர்), கந்தம் (சந்தனம்), புஷ்பம் (பூ), காஷாயம், ம்ருத் (மண்), பீஜம் (விதை) பல்லவம், ரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஓஷதி, கவ்வியம், குசம், ச்ருங்கம், முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய

கலசங்களைப் பூஜித்து ஹோமம் செய்து முறைப்படி இறைவனுக்கு அபிஷேகித்தலே ஆகும்.

பிம்ப ரக்ஷாபந்தனம்:-

கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக் கட்டுதல் பிம்பரக்ஷாபந்தனம் ஆகும்.

பூர்வ ஸந்தானம்:-

மூர்த்திக்கு பக்கத்தில் ஆசாரியர், சாதகர் அமர்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமாவரணம் வரைப் பூஜித்து கலை முதல் மந்திரம் இறுதியாகச் சாங்கோபாங்கமாக அவயவபேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தல் பூர்வஸந்தானம் ஆகும்.

ஸ்பர்சாஹுதி:-

யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீச்வரன் மூர்த்தீச்வரி மந்திரம் ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்பு படுத்தலாம்.

ஸ்தோத்திர வந்தனம்:-

ஆசார்யர், மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளினால் கூடுதல், குறைவு ஏதாவது ஏற்பட்டால் அவைகளை கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று ஸ்தோத்திரங்களால் வணங்குதல் ஸ்தோத்ரவந்தனம் ஆகும்.

ஆசார்ய பூஜை:-

குருமாருக்கும், சர்வசாதகர்களுக்கும் உடை, உத்தரீயம், உருத்திராக்ஷம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

மஹா பூர்ணாஹுதி:-

முன் கூறியபடி குண்டங்களில் பூஜித்து ஹோமம் செய்த மூர்த்தீச்வராதிகளை ஒன்று சேர்த்து ஹோமத்தை பூர்த்தி செய்வதற்காக செய்யப்படும் க்ரியையே பூர்ணாஹுதி ஆகும்.

ஸம்யோஜனம்:

இறையருள் நிரம்பிய யாகசாலையில் உள்ள குண்டங்களில் பூஜிக்கப்பட்ட இறைச்சக்தியை முறையாக கும்பத்தில் சேர்ப்பித்தல் ஸம்யோஜனம் என்பதாம்.

க்ரஹப் பிரீதி:-

குடமுழுக்கு வேளையில் நமது அறிவிற்கு அப்பாற்பட்ட குற்றங்களை நீக்குதற்பொருட்டு நவக்ரஹங்களுக்கான தானங்களைச் செய்தலே க்ரஹப்ரீதி ஆகும்.

மூர்த்தி ஸம்யோஜனம்:-

இறையருள் நிரம்பிய கலசத்தை திருக்கோவிலுக்குள் கொண்டு சென்று குடத்தில் நிறைந்த திருவருளை ஆன்ம ஒளியுடன் கலந்து விக்கிரகத்தில் சேர்த்தல் மூர்த்தி ஸம்யோஜனம் ஆகும்.

மஹா கும்பாபிஷேகம்:-

அர்ச்சகரின் தலையில் ப்ரதான கடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதானகுரு, மூர்த்திபர்கள் மற்றும் பக்தஜனங்கள் சூழ புஷ்பாஞ்சலி, வேதம், தோத்திரம், தேவாரம், சங்கு, மணி, மங்களவாத்தியம், பேரி போன்ற கோஷங்களுடன் சிவநாம பஜனை செய்து கொண்டே, ஆலயத்தை மெதுவாக வலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடீ சந்தானம் செய்து, தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து மூலமந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் “ஹர ஹர” என்ற சத்தம் முழங்க வேத, ஆகம, புராண மந்திரங்கள் ஒலிக்க, தேவார திருமுறைகள் ஓத, சகலவாத்திய கோஷங்களும் ஒலிக்க, மகா கும்பாபிஷேகத்தை செய்து, எஜமானர்களும், சகல ஜீவ ராசிகளும் உயர்கதி அடைய வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு வர்த்தனீ கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்யேச்வரக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து மகா நைவேத்ய உபசாரம் செய்து, அகண்டதீபம் வைத்துப் பிரார்த்திக்க வேண்டும் பின்னர் தேவர்களின் பூஜைக்காக மூன்றே முக்கால் நாழிகைக்கு கதவை அடைத்து வைக்க வேண்டும்.

தச தர்சனம்:-

கதவைத் திறந்து பசு, ஆசார்யர், வேதபாரகர் கண்ணாடி, பூர்ணகும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமானர், பக்தஜனம் ஆகியோரைச் சகல வாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்வது தசதர்சனம் ஆகும்.

மஹாபிஷேகம்:-

சகலவிதமான திரவியங்களினால் அபிஷேகித்தல் மஹாபிஷேகம் ஆகும்.

யஜமானர் உத்ஸவம்:-

எஜமானராகப்பட்ட ஆலய நிர்வாகிகட்கு பூஜை செய்து திருவருட்பிரசாதம் வழங்கல் யஜமான உத்ஸவம் ஆகும்.

யாக விஸர்ஜனம்:-

யாகதேவதைகளை திருப்திப்படுத்தி உத்வாஸனம் செய்தல் யாகவிஸர்ஜனம் ஆகும்.

ஆசார்ய உத்ஸவம்:-

இக்கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாகச் செவ்வனே மந்த்ர க்ரியா முறைப் படி செய்த சிவாச்சாரியர்களுக்கு மரியாதை செய்வித்தல் ஆசார்ய உத்ஸவம் ஆகும்.

மண்டலாபிஷேகம்:

40, 44, 45, அல்லது 48 நாட்கள் வரை இறைவனை தினமும் மூலமந்திர ஜபத்துடன் விசேஷ பூஜை ஜபம் ஹோமம் அபிஷேக ஆராதனை செய்து நிறைவில் சங்காபிஷேகம் செய்தல். மண்டலாபிஷேகம் ஆகும்.

லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து.

நித்திய பூசையும்
அதன் தத்துவமும்



சிவாகமரத்னாகரம்
சிவபுரம், சிவஸ்ரீ S. சுவாமிநாதசிவாசாரியார்
தருமபுரம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நித்திய பூசையும் அதன் தத்துவமும்

சிவாகமரத்னாகரம்
சிவபுரம், சிவஸ்ரீ S. சுவாமிநாதசிவாசாரியார்
தருமபுரம்.

நூன்முகம்

சர்வக்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுதந்திரத்வம் என்னும் ஆறு குணமுடையவராய், அஷ்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான் எங்கும் வியாபகமாக இருப்பினும், சிவலிங்கம் முதலிய திருமேனியும் குருவும் சங்கமும் இடமாகிக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பர்; மற்றவிடங்களில் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் யாவரும் பரமபதியான சிவபெருமானை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபட வேண்டும்.

இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாலும் செயற் பாலதே யாகும். மலம்நீங்கிய சிவஞானிகளும், பூர்வமலவாசனை தாக்காமையின் பொருட்டும் மேன்மேலும் சிவானந்தம் வளருதற் பொருட்டும், சிவலிங்கம் முதலிய திரு மேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முக்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம் பெற்று முக்தியடைவர்.

"மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலசற்குருவும் வாய்க்கும் பராபரமே."

- தாயுமான சுவாமிகள்

விபூதி இல்லாத நெற்றி வீண்; சிவாலய மில்லாத ஊர் பாழ்; ஈச்வர பூஜை செய்யாத ஜன்மா பாழ்; சிவனை கூறாத வித்தை பாழ் என்று "ஸ்மிருதிசங்கிரஹம்" என்னும் நூல் கூறுகிறது.

பிறவிகளுள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணியமேலீட்டினால் அடைந்த யாவரும், பசுபதியாகவும், உலகிற்குக் கர்த்தாவாயுமுள்ள சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும். அந்த சிவபூஜையானது, ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இரு வகைப்படும் ஆசாரியரால் தீக்ஷை செய்விக்கப்பட்டு, அந்தத் தீக்ஷாகுருவால் கொடுக்கப்பட்ட மண்டலம், க்ஷணிகம், ஸ்படிகம் முதலான லிங்கங்களில், ஆன்ம நலம் கருதிச் செய்யப்படுவது ஆன்மார்த்தமாகும். பரார்த்த பூஜை என்பது, சிவாலயங்களில், தனக்கும் பிறர்க்கும் அருள் பாலிக்கும் பொருட்டுச் சிவாலயங்களில் விளங்கும், சுயாம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ஆசுரம், பாணம் என்ற ஏழுவித லிங்கங்களுள் ஒரு லிங்கத்தில், ஆதிசைவர்கள் எனப்படும் சிவாசாரியாரைக் கொண்டு செய்விக்கப்படும் பூஜையாகும்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து"

- பெரிய புராணம்

இருபத்தெட்டு ஆகமங்களையும், இருநூற்றி ஏழு உபாகமங்களையும் தோற்றுவித்த பரமகருணாநிதியாகிய இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூஜை என்பதை உணர்ந்த உமாதேவியார்,

"இங்கு நாத! நீ மொழிந்த வாகமத்தியல்
பினாலுனையர்ச்சனை புரியப்
பொங்குகின்ற தென்னாசை யென்றிறைஞ்சிப்
போகமார்த்த பூண்முலையாள் போற்றி"

என்றபடி, ஆலய வழிபாட்டின் பெருமையையும், ஆகமங்களால் அருச்சிப்பதால் இறைவனுக்கு ஏற்படும் அளவு கடந்த அன்பையும், அவ்வன்பினால் ஆன்மாக்களுக்குக் கிடைக்கும்

அறம்பொருள் இன்பத்துடன், பேரின்பத்தையும் உலக மக்களுக்கு உணர்த்தவே, திருவுளங்கொண்ட உமாதேவியார், காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், மயிலாப்பூர் முதலிய இடங்களில் சிவபெருமானைப் பூஜித்தாள் என்று அறியப்படுகிறது.

எல்லா காரியங்களையும் நிறைவு செய்வதாலும், ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவபூஜை எனப் பெயர்பெற்றது. அத்தகைய சிவபூஜை செய்பவன் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னி காரியத்தினால் சம்பத்தையும், ஜபத்தினால் பாபநிக்ரஹத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான். மதம் கொண்ட யானைகளும், காற்றைப்போல் வேகமாக ஓடும் குதிரைகளும், தேவவனிதை-களுக்கு ஒப்பான பெண்மணிகளும், எவருடைய இல்லத்தில் இருக்கின்றவோ, அது முறையுடன் செய்யப்படும் சிவபூஜையின் பலன், என்ற வாக்கியங்களைக் கொண்டு, முறையுடன் செய்யப்படும் சிவார்ச்சனை ஆன்மார்த்த பூஜையாயினும், பரார்த்த பூஜையாயினும் அது வேண்டிய பயனை அளிக்கக் கூடியது ஆகும்.

சிவதீக்ஷைபெற்ற அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் யாவரும் ஆன்மார்த்த பூஜை செய்யலாம்; பரார்த்த பூஜை செய்யக்கூடாது.

சிவதீக்ஷை பெற்றவர்களாயினும், சாதாரண அந்தணர் முதலானோர், மோஹத்தினால் பரார்த்த பூஜையைச் செய்வார்களேயானால், அரசனுக்கும் ராஷ்ட்ரத்திற்கும் நாசம் உண்டாகும். மற்றும், தனது ஜீவனத்திற்குச் சாமான்ய பிராம்மணர்கள், பரார்த்தமாகச் சிவனை அர்ச்சிப்பார்களேயனால், ஆறு மாதத்தில் வீழ்ச்சி அடைவார்கள். ஆதலால் அத்தகைய சாமானிய அந்தணர்களைக் கொண்டு பரார்த்தபூஜை செய்வதை நீக்கவேண்டும்.

"சிவபிராமணர் எனப்படும் ஆதிசைவர்களாலே ஆன்மார்த்தம், பரார்த்தம்" இரண்டும் செய்யத்தகுந்தது. சிவபெருமானின் ஆணையின் வசமுள்ளவர்களான ஆதி சைவர்களுக்குப் "பரார்த்த பூஜை" விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஆத்மார்த்த பூஜையும் செய்ய வேண்டும். சிவபெருமானின்

ஆணைக்குட்பட்ட இவர்களுக்குப் "பரார்த்த பூஜை" தோஷமற்றது.

சிவாலயங்களில் பரார்த்த பூஜை செய்யும் சிவாசாரியர்கள், பதினாறு வயதிற்குமேல் எழுபது வயது வரையில் பூஜை செய்யலாம் என்று காமிகாமம் கூறுகிறது.

இத்தகைய ஆசாரியையரைக் கொண்டு, பரார்த்த பூஜையை முறைப்படி செய்வதால், அதிவிருஷ்டி, அனாவிருஷ்டி முதலான ஈதிபாதைகள் இல்லாமலும், நீர்வளம், நிலவளம் முதலான செழுமையுடன் உலகம் விளங்கும். ஆலயங்களில் செய்யப்படும் பூஜையானது உத்தமோத்தமம், உத்தமமத்யமம், உத்தமாதமம், மத்தியமோத்தமம், மத்தியமமத்திமம், மத்தியமாதமம், அத மோத்தமம், அதமமத்யமம் என்ற எட்டுக்கால பூஜை அஜிதாக மத்தில் கூறப்படுகிறது. அவைகளுள் உத்தமத்தில் கடைசியான ஆறுகால பூஜையானது இங்கு விளக்கப்படுகிறது.

சூரியன் உதயமாவதற்குமுன், மூன்றேமுக்கால் நாழிகைக்கு ஆரம்பித்து நடத்தப்படும் பூஜை உஷ:காலம் எனப்படும். காரணாகம வாக்கியப்படி உஷ:காலபூஜை முடிவதற்கும் சூரியன் உதயமாவதற்கும் சரியாக இருக்க வேண்டும்.

ஆசாரியன் உஷ:காலத்தில், அதாவது இரவு முப்பத்தாறரை நாழிகை அளவில் எழுந்து, அவசியமான நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, பல்துலக்கி, ஸ்நாநம் செய்து (பஸ்மதாரணம்) விபூதி அணிந்து கொண்டு, பத்து ஆவர்த்தி பஞ்சாக்ஷரம் ஜபித்து, தூய்மையான வெண்மை வஸ்த்திரம் உடுத்திக்கொண்டு, ருத்ராக்ஷரம் முதலிய பஞ்சாங்க பூஷிதராய், கையில் புஷ்பம் வைத்துக்கொண்டு, மூன்றே முக்கால் நாழிகைக்கு, ஆலயத்துள் நுழைந்து, சுவாமியின் சன்னிதியில் புஷ்பத்தை எதிரில் போட்டு, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, பிரார்த்தித்து, பள்ளியறைக்குச் சென்று, பாவனையினால் இறைவனுக்கு தந்ததாவனம், ஸ்நானம் முதலியவைகளைச் செய்வித்து, அஷ்டபுஷ்பம் அணிவித்துச் சிவபெருமானைப் பாதுகையில் ஆரோகணித்துப் பிரதக்ஷிணமாக வந்து, மூலகர்ப்பக்ருஹத்தில் வைத்து, மூலலிங்கத்துடன்

சேர்க்க வேண்டும். உதயத்திற்குமுன் ஒரு முகூர்த்தத்தில் (அதாவது இரண்டு நாழிகைக்குள்) உஷ:கால பூஜை செய்ய வேண்டும். பின்னர் தேவியின் ஆலயம் சென்று பூஜை செய்ய வேண்டும். நடராஜா, சோமாஸ்கந்தர் முதலிய மகேச்வர பேதங்களுக்கும் மற்றைய பரிவாரமூர்த்திகளுக்கும் பூஜை செய்யக்கூடாது.

ஆசாரியனுக்கு ஆன்மசுத்தி முதலான பஞ்சசுத்தி, பலி போடுதல் முதலியன கிடையாது. இதனை காரணாகமம் உஷ:காலபூஜா விதியில் காண்க.

உஷ:கால பூஜை முடிந்தவுடன், ஆசாரியன், யதோக்தமாக இரண்டு வித கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்தபின்னர், கால சந்தி பூஜைக்குத் தொடங்க வேண்டும். காலசந்திபூஜை தொடங்கு முன்பு "தீர்த்தசங்கிரஹணம்"- அதாவது ஆறு, குளம், முதலிய இடங்களிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வரவேண்டும்.

தீர்த்த சங்கிரஹணம்:

சிவபெருமான் அர்த்தயாம பூஜையின் முடிவில், சிபிகை மீது எழுந்தருளி, கீதம், நர்த்தனம் முதலிய வாத்ய கோஷங்களுடன் சயனாலயத்திற்குச் சென்றதும், பரமசிவனுடைய ஜடையிலுள்ள கங்கை, அங்கு பள்ளி அறையிலுள்ள மனோன்மணி அம்பிகையைப்பார்த்து, வெகு வேகமாக அங்கிருந்து நீங்குவாள். மீண்டும் கங்காதேவியை பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் சேர்க்கும் பொருட்டு, வேதியர் சுத்தமாக இருந்து, பலவித வாத்ய கோஷங்களுடனும், ஸகல உபசாரங்களுடனும், சுவர்ணம் முதலிய ஏதாகினும் ஒரு குடத்தில், நதியிலிருந்து நீரை நிரப்பி, மாவிலை, தேங்காய் முதலியவற்றால் அலங்கரித்து, பரிசாரகரின் தலை மீது வைத்து குடை, வெண் சாமரங்களுடன் ஆலயத்தை வலம் வந்து பலி பீடத்தின் மீது அல்லது நந்தியின் மீது அல்லது சிவலிங்கத்தின் மீது விஸர்ஜனம் செய்ய வேண்டும். இதற்கு "கங்கா ஹரணம்" (தீர்த்த சங்கிரஹணம்) என்று பெயர். இதன் பிறகு காலசந்திதொடங்க வேண்டும்.

சூரியன் உதயம் தொடங்கி ஏழரை நாழிகை காலம் காலசந்தி பூஜா காலமாகும். அதில் முதலில் சூரியனைப்

பூஜித்து, பின்பு கணபதியை பூஜிக்க வேண்டும். அதன்பிறகு மகேச்வர பேதங்களுக்கும், மூலலிங்கத்திற்கும், பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம் செய்ய வேண்டும். நைவேத்தியம் செய்யும் பொழுது, முதலில் கணபதிக்கும், பிறகு மூலமூர்த்தியான சுவாமிக்கும், நடராஜர், சோமாஸ்கந்தர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் நிவேதனம் செய்து, அதன் பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் முதலிய உபசாரம் செய்து, பலி போட்டு, மடப்பள்ளியிலிருக்கும் குண்டத்தில் நித்யாக்னிகாரியம் செய்து, நித்யோத்ஸவம் செய்து, சண்டேச பூஜையை முடிவாகச் செய்ய வேண்டும் என்ற முறையானது காலசந்தி பூஜைக்குரியதாகும்.

காலசந்தி பூஜை முடிந்தவுடன் 3 3/4 நாழிகைக் காலம் ஓய்வு நேரமாகும்; அதாவது 7 1/2 நாழிகைக்கு மேல் 11 1/4 நாழிகை வரையில் பொது மக்கள் தரிசனம் அர்ச்சனை முதலியன செய்யும் காலம், அந்தப் பதினொன்றேகால் நாழிகைக்குப் பிறகு உச்சிகால பூஜை செய்ய வேண்டும். அதற்கு ஸ்நபனம், பஞ்சகவ்யம் வைத்துப் பூஜித்து, வாஸ்து நாதனைப் பூஜித்துக் கொண்டு, துவார பூஜை செய்து, லிங்க சுத்தியுடன் சுவாமிக்கு முறையாக அபிஷேகம் செய்து, போகாங்கம்வரையில் பூஜித்து தேவிக்கும் அபிஷேகமும் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்காரமும் செய்து, சண்டேச்வரருக்கு பூஜை செய்ய வேண்டும்.

காலையிலும், உச்சிக்காலத்திலும், சாயங்காலத்திலும் பலிபோட வேண்டும் என்ற, காரணாகம விதிப்படி உச்சிக்காலத்தில் பலிபோட்டுப் பூஜையை முடிக்க வேண்டும்; ஸ்நபனாங்கமாக ஹோமம் செய்ய வேண்டும்; பரிவாரங்களுக்கு பூஜை நைவேத்யம் கிடையாது.

அபிஷேக திரவ்யங்களின் வரிசையும் அளவும் பலனும்

வரிசை	திரவ்யம்	அளவு	பலன்
1-ஆவது	வாசனைத்தைலம்	ஒருபடி	சுகமளிக்கும்
2-ஆவது	மாப்பொடி	ஒருபலம்	கடனைத் தீர்க்கும்

3-ஆவது	நெல்லிமுள்ளி	ஒருபலம்	அரசன் வசம்
4-ஆவது	மஞ்சள் பொடி	ஒருபலம்	ரோகத்தைப் போக்கும்
5-ஆவது	ஜலதிரவியம்	இரண்டுபலம்	இஷ்டத்தை அளிக்கும்
6-ஆவது	பஞ்சகவ்யம்	ஒரு மரக்கால்	பாபத்தைப் போக்கும்
7-ஆவது	பஞ்சாமிர்தம்	ஒரு மரக்கால்	புஷ்டி அளிக்கும்
8-ஆவது	பசுவின் நெய்	அரைப் படி	மோக்ஷம் அளிக்கும்
9-ஆவது	பசுவின் பால்	ஆறு படி	ஆயுளைக் கொடுக்கும்
10-ஆவது	பசுவின் தயிர்	12 படி	பிரஜாவிருத்தி உண்டாகும்
11-ஆவது	தேன்	ஒரு ஆழாக்கு	சுகமளிக்கும்
12-ஆவது	கரும்பின் சாறு	ஒரு படி	ஆரோக்யம் அளிக்கும்
13-ஆவது	சர்க்கரை	மூன்றுபலம்	எதிரிகளை அழிக்கும்
14-ஆவது	பழவர்க்கம் :		
	வாழைப்பழம்	25	பயிரை வளர்க்கும்
	மாம்பழம்	15	வச்யம்
	மாதுளை	10	கோபத்தைப் போக்கும்
	பலாப்பழம்	10	புஷ்டியளிக்கும்
15-ஆவது	எலுமிச்சம்பழம்	25	நேர்மை

16-ஆவது	இளநீர்	25	போகம் அளிக்கும்
17-ஆவது	அன்னாபிஷேகம்	ஒருமரக்கால்	சாம்ராஜ்ய மளிக்கும்
18-ஆவது	சந்தனம்	ஒருமரக்கால்	லக்ஷ்மியைக் கொடுக்கும்
19-ஆவது	கும்பம்	10	மோக்ஷப்ரதம்
20-ஆவது	பத்ராம்பு	ஒருமரக்கால்	உலகவசம்
21-ஆவது	தாராம்பு	ஒருமரக்கால்	இன்பம் அளிக்கும்
22-ஆவது	சிருங்கோதகம்	ஒருமரக்கால்	தைரியத்தை அளிக்கும்
23-ஆவது	ரத்னோதகம்	ஒருமரக்கால்	லக்ஷ்மீப்ரதம்
24-ஆவது	குசோதகம்	ஒருமரக்கால்	தூய்மை யளிக்கும்
25-ஆவது	அர்க்யோதகம்	ஒருமரக்கால்	ஞானம் அளிக்கும்
இதன்பிறகு	சங்கோதகம்	ஒருமரக்கால்	புண்யப்ரதம்
	தீப எண்ணெய்	ஒரு படி	

ஜலம் காலையில்--5 பாரம், உச்சியில்--10 பாரம், மாலையில்--3 பாரம், மற்றக் காலங்களில் விருப்பம் போல (பயன்--இஷ்டசித்தியளிக்கும்).

இவ்வாறு ஒரு படி எண்ணெய் அபிஷேகம் செய்தால் மேற்கூறிய இந்த திரவ்யங்கள் முறையானதாகும். எண்ணெய் அதிகமானால் சாமான்களை அதிகப்படுத்த வேண்டும். எண்ணெய் குறைந்தால் அதன் படி சாமான்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதை நித்திய பூஜா லக்ஷண சங்கிரஹத்தில் காணலாம். அபிஷேகம் முடிந்தவுடன், சுத்தான்ன நிவேதனம் செய்து விட்டு, திருஒத்தாடைபோட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் ஆசாரியனைக் கொளுத்துவார்

என்பது ஆகம விதி. வஸ்திரம், சந்தனம், புஷ்பம் அணிவித்து, நைவேத்தியம், தீபாராதனை செய்ய வேண்டும்.

சாயங்காலம்:

சூர்ய அஸ்தமனத்திற்கு முன்பு, மூன்றே முக்கால் நாழிகை தொடங்கிச் செய்யப்படும் பூஜை, பிரதோஷ பூஜையாகும். இது நித்தியபிரதோஷம் எனப்படும். நித்யநைமித்திகபிரதோஷம் என்பது சுக்லகிருஷ்ண திரயோதசியன்று மாலையில் செய்யப்படும் பூஜையாகும். நித்யத்தில் நைமித்திகம் என்று தீப்தாகமம் கூறுகிறது.

நித்யபிரதோஷபூஜை

இதில் முதலில் நடராஜப் பெருமானுக்கு நிவேதனம் செய்து, பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம், தீபாராதனை செய்து, பிறகு சோமாஸ்கந்தருக்கு நிவேதனம் செய்து, அம்பாளுக்கு நிவேதனம் செய்து முடிப்பதாகும்.

நைமித்திக பிரதோஷம்:-

மாலையில் முதலில் நந்திதேவருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். நித்யபிர தோஷத்திற்கு “நந்திநிவேத்னம்” கிடையாது,

சூரிய அஸ்தமனம் தொடங்கி 7 1/2 நாழிகையில் செய்யப்படும் பூஜை “மஹாசந்தி” எனப்படும் (சாயரக்ஷை பூஜையாகும்.) இதன் ஆரம்பத்தில் ஆசாரியன் தேஹசுத்தி முதலிய பஞ்சசுத்திகளைச் செய்து கொண்டு, ஸ்நபந பூஜையுடன், துவாரபூஜை செய்து, மூலமூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியத்துடன் ஷோடச உபசாரம் செய்யவேண்டும்.

ஷோடசோபசாரம் என்பது: 1. ஆவாஹனம் 2.ஸ்தாபனம், 3. பாத்யம், 4. ஆசமனம், 5. அர்க்கியம், 6. அபிஷேகம், 7. வஸ்திரம், சந்தனம், 8. புஷ்பாலங்காரம், 9. தூபதீபம், 10. நிவேதனம், 11. பலி, 12. ஹோமம், 13. நித்யோத்ஸவம், 14. கேயம்வாத்யம், 15. நிருத்தம், 16. உத்வாஸநம், என்ற பதினாறு உபசாரம் ஆகும்.

கீழ்வரும் பதினாறு தீபங்களும் "தீபஷோடசோபசாரம்" என்று அஜிதாகமத்தில் பெயர் பெறும்.

வரிசை	பொருள்	பயன்
1-ஆவது	தூபம்	உற்சாகத்தைத்தரும்
2-ஆவது	ஏகதீபம் (உருக்களி)	விழிப்பைத்தரும்
3-ஆவது	அலங்காரதீபம் (புஷ்பதீபம்)	சாம்ராஜ்யத்தைத்தரும்
4-ஆவது	நாகதீபம்	லோகாதிபத்யம் தரும்
5-ஆவது	விருஷபதீபம்	அரசை அளிக்கும்
6-ஆவது	புருஷாமிருகதீபம்	
7-ஆவது	சூலதீபம்	வயிற்றுவலி நீக்கும்
8-ஆவது	ஆமைதீபம்	ஜலகண்டத்தைத் தடுக்கும்
9-ஆவது	கஜதீபம்	ஐச்வர்யத்தைக்கொடுக்கும்
10-ஆவது	சிம்மதீபம்	ஆயுளைக் கொடுக்கும்
11-ஆவது	வியாக்ரதீபம்(புலி)	விலங்குகளிடத்தில் பயத்தைப்போக்கும்
12-ஆவது	கொடிதீபம்	சோபையைத் தரும்
13-ஆவது	மயூரதீபம்(மயில்)	புத்திரப்பேறு அளிக்கும்
14-ஆவது	பஞ்சதட்டுடன் பூர்ணகும்பம்	சாம்ராஜ்யமளிக்கும்
15-ஆவது	நக்ஷத்ரதீபம்	பாதுகாப்பு ஆதிபத்தியமளிக்கும் (காவல் துறை அதிகாரி)
16-ஆவது	மேருதீபம்	எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும்

மேலும் நீராஜநம் விபூதிசாத்துதலும் ரக்ஷையுமாகும். அவை பதினாறு உபசாரத்தில் அடங்கியவை.

மேற்கூறியவாறு பதினாறு உபசாரங்களையும் செய்து, பழம், தாம்பூலம், நிவேதனம் செய்து, கற்பூர ஹாரத்தி செய்து, சுளுகோதகசமர்ப்பணம் செய்து பிரார்த்திக்க வேண்டும். சுளுகோதகம் என்பது ஆசாரியன் மூலமந்திரத்தை இயன்ற அளவு ஜபம் செய்து, அம்மந்திரத்தைக் கையில் புஷ்பத்துடன் சேர்த்து கவச மந்திரத்தினால் அவகுணடம் செய்து, தீர்த்தத்தைக் கீழே விட்டுச் சுவாமியின் வரத ஹஸ்தத்தில் சேர்க்கவேண்டும். இவ்வாறு ஜப சமர்ப்பணம் செய்யாத பூஜை பயனற்றதாகும்; சுவாமிக்கும் ஆசாரியனுக்கும் தொடர்பு அற்று பூஜா பலன் கிட்டாது. ஆதலால் சுளுகோதகசமர்ப்பணம் முக்கியமாகும். இவ்வாறு சாயங்கால பூஜை செய்யவேண்டும். சாயரக்ஷையில் மகேச்வரன் முதலிய மூர்த்திகளுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும், பிறகு தேவிக்கும் சண்டீசன் பைரவன் முதலானவர்களுக்கும் பூஜை உபசாரம் செய்து பலிஹோமம் நித்தியோத்ஸவம் செய்ய வேண்டும். இது சாயரக்ஷையின் முறையாகும்.

அர்த்தயாம பூஜை

சாயரக்ஷாகாலபூஜை முடிந்தவுடன் தொடங்கி 3 3/4 நாழிகை அளவில் அர்த்தயாம பூஜை செய்ய வேண்டும். அதாவது 7 1/2 நாழிகைக்குமேல் 11 1/4 நாழிகைக்குள் செய்ய வேண்டிய பூஜை அர்த்தயாம பூஜை எனப்படும்.

சுவாமிக்கு அபிஷேகத்தின் பொருட்டு ஸ்நபன பூஜை செய்து, பஞ்சாமிருதம், பஞ்சகவ்யம் செய்து கொண்டு, சுவாமிக்கு சலாஸனம் பூஜை செய்து, அபிஷேகம், நிவேதனம், தூபம், தீபம் கொடுத்து, கௌரிக்கும் நிவேதனம் செய்து சயனாலய பூஜையுடன் க்ஷேத்ரபாலபூஜை செய்து முடிக்க வேண்டும்.

அர்த்தயாமத்தில் அபிஷேகம் செய்யலாம்; செய்யாமலு மிருக்கலாம். அபிஷேகம் செய்வதானால் சுவாமிக்கு மாத்திரம் செய்யலாம். அவ்வாறு செய்யும் அபிஷேகத்திற்கு நல்லெண்ணெய் கூடாது; ரஸவர்க்கம் சேர்ந்த பஞ்சாமிருதம், தேன், சர்க்கரை, பசுவின் பால், இளநீர், சந்தனம், விசேஷ திரவியங்களாகும். மற்றவை வேண்டியதில்லை. தைலாபிஷேகம்

செய்ய விரும்பினால் சந்தனாதி தைலம் முதலிய வாசனைத் தைலத்தால் அபிஷேகம் செய்யலாம்.

பூஜையில் ஐந்தொழில்

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்யம் காத்தல்தொழில், பலிபோடுதல் சங்காரத்தொழில், தீபம் திரோபாவத்தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

மேற்கூறியவாறு ஆறு கால பூஜையின் முறைகளைச் சில ஆகமங்களின் சாரங்கொண்டு எமது புத்திக்கு எட்டியவாறு கூறியுள்ளோம். "ஆகமவிபின" என்றார் ஒரு அபிக்ஞர் "ஆகமம்" என்பது நுழைய முடியாத காடு; அது 28 எண்ணையுடைய தாயினும், 207 உபாகமங்களை உடையது. இறைவனின் திருவாக்கு, கேட்பவர்தகுதிக்கு ஏற்றவாறு சிலவற்றைக் கூட்டியும், குறைத்தும், மாற்றியும் கூறியிருக்கிறார் பரம கருணாநிதியான பரமசிவன். இதைக் கண்ணுறும் அன்பர்கள் குற்றம் நீக்கிக் குணம் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இக்கட்டுரையை திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாள்சமேத ஸ்ரீ கேதீச்வரஸ்வாமி திருவடிகளில் மலராக கும்பாபிஷேக மலருக்கு அளிக்கிறோம். திருக்கேதீச்சரம் ஆலய தருமகர்த்தாக்களும், திருப்பணிக் குழுவினர்களும், நோயற்ற வாழ்வுடன் சகல போக பாக்யங்களைப் பெற்று நூறு ஆண்டுவாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மழை வழங்குக மன்னனோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

சிவம்.

மகோற்சவ விளக்கம்

சைவப்ரக்ரியாதீபம், சிவாகம சிரோமணி
சிவஸ்ரீ M. ஐயாமணி சிவம்,
திருவாடானை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மகோற்சவ விளக்கம்

சைவப்ரக்ரியாதீபம், சிவாகம சிரோமணி
சிவஸ்ரீ M. ஐயாமணி சிவம்,
திருவாடானை.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினா லவர்நல் விழாப்பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனின் உலகர்முன் வருகென உரைத்தார்.

- சேக்கிழார்

உலகத்து உயிர்கள் எல்லாம் உய்தி பெறுவான் வேண்டி, அருட்டிருமேனி தாங்கி ஆண்டவன் எழுந்தளிய திருவடிவங்கள், பலப்பலவாகும். அத்திருமேனிகளின் பொலிவு தோன்றிய நாட்களெல்லாம் உயிர்கள் அனைத்திற்கும் நல்விழா நாட்களெனவே அமையும். இதனை

உற்சவ விளக்கந்தன்னை யுரைத்திடில் உயிரதற்கு
முற்செனனங்கள் விட்ட முகிழ்த்ததோர் கருணையாலே
தற்பரன் தருமமாய தனிக்கொடி கட்டியுண்மை
சிற்பரத் துயிர்கள் முத்தி சேர்த்திடச் செய்வார் மன்னோ.

- பண்டார சாத்திரம்

பண்டார சாத்திரங்கள் பேசாநிற்கும், உற்சவம் என்ற வடமொழிச் சொல்லுக்கு உத் - சப்தபாஷிதம் சவம் - சிருஷ்டி. அதாவது சிருஷ்டி மார்க்கத்தைக் குறித்தது என்பது ஆன்றோர் கண்ட முடிவாகும்.

'सव' इत्युच्यते सृष्टिः तदुत्स्याछन्दभाषितम्।
उद्भूत सृष्टिकारित्वात् उत्सवः कथितः क्रमात्॥

என்பது காரணாகமவாக்கு.

உலகத்தோற்றத்திற்குக் காரணமாகப் போதமில் உயிர்கள் தம்மைக் கதியினிற் போக்க வேண்டியே தகுங் கருணையாலே உமையவளோடுங் கூடித் தத்துவங்களை நோக்குதலும், அதிலிருந்து உலகம் யாவையும் தோற்றுதலும், நிறுத்தலும் ஒடுக்குதலுமாகிய முத்தொழிலின் துவக்கமே 'உத்சவ' என்ற சொல்லின் பொருளாகுமென்பர் மேலோர். உயிர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் வினைத் திட்பத்தால் நல்வினைத் தீவினை வயப்பட்டுக் கறங்கும், சகடமும் போல உழலுகின்ற நிலையில் எல்லா வினைகளையும் திருநோக்காலகற்றி, ஆணவமான படலங்கிழித்துத் தன்மயமாக்கும் தனிப்பெருங்கருணைப் பொழிவே உற்சவமெனக் கண்டுவந்தனர். இந்தப் பெருவிழாக்களைப் பற்றிச் சைவ, வைணவ, ஆகமங்களில், மிக மிக விரிவாகப் பேசப்படுவதைக் காண்கிறோம். இந்த விழாக்களையே இறைவன் செய்யும், ஐந்தொழில்களாகவும் சிவாகமங்களில் பேசப்படுகிறது. இந்தப் பெருவிழாக்கள், நித்திய விழா, சிறப்பு விழா, வேண்டுதல் விழா, என மூவகைப்படும். நாள்தோறும் பூஜையில், இருக்கையில் இருத்தி, நீராட்டி, மலர் தூவி, முறையே வழிபாடாற்ற முடியாத நுண்வடிவங்கொண்ட சில தேவர்கள் வழிபாடாகப் பலிசிந்தி வணங்குதல் "நித்திய விழா"வாகும்.

ஆண்டுதோறும் ஒவ்வொரு திங்கள், முழுமதி உடுவில் வரும் நாளினை முடிவாகக் கொண்டு செய்வது "சிறப்பு விழாவாகும்." (நைமித்திக உற்சவம்)

> நித்தியத் திருநாள் பக்க விழாநிகழ் திங்கட்கிழமை
> புத்தலரிளவேனிற்கட் பொருவரு வசந்தங் கோடை
> மெத்திய முதுவேனிற்கண் மிதவைநீ ராட்டு மாரி
> மெய்த்த கார்ப் பருவந் தன்னிற் பவித்திர முது விழாவும்,
> அன்புறு கூதிர்க்காலை யைப்பசிப் பூரச் சாறும்
> முன்பனிப் பருவந்தன்னில் வைகறை எழுச்சிப்பூசை
> பின்பனிப் பருவந் தன்னிற் பிறங்கு பொன்னூ சலாட்டும்
> என்பன சிறப்புமாக வியற்றுவோர் வீடு சேர்வார்.
>
> \- உற்சவ விளக்கம்

இவைகள் பயன்கருதாது செய்யப்பெறும் விழாக்களாகும். இன்ன பயன் வேண்டுமென இறைவனை வேண்டிப் பணிந்து,

தன்னுடைய பிறந்த நாட்களிலோ, அல்லது அரசன் பிறந்தநாள், வெற்றி பெற்ற நாட்களிலோ, விழாவெடுப்பது (காம்ய உற்சவம்) வேண்டுதல் விழாவாகும். இம்மூவகை விழாக்களையும், ஆகமங்கள், சாகல்யம், பாவனம், சாந்திகம், மாங்கல்யம், என நால் வகையாய்ப் பேசுகின்றன. முதற்கண் கூறிய சாகல்யம் அல்லது நலம் பெறுதல் என்ற விழா, கொடிகட்டுதல் தொடங்கி நீராட்டுதல் இறுதியாகச் செய்யப்படும் விழாவாகும்.

இரண்டாவது பாவனம் அல்லது தூய்மைபெறுதல் என்ற விழா கொடிகட்டுதல் மட்டுமின்றி மற்றெல்லா வழிபாடுகளுடனும் செய்யப்படும் விழாவாகும்.

மூன்றாவதான சாந்திகம் அல்லது கழுவாய் எனும் விழா, காலையில் ஓமமும், பலியிடுதலும், மாலையில் திருவீதியுலாவும் செய்வதாகும்.

நான்காவதான மாங்கல்யம் அல்லது மங்கலப்பேறு எனும் விழா, எசமானனும், குருவும் சேர்ந்து ஒரு நாளை முடிவு செய்து, அந்நாளில் மேற்கூறிய கொடி கட்டுதல், நீராட்டுதல் முதலியன இன்றி, விழா எடுத்தல் மட்டும் செய்வதாகும்.

இந்த விழாக்கள் ஒரு நாள் முதல், 27 நாட்கள் முடியக் கொண்டாடும் முறைகளும் காணக் கிடக்கின்றன.

ஒரு நாள் விழாவிற்குச் "சைவம்" என்று பெயராகும். இவ்விழாவும் "கோஷணம்", "கேவலம்" என இருவகைப்படும். பேரிகைகள் முழக்கிக் காப்புக்கட்டி விழாவெடுத்தல் கோஷணமாகும். இவ்விரண்டு மின்றி உலாப்போந்து அருளுதல் மட்டும் கேவலம் என்ற விழா.

மூன்று நாட்கள் செய்யும் விழா	:	கௌணம்
ஐந்து நாட்கள் செய்யும் விழா	:	பௌதிகம்
ஏழு நாட்கள் செய்யும் விழா	:	பௌவனம்

இவ்வைந்து விழாவிற்கும் கொடி கட்டுதல் வேண்டாவாம்.

9 நாட்கள் விழா	:	தைவிகம்
11 நாட்கள் விழா	:	பைத்ருகம்
13 நாட்கள் விழா	:	கௌமாரம்

15 நாட்கள் விழா : சாவித்ரம்

17 நாட்கள் விழா : சாந்திரம்

27 நாட்கள் விழா : சௌரம்

ஆகமங்களில் இவ்வாறு விழாக்கள், பிரமோற்சவம் என்ற பெயரில் பேசப்படுகின்றன.

இவ்விழாக்களில் 27, 17, 15 நாட்கள் நடைபெறும் விழாக்களில் எட்டுக் கொடிகளும், பிரதான கொடியும், ஐந்து கொடிகளும் ஏற்றம் பெறுதல் வேண்டும். இவ்விழா நமது திருவானைக் கோவிலிலும் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இவ்விழாக்கள், இறைவனின் ஐந்தொழிலையும் நினைவூட்டு கின்றன என மறைகள் பேசும். அவையாவன:

அனுமதி பெறுதல், மண் எடுத்தல், முளையிடுதல், பேரி ஒலித்தல் முதலான வெல்லாம் சிருஷ்டி என்னும் - தோற்றம், திருவீதிவுலா, ஓமம், பலியிடுதல் முதலியன திதி - காத்தல் பரிவேட்டை, தேரூர்தல், சாந்தம் அணிதல், சம்மாரம் என்னும் - ஒடுக்கம், பொடியிடித்தல், நீராட்டு, முளைவிடுதல், கொடி இறக்கல் முதலியன - திரோபவம் என்னும் – மறைப்பு. திருஊடல் பக்தர் விழா - குருவணக்கம், அனுக்கிரகம் - அருளுதல் என ஐந்தொழிலும் பேசப்படுகின்றன.

இந்தப் பெருவிழா நாட்கள் கொண்டாடுதலின் பயன், உலகத்து உயிர்கள் அனைத்தும் சாம்பவீ தீக்கை என்ற முறைப்படி இறைவன் திருநோக்கால் உய்தி பெறுதல், உண்மை. இதனையே "தம்முதற் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்று சிவஞான போதம் பேசா நிற்கும். தீக்கை என்னும் சடங்குகளில், இறைவன், மண்டலம், கும்பம், அக்னி, குரு, சீடன் என்னும் ஐந்து இடங்களையும் கலந்து நின்று அருள் பாலிப்பான் என்பது சிவாகமங்களின் முடிந்த முடிபாகும். அவ்வாறே இவ்விழாக் காலங்களில் ஐந்து இடங்களில் நின்று அருள் பாலிக்கும் முறைமையும் பேசப்படுகிறது.

மண்டலம் - பலிநாயகர்

கும்பமூர்த்தி - அத்திர தேவர்

அக்னி மூர்த்தி - சோமாஸ்கந்தர்

ஆசாரியமூர்த்தி - காப்புக்கட்டு நம்பியார்
சீடர்கள் - தீக்கை பெற்றோரும் பெறாதோருமாகிய அனைத்துயிர்களுமாகும்.

தீக்கை என்னும் சடங்கில் அக்னி முதன்மையானதாகும். அவ்வக்னியும் வாகீசர், வாகீசுவரி ஆகிய உலகத்து மாதா பிதாக்களின் கருப்பத்தில் தோன்றியதாக அமைதல் வேண்டும். ஈண்டு வாகீசர் - சம்பு, வாகீசுவரி - போக சக்தி, குழந்தை அக்னி, கந்தப் பெருமான், இவ்வடிவத்தையே, சத்து, சித்து, ஆனந்தம், எனவும், உண்மை, அறிவு, ஆனந்தம் எனவும் கூறுவர் மேலோர். சிவபெருவிழாக்களில் மேலே குறிப்பிட்ட ஐந்து இடங்களிலும் நிறைந்து நின்று பிறப்பாலும், சாதியாலும், அறிவாலும், ஆற்றலாலும், செல்வத்தாலும், யோகம் முதலிய சித்திகளாலும், எல்லா வகையாலும் மேம்பட்டவர் எனவும் எத்துணை நலனுமில்லா மூர்க்கர், மூடர், கல்வி அறிவில்லாதவர், ஒழுக்கம் இல்லாதவர் முதலிய தாழ்ந்தோர் அனைவரையும், கருணைத் திரு நோக்கால் வினைகளைந்து, முத்தராந்தகுதி தந்து அருள் புரிதலே திருவீதியுலாவின் தத்துவம் எனவும், மறைகள் பேசுகின்றன. இப்பெருவிழாக்கள் 18 விதமான முறைகளை உடையனவாம். அவையாவன: இடபவேள்வி, கொடிகட்டுதல், பாடி மகிழ்வித்தல், முளையிடுதல், வேள்வி, முத்திரை பெறுதல், பலிதூவல், திருஉலா, ஒப்பனை செய்தல், கண்படாது காத்தல், காப்பணிதல், புண்ணிய நீர் கொணர்தல், மஞ்சள் இடித்தல், நீராட்டுதல், கொடி இறக்கல், குடமுழுக்கு, திருமணம், அடியார் வழிபாடு எனப் பதினெட்டாகும்.

இப்பெரு விழாக்கள் எடுத்தலின் பயன்களாவன:

ஒருநாள் விழா - அரசு உயர்தல்
3 நாட்கள் விழா - இறை மகிழ்ச்சி
5 நாட்கள் விழா - வாழ்வாங்கு வாழ்தல்
7 நாட்கள் விழா - இறையருள் பெறல்
9 நாட்கள் விழா - மன நிறைவு
11 நாட்கள் விழா - நிறைவு
13 நாட்கள் விழா - எல்லாம் கைகூடுதல்
15 நாட்கள் விழா - மக்கட்பேறு

17 நாட்கள் விழா - புண்ணிய மிகுதி
19 நாட்கள் விழா - கழுவாய்
21 நாட்கள் விழா - வெற்றி காணல்

இவ்வாறு ஒவ்வொரு உருவில் விழாச் செய்தலின் பயன்களைக் காண வேண்டியது இன்றியமையாதது.

இவ்விழா காண்பதன் பெருமையைப் பற்றி "ஆளுடைய பிள்ளையார் கபாலீச் சரத்தின் பதிகத்தில்", 'பங்குனி உத்திர நாள் ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்' என்று அருளியமை காண்க:

"கொடிகொள் செல்வ விழாக் குணலையனாகக்
கடிகொள் பூம்பொழிற் கச்சி மூலகம்பனார்"

- திருநாவுக்கரசு சுவாமிகள்

"பரமிகு நாட்-சான்ற நிலத்தோர் பொருமணித்தேர்
சங்கத் தலைவரு ருட்டினார்"

- திருவானைக்காப் புராணம்

"கல்வரைப் பிராட்டி செவ்வேளைங்கரன் கணங்கள் சூழப்
பல்வகை யூர்தி யும்பர் படரொளி யரச வீதி
யெல்லை யிலுயிர்கட் கெல்லா மென்னருங் கருணைபூத்துப்
புல்கொளித் திருவேகம்பன் திருவுலாப் போதச் செய்வார்"

என ஐம்பெருங்கடவுளார் உலாவை காஞ்சிப் புராணமும்,

"திரி மலத்தே குளிக்கும் உயிர் அருள்
கூடும்படி கொடி கட்டினனே"

என உமாபதி சிவாசாரியார் கொடிக்கவியிலும் இவ்விழாக்களைப் பற்றியும், இப்பெரு விழாக் காண்டலால் விளையும் நற்பயன்களைப் பற்றியும் கூறப்பெற்றிருத்தல் காண்க. விரிவஞ்சி ஒரு சிலவே ஞாபகப்படுத்தினேன்.

எல்லாம்வல்ல அகிலாண்ட நாயகியுடனாகிய அமுதீசர் திருவருளைச் சிந்தித்து, ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஒரு பொருளாகக் கருதி இக்கட்டுரை எழுதுமாறு பணித்த திருப்பணிக் குழுவிற்கும், மலர் வெளியீட்டுக் குழுவினர்க்கும் என் உளங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகின்றேன்.

மாரியம்மன் மகிமை



சிவாகமரத்னாகரம், ஆகம வித்வான்,
சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்யார்
திருவாவடுதுறை.

பிற
எ
பசி
மறு
பழ
பழ
டெ
மெ
எ

எ
மெ
இ
டெ
து
தே

டெ
இ
டெ
பு
ச

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மாரியம்மன் மகிமை

சிவாகமரத்னாகரம், ஆகம வித்வான்,
சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசார்யார்
திருவாவடுதுறை.

உலகில் தோன்றியுள்ள பலவிதப்பிறப்புகளுள், மானிடப் பிறவியே மிகச் சிறந்தது. மற்ற பிறவிகள் நன்மை தீமை என்பவைகளைத் தெரிந்துகொள்ளாமல் வாழ்கின்றன. பசிவந்தபோது உண்டு களைப்புற்றபோது தூங்குகின்றன. இம்மை மறுமைக்கு வேண்டியதைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அதற்கேற்ற பகுத்தறிவில்லை. இத்தகைய மற்றபிறவிகளுக்கு இல்லாத பகுத்தறிவு மனிதனுக்கு இருக்கின்றது. இதனால் இவனுக்கு ஒரு பெருமை. உலகத்தில் கிடைக்க அரிதாக உள்ளது மூன்று அவை, மனிதப் பிறவி, மோட்ச இச்சை, மகான்களுடன் சேர்ந்து வாழுதல் என்பது ஒரு முதியோரின் வாக்கு.

சுகம் உண்டாகட்டும், துக்கம் உண்டாகக்கூடாது என்றுதான் எல்லோராலும் விரும்பப்படுகின்றது. ஒரு மனிதனுடைய முயற்சியும் இருவகையில் எழும்புகிறது; ஒன்று இன்பத்தைப் பெற, மற்றொன்று துன்பத்தை நீக்க, இன்பத்தைப் பெறுவது மாத்திரம் போதாது. அது இன்பமாக ஆகாது. துன்பத்தை நீக்குவதும் இன்பம்தான். இந்த இரண்டும் ஒருசேரக் சேர்ந்த இன்பந்தான் இன்பமாகும்.

இத்தகைய துன்ப நீக்கத்தையும், இன்பப் பேற்றையும் பெற மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு முயற்சிக்கின்றான். இன்பம் பெறுகின்றான். பெரு முயற்சி செய்தும் சில இன்பங்கள் பெறமுடியாமற் போகின்றது. சில சிறு முயற்சியால் அடையப் படுகின்றது. இது மனிதனின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி. அந்த சக்திதான் ஊழ்வினையின் சக்தி.

வினையின் வன்மையை வெல்ல வேண்டும். அவ்வாறு வென்றால் தடையற்ற இன்பம் கிடைக்கும் - இத்தகைய தடையில்லாத இன்பத்தைப் பெற இறைவனின் அருள் வேண்டும்.

அன்பினால் இன்பத்தைப் பெறலாம்- இன்பமும் அன்பும் காரண காரியத் தொடர்புடையது. இறைவனே இன்ப அன்பு வடிவன்.

உலகிற்கு முழுமுதற்கடவுளாக விளங்குபவர் அம்மையப்பரான சிவபெருமான். அவனை விட்டுப்பிரியாது அவனுடனாய் நிற்கும் அருள், அம்மை எனக் கூறப்படுகின்றது. அந்தச் சக்தியின் சேர்க்கையினால், சிவன், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்ற ஐந்தொழிலைச் செய்கின்றார். அந்தச் சக்தியின் சேர்க்கையில்லையேல் சிவன் ஒன்றும் செய்யமுடியாதவனாகிறான்.

சிவம் சக்தியோடு சேரில், எத்தொழிலும் நடத்தவல்லதாம். இச்சக்தி பிரிந்திடில், அச்சிவம் அசைதற்கும் அரியது என்று சுருதி முழங்கா நிற்கும்.

அக்னிக்குச் சூடுபோலவும், தினகரனுக்குச் சந்திரிகை போலவும், சிவபெருமானுக்குச் சக்தி இணைபிரியாமல் கூடத்தோன்றியவன்.

ஏகாப்யநேகதாயேதி சிவசக்திருபாதிக:!" (சிவாகமம்)

சிவசக்தி ஒருத்தியாயினும் உபாதிபேதத்தால் அனேக சக்தியாகிறாள்.

ஒன்றதா இச்சாஞானக் கிரியையென்றொரு மூன்றாகி
நின்றிடுஞ் சக்தியிச்சை யுயிர்க் கருணேசமாகும்
நன்றெலா ஞானசக்தி யானயந் தறிவனாதன்
அன்றருட் கிரியை தன்னாலாக்குவ னகிலமெல்லாம்.

(சிவஞான சித்தியார்)

பராசக்தியானது பொதுவகையால் ஒன்றாய், இச்சை, ஞானம், கிரியை என்னும் வியாபார பேதத்தால் மூவகைப்படும். உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளிக்கும் பொருட்டுப் பரமசிவன்கொண்ட கருணை இச்சா சக்தியும், அதற்குச் செய்ய

வேண்டிய உபாயங்களையறியும் அறிவு, ஞானசத்தியும், அவ்வுபாயங்களைச் சங்கற்பித்துச் செய்யும் சங்கற்பம் கிரியா சத்தியுமாம்.

சிவசத்தி ஒருவனையே பரமயோகிகள் முனிவர்கள் பலவாராகக் காண்கிறார்கள் என்று ப்ருஹந்நாரதீயம் என்ற நூல் கூறுகிறது. அதாவது உமை, லெக்ஷ்மி, பாரதீ, கிரிஜா, பாலா, அன்னபூர்ணா, பகளா, காயத்ரீ, துரகாரூடா, காளீ, சியாமா, சின்னமஸ்தா, பத்ரகாளீ மாயா, ப்ரகிருதி என்று.

நாயகி நான்முகி நாராயணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமலை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயாகி யாதியுடையாள் சரண மரணமக்கே.

(அபிராமி பட்டர்)

இறைவி, சரஸ்வதி, நாராயணி, கைத்தாமரையினள் புஷ்பபாணங்களைத் தரித்தவள்.

சாம்பவி, சங்கரி, சாமலை நல்லபாம்பை மாலையாகக் கொண்டவள். வாராகி சூலத்தை உடையவள்.

மாதங்கி மதங்க முனிவரின் புத்திரி இவ்வாறு உமா தேவியே எல்லாச் சத்திகளாயும் விளங்குகிறாள். இத்துணை பெருமைவாய்ந்த எண்ணிறந்த சத்திகளுள் ஒருத்தியே மகாமாயீ என்றும் மகாமாரீ என்றும் கூறப்படும் சத்தியும் ஆவாள்.

“மஹா மாயா மஹாகாளி மஹாமாரீ க்ஷுதாத்ருஷா” என்று தேவீ மகாத்மியம் கூறுகின்றது.

ஆதிசத்தியானவள், சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டும், துஷ்ட நிக்ரஹத்தின் பொருட்டும், பல வடிவங்களில் தோன்றுகிறாள். சண்டன், முண்டன் என்ற இரண்டு அரக்கர்களை கொன்றதனால் சாமுண்டீ என்ற பெயர்பெற்றாள். மஹிஷாசுரனை வதம்செய்ததால் மகிஷமர்த்தினி (துர்க்கை) என்ற பெயர்பெற்றாள். இவ்வாறே மாரன் என்ற அசுரனை மரணம் செய்வித்ததனால் மாரி என்ற பெயர்பெற்றாள்.

முன்னொரு சமயம், மாரன் என்னும் ஒரு அசுரன், தன் தேவத்தின் வலிமையால், யாவராலும் மரணம் அடைவிக்க

முடியாத பேறுபெற்று, அதன் பயனாக தேவர் முதலிய யாவரையும் துன்புறுத்தினான். தருமங்களுக்கு இடையூறு செய்தான். தேவர்குழு தேவியிடம் சென்று முறையிட்டது.

இத்தம்யதா யதா பாதா தாநவோத்தா பவிஷ்யதி |
ததா ததா அவதீர்யாஹம் கரிஷ்யாம்யரி ஸம்க்ஷயம்.||
(தேவி மாகாத்மியம்)

அரக்கர்களின் அட்டகாசம் எப்போதெப்போது உண்டாகிறதோ அப்போதைக்கப்போது நான் அவதரித்து சத்துருநிக்ரஹம் செய்கிறேன் என்ற அருள்வாக்கின்படி பராசக்தி மஹாமாயை என்றவடிவங்கொண்டு விஸ்போடம் (வைசூரி) என்ற நோயை அந்த மாராசூரனுக்கு உண்டாக்கி அவனை சங்காரம் செய்து உலகைக்காத்தாள். மஹாமாரி என்ற பெயரையும் பெற்றாள்.

இந்த மஹாமாரியை மனவுறுதியுடன் துதிப்பவர்களுக்குத் தாயுள்ளம் போல் குளிர்ந்த அன்பையளிப்பவளாக இருப்பதனால், சீதளாதேவி என்ற பெயரும், இந்திரனின் கண்கள் போல ஆயிரம் கண்களைத் தோற்றுவிப்பவளாய் விளங்குவதால் ஆயிரம் கண்ணுடையாள் என்றும், இந்திராக்ஷி என்றும், துதிக்கப் படுகிறாள். அவளுடைய திருவுருவத்தை மனதினால் தியானம் செய்பவர்களுக்கு சுரம், விஸ்போடம் முதலிய நோய்கள் அணுகாது.

"ஹஸ்தே பாசம் கபாலம் டமருக ஸஹிதம்
சோர்த்வகேசம் கரண்டம்
கட்கம் தாடங்க யுக்மம் ஸ்தநபர யுகலம்
கஞ்சுகம் வன் ஹி நேத்ரம்!
ரௌத்ரம் வீராஸனஸ்தம் ஜ்வரபயதுரிதம்
ஸ்போடகாதீரு ரோகம்
ஸாந்நித்யம் நிம்ப விருக்ஷஸ்தித மருணநிலம்
சீதளாதேவி ரூபம். !!
(தியான ரத்னாவளி)

கத்தி, உடுக்கு, பாசம், கபாலம் என்ற நான்கு ஆயுதங்களுடன் கூடிய நான்கு திருக்கரமுடையவள். அக்னி

ஜ்வாலை போன்ற மேல்நோக்கிய பூங்குழலையுடையவள். இரண்டு தாடங்கங்களை அணிந்திருப்பவள். கொங்கையின் பாரத்தையடிக்கிக் கட்டிய நற்கஞ்சுகமுடையவள். அக்கினிக் கொப்பான கண்களுடன் உருத்திர வடிவமுடையவள். வேம்பினடியில் வீராசனத்தில் அமர்ந்து அன்பர்களுக்கு அருள் வழங்கும் பராசக்தி என்று மாமாயையின் வடிவத்தை அன்பர்கள் தியானித்து விரும்பிய வரம் பெறவே சிவாகமத்தினால் இவ்வாறு தியானம் விளக்கப்பட்டிருக்கிறது.

சகல செல்வங்களையும் தருபவளான ஜோசூர் பாரு அருள்மிகு இராஜ மாரியம்மனுக்கு கும்பாபிஷேகம் செய்பவர்களுக்கும், துதித்து வணங்குபவர்களுக்கும், கைங்கர்யம் செய்பவர்களுக்கும், கருணைகொண்ட தேவியானவள், அறிவு, சந்தானம், நோயின்மை, கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், பெருமை, இளமை, வலிமை, துணிவு, வாழ்நாள், வெற்றி முதலியவைகளை அளிப்பாள்.

❀ ❀ ❀ ❀ ❀

உண்மை நெறி விளக்கம்



சாஸ்த்ர சூடாமணி, பேராசிரியர்
சிவஸ்ரீ K.A. ஸபாரத்தின சிவாசார்யார்,
சென்னை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

உண்மை நெறி விளக்கம்

சாஸ்த்ர சூடாமணி, பேராசிரியர்
சிவஸ்ரீ K.A. ஸபாரத்தின சிவாசார்யார், சென்னை.

உண்மை நிலையானது பதி, பசு, பாசம் என மூன்றாக உள்ளது. இவைகளில் பாசம் ஜடமாகும். ஆகவே அதற்கு முயற்சி கிடையாது. பசுவிடம் முயற்சி செய்யும் தன்மை இருக்கின்றது. ஆகவே அது தம் முயற்சி மூலமாகப் பாசங்களிலிருந்து விடுபட்டு நல்ல நிலையை அடைய வேண்டியுள்ளது. ஆனால் இந்தப் பசுவாகிய உயிர், அறிவு மறைக்கப்பட்டு, உடல் முதலியவைகளுடன் கூடித் தன்னிலையை இழந்து பிறப்பு, இறப்பு என்கிற சிக்கலில் மூழ்கியுள்ளது. இந்நிலையை மாற்றி பசுவாகிய ஜீவனுக்கு பாசப்பொருளை அனுகூலமாக நடத்தவும், உண்மை நிலையைத் தெரிவிக்கவும், ஓர் துணை வேண்டியுள்ளது. அந்த இன்றியமையாத பொருள் இறைவனாகும். ஆண்டவன், சிவன், கடவுள், பதி எனப் பல பெயர்கள் அதற்கு உண்டு. இவ்வுண்மைகளை உள்ளே அடக்கியுள்ள நூல்களே சிவாகமங்கள். முக்கியமாக சிவாகம நெறி நின்று, சக்தி நிபாதம் (சிவ தீக்ஷை) அடைந்தவர்களுக்கு சிவனே குருவாக எழுந்தருளி, தத்துவமாகிய பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் கசடற விளங்க அருள் பாலிக்கிறார்.

இந்த பதி - பசு - பாச - ஞானமே தகசார்யம் எனப்படும். இக்கார்யம் தத்வ - தாத்விக ஞானம் என்றும் பெயர் பெறும். அதாவது இந்த ஞானத்தால் ஆத்ம போதம் ஏற்படும். இந்த பசுஞானம், பாசஞானத்தோடு பரசிவமே பதி என்கிற உணர்ச்சி பூர்வ ஞானம் சிவாத்வைத சித்தாந்த முக்தியை அளிக்கிறது. இந்த அறிவை அறிந்து கொள்ளும் வழிதான், உண்மை நெறி எனப்படும். இந்த உண்மை நெறியை உமாபதி சிவம் மக்களுக்கு எளிதில் புரியும்படி விளக்கியுள்ள ஆறு செய்யுட்களடங்கிய நூலே, உண்மை நெறி விளக்கம் ஆகும்.

சிவாகம முறையில், சிவாலயங்களில் நடைபெறும் பத்து தின உத்ஸவங்கள், (ப்ரம்மோத்ஸவம்) தசகார்யம் எனப்படுகின்றன♦- எவ்வாறு கொடியேற்றம் முதல் கடைசி தினம் வரையில் நடத்தப்படும் உத்ஸவங்கள், பதி-பசு-பாச-ஞானத்தை விளக்குகின்றன என்பதை விவரிப்பதே இக்கட்டுரையின் தலையாய அம்சமாகும்.

♦ ப்ரம்மோத்ஸவத்தின் தத்வங்கள் ஆகம க்ரந்தங்கள் மூலமாகவும் மற்றும் கர்ண பரம்பரையாகவும் பல கோணங்களில் விளக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தப்பட்ட சில விஷயங்களை எமது நிலையம் வெளியிட்டுள்ள 'சிவாலயங்களும் ஆலயக் கிரியைகளும்' (Siva Temple and Temple Rituals, pp. 92-102) என்ற புத்தகத்தில் கே. ஏ. ஸபாரத்ன சிவாச்சார்யார் விவரித்துள்ளார். இக்கோணங்களில் ஒன்றுதான், ப்ரம்மோத்ஸவத்தில் பத்து நாட்களில் நடைபெறும் பல விஷயங்கள், பதி - பசு- பாசம் என்ற த்ரிபதார்த்தத்திற்கு நெருங்கின தசகார்யங்களுக்குப் பொருந்துகின்றன என்பதாகும். இக்கருத்து பொதுவாகத் தெரிந்தாலும் அடையார் நூல் நிலையத்தின் சுவடிகள் தொகுப்பில் (டி. எண் 62) யோகஜ தந்த்ரம் எனும் ஆகமத்தில் 'ஸங்கல்ப நிராகரணம்' எனும் நூலில் உள்ளபடி உத்ஸவத்தில் நடக்கும் எந்தெந்த விஷயங்கள் தசகார்யத்திற்கு ஒப்பாகவுள்ளன என்பது குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது

இந்நூலின்படி -

த்வஜாரோஹணம் பீஜாங்குரார்ப்பணம்	= தத்வ ரூபம்
வாஹனத்தில் சிவன் பவனி வருதல்	= தத்வ தர்சனம்
யாக சாலை	= தத்வசுத்தி
வ்ருஷப வாஹனத்தில் சிவதர்சனம்	= ஆத்ம ரூபம்
தேரில் வலம் வருதல்	= ஆத்ம தர்சனம்
சாந்துசேவை என்ற க்ருஷ்ணகந்த ஸமர்ப்பணம்	= ஆத்ம சுத்தி
தீபாவலோகனம்	= சிவ ரூபம்
தீர்த்தவாரி க்ருத்யம்	= சிவ தர்சனம்
த்வஜாவரோஹண தினத்தில் கும்பாபிஷேகம்	= சிவ யோகம்
சிவசக்தி ப்ரணய கலஹம் என்ற திருவூடல்	= சிவபோகம்

யோகஜ தந்த்ரத்தில் (பக். 170-71ல்) இக்கருத்துக்கள் உள்ள ச்லோகங்களாவன -

उत्सवमधिकृत्य ग्रन्थान्तरतो वचनानि संकल्पनिराकरणे -
ध्वजारोहादि तीर्थान्तं दशकार्यमिदं भवेत् ॥ 9 ॥
एतानि दशभेदानि त्रिपदार्थस्य उच्यते ।
वीजाङ्कुरार्पणं चैव ध्वजारोहणमेव च ॥ 10 ॥

தசகார்யமானது - தத்வ ரூபம், தத்வ தர்சனம், தத்வ சுத்தி, ஆத்ம ரூபம், ஆத்ம தர்சனம், ஆத்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தர்சனம், சிவ யோகம், சிவ போகம் என பத்து வகைப்படும். இந்த பத்து நிலைகளையும் சுருக்கமாக ஆறு செய்யுட்களில் உமாபதி சிவம் விளக்கியுள்ளார்.

செய்யுள் 1: முதல் செய்யுளில் தத்வ ரூபம், தத்வ தர்சனம் தத்வ சுத்தி ஆகிய மூன்று நிலைகளை விளக்கியுள்ளார். ப்ருதிவி (மண்) முதல் நாதம் வரையுள்ள முப்பத்தாறு தத்வங்களையும், கரணங்கள், புவனம், போகம், கர்மா இவைகளுக்கு ஆதாரமாகவுள்ள சரீரத்தையும் ஆத்மாவுக்கு வேறுபட்டதாகக் காண்பதே தத்வ ரூபமாகும். தத்வ தர்சனமானது, இந்த முப்பத்தாறு தத்வங்களும், மாயையின் கார்யமென்றும், ஜட பதார்த்தமென்றும் அறிவதாகும். இந்த அறிவைக்கொண்டு அந்த ஜட பதார்த்தங்களை நீக்கி, தன்னை நித்யமாய் அறிந்து கொண்டு நிற்பது தான், தத்வ சுத்தியாகும். ஜீவன் இடைவிடாது ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்குவதிலிருந்து மீளவே, சுத்த சிவமானது குரு வடிவாக எழுந்தருளி பாச நீக்கம் செய்கிறான். இது சிவ தீக்ஷையாகும். இந்த தீக்ஷையில் ஷடத்வ சோதனை என்கிற ஆறு முறைகள் உள்ளன. அவை முறையே மந்த்ர, பத, வர்ண, தத்வ, புவன, கலா என்பவையாகும். இவைகளை அத்வாக்களென்பர்.

ப்ருத்வி முதல் சிவம் (நாதம்) வரை உள்ள தத்வங்கள் முப்பத்தாறு. இவற்றில் சுத்த மாயா தத்வங்கள் ஐந்து, அசுத்தமாயா தத்வங்கள் ஏழு, ப்ரக்ருதி மாயா தத்வங்கள் இருபத்தி நான்கு என தத்வங்கள் மூன்று வகைகளாகின்றன.

तत्त्वरूपमिति ख्यातं यानं तत्त्वस्य दर्शनम् ।
यागदीक्षाध्वशुद्धि स्यात्वृषारूढात्मरूपकम् ॥ 11 ॥
आत्मदृश्यं रथयानं कृष्णगन्धात्मशोधनम् ।
दीपावलोकनं चैव शिवरूपमिति स्मृतम् ॥ 12 ॥
तीर्थं तु दर्शनं विद्यात् योगं कुम्भाभिषेचनम् ।
शक्तियात्रा महेशस्य शिवभोगमिति स्मृतम् ॥ 13 ॥
एवं तु दशकार्याणि दीक्षा चोत्सवमुच्यते । – S.S.J

சுத்த மாயா தத்வத்திலிருந்து நான்கு நிலை வாக்கு உண்டாகின்றது. அதனுடன் சிவம், சக்தி, ஸாதாக்யம், ஈச்வரன், சுத்த வித்யை என்று ஐந்து சுத்த அல்லது சிவ தத்வங்கள் ஏற்படுகின்றன.

அசுத்த மாயையிலிருந்து மாயை, காலம், நியதி, கலை, வித்யை, ராகம், புருஷம் என ஏழு வித்யா தத்வங்கள் உண்டாகின்றன.

ப்ரக்ருதி மாயையினால் உண்டாகும் தத்வங்கள் பின்வருமாறு: சித்தம், புத்தி , அஹங்காரம், மனஸ்; காது, கண், மெய், நாக்கு, மூக்கு; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் ; சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்; (தன்மாத்ரைகள்); ஆகாசம், வாயு, தேஜஸ், அப், ப்ருதிவி (பஞ்ச பூதங்கள்): இவை ஆத்ம தத்வங்கள் அல்லது புருஷ தத்வங்கள் எனப்படும்.

தத்வங்களை அறிந்து நல்ல மார்க்கத்தில் நடக்க, அதன் பயனாக உண்மை விளங்கும். அந்நிலையில் பாச நீக்கம் ஏற்படுகின்றது. இதற்கு, முக்யமாக, குரு முகமாக, சிவ தீக்ஷை செய்து கொள்ள வேண்டும். அத்தருணத்தில் ஆறு அத்வாக்கள் மூலமாக உண்மை புலனாகிறது. ஆறு அத்வாக்களில் ஆறாவது கலாத்வா. இது ஐந்து வகைப்படும். அவைகளாவன: நிவ்ருத்தி, ப்ரதிஷ்டா, வித்யா, சாந்தி, சாந்த்யதீதா என்பனவாம்.

நிவ்ருத்தி கலை:

शिवः भूतानां संसारनिवृत्तिं यया शक्त्या करोति सा निवृत्तिः ।

பஞ்ச பூதங்களாலான சரீரத்துக்கு, ஆணவ மல, மாயா மல கார்யத்தினால், கார்மிக மல பாசம் ஏற்படுகிறது. அதனால் சுக துக்கங்களும், அதன் பொருட்டு சுவர்க்க நரக போகங்களும் ஏற்படுகின்றன. இது பசுவான ஜீவன் பிறப்பு, இறப்பு என்கிற ஸம்ஸார சூழலில் சிக்குண்டு கிடப்பதைக் காட்டுகிறது. இவ்வாறு சிக்காமல் அவைகளிலிருந்து விடுபடும் நிலையே நிவ்ருத்தி கலையாகும். இதற்கு தத்வ ஞானம் முதலானவை அவசியம்.

ப்ரதிஷ்டா கலை:

निवृत्तेः प्रतिष्ठापकत्वात् प्रतिष्ठा ।

ஸம்ஸார தொடர்பு நீங்கி ஆத்மாவைத் தனித்து நிற்கச் செய்யும் கலை.

வித்யா கலை:

தனித்து நிற்கும் ஆத்மாவிற்கு உண்மை ஞானத்தை அளிப்பது.

या विद्या सविकल्पकज्ञानरहितां विद्यां ददाति सा विद्याकला।

விகல்ப அறிவானது நிச்சயமற்ற தன்மை அல்லது அஸத்யத்தை ஸத்யமென்றும், இல்லாததை இருப்பதாகவும் நினைக்கும் ப்ராந்தி (भ्रान्ति) ஞானம். இத்தகைய அறிவைத் தவிர்த்து உண்மை அறிவை இக்கலை அளிக்கிறது.

சாந்தி கலை:

या कला आत्मनः दुःखोपशमनं दधाति सा शान्तिः।

யதார்த்தமான ஞானம், அதாவது தத்வ - தாத்விக ஞான, ஆத்ம ஞானங்களைத் தெளிவிக்கும் பயிற்சியின் பலனான அறிவே. ஜீவனை (பசு) துன்பமற்ற நிலையில் நிறுத்தும் கலை இது.

சாந்த்யதீத கலை:

निर्विकल्पकज्ञानमेव शान्त्यतीतकला।

இந்நிலையில் ஆத்மா தான் இதுவரை கண்ட ஆத்ம போதத்திற்கும், தத்வ - தாத்விக ஞானம் இல்லாமல் சரீரம், கரணங்கள் இவைகளோடு பல புவனங்களில் போகங்களை அனுபவித்து, சுக துக்கங்களை துய்ப்பதற்கும், சிவனருளே காரணம் என்று கண்டு, ஆத்ம ஞானம் கிடைக்கப்பெற்று, அதன் காரணமாய் சிவ ஞானம் பெற்று, சிவமாக ஒன்றி இருப்பது சாந்த்யதீத கலை. இதை சுத்த அத்வைத ஞானம் என்பர்.

இந்த ஐந்து கலைகளில் முப்பத்தாறு தத்வங்களையும் ஒன்று காண்பதே தத்வ சோதனையாகும். இதை தத்வ சுத்தி என்றும் கொள்ளலாம்.

தத்வங்கள்:

சிவ தத்வங்கள் ஐந்து. இவைகளில் சிவம் உருவமற்றது. நாதம் என்று கொள்ளலாம். அதி ஸூக்ஷ்மமானது. அடுத்தான

சக்தி சிவத்துடன் ஒன்றி இருக்கிறது. இதை பிந்து (बिन्दु) என்பர். இது தான் சக்தி தத்வம். இந்த பிந்துவே சுத்த மாயை என்ற பெயரில் சிவம் முதல் சுத்த வித்யை வரை ஐந்து தத்வமாய் நிற்கிறது. சுத்த மாயையின் உபாதியைக் (ஸம்பந்தம்) கொண்டு சிவம் மூன்றாக பிரிகின்றது.

उपसंहृतबिन्दुकार्यो लयशिवः।

பிந்து என்ற சக்தியின் ஸம்பந்தம் இல்லாதபோது (தோற்றம் முடங்கிய சமயத்தில்) சுத்த சிவம் லய சிவம் எனப் பெயர் பெறுகிறது.

उद्युक्तकार्यो भोगशिवः सादाख्य - तत्त्वस्थितः सदाशिवः।

सकल निष्कल - उभयलिङ्ग स्वरूपः लिङ्गस्वरूपः।

போக சிவனாகவும், ஸதாசிவனாகவும், லிங்க ரூபமாகவும் மூன்று வகையில் சக்தியுடன் சேர்ந்த சிவம் உருவெடுக்கிறது. லிங்க ரூபத்தில் பிந்து பீடத்தில் நாத ரூப ஊடுருவலே சிவ லிங்கமாகும். சுத்த மாயையாய் பிந்துவுடன் (சக்தி) ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்காக முயற்சிக்கும் தருணம் லயசிவம் சதாசிவன் என்ற பெயருடன் விளங்குகிறது.

प्रवृत्तबिन्दुकार्य अधिकारशिव इति नाम भजते। एंतद् ईश्वरतत्त्वमिति।

இந்த அதிகாரசிவன் என்ற பெயரில் மஹேசன் முதலான ஸகல தேவதா சப்தங்களும் அடங்கும். ஸகல என்பதற்கு அவயவத்துடன் கூடியது என்பது பொருள். இவைகள் சுத்தமாயையிலிருந்து பிறந்ததால் சுத்தாத்வா (शुद्धाध्वा) எனப்படுவர். சுத்தாத்வாவில் இருப்பவர்களை சம்பு பக்ஷத்தில் இருப்பவர்கள் என்றும் கூறுவர்.

லய தத்வமான சிவ தத்வம், நாத (ஒலி) ரூபமான சுத்த ஞானமே. இது முதலும் முடிவும் இல்லாததும், காலம், தேசம் என்று பகுக்கப்படாமலும் சித் -ஆனந்த - ரூபமாய் நிற்கும். அடுத்ததான பிந்து, சிவத்தின் க்ரியா சக்தியாகும். சக்தி தத்வத்திலிருந்து ஸதாசிவ தத்வம் உண்டாகிறது. இதில் ஞானமும் க்ரியையும் சமமாக இருக்கும். ஸதாசிவ தத்வ அதிஷ்டாதாவான ஸதாசிவன் ஈசானாதி பஞ்ச மந்த்ர மூர்த்தங்களை உடையவன். ஸதாசிவன் ஞானம் அதிகமாகவும்

க்ரியை குறைந்தும் உடைய மூர்த்தி. ஈச்வரன் சொற்ப ஞானமும் அதிக க்ரியையுமுடைய மூர்த்தி. இந்த ஈச்வர தத்வத்தில் அனந்தன் முதலிய எட்டு வித்யேச்வரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஸ்ரீ கண்ட ருத்ரருக்கு ஞானம் அதிகமாகவும் அற்ப க்ரியையும் உண்டு. இவரே சுத்த வித்யா தத்வத்தின் ஆதாரம்.

शुद्धविद्यातत्त्वे सप्तकोटिमहामन्त्राणवः सन्ति।

सार्धत्रिकोटिकं दीक्षासाधनानि च भवन्ति।

முன் சொன்ன தத்வ பஞ்சகங்களில் க்ரந்தி தத்வம் என்றும் ஒன்று சொல்லப்படுகிறது. க்ரந்தி (முடிச்சு) தத்வம் ஒன்றாகவே இருக்கிறது. இது விசித்ர சக்தியுடையது. அழிவற்றது. அசேதனமானது. சிவம் அல்லாதது. ஆனால் ஜகத் உண்டாவதற்கு காரணமாயுள்ளது. கார்யமான ஜகத்திற்கு காரணமான இந்த க்ரந்தி தத்வம், ஈச்வரனே கர்த்தா என்று அனுமானத்தால் ஏற்படுத்த உதவுகிறது. சேணியன் நெய்த துணிக்கு, நூல்கள் எப்படி உபாதான (முக்ய) காரணமோ, அப்படி, இந்த க்ரந்தி ஜகத்திற்கு உபாதான காரணமாக இருந்தாலும் நூல்கள் போல அழிவுடையது அன்று. அநித்யமாக இருக்கும் பக்ஷத்தில் திரும்பத் திரும்ப ஜகத் ஸ்ருஷ்டி ஏற்பட வாய்ப்பு இல்லாமற் போய் விடும். ஆகவே இது நித்யம். அவ்வாறே எங்கும் பரந்தும் (வ்யாபகம்) கிடக்கிறது. துணி நெய்வதற்கு நூல்கள் அனேகம் வேண்டுவது போல ஜகத்திற்கு க்ரந்திகள் பல வேண்டியதில்லை. ஆகவே க்ரந்தி தத்வம் ஒன்றுதான்.

வித்யா தத்வம்: அஷ்ட வித்யேச்வரரில் அனந்தேச்வரர் என்பவர் க்ரந்தி தத்வத்தைக் கலக்க அதனின்று கலா தத்வம் ஏற்படுகிறது. ஜீவாத்மா தன் கேவலாவஸ்தையில் ஜடம் போல நிற்கும். இருட்டில் தீபம் கண்ணிற்கு வஸ்துக்களைப் பார்க்க உதவுவது போல, கலா தத்வம் ஆத்மாவிற்கு க்ரியா சக்தியை அளிக்கிறது. அவரவர் செய்த வினைப்பயன் படி, க்ரந்தி தத்வத்திலிருந்து நியதி தத்வம் பலனை நிர்மாணிக்கின்றது.

மாயை மூன்று விதம். இது சுத்த மாயை, அசுத்த மாயை, ப்ரக்ருதி மாயை என்பதாகும். சுத்த மாயையில் அடங்கிய தத்வங்கள் சிவம் முதலான ஐந்து. அசுத்த மாயையில் ஜன்யமாவது வித்யா தத்வம் முதலிய ஏழு. அதில் ஒன்றான

கால தத்வத்தினால் விநாடி, நாழிகை, மணி முதலிய கால விவகாரம் எற்படுகிறது. மேலும் பூத (भूत), பவிஷ்யத் (भविष्यत्), வர்த்தமானம் (वर्तमानं) என்கிற முப்பிரிவுகளும் உண்டாகின்றன.

க்ரியா சக்தியில் அடக்கமே கலை. ஆத்மா ஆற்றல் பெறுவதற்கு ஞானசக்தி, வித்யா தத்வத்திலிருந்து உண்டாகிறது. கலா தத்வத்திலிருந்து ராகம் பிறக்கிறது. ராகம் அடைந்த பொருளை அற்பமாகவும் அடையாத பொருளை பெரிதாகவும் நினைக்க வைக்கும் தன்மையுடையது. ஆகவே இந்த ஆத்மாவிற்கு கலை, காலம், நியதி, வித்யை, ராகம், ஆகிய ஐந்தும் சட்டை அல்லது போர்வைபோல் (கஞ்சுகம்) உள்ளன. இந்த ஐந்து போர்வைகளையுடைய ஆத்மா ரூபாதி விஷயங்களை அனுபவிக்கும் பொழுது லயாதிகாரியான (संहारमूर्त) ருத்ராம்சம் புருஷதத்துவத்தினடிப்படையில், ரூபாதி விஷயங்களிலேயே ஆத்மாவை அழுத்துகிறது. இந்த தன்மையே புருஷ தத்வமாகும். அனந்தேச்வரர் கலா தத்வத்தினின்று ப்ரக்ருதி மாயையை தோற்றுவித்தார். இம்மாயை ஒன்றையும் சிந்திக்கச் செய்யாமல் மயக்கத்தைக் கொடுக்கக் கூடியது.

ஆத்ம தத்வங்கள்: இவை இருபத்தி நான்கு. ப்ரக்ருதி மாயையின் செயலாக நான்கு வித அந்தஹ்கரணங்கள் உண்டாகின்றன. அவை சித்தம், புத்தி, அஹங்காரம், மனம். நாம் ஒன்றைப் பற்றி எண்ணுவது மனோ வ்ருத்தியால்தான். புத்தி, மனஸ்ஸுடன் சேர்ந்த இந்த்ரியங்களுக்கு வெளி விஷயங்களைப் ப்ரகாசப்படுத்துகிறது. இந்த புத்தி தத்வம் வித்யா தத்வத்தைக் காட்டிலும் வேறுபடும். வித்யா தத்வமானது, ஆத்மாவிற்கு ஞான சக்தியை உண்டாக்கக் கூடியது. ஆனால் ப்ரக்ருதி தத்வ ஸம்பந்தமன புத்திக்கு அனுகூலமான குணங்கள் மூன்று. அவை ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகும். இவற்றின் தன்மைகள் ப்ரகாசமானவை. இந்த குணங்களுடைய தன்மையினால் ஆத்மாவிற்கு பல விதங்களில் நம்பிக்கை ஏற்படுத்தும். இந்த புத்தி தத்வத்திலிருந்தே அஹங்கார தத்வம் எழுகிறது. இது தைஜஸம் (तैजसम्), வைகாரிகம் (वैकारिकम्) பூதாதி (भूतादि) என்று மூன்று வகைப்படும்.

தைஜஸாஹங்காரத்தில் அடங்கியவை மனமும் ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்தும் (கண், செவி, மூக்கு, வாய், மெய்).

வைகாரிகாஹங்காரத்தில் உண்டானவை கர்மேந்த்ரியங்கள் ஐந்து (கை, கால், பாயு, உபஸ்தம், வாக்கு).

பூதாஹங்காரத்திலிருந்து பஞ்ச தன்மாத்ரைகள் உண்டாகின்றன. (ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தம்.) அந்த தன்மாத்ரைகளிலிருந்து ப்ருத்வி முதலான பஞ்ச பூதங்களும் உண்டாகின்றன. இவ்வாறு தத்வங்கள் முப்பத்தி ஆறும் தெளிவாகிறது.

தத்வங்கள் தோன்றும் விதமும், அவைகளின் வ்யாபாரமும், அதனால் ஆத்மாவிற்கு ஏற்படும் பயனும் (फलम्) தாத்விகங்களாகும். தத்வங்கள் யாவும் மஹாப்ரளய காலத்தில் பரம சிவத்தில் லயித்து, திரும்பவும் ஸ்ருஷ்டி காலத்தில் வெளித் தோன்றும். ஆகவே தத்வங்கள் அழியாதவை. தாத்விகங்கள் அழியக் கூடியவை.

பஞ்ச பூதங்களுக்கும் பன்னிரெண்டு கார்யங்கள் (குணங்கள்) உள்ளன. அவை முறையே – ரூபம், ஸ்வரூபம், ஸ்வபாவம், விசேஷம், வ்யாப்தி, வ்யாபகத்வம், குணம், நிறம், தர்சனம், சுத்தி, எழுத்து, அதிதேவதை.

ப்ருத்வி: இதன் ரூபம் - காடின்யம் (काठिन्यम्) (தாங்கும் சக்தியுடையது); ஸ்வரூபம் - நாற்கோண மண்டலம் ஸ்வபாவம் - சலனம்; விசேஷம் – பல வடிவங்களில் இருத்தல்; வ்யாப்தி - ஆகாசபர்யந்தம்; வ்யாபகத்வம் – நூறுகோடி யோஜனை விஸ்தீர்ணம்; சரீரத்தில் எலும்பு, நரம்பு, சதை, வெள்ளி, செம்பு, முதலிய உலோகமாகவும் நவமணிகளாகவும் இருக்கும்; குணம் - சகிப்புத்தன்மை (सर्वसहत्वम्); நிறம் – மஞ்சள்; தர்சனம் - மேலே சொல்லப்பட்ட குணங்களை உடைய ரூபம், ஜடபதார்த்தம், அறிவுடையதல்ல, என்று காண்பதே; சுத்தி - தன்னைக் (ஆத்மாவை) காட்டிலும் வேறுபட்டது என்று அறிவதே; பீஜாக்ஷரம் – 'ல'; அதிதேவதை - ப்ரஹ்மா, ஸ்ருஷ்டி கர்த்தா.

ஜலம்: ரூபம் – குளிர்ச்சி; ஒழுகும் தன்மையுடையது (शीतस्पर्शत्वं द्रवत्वं च) ஸ்வரூபம் – பிறைச்சந்திரவடிவம்; ஸ்வபாவம் – விழும் தன்மையுடையது; விசேஷம் – மிருதுத் தன்மை; வ்யாப்தி

- பூமியைக் காட்டிலும் பத்து மடங்கு விஸ்தீர்ணம்; வ்யாபகத்வம் - சப்த ஸாகர பர்யந்தம். தேகத்தில் ரத்தம், சுக்லம், ரேதஸ், மூத்ரம், மஜ்ஜை முதலியன; குணம் நாக்குக்கு ருசி; நிறம் - வெளுப்பு (धावल्यम्); தர்சனம் – இதன் ஞானம் 'அசித்' என்று அறிவது; சுத்தி - உபயோகித்தல்; எழுத்து – 'வ' (व); அதிதேவதை - விஷ்ணு.

அக்னி: ரூபம் – சுடும் தன்மையுடையது; ஸ்வரூபம் - முக்கோணம்; ஸ்வபாவம் – மேல் நோக்கி எழுதல் (ऊर्ध्वज्वलनम्); விசேஷம் – 'ஆஹவனீயம்' (आहवनीयम्) முதலிய மூன்று; வ்யாப்தி - மோகினி வரை; வ்யாபகத்வம் - அயுதகோடி யோஜனை விஸ்தீர்ணம். உணவு, தூக்கம், பயம், மைதுனம், சோம்பல்; குணம் – சூரியன் முதலிய அக்னி ரூபங்கள்; நிறம் - பொன் சிவப்பு (रोहितवर्णम्); இப்படிப் பார்ப்பதே தர்சனம்; சுத்தி - தியாகம்; எழுத்து – 'ர'; அதிதேவதை - ருத்ரன்.

வாயு: ரூபம் - அசைதல்; ஸ்வரூபம் - ஆறுகோணம்; ஸ்வபாவம் - உருவமற்றது; விசேஷம் – பத்து விதம் – ப்ராண (प्राण), அபான (अपान), வ்யான (व्यान), உதான (उदान) ஸமான (समान), நாக (नाग), கூர்ம (कूर्म), க்ருகர (कृकर), தேவதத்த (देवदत्त), தனஞ்ஜய (धनञ्जय), வ்யாப்தி - ஸதாசிவன் வரை; வ்யாபகத்வம் – லக்ஷ கோடி யோஜனை விஸ்தீர்ணம். சரீரத்தில் கமனாகமனாதி ஐந்து (गमनागमनादि पञ्च), குணம் – வீசுதல்; நிறம் - நீலம்; தர்சனம் - இப்படி பார்க்கும் ஞானமே; சுத்தி - இது 'அசித்' என்று விடுவதே; எழுத்து – 'ய'; தேவதை - மஹேசன்.

ஆகாசம்: ரூபம் - எப்பொழுதும் இடைவெளி கொடுப்பது; ஸ்வரூபம் – ஸ்தூலம்; ஸ்வபாவம் - அசைவற்ற தன்மை; வ்ருத்த மண்டலம்; விசேஷம் - ஸூக்ஷ்மம்; வ்யாப்தி - சக்தி தத்வம் வரை; வ்யாபகம் – பத்து லக்ஷம் கோடி யோஜனை விஸ்தீர்ணம். சரீரத்தில் ராகாதி பஞ்சாத்மகத்வம்; குணம் - கடாகாசம் (घटाकाशम्) மஹாகாசம் (महाकाशम्) என்கிற பிரிவு படுத்தும் தன்மையைக் கொன்டது; நிறம் – புகை நிறம்; தர்சனம் - இப்படிப்பட்ட ஞானம்; சுத்தி - 'அசித்' என்று விடுவது; எழுத்து – 'ஹ'; அதிதேவதை - ஸதாசிவன்.

இவ்வாறு பஞ்ச பூதங்களுக்கும் அறுபது தன்மைகள் உள்ளன. இதுவரை கூறிய தத்வ கார்யங்கள் மூன்றாகப் பிரியும். 224 புவனங்களும் யாவருக்கும் பொதுவாக போகத்திற்கு உரியவை. சப்த, ஸ்பர்சாதி ஐந்து தன்மாத்ரைகளும் மனம், புத்தி, அஹங்காரம் இவைகளுடன் கூடி, ஜீவாத்மாக்களுக்கு போக காரணமாய் ஸூக்ஷ்மமாய் இருப்பதால் இவை எட்டும் விசேஷ குணங்கள் எனப்படும். ஜீவன் ஸூக்ஷ்மமாக இருக்கும் தருணம் புவனஙக்ளில் ஸஞ்சரிக்க முடிகிறது. ஸ்தூல தேஹங்கள் இருபாலருக்கும் போக ஹேதுவாக இருப்பதால் சாதாரண அசாதாரண தன்மையுடையவை.

ஆத்மாவின் அவஸ்தைகள் (நிலைகள்):- முக்யமாக கேவலாவஸ்தை, ஸகலாவஸ்தை, சுத்தாவஸ்தை என்று மூன்றாகும். கலை முதலான தத்வங்கள் இல்லாமல் இருக்கும் ஆத்மாவஸ்தை கேவலாவஸ்தை ஆகும். கலை தத்வங்களுடன் கூடிய அவஸ்தை ஸகலாவஸ்தை. ஆணவமலமற்று இருக்கும் ஆத்மாவை சுத்தாவஸ்தையில் உள்ளது எனலாம். புருஷனுடைய நெற்றியில் (ललाटस्थानं) ஜாக்ரதவஸ்தை (जाग्रत) கேவலாவஸ்தை யிலுல்ள ஆத்மா கீழ்நோக்கி (अधोमुखम्) இருக்கும் நிலையில் முப்பத்தி நான்கு தத்வங்கள் அதற்கு உண்டு. ஸ்வப்னாவஸ்தையில் கர்மேந்த்ரியம், ஞானேந்த்ரியம் பத்தையும் விட்டு கண்டத்தில் (कण्ठ) இருபத்தி நான்கு தத்வங்களுடன் நிற்கும். ஸுஷுப்த்யவஸ்தையில் சித்தம் ப்ராணவாயு இரண்டுடன் மாத்திரம் ஹ்ருதயத்தில் இருக்கும். துர்யாவஸ்தையில் ப்ராணன் ஒன்றுடன் மட்டில் ஆத்மா நாபி ஸ்தானத்தில் இருக்கும். துர்யாதீதாவஸ்தையில் ஆத்மா தனித்து தத்வங்களுடன் கூடாமல் மூலாதாரத்தில் இருக்கும். இது கேவலாவஸ்தை இந்நிலையில் முன்வினைப் பயனாய் ஒரு நாதம் எற்படும். அதுவே ஸூக்ஷ்மா வாக் (सूक्ष्मा वाक्) இரண்டாவதாக பச்யந்தீ வாக் (पश्यन्ती वाक्) மயிலின் முட்டையில் அடங்கி இருக்கும் மயிலின் அவயவங்கள் போல் சித்தத்தின் அளவில்; பிரிவையுடைய எழுத்துக்களைக் கொண்டது. இந்த பச்யந்தீ வாக் (पश्यन्ती वाक्) ப்ராண வாயுவுடன் கூட கண்டத்தில் (कण्ठ) இருக்கும். மத்யமா வாக் - வெறும் உதட்டசைவுடன் (उपांशु उच्चारण) ஸூக்ஷ்மாக்ஷரங்களுடன் காதுக்கு அஸ்பஷ்டமாய் கேட்கும்படி

இருக்கும். வைகரீ வாக் (वैखरी वाक्) என்பது ப்ராண, உதான வாயுவுடன் பிறர் காதில் விழும்படி எழுத்துக்கள் ஸ்பஷ்டமாயும் பொருள் தெரியும்படி இருக்கும். இத்தகைய வாக்குகள் நான்குமே புருஷனுக்கு ஞானத்தை உண்டாக்கும்.

ஸூக்ஷ்மா வாக்கானது சிவ சக்தி தத்வங்கள் ப்ரேரணையுடன் கூடியது. பச்யந்தீ வாக், ஸாதாக்ய (सादाख्य) தத்வ ப்ரேரணையினால் உண்டாவது. மத்யமா வாக், ஈச்வர தத்வ ப்ரேரணையினால் உண்டாவது. வைகரீ, சுத்த வித்யையினால் ஊக்கப்படுவது.

மேற்கூறப்பட்ட நான்கு வித வாக்குகள் அறிவித்த ஞான சக்தியை உடைய ஆத்மா, ஸகலாவஸ்தையில் இருக்கும். இந்நிலையில் சிவ ஸமவேதமான (समवेत) ஞானசக்தி சிவ தத்வமான சுத்த வித்யா தத்வத்தைத் தூண்டும். அவ்விரு தத்வங்களும் ப்ரக்ருதி - வித்யா தத்வங்களைத் தூண்ட சிவனுடன் கலந்துள்ள க்ரியா சக்தி, சக்தி - சதாசிவ தத்வங்களைத் தூண்ட, அவ்விரண்டும் கலை, காலம், நியதி, புருஷ தத்வங்களைத் தூண்டிவிட, சிவனில் உள்ள இச்சா சக்தி மஹேச்வர தத்வத்தைத் தூண்ட அது ராகத்தை உண்டாக்கும். இவை எல்லாம் கலந்து பராசக்தியைத் தூண்டும். அதாவது சிவன் சக்தியைத் தூண்ட ஆத்மா ஸகலாவஸ்தையில் அடங்குகிறது. இந்நிலையில் ஆத்மா ஞானத்தை உடையதனால் ஞாதாவாக (ज्ञाता) இருந்து ஞேயத்தை (ज्ञेयम्) (உண்மை நிலையை) அறிகிறது. இது போலவே மத்யாவஸ்தையிலும் நடக்கிறது.

நிர்மலாவஸ்தையில் ஆத்மா நிர்மலத்தில் ஜாக்ரதவஸ்தை அடையும் போது கர்மாவிற்குத் தகுந்த மல பரிபாகம் எற்பட்டு ஆசார்யனுடைய அனுக்கிரஹத்தினால் ப்ரபஞ்சத்தின் நிலையற்ற தன்மையை அறிகிறது. இதனால் உபகாரம் செய்தவர் மீது சந்தோஷமோ, அபகாரம் செய்தவர் மீது துக்கமோ ஏற்படாமல் இந்த உலகமே சிவ ரூபமாகத் தெரிகிறது. அது நிர்மல ஸ்வப்னாவஸ்தையாகும். உலகிலுள்ள வஸ்துக்களையெல்லாம் இந்த்ரியங்களைக் கொண்டு அனுபவித்து அறிந்தாலும் அவ்விஷயங்களோடு ஆத்மா சம்பந்தம் இல்லாமல் இருக்கும் நிலையே நிர்மல ஸுஷுப்தி. சிவனுடைய ஞானத்தை அறிந்து

அதில் திளைத்து சாந்தமாய் மௌனமாக இருக்கும் நிலை நிர்மல துர்யாவஸ்தையாகும். இதில் ஆனந்தத்தைத் தவிர வேறு எந்த வித அறிவும் இல்லை. நிர்மல துர்யாதீதாவஸ்தையில் ஸர்வஜ்ஞத்வம் (सर्वज्ञत्वम्) முதலிய குணங்களோடு ஷடத்வாதீதனாய் (மந்த்ர, பத, வர்ண, தத்வ, புவன, கலா) ஜீவாத்மா சிவ ஸமானமாக நிற்கிறான். அப்பொழுதுள்ள அவன் நிலை ஆட்டப்படாத ஊஞ்சல் போலவும், மரத்தில் செய்த பொம்மை போலவும், காற்று வீசாத சமயத்தில் எரியும் தீபம் போலவும், சித்தம் சலனமற்று இருக்கும். இவ்வாறு இந்த முதல் செய்யுளில் தத்வ ரூபம், தத்வ தர்சனம், தத்வ சுத்தி ஆகிய மூன்று வித நிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

செய்யுள் 2: இச்செய்யுளில் ஆத்ம ரூபம், ஆத்ம தர்சனம், ஆத்ம சுத்தி விளக்கப்படுகிறது.

ஆசார்யனாய் வந்த சிவபெருமானின் அருளால், ஆத்மாவையும் ஆத்மாவோடு பிணைக்கப்பட்ட தத்வங்களையும் விகாரங்களையும் வேறுபடுத்தி, தன்னோடு சகஜமாக இருக்கும் (உடன் உண்டான) ஆணவத்தையும் நீக்கப் பெற்று, தன் அறிவால் அறியும் திறன் கொண்டு, அறிவிற்கெல்லாம் அறிவாக நிற்கும் சிவசக்தி ரூபத்தை அறிவதே ஆத்ம ரூபமாகும்.

இந்த ஆத்மா - சர்யை, க்ரியை, ஞானம், யோகம் முதலியவைகளில் ஈடுபட்டு ஞானத்தினால் உணரப்படும் உணர்வே ஆத்ம தர்சனமாகும்.

பாச ஞானம் நீக்கப் பெற்ற ஆத்மா பதியாகிய சிவன் திருவடியைப் பற்றி மறுபடி பாச சம்பந்தம் பெற்று பிறப்பு இறப்புக்களில் உழலாமல் சிவத்தோடே பிரியாது நிற்கும் நிலையே ஆத்ம சுத்தியாகும்.

மனித சரீரத்தில் நிர்மல - ஊர்த்வாவஸ்தையில் ப்ரஹ்மரந்த்ரத்திற்கு (रन्ध्रम्) (உச்சிக்குழி) அப்பால் சிவத்துடன் ஆத்மாவை நிறுத்துவது ஆத்ம சுத்தி நிலை.

செய்யுள் 3: இச்செய்யுளில் நூலாசிரியர் சிவ ரூபத்தை விளக்கி இருக்கின்றார்.

'ஸர்வம் சிவமயம் ஜகத்' (सर्वम् शिवमयम् जगत्) என்று பார்க்குமிடமெல்லாம் சிவத்தையும் கண்டு, சிவத்தினுடைய

இச்சா- ஞான- க்ரியா சக்திகளால் மாயா தத்வங்கள் நிலை கொண்டு பஞ்ச க்ருதயம் (ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுஹ்ரஹம்) உண்டாகிறது. ஜீவனுக்கு மலபரிபாகம் நடந்து சக்தி நிபாதத்தினால் தன்னை மறந்த நிலையில், ஜீவனுக்கு குருவாக வந்து சிவன் அருள் புரிகிறார். ஜீவன் தனது சரீரம், அவயவங்கள் முதலியவைகளால் செய்யும் கார்யங்கள் அனைத்தையும் அவனுடைய செயலாக நினைத்து இந்நிலைக்குக் காரணமான குருவை சிவபெருமானாக காண்பதே சிவரூபம்.

செய்யுள் 4: இதில் சிவனுடைய உண்மை தர்சனம் சொல்லப்படுகிறது.

தான், தனது என்ற அஹங்கார மமகாரமற்ற நிலையில் ஆசார்யனின் அருள் பெறுவதே சிவரூபம். தன்னைத் தாக்கிய தத்வ விஷயங்களை உலகில் நோக்குமிடமெல்லாம் கண்டு களிப்பதை சிவன் அருளாலே என்று இருத்தலே, சிவனது திருமுக மண்டலம். சிவனுடைய அனுக்ரஹத்தால் தனது என்னும்படியான முயற்சியின் செயல் தோன்றாமல் பரவசமாய் இருக்கும் தன்மையே திருமுடி. இதுவே சத்யம் என்று அறிந்து, இது தவிர வேறு பொருள் இல்லை என்று தெளித்து நிர்விகல்பகஞானம் ஏற்பட்டு நிற்பதே சிவ தர்சனமாகும். அதாவது சிவனை உள்ளபடி சத்யமாகப் பெற்ற தர்சனமே சிவ தர்சனமாகும்.

செய்யுள் 5: இது சிவயோகம் பற்றியது.

தான் தனது சரீர இந்த்ரியங்களைக் கொண்டு கண்டது, செய்தது யாவும் முன் செய்த கர்மவினைப் பயனாகவே என்றும், ஆத்மாவிற்கும் இதற்கும் தொடர்பில்லை என்றும் தெரிந்து கொள்வது. சுத்தமான ஆத்மாவிற்கு கர்ம பாச நீக்கத்திற்காக இந்த சரீரம், அவயவங்கள், புவனங்கள், இவற்றின் போகங்கள் சிவன் தந்தவை என்று உணர்ந்து, அந்த ஞானத்தோடு தான் செய்யும் செயல்களை சிவார்ப்பணம் செய்து, ஆத்மாவான தன்னையும் அவனுக்கே அர்ப்பணித்து அந்த த்யானத்தில் நிற்பதுவே சிவயோகமாகும்.

செய்யுள் 6: இது சிவபோகம் என்பதை விளக்குகிறது.

இந்த சிவபோகம் பத்தாவது கார்யமாகும். சிவயோகத்திற்கு முன்பு எவைகளைப் பார்க்கிறோமோ அங்கங்கே அதுவதுவாய்க் கண்டு ஆத்மா தனித்து நின்று அவைகளில் வேற்றுமையைக் காண்பது போல் இல்லாமல், எங்கும் வ்யாபகமாய் இருக்கும் ஞேய (ज्ञेय) வடிவான சிவனடியில் இரண்டறக் கலந்திருப்பதே சிவபோகமாகும். இந்நிலையை சுத்தாத்வைத மூர்த்தி என்பர். இவ்வாறு சிவாகம முறைப்படி தச கார்யங்கள் விளக்கப்பட்டுள்ளன.

சிவ தீக்ஷையில் ஜீவனுக்கு மந்த்ர, பத, வர்ண, புவன, தத்வ, கலா வழியாக சுத்தி செய்து, சிவானுபூதி பெறுவதற்கு சிவன் ஆசார்ய ரூபமாய் வருகிறான். இவ்வாறு தச கார்ய நிகழ்ச்சியான சிவ தீக்ஷயே சிவன் கோயில்களில் பத்து நாட்கள் நடத்தப்பெறும் மிகப் பெரும் விழாவான ப்ரஹ்மோத்சவத்தில் கொடியேற்றம் முதல் கொடி இறக்குவதற்கு முன் தீர்த்தவாரி எனப்படும் அவப்ருத ஸ்நானம் வரை யாவரும் பங்கு பெற்று உய்வதற்கு நடத்தப் படுகிறது.

நிவ்ருத்யாதி கலைகளில் தத்வங்களையும் தத்வங்களில் புவனங்களையும் புவனங்களில் ஐம்பத்தொன்று அக்ஷரங்களிலும் (அ- காராதி க்ஷ - காரம் வரை) அக்ஷரங்களை பத - மந்த்ரங்களிலும் மந்த்ரங்களை 11 ஸம்ஹிதைகளிலும் அவைகளை ஸதாசிவ ஸ்வரூபமாயும் அதனின்றும் ஆத்ம பரிசுத்தி வரையில் செய்வித்து சிவயோக சிவ போகங்களை ஆத்மா அனுபவிக்க இந்த ப்ரஹ்மோத்ஸவம் வழி செய்கிறது.

முதல்நாள் விழா: மரத்தடி சேவை. உயிர்களின் ஸ்தூல தேக நீக்கம் பெறுவது. இதில் ஸ்ருஷ்டி க்ருத்யம் இணைக்கப் பெற்று ஜீவன்கள் உய்வதற்கு வழியைத் தேடும் நிலையில் நிவ்ருத்தி கலை சம்பந்தப்படுகிறது.

இரண்டாம் நாள் விழா: ஸூர்ய சந்த்ர ப்ரபை வாகனங்கள். இதில் கால தத்வம் குறிக்கப்படுகிறது. மேலும் ஸ்தூல தேஹத்திற்குக் காரணமான ஸூக்ஷ்ம சரீரம் அதாவது புர்யஷ்டகதேஹம் நீங்குவது. ஸ்தூலமான இவ்வுலகப் பொருள்களில் அநித்யத்வமும் ஆனால் படைக்கப்பட்ட

உலகத்தின் காப்பாற்றும் கார்யமும் உச்வாச நிச்வாசங்களாகிய ப்ராண தேஹ க்ருத்யங்களும் ஸூசிக்கப் படுகின்றன.

மூன்றாம் நாள் விழா: பூத வாகனம், அதிகார நந்தி, ஸிம்ஹம் முதலிய வாகனங்கள்.

ஆகாம்யம், ஸஞ்சிதம், ப்ராரப்தம் என்று ஒவ்வொரு பிறவியிலும் மனம், வாக், காயம் இவைகளின் செயல்களால் ஏற்படக்கூடிய மூன்று வினைகள்; ஸந்தேகம், விபரீதம், மயக்கம் என்று மூன்று வித புத்தியின் தன்மைகள்; ஸத்வ, ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்கள்: சித்தம், புத்தி, அஹங்காரம் என்ற கரணங்கள் – இவைகளால் ஏற்படும் காமக்ரோதாதி விபரீத விகாரங்கள் நீங்குவதற்கு அனுகூலமாகும்படி வித்யா கலையுடன் சேர்ந்ததாகும். இங்கு ஸம்ஹார கார்யம் ஸூசிக்கப்படுகிறது.

நான்காம் நாள் விழா: சேஷ வாகனம். அன்று திரோதான க்ருத்யம் ஸூசிக்கப்படுகிறது. அந்தஹ்கரண நீக்கம், அண்டஜம் முதலான பிறப்புகள் நான்கும் நீங்குவது,. மனித உடலில் குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்பும் முயற்சி. பகவான் ஜீவன்களை தத்தம் புண்ய பாப கர்மாக்களுக்குத் தகுந்தவாறு சுக துக்கங்களை அனுபவிக்கச் செய்கிறார்.

ஐந்தாம் நாள் விழா: ரிஷப வாகனம். அனுக்ரஹக்ருத்யம்; ஜாக்ரத், ஸ்வப்னம் முதலிய ஐந்து அவஸ்தைகளையும் ஆணவம், கர்மா, மாயை முதலிய தடைகளையும் நீக்க விளக்கம் பெறும் நாள்.

ஆறாம் நாள் விழா: யானை வாகனம். உட்பகைகளும், ஆறு அத்வாக்களும், ப்ரஹ்மா, விஷ்ணு முதலான மூர்த்திகளின் பதவிகளும் நீங்கப்பெறும் கருத்தை விளக்கும் நாள். இது லயக்ருத்யத்தில் ஸ்ருஷ்டியை செய்யும் தன்மையைக் காட்டுகிறது. யானை வாகனம் பிண்டாகாரமான அதாவது நிர்விசேஷமான ஒரு ஸ்ருஷ்டியைக் குறிக்கிறது.

ஏழாம் நாள் விழா: ரதோத்சவம். தேவ, மநுஷ்யாதி ஏழு வகைப் படைப்புகளும், வித்யா தத்வம், காலகாலம் முதலிய ஏழு தன்மைகளும், மாயாமலம், அஞ்ஞானம் முதலியவை பொய் என்று உணர்ந்து உண்மையைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாக்கும் தினம்; ஸம்ஹாரத்தில் ஸ்திதி க்ருத்யம்.

எட்டாம் நாள் விழா: இறைவனுக்கு உடைய எட்டு குணங்களையும் ஆத்மா பெற்று உய்தல்; நெருப்பு இரும்பை தன் குணத்திற்கு கொண்டு வருவது போல் ஆத்மாவும் இறைவடைதல். பஞ்சாக்ஷரத்தின் பொருளை உணர்ந்து கொண்டு த்யானித்தல். வாஸனாமலம் நீங்கி சிவத்தினுடைய தன்மையை அடையும் நிலை அன்று குதிரை வாகனம்; சில இடங்களில் இராவணேச்வரன். ஜீவன் இந்த்ரிய நிக்ரஹம் பெற்று ஈச்வரனை அடைய வேண்டி அதற்குரிய கார்யங்களை மேற்கொள்ளுதல். திரோபாவ நீக்கம் கார்யம்.

ஒன்பதாம் நாள் விழா: பிக்ஷாடனர். அதிகார சிவனாகிய ஸ்ரீ கண்ட ருத்ரனை அடைந்து, சரீரப் பற்றை விட்டு முக்தியையும் சிவ யோகத்தையும் பெறுதல். இந்நிலையில் லயசிவத்தன்மை பெற்று மலமாயை கார்யங்களை விடுத்து, லய முக்தியை அடைதல். பிக்ஷாடன உருவில் சிவன் முற்றும் துறந்த நிலையைக் காட்டினாலும், திரோதான க்ருத்யத்தையே, அதாவது உலகப் பொருட்களில் ஸூக்ஷ்ம தத்வங்களை மறைத்து விடுகிறான். இது ஸத்கார்யத்தில் லயம்.

பத்தாம் நாள் விழா: தீர்த்தவாரி அஸ்த்ரராஜனாகிய சூலத்துடன் நீரில் மூழ்குவது, ஜீவன் சிவபோகத்தை அனுபவிக்கும் நிலையைக் குறிக்கும். சிவ தீக்ஷை பெறும் போது, இந்நிலையை ஆசார்யாபிஷேகம் என்பர். இரவு கொடி இறக்கிவிட்டு, தக்க ஸன்மானங்களுடன் கோவில் மரியாதையுடன், உத்ஸவ தீக்ஷை செய்து கொண்ட சிவாச்சார்யரை, அவரது இருப்பிடம் வரை அழைத்துச் சென்று மரியாதை செய்வதுடன், உத்ஸவம் முடிவு பெறும். இது அனுக்ரஹக்ருத்யமாகும்.

இவ்வாறு உண்மை, அதாவது தத்வம் எது என்பதையும் அத்தத்வத்தை அடைய ஜீவாத்மாக்கள் எவைகளைக் கற்று எவ்வழி நடக்க வேண்டும் என்பதையும், ஆறு செய்யுட்களில் உண்மை நெறி விளக்கம் விரிவாகக் கூறுகின்றது.

சிவாகமங்களின் சிறப்பு



சிவநெறிச்செம்மல், சிவாகமகலாநிதி
டாக்டர் சிவஸ்ரீ. K. பிச்சை சிவாசார்யார்,
ஸ்தாபகர், சிவநெறிக் கழகம்,
பிள்ளையார்பட்டி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவாகமங்களின் சிறப்பு

சிவநெறிச்செம்மல், சிவாகமகலாநிதி
டாக்டர் சிவஸ்ரீ. K. பிச்சை சிவாசார்யார்,
ஸ்தாபகர், சிவநெறிக் கழகம்,
பிள்ளையார்பட்டி.

உலகின் பல்வேறு வகையான மத அமைப்புகளும் அவற்றுக்கான வழிபாட்டு முறைகளும் நடைமுறையில் இருந்துவருகின்றன. அவற்றில் காலத்தால் அளவிட முடியாததாகவும் தெள்ளிய தத்துவக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகவும் லிங்க வழிபாடு இருக்கிறது. பரந்து விரிந்த நம் பாரததேசத்திலும், ஆப்கானிஸ்தான், கம்போடியா, உள்ளிட்ட தேசங்களிலும் லிங்கத்தின் படிமங்கள் இன்றும் காணக்கிடக்கின்றன. சிவலிங்க வழிபாடு தென்தமிழகத்தில் சிறப்பான ஒன்றாக அமைந்துள்ளதை, வானளாவிய கோபுரங்களும், திருமதில்களும் அழகிய வேலைபாடுடைய சிற்பங்களும் கொண்டுள்ள திருக்கோயில்கள், இன்றளவும் பறைசாற்றுகின்றன.

சைவாகமங்கள் என்று சொல்லப்படும் சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆலயங்களில் சிவவழிபாடு நடைபெற்று வருகிறது.

சிவபெருமானால் சொல்லப்பட்டு உமையால் கேட்கப்பட்டு சிவபக்தர்களால் விரும்பி கடைபிடிக்கப்பட்டு வருவது சிவாகமம் ஆகும். பரம கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் பக்குவ ஆன்மாக்களுக்கு ஸாலோக, ஸாமீப, ஸாரூப, ஸாயுஜ்ய முக்தியைக் கொடுக்கும் பொருட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பாதங்களுடன் கூடிய 28 சிவாகமங்களை வழங்கி அருளினார். உயிர், உணர்த்தினாலன்றி உணரமாட்டா. அறிவிக்க அறியும்

இயல்புடையதாகலின் இறைவன் தானே இவற்றை அருளிச் செய்தான். சிவாகமங்கள் இறைவனால் வழங்கப்பட்டவை என்பது இவற்றின் தலையாய சிறப்பாகும். மேலும் நகர அமைப்பு, கட்டிடக்கலை, கற்சிற்பக்கலை, உலோக சிற்பக்கலை, ஓவியம், இசை, நாட்டியம், மனித ஒழுக்கம், நடைமுறை வாழ்க்கை போன்ற வாழ்க்கை சார்ந்த அனைத்துத் துறைகளையும் வேறு எந்த நூல்களிலும் காணமுடியாத வகையில் ஒருங்கே கூறுவது சிவாகமத்தின் தனிச்சிறப்பு ஆகும். சிவாகமங்களின் சிறப்பைத் திருமுறைகள் நன்கு உணர்த்துகின்றன.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்'

'இங்கு நாத நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால்'

'வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல்'

'ஆகமமாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'

போன்ற திருவாக்குகளால் நாம் சிவாகமங்களின் பெருமையை நன்கு உணர முடிகிறது.

சிவாகமங்கள் 28 இருக்கின்றன. அவற்றுள், ஸதாசிவமூர்த்திக்கு காமிகம் திருவடிகளாகவும், யோகஜம் கணைக்கால்களாகவும், சிந்த்யம் திருவடி விரல்களாகவும், காரணம் கெண்டைக்கால்களாகவும், அஜிதம் முழந்தாள் களாகவும், தீப்தம் தொடைகளாகவும், சூக்ஷ்மம் குஹ்யமாகவும், ஸஹஸ்ரம் இடுப்பாகவும், அம்சுமான், முதுகாகவும், சுப்ரபேதம் கொப்பூழாகவும், விஜயம் வயிறாகவும், நிச்வாஸம் ஹ்ருதயமாகவும், ஸ்வாயம்புவம் ஸ்தநங்களாகவும், ஆக்நேயம் திருக்கண்களாகவும், வீரம் கழுத்தாகவும், ரௌரவம் செவிகளாகவும், மகுடம் கிரீடமாகவும், விமலம் திருக்கரங்-களாகவும், சந்த்ரக்ஞானம் மார்பாகவும், முகபிம்பம் திருமுகமாகவும், லலிதம் கன்னங்களாகவும், சித்தம் நெற்றி-யாகவும், சந்தானம் குண்டலமாகவும், சார்வோக்தம் யஜ்ஞோபவீதமாகவும், பாரமேசம் ஆரமாகவும், கிரணம் இரத்தினாபரணமாகவும். வாதுளம் பரிவட்டமாகவும், காலோத்தரம் முதலிய உபாகமங்கள் பரிமளத் திரவியங்-களாகவும் புஷ்பங்களாகவும், ஞானபாதமாகிய ஸித்தாந்தம்

நைவேத்யமாகவும் த்யானிக்கப்படுவதை காமிகாகம தந்த்ராவதாரம் விளக்குகிறது.

இறைவன் சிவாகம வடிவாகவே விளங்குகிறான் என்பது நமக்கு நன்கு புலனாகிறது. இந்த ஸதாசிவ ஸ்வரூபமான இருபத்தெட்டு ஆகமங்களும் சிந்தாமணியைப்போல நினைத்தவர்கட்கு நினைத்தவண்ணம் பலன்களைத் தரும் என்று 'சிந்தாமணிரிவ' என்னும் ஆகம வாக்கியம் இயம்புகிறது.

தமிழகத்தில் நாம் காணும் திருக்கோயில்களின் அமைப்பும் பூஜைமுறைகளும் இடத்துக்கு இடம் வேறுபடக் காண்கிறோம். இதற்குக் காரணம், ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதே ஆகும். எனினும் ஒரு ஆகமத்தில் கூறப்படாததை இன்னொரு ஆகமத்தில் இருந்து எடுத்துச் செய்யலாம் என்னும் விதியும் உள்ளது.

இனி நாம் முதலில் குறிப்பிட்டுள்ளபடி சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பிரிவுகளின் அடிப்படையில் ஆகமங்களைப் பற்றிச் சிந்திக்கலாம்.

சரியை எனும் பகுதி சமய வழிபாட்டின் முதல்நிலையாகப் போற்றப்படுகிறது. திருக்கோயில் அலகிடுதல், மெழுகுதல், பூமாலைதொடுத்தல், திருநந்தவனம் அமைத்தல் என சரீரத்தால் செய்யப்படும் எல்லாப் பணிகளையும் இந்த சரியாபாதம் விளங்குகிறது. மேலும் தீக்ஷாவிதி, சைவர்களுக்குரிய 16 கிரியைகள், பித்ரு யக்ஞம் போன்ற ஆசாரங்களையும் இந்த பாதம் விளக்குகிறது.

கிரியை எனும் பகுதி மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. கோயில் அமைப்பது முதல் ப்ரதிஷ்டை வரை
2. ப்ரதிஷ்டை முதல் உத்ஸவம் வரை
3. உத்ஸவம் முதல் ப்ராயச்சித்தம் வரை

திருக்கோயில்களில் நாம் காணும் பாதபந்தம், பத்மபந்தம், அர்த்தமண்டபம், கருவறை விமானம் போன்ற அமைப்புகளுடன் கூடிய இந்தக்கட்டிடக்கலை முழுவதும் சிவாகமத்தின் வழி வந்ததுதான். மேலும் பல சிற்ப நூல்களுக்கும் கல் மற்றும்

உலோகத்திருமேனி அமைப்புகளுக்கும் அடிப்படையான விஷயங்கள் மூலாகமத்தில்தான் உள்ளன.

மஹோத்ஸவம் என்னும் திருவிழாவில் கொடியேற்றம் முதல் தீர்த்தம் கொடுப்பது வரையிலான க்ரியைகள் இறைவனின் படைத்தல் முதலிய ஐந்தொழில்களை விளக்குவதாக அமைந்துள்ளது.

சிவாகமங்களின் யோகபாதத்தில் இயமம் முதல் ஸமாதி வரையிலான யோகமார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. மேலும் பூதசுத்தி, அந்தர்யாகம், போன்ற கிரியைகள் இந்த சிவாகமங்களிலேயே அமைந்துள்ளன. பூதசுத்தியில், மலமாயா பந்தங்களால் ஆன இந்த தேகத்தை ப்ராணாயாமம் முதலியவற்றால் சுத்தி செய்து, சகல நாடிகளிலும் அமிர்த தாரைகளைக் கொண்டு சரீரத்தை உள்ளும் புறமும் அபிஷேகம் செய்யப்பட்டதாக த்யானித்தல் விளக்கப்பட்டுள்ளது. அந்தர்யாகத்தில் இருதயத்தில் எட்டு இதழ் தாமரையில் இறைவனை வழிபட்டு நாபியில் உள்ள அக்னியில் இடை பிங்கலை என்னும் இருநாடிகளை 'சிருக்கு சிருவ'மாகக் கொண்டு விந்து ஸ்தானத்தில் இருக்கின்ற அமிர்தமயமான நெய்யினால் ஹோமம் செய்து புருவ மத்தியில் இறைவனை தியானம் செய்து சமாதியோகம் இயற்றவேண்டும் என இயம்புகிறது.

மூலாதாரம் முதல் ஸஹஸ்ராரம் வரையுள்ள ஸ்தானத்தில் விநாயகர் முதல் பரமசிவன் வரை தியானித்தல் அந்தர் மாத்ருகா ந்யாசம் எனப்படும். நிஷ்கள ரூபத்தைப் பற்றி உள்ள யோகம் நிராலம்பயோகம் என்றும் சகல, நிஷ்கள, ரூபத்தைப் பற்றி இயற்றப்படும் யோகம் சாலம்ப யோகம் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

ஞானபாதம், பதி, பசு, பாசம் பற்றிய உண்மைகளை விளக்கும் பகுதியாகும். இறைவன், உயிர், தளை என்னும் மூன்று பொருள்களே நித்தியப் பொருள்கள் என்றும் இவற்றில் தளைநீங்கி இறைவனிடம் உயிர் சேர்வதே முக்தி என்றும் விளக்கப்படுகிறது. மேலும் ஷடத்வா என்று சொல்லப்படும் மந்த்ரம், பதம், வர்ணம், புவனம், தத்வம், கலை என்னும்

ஆறுவழிகளையும், அவை செயல்படும் விதத்தையும் பற்றி விவரிக்கிறது. சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள முப்பொருள் உண்மைகளைக் கேட்டல், அதைப் பற்றி சிந்தித்தல், பின் தெளிதல் அதன்பிறகு இறைவனிடம் ஞானம் பெறல் என்ற நான்கு பகுப்புகளுடன் ஞானபாதம் விளங்குகிறது.

எனவே சைவாகம சிறப்பை உணர்ந்த நாம், மேலும் அவற்றைக் காப்பாற்றி, வரும் சந்ததியினருக்கும் அவற்றின் பயன்களை வழங்க எல்லாம் வல்ல கற்பகவிநாயகரை ப்ரார்த்திக்கிறோம்.

❀ ❀ ❀ ❀ ❀

மஹோத்ஸவம்

சிவாகமஞானபானு, சிவாகமச்செல்வர்
சிவஸ்ரீ சாளவ K. ராஜப்பா சிவாசார்யார்,
காஞ்சீபுரம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மஹோத்ஸவம்

சிவாகமஞானபானு, சிவாகமச்செல்வர்
சிவஸ்ரீ சாளவ K. ராஜப்பா சிவாசார்யார்,
காஞ்சீபுரம்.

---

1. "உத்ஸவம் என்பது (உத் - ஸவம்) உத் - சப்தபாஷிதம், ஸவம் - சிருஷ்டி, அதாவது சிருஷ்டி மார்க்கத்தைக் குறிப்பது. இதனை காரணாகம வசனம், தீர்த்த திவச திதி, நக்ஷத்ர லக்ஷணத்தாலுணர்க" என்கிறது மஹோத்ஸவ விதி, உத்ஸவம் என்னும் சொல் பஞ்ச க்ருத்யங்களில் ஒன்றான ஸ்ருஷ்டியைக் குறிக்கும் என்று இதனால் தெளிவாகிறது.

2. பரமேச்வரனுடைய இருபத்து ஐந்து மூர்த்தங்களில் ஒன்றைக் கொண்டோ அல்லது இதர மூர்த்தங்களைக் கொண்டோ உத்ஸவம் செய்யலாம். திருவிழாவின் வழியே இறைவன் தன் பக்தர்களுக்கு சாம்பவீ தீக்ஷை செய்து வைக்கிறான். (உத்தரகாரண ஆகமம், 148-ஆம் பக்கம்). மண்டலம், கும்பம், அக்நி, ஆசார்யன், சிஷ்யன் என்ற ஐந்தும் தீக்ஷையில் முக்கியம் (பஞ்சாதிகரணம்). உத்ஸவ யாகசாலையில் மண்டலமும் கும்பமும் ப்ரதிஷ்டையாகி உள்ளன. யாகசாலைக்குள் தீக்ஷை ஆகும் வரை சிஷ்யனுக்குப் ப்ரவேசம் கிடையாது. அக்நி கார்யம் செய்பவர் ஆசார்யர்: அவர் வ்ரதம் காத்து இருப்பவர். உத்ஸவத்தின் போது, யாகசாலையிலிருந்து ஆசார்யரோடு புறப்பாடாகும் ஸோமாஸ்கந்தர் மூர்த்தத்திலேயே அக்நி உள்ளது. வெளியே உள்ள சிஷ்யர்கள் பலவிதம்: சிவதீக்ஷை ஆகாதோர், தீக்ஷை ஆனவர்கள், பாசத்தில் உழல்வோர், பற்றறுத்தோர் கடைபிடிக்க வேண்டிய ஆசாரங்களில் குறைவு உள்ளோர் என்றவாறாகப் பலர். மற்ற தீக்ஷா கார்யங்களில் யாகசாலை அக்நியில் வாகீச்வரரும் வாகீச்வரியும் எழுந்தருளியிருப்பர். உத்ஸவத்தில், ஸோமாஸ்கந்த மூர்த்தத்தில் உள்ள சம்புவே வாகீச்வரர்: அதிலுள்ள அம்பாளான

போகசக்தியே வாகீச்வரி; அதிலுள்ள ஸ்கந்தரே சிவாக்நி: அவரே ஞாநாக்நி. இவ்வாறாக, தீக்ஷைக்குரிய யாகசாலைச் சூழல், ஸோமாஸ்கந்தராக சிஷ்யர்களை நாடி ஆசார்யரையும் உடன்கொண்டு வீதிஉலா வருகின்றார்.

3. ஸோமாஸ்கந்தரைத் தவிர மற்ற மூர்த்தங்களில் இந்த சிவாக்நிபாவமான ஸ்கந்தர் கிடையாது: அதனால் மற்ற மூர்த்தங்களை விட ஸோமாஸ்கந்த மூர்த்தமே உத்ஸவங்களுக்குச் சிறந்தது. ஸோமாஸ்கந்தர் இல்லாத ஆலயங்களில் நடேசர், சந்திரசேகரர், கல்யாணஸுந்தரர், உமாமஹேச்வரர் போன்ற மூர்த்தங்களை மத்யம பக்ஷமாக உபயோகிக்கலாம்.

4. கொடியேற்றி (ஐந்து நாட்களுக்கு மேல்) விரிவாகச் செய்யப்படும் உத்ஸவங்க்ள் மஹோத்ஸவங்கள் எனப்படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் விரிவான ஒரு மஹோத்ஸவம் ப்ரஹ்மோத்ஸவம் எனப்படுகிறது. இறைவன் அந்த ஆலயத்துக்கு வந்துற்ற திருநாளின், அதாவது முதன் முதலாக அந்த ஆலயத்தில் ப்ரதிஷ்டைகள் ஆகிக் கும்பாபிஷேகம் ஆன நாளின், ஆண்டுவிழாவாக ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவதாக ஐதீகம்.

5. உத்ஸவங்கள் ஆறு வகைப்படும். பைத்ருகம் பன்னிரண்டு நாட்கள் நிகழும் உத்ஸவம். ஸௌக்யம் ஒன்பது நாட்கள் நிகழும் உத்ஸவம். ஸ்ரீகரம் ஏழு நாட்கள் நிகழும் உத்ஸவம். பார்த்திவம் ஐந்து நாட்கள் நிகழும் உத்ஸவம். ஸாத்விகம் மூன்று நாட்கள் நிகழும் உத்ஸவம். சைவம் ஒரு நாள் நிகழும் உத்ஸவம்.

6. யோகஜப்படி, உத்ஸவங்கள் ஒன்பது வகைபடும். கந்யஸ - த்ரயம் : சைவம் – 1 நாள், கௌணம் – 3 நாள், பௌதிகம் - 5 நாள், மத்யம – த்ரயம் : பவனம் – 7 நாள், தைவிகம் – 9 நாள், பைத்ரம் – 12 நாள், உத்தமத்ரயம்:கௌமாரம் – 13 நாள், சாவித்ரம் – 15 நாள், சாந்த்ரம் – 17 நாள் என ஒன்பது.

7. தந்த்ரசாரம், முன் கூறிய 9 விதத்தோடு பின் வரும் மூன்றைச் சேர்த்து 12 வித உத்ஸவங்கள் கூறுகின்றது: புக்தி - 11 நாள், சௌரம் – 21 நாள், சாவரம் 21க்கும் மேற்பட்ட நாட்கள் (மஹோத்ஸவ விதியிலிருந்து).

8. காமிக ஆகமப்படி, உத்ஸவம் என்பது, வ்ருஷயாகம் தொடங்கி பக்தோத்ஸவம் வரை பதினெட்டு அங்கங்களைக் கொண்டது. 1. வ்ருஷ யாகம். 2. த்வஜ ஆரோஹணம், 3. ப்ருஹத் தாளம், 4. அங்குரம், 5. யாக சாலை, 6. அஸ்த்ர யாகம், 7. பலிதானம், 8. யானக்ரமம், 9. பரிவேஷம், 10. நீராஜனம், 11. கௌதுகம், 12. தீர்த்த ஸங்க்ரஹணம், 13. சூர்ணோத்ஸவம், 14. தீர்த்தவாரி, 15. த்வஜ அவரோஹணம், 16. ஸ்நபநம் 17. விவாஹம், 18. பக்தோத்ஸவம் இவற்றை அஷ்டாதசக் கிரியைகள் என்பர்.

9. வீர தந்த்ரம் இருபது கிரியைகள் எனக் கூறுகின்றது. இதில் 4. பலிதானம், 9. தீர்த்த ஸங்க்ரஹணம், 7. கௌதுகம், 8. யாகம், 9. உத்ஸவம் (யாகம்), 10. பரிவேஷணம். 11. ரதாரோஹணம், 12. ம்ருக யாத்திரை, 15. பூர்ணாஹுதி, 17. த்வஜ அவரோஹணம், 18. மௌன உத்ஸவம், 19. சண்டயாகம், 20. பக்தோத்ஸவம் எனவும், மற்றது முன் போலவும் கூறுகின்றது.

10. கற்சிலையாகச் செய்யப்படும் விக்ரஹங்கள், ஆதாரசிலை எனப்படும் பீடத்துடன் த்ரிபந்தனம் மற்றும் அஷ்டபந்தனத்தால் இணைக்கப்பட்டு, கருவறைகளில் மட்டும் நிரந்தரமாக இருப்பன. உலோகங்களில் செய்யப்படும் விக்ரஹங்கள் சலன விக்ரஹங்கள் எனப்படும். அவையே உத்ஸவத்திற்கு (உலாவுக்கு) உரியவை: அவை உத்ஸவ மூர்த்திகள் எனப்படுகின்றன. உத்ஸவங்களில், உத்ஸவ மூர்த்திகளின் திருவீதிஉலாவுக்கு முக்கிய இடம் உண்டு.

11. கொடி ஏற்றுவதிலிருந்து (த்வஜாரோஹணம்) கொடி இறக்குவது (த்வஜாவரோஹணம்) வரை செய்ய வேண்டி விதிக்கப்பட்டுள்ள கிரியைகளைச் செய்வது உத்ஸவம் எனப்படும். சில உத்ஸவக் கிரியைகளைக் கொடி ஏற்றாமல் கூட செய்ய வேண்டிய விதிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. கொடி யேற்றுதலைக் கட்டாயமாக முன்னிட்டுச் செய்யும் உத்ஸவத்திற்கே மஹோத்ஸவம் என்று பெயர். மஹோத்ஸவ விதிகள் உத்தர காமிகம் 6- ஆவது படலத்தில் மிக விரிவாகக் காணப்படுகின்றன.

12. மஹோத்ஸவத்தின் நிறைவு நாளன்று தீர்த்தவாரி நடைபெறும். அந்த மூஹூர்த்தத்தை முதலில் நிர்ணயம் செய்து

கொள்ள வேண்டும். அதற்கு முன்னோடியாக, உத்ஸவம் செய்ய தீர்மானித்துள்ள நாட்களுக்கு முன்பாகக் கொடி ஏற்றி மஹோத்ஸவம் தொடங்க வேண்டும். ஒரு நாள் முதல் 29 நாட்கள் அல்லது 36 நாட்கள் வரை கூட உத்ஸவம் நடத்தச் சொல்லி ஆகமக் குறிப்புகள் உள்ளன.

13. காமிகாகமம், ஸ்வாயம்புவம், தைவிகம், ஆர்ஷம், மானுஷம் ஆகிய நான்கு வகை லிங்கங்களுக்கு சிறப்பாகத் தீர்த்தவாரி செய்யவேண்டும் எனக் கூறுகிறது.

14. சிவனுக்கு எல்லா மாதத்திலும் ஆருத்ரா நக்ஷத்ரத்தை முடிவாகக் கொண்டு உத்ஸவம் செய்யலாம். சித்திரையில் சித்ரா நக்ஷத்ரம், வைகாசியில் விசாக நக்ஷத்ரம் என்றவாறு அந்தந்த மாத நக்ஷத்ரத்தை முடிவாகக் கொண்டு உத்ஸவம் செய்யலாம். பௌர்ணமியை முடிவாக வைத்து உத்ஸவம் செய்யலாம். மாசி மாதத்தில் ஷஷ்டி முடிவாக அமையுமாறு உத்ஸவம் செய்யலாம். அரசனின் பிறந்த நாள், நினைவு நாள், ராஜ்யாபிஷேக நக்ஷத்ரம் போன்றவற்றைக் குறியாகக் கொண்டு உத்ஸவம் செய்யலாம். (பூர்வ காரண ஆகமத்திலிருந்து)

15. ஒரே மாதத்தில் இரண்டு முறை நக்ஷத்ரம் ஸம்பவிக்குமானால், பின்னால் வருவதை உத்ஸவத்திற்காக ஏற்றுக் கொள்வது உத்தமம் என்ற குறிப்பு குமாரதந்த்ரத்தில் (13 - ஆவது படலம், 19 - ஆவது ச்லோகம்) காணப்படுகிறது. நதிக்கரை, ஸமுத்ரக் கரை ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களில் திதியை முக்யமாகவும், மலை போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களில் நக்ஷத்ரத்தை ப்ரதானமாகவும் ஏற்று உத்ஸவம் செய்ய வேண்டும் (குமார தந்த்ரம் 13.22)

16. ஒரே ஒரு த்வஜஸ்தம்பமாவது, நிறுவி, அதில் கொடியேற்றி உத்ஸவம் செய்ய வேண்டும். அதிக பக்ஷமாக 9 த்வஜஸ்தம்பங்களில் கொடியேற்றுவது ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அவற்றின் பலாபலன்களாவன: ஒரு த்வஜம் ஏற்றிச் செய்யும் உத்ஸவங்களால் கர்ப்பாதானம், புர்யஷ்டகம் ஆகியவை ஸித்திக்கும். இரண்டு த்வஜங்கள் – மாயாமலக் கூட்டுறவு, மூன்று த்வஜங்கள் பல ப்ராப்தி புசிப்பு, நான்கு த்வஜங்கள் – பஞ்சேந்த்ரிய வசமாதல், ஜல ஸம்ருத்தி, ஆறு த்வஜங்கள்– ராஜ த்வேஷ நிவாரணம். ஏழு த்வஜங்கள் –

ஸ்தல தாது பல வ்ருத்தி, எட்டு த்வஜங்கள் - தேஹ சம்பந்த சஞ்சயம், அஷ்ட மூர்த்தி சரீரம், ஜடரூபவிநாசநம், ஒன்பது த்வஜங்கள் நவ ஜன்ம விநாசநம்.

17. கொடி மரம் (த்வஜஸ்தம்பம்) குறித்த விவரங்கள் ஆகமங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன. நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள த்வஜஸ்தம்பம், பெரும்பாலும் நந்திக்குப் பின்னால் இடம் பெறும். இதில் நிகழும் கொடியேற்றும் வைபவமே த்வஜாரோஹணம் எனப்படும். த்வஜஸ்தம்பம் இல்லாத ஆலயங்களில், மஹோத்ஸவத்திற்கென, தற்காலிகமாக வைப்பதானால், த்வஜஸ்தம்பம் வைக்கும் இடம் வ்ருஷபத்தின் முன்போ பின்போ, பலிபீடத்தின் முன்போ பின்போ, மஹா மண்டபத்திற்கு அருகிலோ இருக்கலாம் என்று ஆகமக் குறிப்பு காணப்படுகின்றது.

18. கொடிச் சீலையில், சிவனுக்கு உரிய அடையாளமான வ்ருஷபமும், அவரது சிறந்த படைக்கலமான சூலமும் இடம் பெறும். இவ்விரண்டும் அல்லாது, அஷ்ட மங்கலங்களும் இடம் பெறக்கூடும். திரைச் சீலைக்கு நயனோன்மீலனம் முதலாய கிரியைகளைச் செய்து கொடி ஏற்ற வேண்டும்.

19. சிவாச்சாரியார் த்வஜஸ்தம்பம் ஈறாக அங்குரார்ப்பணம் செய்து ரக்ஷாபந்தனம் செய்ய வேண்டும். உத்ஸவமூர்த்தியை அலங்கரித்து, வலமாக எடுத்து வந்து, த்வஜஸ்தம்பத்திற்கு முன் எழுந்தருளச் செய்தல் வேண்டும். த்வஜஸ்தம்ப வ்ருஷப தேவர் அருகே இரண்டு ஸ்தண்டிலங்கள் நிறுவி, வ்ருஷப கும்பத்தையும், வ்ருஷபக் கொடியையும் ஸ்தாபித்து, ஸம்ஸ்காரங்கள் செய்து பூஜிக்க வேண்டும்.

20. குண்டத்தில் ஹோமங்கள் செய்து, பூர்ணாஹுதி வெண்பொங்கல் நிவேதனம். பின்னர் த்வஜத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று வர வேண்டும் (உ.காமி. 6.31). த்வஜஸ்தம்பத்திற்கு அடியில் சிறப்பான வேதிகை அமைத்து பூஜைகள் செய்ய வேண்டும். பின்னர் ஸமஸ்த தேவதா ஆவாஹனம் எனப்படும் கிரியையினைச் செய்து கொடி மரத்தில் உள்ள கயிற்றில் கொடிச்சீலையைப் பிணைக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியில் தேவர்கள் அவைவரும் த்வஜஸ்தம்பத்தில் திருவிழா நிறைவுறும் நாள் வரை ஸாந்நித்யம் கொண்டருளுமாறு

வேண்டப்படுகின்றனர். பின்னர், வாத்ய கோஷங்களுடன் கொடியேற்ற வேண்டும். கொடி ஏற்றும் போது அது செல்லும் திசையை அனுஸரித்து அதற்குப் பலாபலன்கள் கண்டறிய விரிவான குறிப்புகள் உத்தர காமிகத்தில் காணப்படுகின்றன.

21. கொடி ஏறிய பின், கொடிக்கயிற்றை வலமாக த்வஜஸ்தம்பத்தைச் சுற்றிக் கட்டி, தர்ப்பையைச் சுற்றிலும் பரப்பிக் கட்டி அலங்கரிக்க வேண்டும்.

22. சைவ சித்தாந்த நூல்களும் மஹோத்ஸவங்கள் பற்றி விரிவாகப் பேசுகின்றன. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணத்து நல்லூர் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்" அவர்கள், தனது "சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம்" என்ற நூலில் மகோத்ஸவ விளக்கம் குறித்து எழுதுகையில், த்வஜாரோஹணம் குறித்து பின்வருமாறு விளக்குறார். "மகோத்ஸவ ஆரம்பதிலே கொடியேற்றல் வழக்கமாம். செங்கோலரசனின் சத்திக் குறியாகிய கொடி ஏறிய வழி, ஆங்கரசு செய்திருந்த கொடுங்கோன் மன்னன் வலியொழிந்து செயலிழந்து நீங்கலும், குடிகள் க்ஷேமத்தை அடைதலும், அனுபவ உண்மையேயாம். அதுபோல, மும்மல பந்தத்தால் பிறந்து இறந்து சுழன்று வருந்தும் ஆன்மாக்கள். உண்மையை நோக்கி அறிவுக்கு அறிவாய் நிற்கும் சிவத்தைப் பிரியாமல் குறித்து, தீக்ஷை விதிப்படியே சிவாயநம என்ற பஞ்சாக்ஷரத்தையும், ஓம்அம்உம் சிவாயநம என்னும் அஷ்டாக்ஷரத்தையும், ஓம் சிவாய நம என்ற ஷடக்ஷரத்தையும், ஓம் சிவாய என்ற சதுரக்ஷரத்தையும், விதிப்படி உச்சரித்துப் பின்னர் மந்திர சொரூபம் அறிந்து, பிஞ்செழுத்து எனும் 'வ' காரமாகிய பராசக்தியையும், பெருவெழுத்து என்னும் 'சி' காரமாகிய சிவத்தையும் இருதயத்திலே வைத்து தியானித்து, சங்கல்ப ஞானங்களிலே போகாமல் தன்னிடத்தில் அநாதியே தோன்றாமல் பொருந்தி இருக்கும் திருவருளிலே அறிவே தாரமாக நிறுத்த, பேசும் எழுத்தான பரைக்கொடி ஏறி, பேசா எழுத்தான சிவத்தை இரண்டறக் கலக்கச் செய்வதால், ஆணவ மல அரசு வலியிழந்து செயலிழந்து ஒடுங்க, ஆன்மா பேரானந்தப் பெருவாழ்வு அடையும். ஆகவே, மல நீக்கமும் முத்தியும் வருவதற்கு இம்முறையே திருவருளாகிய கொடி ஏற வேண்டும்

என்பதும், இல்லையேல் அவை அடைதல் கூடா என்பதும், அறிவுக்கும் நற்குறியாம். "உமாபதி சிவாச்சாரியார்" அருகிச் செய்துள்ள கொடிக்கவியிலும் இவ்வாறான கருத்தைக் காணலாம். இவ்வாறே, ஆறுமுக நாவலர் அவர்கள், பத்து நாள் தொடர்ச்சியாக நடைபெறும் மஹோத்ஸவங்களின் ஒவ்வொரு நாள் விழாவிற்குமான காரணத்தை சைவசித்தாந்த ரீதியாக விளக்குகின்றார்.

23. சூர்ணிகை முடித்து, கொடியேற்றுதலைப் பூர்த்தி செய்து, ஏற்கனவே பூஜித்துள்ள ஸ்நபனத்தின் ப்ரதானமான வ்ருஷகும்பத்தை த்வஜதண்டத்தின் அடி பாகத்திலும், எட்டு வித்யேச்வர கலசங்களை கிழக்கு முதல் ஈசானம் வரையிலும் அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த எட்டுக் கலசங்களில் வ்ருஷப ரூபமான உக்ஷாதிகளையோ அல்லது இந்த்ரன் முதலான அஷ்டதிக்பாலர்களையோ பூஜித்து, த்வஜதண்டத்தின் தளத்தில் அந்தந்த ஸ்தானத்தில் அபிஷேகம் செய்யவேண்டும். அந்தந்த ஆலய ஸம்ப்ரதாயப்படி உக்ஷாதிகளையோ, இந்த்ராதிகளையோ பூஜிக்கலாம்.

24. இரவில் பேரீதாடனம் உரிய முறைப்படி செய்யப்பட வேண்டும். பேரீதாடனத்தில், பேரியின் மத்ய பாகத்தில் ருத்ரனையும், வலது – இடது பாகங்களில் ப்ரம்மா - விஷ்ணுவையும், தோலில் ஸூர்ய - சந்த்ரர்களையும், கீலத்தில் ஸப்தமாதாக்கள் அல்லது ருத்ரர்கள் அல்லது நவக்ரஹங்களையும் பூஜிக்க வேண்டும். இந்த பேரீதாடனம் எனும் கிரியை, த்வஜாரோஹணம் நிகழப்போவதையும் (நிகழ்ந்துள்ளதையும்), அதற்கு தேவர்கள் எழுந்தருள (எழுந்தருளி) உள்ளமையையும் பறைசாற்றும் நிகழ்ச்சி.

25. 1. அங்குரார்ப்பணத்தை முதலாவதாகச் செய்து பின்னர் பேரீதாடனம், த்வஜாரோஹணம், 2. பேரீதாடனம் முதலாவதாகச் செய்து பின்னர் அங்குரார்ப்பணம், த்வஜாரோஹணம், 3. த்வஜாரோஹணத்தை முதலில் செய்த பின்னர் அங்குரார்ப்பணம், பேரீதாடனம் - என மூன்று விதமாகவும் உத்ஸவம் செய்யலாம் என்று ஆகமங்களில் சொல்லபட்டுள்ளது. த்வஜாரோஹணத்தின் நிறைவாக, குறிப்பிடப்பட்டுள்ள வேத மந்த்ரங்கள், ராகங்கள், பண்கள், தாளங்கள், வாத்யங்கள்

முதலியன இசைக்கப்பட வேண்டும். ந்ருத்தங்களும் நடைபெற வேண்டும்.

26. க்ரஹங்களின் பீடை நீங்கவும், சிறப்பான ஆரோக்யம் பெறவும், க்ராமங்களில் கொடியேற்றம் முன்னதாகவும், பட்டணங்களில் அங்குரார்ப்பணம் முன்னதாகவும், மங்கள கார்யங்களில் பேரீதாடனம் முன்னதாகவும் வைத்து உத்ஸவம் செய்ய வேண்டும் என்றொரு ஆகமக் குறிப்பு உள்ளது.

27. காமிகாகமப்படி ஒரு நாள் உத்ஸவம் சிவப்ரீதி, மூன்று நாள் உத்ஸவம் க்ராம ரக்ஷை, ஐந்து நாள் உத்ஸவம் பூத ரக்ஷை, ஏழு நாள் உத்ஸவம் தேவீ ப்ரீதி, ஒன்பது நாள் உத்ஸவம் லோக க்ஷேமம். பதினொரு நாள் உத்ஸவம் புத்தி அபிவ்ருத்தி. பன்னிரண்டு நாள் உத்ஸவம் தேவமானுஷ்ய ஸௌக்யத்திற்காக, பதிமூன்று நாள் உத்ஸவம் தேவ ஸாந்நித்யத்திற்காக. பதினைந்து நாள் உத்ஸவம் மானுஷ்ய ஸௌக்யத்திற்காக, பதினேழு நாள் உத்ஸவம் ஜன புஷ்டி, பத்தொன்பது நாள் உத்ஸவம் முமுக்ஷுகளுக்கு விமுக்திக்காக. இருபத்தொன்பது நாள் உத்ஸவம் ஸர்வ தேவதா ப்ரீதிக்காக.

28. ஸூக்ஷ்ம ஆகமப்படி உத்ஸவ தினங்கட்குப் பலன்: ஒரு நாள் உத்ஸவம் ராஜாவுக்கு வ்ருத்தி. மூன்று நாள் உத்ஸவம் சிவத்தை சந்தோஷிப்பிக்கும், ஐந்து நாள் உத்ஸவம் போகம். ஏழு நாள் உத்ஸவம் சிவ ப்ரியம். ஒன்பது நாள் உத்ஸவம் சாந்திகம். பதினொரு நாள் உத்ஸவம் புஷ்டி. பன்னிரண்டு நாள் உத்ஸவம் முக்தி. பதிமூன்று நாள் உத்ஸவம் ஸர்வ ஸித்தி. பதினைந்து நாள் உத்ஸவம் ஜனங்களுக்குச் சுகம். பதினேழு நாள் உத்ஸவம் புண்ய ப்ரதம். பத்தொன்பது நாள் உத்ஸவம் ஸர்வ பாப ஹரம். இருபத்தொரு நாள் உத்ஸவம் லோக ரக்ஷை.

29. காரண ஆகமப்படி உத்ஸவ தினங்கட்குப் பலன் : ஒரு நாள் உத்ஸவம் சிவ ப்ரீதி. மூன்று நாள் உத்ஸவம் க்ராம ரக்ஷை. ஐந்து நாள் உத்ஸவம் பூத ரக்ஷை. ஏழு நாள் உத்ஸவம் கிரிஜா ப்ரியம். ஒன்பது நாள் உத்ஸவம் லோக ரக்ஷை. பதினொரு நாள் உத்ஸவம் புத்தி. பன்னிரண்டு நாள் உத்ஸவம் ஸூரர்க்கும் ஸகலருக்கும் ப்ரீதி. பதிமூன்று நாள் உத்ஸவம் ஸாந்நித்யம்.

பதினைந்து நாள் உத்ஸவம் நரர்க்கு சௌக்யம். பதினேழு நாள் உத்ஸவம் ஜனங்களுக்கு புஷ்டி. பத்தொன்பது நாள் உத்ஸவம் முமுக்ஷுகளுக்கு விமுக்தி. இருபத்தொன்பது நாள் உத்ஸவம் ஸர்வ தேவதா ப்ரீதி.

30. சந்த்ரஜ்ஞாநோத்தரப்படி, அயனம், விஷ்ணுபதி, ஷடசீதி போன்ற புண்யகாலங்கள் மாஸ, பக்ஷ, திதி, நக்ஷத்ரங்கள் ஆகிய உத்ஸவங்களின் பலன்: அயனம், விஷ்ணுபதி, ஷடசீதி போன்ற புண்யகாலங்களில் செய்யும் உத்ஸவங்களுக்குப் புண்ய பலம். மாஸோத்ஸவங்களுக்குப் பலன்: ராஜ தோஷ, மாஸ தோஷங்கள் நிவர்த்தி. பௌர்ணமி உத்ஸவத்திற்குப் பலன்: ஸகல பாப நிவாரணம். நக்ஷத்ரங்களுக்குப் ப்ரதானமான வைத்துச் செய்யும் உத்ஸவங்களுக்குப் பலன்கள்: 1. க்ருத்திகை - சௌக்யம். 2. ரோஹிணி - அபம்ருத்யு தோஷ நிவர்த்தி. 3.ம்ருகசீர்ஷம் - தேஜஸ், திருவாதிரை - ஸகல ஸம்பத். 5. புனர் பூசம் - க்ஷத்ராதி ஸித்தி, 6. பூசம் - புஷ்டி, 7. ஆயில்யம் - நினைத்த வரம், 8.மகம் - சுஜந ச்ரேஷ்டம், 9. பூரம் - ஸௌபாக்யம், 10 - உத்திரம் - முக்கிய சீலம், 11. ஹஸ்தம் - சத் ச்ரேஷ்டம், 12. சித்திரை - ரூப லாவண்ய மனைவி, 13. ஸ்வாதி - வர்த்தக லாபம், 14. விசாகம் - விசேஷ காம பலன், 15. அனுஷம் - சக்ரவர்த்தி யோகம், 16. கேட்டை - குதிரை லாபம், 17. மூலம் - ஆரோக்யம், 18. பூராடம் - யசஸ், 19. உத்திராடம் - விசேஷ யசஸ், 20. திருவோணம் - சுக போகங்கள், 21. அவிட்டம் - விசேஷ தனம், 22. அபிஜித் - வேத வித்யை, 23. சதயம் - வைத்ய ஸித்தி. 24. பூரட்டாதி - அஜாவிகம், 25. உத்திரட்டாதி - பசு வ்ருத்தி, 26. ரேவதி - சுபம், 27. அச்விநி குதிரை வ்ருத்தி, 28. பரணி - ஆயுள் வ்ருத்தி. இந்த நக்ஷத்ரங்களில், வ்ரதம் போன்றவற்றை அனுஷ்டித்து, அபிஷேக, நைவேத்ய, அலங்கார, தூப தீப விசேஷங்களுடன் உத்ஸவமும் செய்க. இவ்வாறு ஸகல வர்ணஸ்தரும், பால - கௌமாராதிகளும், பேதை, பெதும்பையாதி ஸ்திரீகளும், விதவைகளும், மற்றுமுள்ளவர்களும் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு செய்பவர்கள் ருத்ரலோக ப்ராப்தியும், உத்பாதம், க்ரஹபீடை, வியாதி நிவாரணங்களும், ஆயுள், சுகம் முதலியவைகளும், ஒரு வர்ஷம் வரை விடாது செய்பவர்களுக்கு சத்புத்திர பேறும் அடைவர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவை அல்லாமல், மலை, வனம், ஆறு, குளம் முதலிய இடங்களுக்குச் செல்ல வேண்டிய உத்ஸவங்களும் உள்ளன. அவையவைக்குரிய பலாபலன்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

31. சந்த்ரஜ்ஞாநோத்தரப்படி, வார உத்ஸவ பலன்: 1. ஞாயிறு - ருத்ர பதவி, ஆரோக்யம், 2. திங்கள் - சௌக்யம், 3. செவ்வாய் - க்ராம லாபம், 4. புதன் - ஸர்வ காம்ய ஸித்தி, 5. வியாழன் - சாஸ்த்ராதி வித்யை, 6. வெள்ளி - விசேஷ செல்வம், 7. சனி - அபம்ருத்யு நாசம்.

32. வார பூஜைக்குரிய த்ரவ்யங்கள்:

கிழமை	புஷ்பம்	பத்ரம்	பூச்சு	நைவேத்யம்
ஞாயிறு	தாமரை	அறுகு	செஞ்சந்தனம்	பாயஸாந்நம்
திங்கள்	புன்னாகம்	வில்வம்	வெண்சந்தனம்	தயிர்சாதம்
செவ்வாய்	செந்தாமரை	தாதகீ	பச்சைக் கற்பூரம்	பயறுப் பொங்கல்
புதன்	பாடலீ	துளஸீ	குங்குமப்பூ	எலுமிச்சை பழசாதம்
வியாழன்	செண்பகம்	தாந்தம்	அகரு	குளாந்நம்
வெள்ளி	ஜாதிமல்லீ	மாதுளை இலை	க்ருஷ்ணாகரு	சுத்தாந்நம்
சனி	நீலோத்பலம்	விஷ்ணு க்ராந்தி	கஸ்தூரி	திலாந்நம்

33. உத்ஸவம் என்பது ஸ்ருஷ்டி க்ருத்யமாயினுங்கூட, அதிலேயே பஞ்ச க்ருத்யங்களும் சொல்லப்பட்டுள்ளன. சந்த்ரஜ் ஞாநோத்தரப்படி, உத்ஸவ பஞ்ச க்ருத்யம்: 1. ஸ்ருஷ்டி - அங்குரார்ப்பணம், திருக்கல்யாணம், த்வஜாரோஹணம், ரக்ஷாபந்தனம், 2. ஸ்திதி - வாஹநாதி உத்ஸவம், ஹோமம், பலி 3. ஸம்ஹாரம்-ராத்ரிசூர்ண உத்ஸவம், ரத ஆரோஹணம், க்ருஷ்ண கந்த உத்ஸவம் (அதிலும் குறிப்பாக மார்கழி மாதத்தில்), 4. திரோபாவம் - மௌன உத்ஸவம், 5. அனுக்ரஹம் - சக்தி ஊடல்.

34. மற்றொரு ஆகமக் கூற்று: 1. ஸ்ருஷ்டி – வாஸ்து கார்யம், ம்ருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப்பணம், வ்ருஷ யாகம், பூர்வ ராத்ரியில் பேரீதாடனம், தேவதா ஆவாஹனம், த்வாஜாரோஹணம், சந்தியாவாஹனம், திக்குகளுக்கு பலி, கோயிலில் யாகமண்டப பூஜை, திருக்கல்யாணம், 2. ஸ்திதி - அக்நி கார்யம், பலி, ஆறாம் நாள் உத்ஸவம் வரை, 3. ஸம்ஹாரம் -ரதாரோஹணம், ம்ருக யாத்திரை, க்ருஷ்ண கந்தார்ச்சனை, 4. திரோபாவம் - அங்குரம் விடல், சூர்ணோத்ஸவம், தீர்த்தம், கும்ப அபிஷேகம், மௌனோத்ஸவம், த்வஜாவரோஹணம், ரக்ஷை நிவர்த்தி, சண்ட யாகம், 5. அனுக்ரஹம் - சக்தி யாத்திரை அல்லது ஊடல்.

35. சந்த்ரஜ்ஞாநோத்தரப்படி, வருஷ, மாஸ, திதி, நக்ஷத்ரங்களில் உத்ஸவம் செய்யாவிடில், ராஜனுக்கும், க்ராமத்திற்கும், ஜனங்களுக்கும் க்ஷேமம் கிடைக்க மாட்டாது.

36. அங்குரார்ப்பணம், த்வஜாரோஹணம், ரக்ஷாபந்தனம், திருக்கல்யாணம் ஆகியவை ஸ்ருஷ்டி க்ருத்யம், வாஹனோத்ஸவம், ஹோமம், பலி ஆகியவை ஸ்திதி க்ருத்யம் - ராத்திரிசூர்ணோத்ஸவம், ரதாரோஹணம், க்ருஷ்ண கந்தோத்ஸவம் ஆகியவை ஸம்ஹார க்ருத்யம் மௌனோத்ஸவம் திரோபாவ க்ருத்யம். சக்தி ஊடல் அனுக்ரஹ க்ருத்யம். (உத்தர காமிகம்).

37. சரீர தத்துவ ரீதியாகவும் உத்ஸவ கிரியைகளுக்கு விளக்கங்கள் உள்ளன.

38. காமிகாமத்தின்படி, முதல் நாள் வ்ருஷப வாஹனத்தில் திருவீதி உலா, இரண்டாம் நாள் சுற்றக்கூடிய யந்த்ரம், மூன்றாம் நாள் ஊஞ்சல் அல்லது பல்லக்கு, நான்காம் நாள் குதிரை, ஐந்தாம் நாள் ஸிம்ஹம். ஆறாம் நாள் தீபம், ஏழாம் நாள் ஆடு வாஹனம், எட்டாவது நாளன்று ரதோத்ஸவம். (மற்ற ஆகமங்கள் ஒட்டி, பொதுவான ஏழு அல்லது ஒன்பதாம் நாள் திருவிழாவில் பெரும்பாலான ஆலயங்களில் ரதோத்ஸவம் நடைபெறும். ஆனால், காமிகாமத்தில் எட்டாவது நாளில் ரதோத்ஸவம் சொல்லப்பட்டுள்ளது)

39. ரதத்தில் ஸ்வாமி இருக்கும் போது தூபம் வரையில் உபசாரமும், ஆலயத்தில் உள்ள மூர்த்திக்கு அந்தந்த காலத்தில் நைவேத்யமும் செய்ய வேண்டும். ரதத்தில் இருக்கும் ஸ்வாமிக்கு அந்த நைவேத்யம் இல்லை; அப்பம் முதலாய பக்ஷணங்களும், நீர்மோர் - பானகம் போன்றவைகளும் நிவேதிக்கலாம்.

40. ரதோத்ஸவம் குறித்து விவரிக்கையில், குமார தந்த்ரம் 226 - ஆவது பக்கத்தில் "சக்ர தண்டேஷு மாயாக்யா சத்ரேஷு சசிபாஸ்கரௌ.........." என்று தொடங்கும் ச்லோகத்தில். தேரின் அங்கங்களிலுள்ள தேவைகளைப் பற்றிக் கூறப்படு கின்றது. குடையின் தண்டத்தில் மாயாதத்துவம், குடைச்சீலையில் சந்த்ர – சூர்யர்கள், தேரின் விதானத்தை (மேற்கூரையை) தாங்கும் தண்டத்தில் ஆதாரசக்தி, சுற்றிலுமுள்ள பட்டிகைகளில் ஏகாதச ருத்ரர்கள், சிறிய தூண்களில் தர்மாதர்மங்கள், தூண் இடைவெளியில் வாயுமூர்த்தி ஸ்தூபியில் குஹன், தேரின் வெளி இடைவெளிகளில் இந்த்ராதி லோகபாலர்கள், தேரின் முன் பகுதியின் இருபக்கங்களில் ஜய – விஜயர்கள், தேரின் நடு தண்டத்தில் மயூரம், கயிற்றில் மற்றனைத்து தேவர்கள் என்றவாறாக விவரம் தரப்படுகின்றது. எனவே தான் ரதோத்ஸவத் திருநாள் மஹோத்ஸவத்தில் முக்கிய இடம் பெறுகிறது. சில ஆலய ஸம்ப்ரதாயங்களில், ரதோத்ஸவத்திற்குப் ப்ராதான்யம் அளித்து அதற்கேற்ற நக்ஷத்ரம் அல்லது திதியை முதன்மையாகக் கொண்டு, திருவிழாக்காலம் நிச்சயிக்கப்படுகிறது.

41. ஆறுமுக நாவலர் ரதோத்ஸவம் குறித்து விளக்குகையில் பின்வருமாறு புகழ்கின்றார்; ஆதிகாலத்திலே தடங்கருணைப் பெருங்கடல், எந்தையாகிய சிவபெருமான், மந்தர கேசரி மலைகள் அச்சாகவும், சூர்ய - சந்த்ரர்கள் சக்கரமாகவும், ஆறு ருதுக்கள் சந்தியாகவும், பதினான்கு உலகங்களும் பதினான்கு தட்டு களாகவும், ஆகாயம் ஆஸனமாகவும், உதய - அத்தமன மலைகள் கூவிரமாகவும் (தேரின் மேற்கட்டாகவும்), நதிகளும் நதங்களும் கொடிகளாகவும், நக்ஷத்திரங்கள் விதானமாகவும், மோக்ஷலோகம் மேல்விரிவாகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள் முதலியன இடுக்கு மரமாகவும், அஷ்டபர்வதம் தூண்களாகவும், அஷ்டகஜங்கள் தாங்குவனவாகவும்,

ஸப்த ஸமுத்திரங்கள் திரைச் சீலைகளாகவும், கர்ம - ஞான இந்த்ரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், வேதாங்க, உபாங்க மனு சாத்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் பூட்டப்படும் குதிரைகளாகவும் அமைக்கப்பட்ட ரதத்திலே எழுந்தருளி, கங்கை முதலிய தேவமாதர்கள் சாமரம் வீசவும், ஊர்வசி முதலிய கணிகையர் நடனம் செய்யவும், மகாமேரு மலையை வில்லாகவும், ஸரஸ்வதியை வில்லில் கட்டிய மணியாகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்நி தேவனை அந்த அம்பின் கூர்முனையாகவும், வாயுதேவனை அம்பின் பின்னிணைந்த இறகாகவும் கொண்டருளி, பிரம்மனாகிய சாரதி, ப்ரணவமாகிய தூண்டுகோல் கொண்டு செலுத்த, த்ரிபுர அவுணர்களை தன் திருப்புன்னகை அக்நியினால் நீறாக்கி அருளினார் என்னும் வரலாற்று உண்மையைக் காட்டுவதே இந்த ரதோத்ஸவக் காட்சி என்று உணரப்பட்டு, விச்வரூபி ஆகவும், விச்வகாரணராகவும், விச்வசேவ்யராகவும், விச்வ அந்தர்யாதியாகவும் இருப்பவர் சிவபெருமானே என்பதும், முப்புரம் என்பது ஆணவம் - கன்மம் மாயை என்னும் மும்மல காரியம் எனவும், அத் திரிபுரங்களையும் நீறாக்கி, தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும் மூவர்களையும், தேவர்களையும் அடிமையாகக் கொண்டு, அவர்களுக்குத் தம் பதம் அருளி இன்பம் கொடுத்தமை, மும்மல காரியங்களையும் கெடுத்து விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களையும் அடிமையாகக் கொண்டு, திருவடி முத்தி கொடுக்கும் உண்மை எனவும் அறிய நின்றதனால், எல்லாமாய் அவைகட்குக் காரணமாய் நிற்கும் பரமபதியாகிய சிவபெருமானே ஆன்மாக்கட்கு மும்மல பந்த வாதனைகளைக் கெடுத்து, திருவடிப் பேறாகிய பேரானந்தப் பெருவாழ்வு அளிப்பர் என்பதும் உணரப்படும்."

42. மஹோத்ஸவ விதி பல ஆகமங்களிலிருந்து பல்வகையான, யான க்ரமங்களை (வாஹன வரிசைகளை) தொகுத்துத் தருகின்றது. அவற்றுள் சில: (ரதோத்ஸவ நாள் போல, வாகனங்களும், அந்தந்த ஆலய ஸம்ப்ரதாயங்களை ஒட்டி மாறுபட்டிருக்கக் காண்கிறோம்).

42. 1) ஒருவகையான க்ரமம் - காலை = மாலை:

1. ஆம் நாள்: ரங்கம் = ஸிம்ஹம், 2- ஆம் நாள்: ஸூர்ய ப்ரபை = சந்த்ர ப்ரபை, 3- ஆம் நாள் பூதம்- ஹம்ஸம். 4- ஆம் நாள் நாகம் - வ்ருஷபம் (பரிவேஷணத்துடன்), 5- ஆம் நாள்: எடுப்புப் பல்லக்கு = ராவணன் + கயிலைமலை, 6- ஆம் நாள்: மூடு பல்லக்கு (அ) கேடயம் (அ) சூர்ணோத்ஸவம் = யானை, 7- ஆம் நாள் ரதம் = கற்பதரு. 8 ஆம் நாள் : எடுப்புப் பல்லக்கு = குதிரை (பரிவேட்டை), 9ஆம் நாள் புருஷாம்ருகம் = க்ருஷ்ண கந்தம்.

42. 2) மற்றொரு வகையான க்ரமம் பகல் = இரவு:

உத்ஸவத்திற்கு முன், தேவாலயம், மண்டபம், நகராதிகளை அலங்கரித்து, வாஹநாதிகளையும் சீர்திருத்தி, சகல வைபவங்க்ளுடன் பத்ரகாளி உத்ஸவம் செய்வித்து, பின் விநாயகருக்கு அப்பம் மோதகம் நிவேதித்து உத்ஸவம் செய்து, மறுநாள் சிவோத்ஸவ ஆரம்பம் செய்க. உத்ஸவ விவரம் பின்வருமாறு: 1- ஆம் நாள்: ரங்கம் = ஸிம்ஹம். 2-ஆம் நாள் ஸூர்ய ப்ரபை = சந்த்ர ப்ரபை, 3-ஆம் நாள்: பூதம் = கட்டிடம், 4-ஆம் நாள் - நாகம் = வ்ருஷபம் (இதில் உத்யான வனத்தில் புஷ்பாதி அலங்காரத்தால் ஈச்வரனைச் சந்தோஷிப்பித்தல், வேதாத்யயநம், வீணாதி வாத்யம், நிர்ருதியில் உத்ஸவ காலத்தில் சுற்றி வலம்செய்தல் ஆகிய மண்டகப்படி செய்வித்தல் வேண்டும்). 5 -ஆம் நாள் : நந்தி = ராவணன் + கயிலைமலை. 6 - ஆம் நாள்: மூடு பல்லக்கு = யானை, 7- ஆம் நாள் சூர்ணோத்ஸவம், 8 - ஆம் நாள்: புருஷாம்ருகம், மத்தியானம் பிக்ஷாடனர், பின் ம்ருக யாத்திரை = இரவில் குதிரை (கத்தி, கேடயம், வில், அம்பு, ஈட்டி முதலியவற்றுடன் அலங்காரம். துஷ்ட நிவாரணம், சிஷ்ட பரிபாலனம் பொருட்டு வருண திக்கில் சுற்றி வலம் செய்தல்), 9. ஆம் நாள்: எடுப்புப் பல்லக்கு = புலி வாஹனம், பின்னர் நடேசருக்கு க்ருஷ்ண கந்தோத்ஸவம் (கந்தானுலேபநம் என்பது மாயா கவச பேதநம், த்ரிபுர ஸம்ஹாரம் பொருட்டு க்ருஷ்ண கந்தானுலேபநம் செய்யப்பட்டது. இதை லோகரக்ஷயின் பொருட்டு இப்போது செய்க என்கிறது மஹோத்ஸவ விதி), (அபிஷேகம், வெள்ளைச் சாத்து(வெள்ளைச் சாற்றுபடி என்பது

ஒரு குறிப்பிட்ட தூரம் வரை அலங்கரிக்கப்பட்ட உத்ஸவரை எடுத்துச் சென்றுவிட்டுத் திரும்பி ஆலயம் வந்து சேர்ந்து விடுதல்), ஜாதிமல்லி புஷ்பம் சாத்தி, பாயஸம், பல வகைப் பழங்கள் நிவேதனம், பின் நீராஞ்சனம், பக்தியுலாவல், இரவில் விநோதத்தால் காலம் போக்கல். 10 - ஆம் நாள்: புஷ்பக் கட்டில், கௌரியுடன் பக்தரது உருவங்கள் (பேரங்கள்) புறப்பாடு, துஷ்ட நிக்ரஹ பக்த பரிபாலனத்துக்காக தாசிகள் பக்த ஜனங்களை வாழை மட்டையால் அடித்தல், வர்த்தமான வ்யவஹாரக் கணக்கு வாசித்து தர்மாதர்மங்களை அறிவித்தல். தேவி கோபம் நீங்கி ஆலயம் அடைவித்தல், ஸ்நபநத்துடன் அபிஷேகம், (மஹோத்ஸவ விதி 198 - ஆவது பக்கம்) அலங்காரம், தூபம், தீபம், நிருத்த வைபவம், மத்யானம் தீர்த்த மண்டபத்தில் தீர்த்தவாரி, அலங்காராதி ஸர்வோபசாரம் = மாலை மாற்றி திருக்கல்யாணம், பின் வ்ருஷபாரூட தரிசனம். 11- ஆம் நாள்: சந்த்ரசேகர தரிசனம், வசந்தம், சூர்ணோத்ஸவம், பத்ர பீடம், ரத்ந ஸிம்ஹாஸநம் = இந்த்ர விமானம், ஈசாநத்தில் சுற்றி வலம் செய்தல். 12- ஆம் நாள்: ஹம்ஸம் = கற்பக வ்ருக்ஷம், 13- ஆம் நாள்: வ்ருஷபம், எண்ணெய் சூர்ணோத்ஸவம், தீர்த்த யாத்திரை, கும்பாபிஷேகம். கைலாச பர்வதம், ஸிம்ஹ வாஹனம், அவரோஹணம், பின் மௌநோத்ஸவம், நீராஜனம், மாவிளக்கு, சண்ட யாகம், சண்டோத்ஸவம், பக்தோத்ஸவம், பின் ஆசார்ய பூஜை, பஹுமானம், ருத்விக் சாதகர், போதகர் சன்மானம், பரிசாரகர் தக்ஷிணை, ப்ராஹ்மண பூஜை (போஜனம்), பக்தர்கட்கு ஸ்நானம்.

42. 3) காமிக ஆகமக் குறிப்பு: சிவாதி நவாஹோத்ஸவம்: பகல் = இரவு: 1. ஆம் நாள்: ரங்கம் = ஸிம்ஹம், 2- ஆம் நாள்: ஸூர்ய ப்ரபை = சந்த்ர ப்ரபை, 3- ஆம் நாள் ஸிம்ஹம் =பூதம் 4- ஆம் நாள் நாகம் = வ்ருஷபம் 5 -ஆம் நாள் : நந்தி = ராவணன் + கயிலைமலை. 6 - ஆம் நாள்: மூடு பல்லக்கு, சூர்ணோத்ஸவம் = யானை, 7- ஆம் நாள் : ரதம் = ப்ராயச்சித்தம், 8 - ஆம் நாள்: பிக்ஷாடனர், சாயரக்ஷைக்குப் பின் ம்ருக யாத்திரை = இரவில் குதிரை 9- ஆம் நாள்: எடுப்புப் பல்லக்கு= கற்பக வ்ருக்ஷம். க்ருஷ்ண கந்தோத்ஸவம், நடேசர் உத்ஸவம். 10- ஆம் நாள்: ஸிம்ஹாஸனம் = வ்ருஷபம், 11 - ஆம் நாள் : மாலை விமானம் = சக்தி ஊடல்.

42. 4) காரண ஆகமக் குறிப்பு: காலை = மாலை:- 1. ஆம் நாள்: ரங்கம் = ஸிம்ஹம், 2- ஆம் நாள்: ஸூர்ய ப்ரபை = சந்த்ர ப்ரபை, 3- ஆம் நாள் ஸிம்ஹம் = பூதம் 4- ஆம் நாள் நாகம் = மகரம் 5 -ஆம் நாள் : கட்டில் = வ்ருஷபம். 6 - ஆம் நாள்: கேடயம் = யானை, 7- ஆம் நாள் : ரதம் = ப்ராயச்சித்தம், 8 - ஆம் நாள்: புருஷாம்ருகம் = குதிரை 9- ஆம் நாள்: யீடம் (பல்லக்கு) = புலி. க்ருஷ்ண கந்தோத்ஸவம், நடேசர் உத்ஸவம்(நடேச உத்ஸவத்தில், ந்ருத்த மூர்த்தி ரூப சேவை மஹா விசேஷமுடையது, தீக்ஷிதர்களுக்கு அது பாப நாசநம் அளிப்பது. ஸம்ஹார யாத்திரை ஸகலருக்கும் பாபச் சேதம் அளிப்பது: அதைத் தரிசித்தவருக்கு புனர் ஜன்மம் கிடையாது: நிஷ்களர் ஆவார். இரவில் கண் விழித்திருந்து, ஸர்வ உபசாரங்களுடன் தாண்டவ சேவை செய்பவருக்கு. நிருத்த மூர்த்தி பாத பதமான ஸாயுஜ்யம் கிடைக்கும். சுத்தாசுத்த மாயா சம்பந்தமான நடேசரது தீர்த்தம் விசேஷமானது. நடேச உத்ஸவத்தில், அபிஷேகம், ஸ்நாநாந்தரம் ஸ்ருஷ்டியாகும். கௌதுக பந்தனம் ஸ்திதியாகும். அகரு தூபம் ஸம்ஹாரமாகும். கற்பூர தீபம் திரோபாவமாகும். அனுக்ரஹம் முன்பே கூறியவாறு சக்தி யாத்திரை அல்லது ஊடல். இவற்றிக்குப் பின் நிருத்த மூர்த்தி தரிசனம் செய்ய வேண்டும். பின்னர் உத்ஸவம் (உலா) சிவகாமசுந்தரியோடு செய்ய வேண்டும் - (மஹோத்ஸவ விதி யிலிருந்து). 10- ஆம் நாள்: ஸிம்ஹாஸனம் = ராவணன் + கயிலை, 11 - ஆம் நாள் : விமானம் = சக்தி ஊடல்.

42. 5) வாதுள ஆகமக் குறிப்பு: காலை = மாலை:- சர்வ மாதங்களிலும் உத்ஸவம் செய்யலாம். வாரோத்ஸவம் புண்யம். பக்ஷோத்ஸவம் பௌஷ்டிகம். மாஸோத்ஸவம் ஜயம். சிவோத்ஸவ காலத்தில் சக்தியுத்ஸவம் செய்க. சக்தியுத்ஸவத்தில் சிவோத்ஸவம் செய்யலாகாது. முன்பாக விக்நேச்வரரையும், ஸுப்ரஹ்மண்யரையும் உத்ஸவம் செய்து, பின்பு சத்தியுத்ஸவம் அஷ்டத்வஜம் ஆரம்பிக்க. முடிவில் சண்டேச்வரருக்கு உத்ஸவம். 1- ஆம் நாள்: பத்ரம் = ஹம்ஸம். 2- ஆம் நாள்: ம்ருகம் = ஸிம்ஹம், 3- ஆம் நாள்: ஸூர்யப்ரபை = புஷ்பக விமானம், 4- ஆம் நாள்: சந்த்ரப்ரபை = வ்ருஷபம், 5- ஆம் நாள்: கிளி = மகரம், 6- ஆம் நாள்: கட்டில் = யானை, 7- ஆம் நாள் : ரதம் = ப்ராயச்சித்தம், 8- ஆம் நாள் மூடு பல்லக்கு = குதிரை,

9 - ஆம் நாள்: ஆடு = இந்த்ர விமானம், க்ருஷ்ண கந்தோத்ஸவம், 10 - ஆம் நாள்: அவப்ருத ஸ்நானம், சூர்ணோத்ஸவம், தீர்த்தம், ப்ராயச்சித்த ஹோமம்.

42. 6) மற்றொரு ஆகமக் குறிப்பு (சக்த்யாநுசார தேவி உத்ஸவம்): காலை = மாலை; 1- ஆம் நாள்: மஞ்சம் = கிளி. 2- ஆம் நாள்: ஆடு = பூதகி, 3- ஆம் நாள்: புருஷாம்ருகம் (அ) காமதேனு = ஸூர்யப்ரபை, 4- ஆம் நாள்: ஹம்ஸம் = சந்த்ரப்ரபை, 5- ஆம் நாள்: மகரம் = வ்ருஷபம், 6- ஆம் நாள்: கேடயம் = யானை, 7- ஆம் நாள் - ரதம் = ப்ராயச்சித்தம், 8- ஆம் நாள் மூடு பல்லக்கு = குதிரை, 9- ஆம் நாள்: நாகம் = இந்த்ர விமானம், , 10 - ஆம் நாள் ரங்கம் = ஸிம்ஹம். அவப்ருத ஸ்நானம், சூர்ணோத்ஸவம், தீர்த்தம், ப்ராயச்சித்த ஹோமம்.

42. 7) சிந்திய ஆகமக் குறிப்பு (மஹோத்ஸவ விதி, 206 - ஆவது பக்கம்) (விநாயகர் உத்ஸவம்): 1- ஆம் நாள் - மூஷிகம், 2-ஆம் நாள்: மயில், 3- ஆம் நாள்: பூதம், 4- ஆம் நள்: வ்ருஷபம், 5-ஆம் நாள்: சக்தி விமானம், 6-ஆம் நாள்: யானை, 7-ஆம் நாள்: ரதம், 8-ஆம் நாள்: ம்ருக யாத்திரை, 9-ஆம் நாள்: நடேசர், 10- ஆம் நாள்: தீர்த்தம் (ரதம் நீங்கலாக மற்றவை இரவில் செய்க)

42) 8) ஸ்வாயம்புவ ஆகமக் குறிப்பு (மஹோத்ஸவ விதி, 206 - ஆவது பக்கம்) (விநாயகர் உத்ஸவம்): 1- ஆம் நாள் - பெருச்சாளி, 2-ஆம் நாள்: தோகை மயில், 3- ஆம் நாள்: பூதம், 4- ஆம் நாள்: ஸிம்ஹம், 5-ம் நாள் யானை, , 6-ஆம் நாள்: வ்ருஷபம், 7-ஆம் நாள்: குதிரை, 8-ஆம் நாள்: பஞ்ச தரு, 9-ஆம் நாள்: ரதம், 10- ஆம் நாள்: தீர்த்தம்

42. 9) குமார தந்த்ர ஆகமக் குறிப்பு (ஸுப்ரஹ்மண்யர் உத்ஸவம்): காலை = மாலை: 1- ஆம் நாள்: பத்ர பீடம் = ஹம்ஸம். 2- ஆம் நாள்: கோழி = ஆடு, 3- ஆம் நாள்: ஸூர்யப்ரபை = மயில், 4- ஆம் நாள்: நாகம் = சந்த்ரப்ரபை, 5- ஆம் நாள்: மகரம் = புலி, 6- ஆம் நாள்: மூடு பல்லக்கு = யானை, 7- ஆம் நாள் - ரதம் = ப்ராயச்சித்தம், 8- ஆம் நாள்: புருஷாம்ருகம் = குதிரை, சாயரக்ஷை ம்ருகயாத்திரை, 9- ஆம் நாள்: எடுப்புப் பல்லக்கு = ஸிம்ஹம், க்ருஷ்ண கந்தோத்ஸவம், 10 - ஆம் நாள்: கட்டில் = ராவணன். 11- ஆம் நாள்: சக்தியூடல்.

43. தீர்த்த தினத்திற்கு முதல் நாளோ, அல்லது உத்ஸவத்திற்கு நடுவிலோ குதிரை வாஹனம் என்று காரணாகமம் சொல்லுகிறது. அரசு வேஷம் தரித்த பக்தர்கள் வாஹனத்திற்கு முன்னும் பின்னும் பல வித ஆயுதங்களுடன் வேட்டைக்குச் செல்வது போல செல்ல வேண்டும்.

44. வெகு தூரத்தில் தீர்த்தம் இருக்கும் இடங்களிலும், தீர்த்தவாரிக்கு செல்ல முடியாத சந்தர்ப்பங்களிலும் ஆலயத்திலேயே தீர்த்தத்தைப் பூஜை செய்து, தீர்த்தவாரி செய்யவும்.

45. சூர்ணோத்ஸவத்தில், உலக்கையில் சிவனையும், உரலில் சக்தியையும் ஆவாஹனம் செய்து பூஜிக்க வேண்டும். மஞ்சளையும் அருகம்புல்லையும் உரலில் இட்டுத் தூளாக இடித்து, கோமயம், தைலம், கோக்ருதம் போன்றவற்றுடன் கலந்து, ஸ்வாமிக்குச் சாத்த வேண்டும். அரசன், அரசி, பொதுமக்கள், தேவதாசிகள் போன்ற அனைவருமே உரலில் உள்ளதை இடிக்கலாம். சூர்ணமானதை இறைவனுக்கும், மூர்த்திகளுக்கும், பரிவாரங்களுக்கும் ஸமர்பித்து, பக்தர்களுக்கு அளிக்கலாம்.

46. ஸமுத்ரம் போன்ற பெரிய நீர்நிலை உள்ள இடம் மஹாதீர்த்தம் எனப்படும். மஹாதீர்த்தத்தில் ஜலத்தின் நடுவே சென்று தீர்த்தவாரி செய்ய முடியாத இடங்களில் தீர்த்த ஸங்க்ரஹணம் செய்து, அதை மஹா தீர்த்தமாக பூஜித்து, ப்ரோக்ஷணமான தீர்த்தவாரி செய்யவேண்டும். ஸமுத்ரக் கரையில் தீர்த்தவாரி செய்வதானால் திதியை ப்ரதானமாகக் கொண்டு முஹூர்த்தம் அமைப்பது உத்தமம். மற்ற இடங்களில் தீர்த்தவாரி செய்யும் ஆலயங்கள் நக்ஷத்ரத்தைப் ப்ரதானமாகக் கொண்டு உத்ஸவம் செய்வது உத்தமம். மத்தியான நேரத்தில் (உச்சி வேளையில்) தீர்த்தவாரி செய்வது உத்தமம். முற்பகலில் செய்வது மத்யமம், பிற்பகலில் செய்வது கந்யஸம். சந்த்ர க்ரஹண தீர்த்தவாரி மட்டும், இரவில் க்ரஹணம் விடும் சமயத்தில் செய்வது உத்தமம்.

47. ப்ரதானமான நக்ஷத்ரம் அல்லது திதி பகல் நேரத்தில் அதிகமாக உள்ள நாளே தீர்த்தவாரிக்கு உகந்த நாள். நக்ஷத்ரம்,

திதி இரண்டையும் பார்க்கும் ஆலயங்களில், அவை இரன்டுமே சேர்ந்து வரக்கிடைப்பது அரிது. அப்படி முற்பகலிலோ அல்லது பிற்பகலிலோ கிடைத்தால், அந்த நேரத்தில் தீர்த்தவாரி செய்ய வேண்டும். ஒரு மாதத்தில் இருமுறை தீர்த்தவாரிக்கான நக்ஷத்ரம் ஸம்பவித்தால், பின்னால் வருவதை எடுத்துக் கொள்ளவேணும். எனினும், நக்ஷத்ரம் முன்னால் வரும் நாளில் யோகம் சிறப்பாக அமைந்திருந்தால் அந்த நாளிலேயே தீர்த்தவாரி செய்யலம். திதி - நக்ஷத்ரங்கள் இரண்டு நாட்களில் சேர்ந்து இருந்தால், சுபயோகம் உள்ள நாளில் தீர்த்தவாரி அமைக்க வேண்டும்.

48. ஒரு ஆண்டு எந்த நக்ஷத்ரம் அல்லது திதியில் உத்ஸவம் அனுஷ்டிக்கப்பட்டதோ, அதே நாளில் பின்வரும் ஆண்டுகளிலும் அனுஷ்டிக்க வேண்டும்.

49. தீர்த்தவாரி செய்யும் ஆசார்யன், பேரத்துடன் கூடிய (அதாவது பிம்பத்தை அல்லது அஸ்த்ரராஜரைத் தன்னோடு எடுத்துச் சென்றோ)அல்லது பேரம் இன்றியோ அவகாஹன ஸ்நானம் (விதிக்கப்பட்ட தீர்த்தவாரி ஸ்நானம்) செய்யலாம். கரையில் தனியாக ஸ்நபநம் வைத்தும் (ப்ரோக்ஷணமாக) தீர்த்தவாரி செய்யலாம்.

50. ஸ்வாமி தீர்த்தவாரி முடிந்து ஆலயம் திரும்பிய உடன், கர்ப்பக்ருஹத்தில் உத்ஸவ மூர்த்தியை வைத்து, அவரையும் மூலவரையும் யாகசாலை ஜலத்தால் ப்ரோக்ஷித்து, சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

51. த்வாஜவரோஹணம்:- தீர்த்தவாரியன்று இரவே கொடி இறக்குவது சிறந்தது. இல்லையென்றால் தீர்த்தவாரிக்குப் பிறகு 3,5,7,9,11,14,15,17,19 - ஆவது நாளில் த்வஜ அவரோஹணம் செய்யலாம். த்வஜ ஆரோஹணம் முதல் தீர்த்தவாரி வரை எத்தனை நாட்கள் உண்டோ, தீர்த்தவாரி கழிந்து அத்தனை நாட்களுக்குள்: அவரோஹணம் செய்யவேண்டும். இல்லை-யென்றால் மறுபடியும் உத்ஸவ கிரியைகள் (இரண்டாவது முறையாக அத்தனை நாட்களுக்கு) செய்ய வேண்டும்.

52. த்வஜ அவரோஹணத்தின் போது மூர்த்தி ஹோமம், திசா ஹோமம் செய்ய வேண்டும். லிங்கம், மூர்த்தி, வ்ருஷபம், சூலம்,

கொடி ஆகியவற்றிற்கு ஸ்நபனம் செய்து அர்ச்சிக்க வேண்டும். கோயில் முழுதும் கருமையான நற்புகையால் தூபம் காட்ட வேண்டும். ஸ்வாமிக்கு பலவகை நைவேத்யங்கள் செய்ய வேண்டும். பிறகு ஹோமத்துடனோ, ஹோமம் இல்லாமலோ சண்டேச்வர பூஜை செய்திடல் வேண்டும்.

53. பிறகு க்ராம பலி கொடுத்து, க்ராமத்தைச் சுற்றி உள்ள ப்ரம்மா முதலிய தேவர்களை விஸர்ஜனம் செய்ய வேண்டும். பலி கொடுக்க அந்த லிங்கத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அஸ்த்ரராஜரையும், சண்டிகேச்வரரையும் கூட எடுத்துச் செல்லலாம். பேரிகை, மத்தளம், படஹம், காஹளம், ஸ்ரீ கண்டம், சங்கம் போன்ற வாத்யங்களை வாசிக்கச் செய்யலாம். கொடியை இறக்கும் முன்போ, இறக்கிய பிறகோ இந்த க்ராம பலியைச் செய்யலாம்.

54. கொடியை இறக்கி, அந்த வ்ருஷபத்தை அருகிலுள்ள ஆலய வ்ருஷப மூர்த்தத்தில் சேர்க்க வேண்டும்.

55. விடாய் என்றால் ச்ரமம் என்று பொருள். விடாய் ஆற்றி (விடையாற்றி) உத்ஸவம் என்பது உத்ஸவ காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட களைப்பைப் போக்கிக் கொள்வதற்காகச் செய்யப்படுவது. சூர்ணோத்ஸவம் இதன் அங்கமாகச் செய்வதுண்டு.

56. உத்ஸவ ஆரம்பத்திலிருந்து, த்வஜ அவரோஹணம் ஆகி பதினைந்து நாட்கள் வரை, இடைப்பட்ட நாட்களில் எந்த நாளிலும் (மயிலை அறுபத்து மூவர் போன்ற) பக்தோத்ஸவம் செய்யலாம். ஹோமம், பலியுடன் பக்தர்களின் பிம்பங்களைத் திருவீதி உலா செய்விக்கலாம். ஹோமம் பலி இல்லாமலும் திருவீதி உலா செய்விக்கலாம்.

57. ஆசார்ய ஸம்பாவனை குறித்து உத்தர காமிகம் மிக விரிவாகப் பேசுகிறது.

58. உத்ஸவத்தின் போது, ஒவ்வொரு நாளும் என்னென்ன பலி கொடுக்க வேண்டும். எந்த தெய்வத்தின் ப்ரீதிக்காக அந்த பலி கொடுக்க வேண்டும் என்ற விரிவான குறிப்புகள் ஆகமங்களில் காணக்கிடக்கின்றன.

59. ஒரு கிராமத்தில் வேறொரு தேவதைக்கு உத்ஸவம் நடக்கும் போது, சிவனுக்கு உத்ஸவம் தொடங்கலாம். ஆனால் சைவோத்ஸவம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அந்தக் குறிப்பிட்ட க்ராம எல்லைக்குள் உள்ள வேறு ஆலய தேவதைகளுக்கு உத்ஸவம் செய்விக்கலாகாது என்று அம்சுமதாகமம் கூறுகின்றது.

60. நித்யோத்ஸவம் நடக்கும் ஆலயங்களில், மஹோத்ஸவ காலங்களில், அனைத்து தேவர்களுக்குமான நித்யபலி த்வஜஸ்தம்பத்தின் அடியில் கொடுக்கப்பட வேண்டும்.

61. சாதாரணமாக, உத்ஸவ மத்தியில் ப்ரதிஷ்டா கிரியைகள் செய்யக்கூடாது. அவசியம் ஏற்பட்டால், சாந்தி ஹோமம் முதலியவற்றைச் செய்து ப்ரதிஷ்டை செய்யலாம்.

62. ஞாயிறு தொடங்கி, ப்ரதி தினமும் வாரோத்ஸவம் சொல்லப்பட்டுள்ளது. குறைந்த பக்ஷமாக ஞாயிறு மட்டுமே கூட வார உத்ஸவம் செய்யலாம்.

63. ஞாயிற்றுக் கிழமை செய்யும் உத்ஸவத்தால் ருத்ர பதவியும் ஆரோக்யமும் ஸித்திக்கும். திங்கள்கிழமை செய்யும் உத்ஸவத்தால் சௌக்யம் கிட்டும். செவ்வாய்க்கிழமை செய்யும் உத்ஸவத்தால் க்ராம லாபம் உண்டகும். புதன் கிழமை செய்யும் உத்ஸவத்தால் ஸர்வ காம்ய ஸித்தி உண்டாகும். வியாழக்கிழமை செய்யும் உத்ஸவத்தால் சாஸ்த்ராதி வித்தைகள் ஸித்திக்கும். வெள்ளிக்கிழமை செய்யும் உத்ஸவத்தால் விசேஷ செல்வம் உண்டாகும். சனிக்கிழமை செய்யும் உத்ஸவத்தால் அபம்ருத்யு நாசம் ஸித்திக்கும். (வெவ்வேறு ஆகமங்களில் தரப்பட்டுள்ள வாரோத்ஸவ பலாபலன்கள் சற்று மாறுபட்டுக் காண்கின்றன)

64. உத்ஸவங்கள் தேவாலய ஸம்ப்ரதாயங்களுக்கு ஏற்ப, பலவகையாக விரிதலைக் காண்கிறோம். திருக்கல்யாணம் அவ்வாறான முக்கிய உத்ஸவங்களில் ஒன்று. இது சிவனுக்கும் பார்வதிக்கும் நிகழும் வைபவத்தைச் சித்தரிப்பது. இங்கு அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கன்யாதானம், அக்னி பாணிக்ரஹணம், மாங்கல்ய ஸூத்ர தாரணம், அக்னி

ப்ரதக்ஷிணம், லாஜ ஹோமம், ஆசீர்வாதம் முதலியன முக்கிய அம்சங்களாக விளங்கக் காண்கிறோம்.

65. சிவனுடைய அட்டவீரட்டங்களை உணர்த்தும் வரலாறுகளைச் சித்தரிக்கும் முறையில் உத்ஸவம் நிகழ்த்தும் விதிகளையும் ஆகமங்களில் காணலாம். திரிபுரதகனம், யமஸம்ஹாரம், ப்ரஹ்மசிரச்சேதனம், காமதகனம் போன்ற உத்ஸவங்கள் நிகழ்த்திட ஆகமக் குறிப்புகள் உள்ளன.

66. இது வரை, பற்பல ஆகம நூல்களிலும், சில சித்தாந்த க்ரந்தங்களிலுமிருந்து, மஹோத்ஸவம், அதன் அங்கங்கள் குறித்த சில விளக்கங்களையும், குறிப்புகளையும், கருத்துக்களையும் திரட்டித் தொகுத்து அளிக்கும் முயற்சி மேற்கொண்டனன். இதன் பயன் குறித்தும், இதனை மேலும் பயனுள்ளதாக்கும் வகை குறித்தும், ஆர்வலர்களின் ஆலோசனைகளை வரவேற்கின்றேன். இவ்வாறு ஒத்த உள்ளங்களோடு உரையாட வாய்ப்பளித்த தருமை ஆதீனத்தார்க்கு நன்றி.

பஞ்ச-பர்வங்கள்



சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர்,
முதல்வர், ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்,
திருப்பரங்குன்றம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பஞ்ச-பர்வங்கள்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர்,
முதல்வர், ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்,
திருப்பரங்குன்றம்.

சைவ சமயம் தொடர்பான அனைத்து விஷயங்களுக்கும் ப்ரமாண நூல்களாக விளங்குபவை சைவாகமங்கள் ஆகும். அவ்வகையில் அவ்வாகமங்கள் தனி மனிதன் மற்றும் திருக்கோயில்களில் செய்யப்படவேண்டிய க்ரியைகளையும், அவற்றை எந்த காலத்தில் செய்யவேண்டும் என்பதையும் விளக்குகின்றன. அவ்வாறு சிவாகமங்களில் காலங்கள் விளக்கிக் கூறப்பட்டாலும், அவற்றை தெரிந்துகொள்ள அந்தந்த படலங்களையே அதாவது கர்ஷண காலத்தை அறிய வேண்டுமென்றால் கர்ஷண விதி படலத்தையும், உத்ஸவ காலங்களை அறியவேண்டுமென்றால் உத்ஸவ விதி படலத்தையும் ஆராய வேண்டும். அங்ஙனமன்றி சிவாகமத்துள் கூறப்பட்டுள்ள காலங்கள் பெரும்பாலானவற்றை தொகுத்து "சைவகால விவேகம்" என்ற அற்புதமான நூலை இயற்றி நமக்கு வழங்கியுள்ளார் "ஸ்ரீமத் நிகமஜ்ஞான சிவாசார்யார்" அவர்கள்.

நாற்பத்தி எட்டு ச்லோகங்களினால் அமைந்த அந்நூலில் ஆசிரியர், கர்ஷணம், ப்ரதிஷ்டை, நித்யபூஜை, உத்ஸவங்கள், வ்ரதங்கள், கர்பாதானாதி ஸம்ஸ்காரங்கள் ஆகியவற்றை செய்வதற்கான காலங்களை கூறுகிறார். இந்நூலுக்கு பல்வேறு ஆகமப்ரமாணங்களுடன் கூடியதான ஓர் அற்புதமான உரையை "ஸ்ரீகணபதிபட்டர்" என்பவர் இயற்றியுள்ளார்.

ஆகமங்களில் கூறப்படுகின்ற பல்வேறு பூஜைகளுள் மாஸபூஜையும் ஒன்றாகும். அது ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு

பொருளை அதாவது,சித்திரையில்-மரிக்கொழுந்து, வைகாசியில்-சந்தனம், என்பதாக விசேஷமாக செய்யப்படுவதாகும். இதையே பௌர்ணமி பூஜை என்றும் வழங்குவர்.

இம்மாஸ பூஜையானது எப்பொழுது செய்யப்படலாம் என்பதை, இருபதாவது ச்லோகத்தின் பிற்பகுதியில் விளக்குகிறார் ஸ்ரீமத்-நிகமஜ்ஞான சிவாசார்யார்.

அவையாவன :-

1. மாஸ நக்ஷத்ரங்கள் (சித்திரை-சித்திரை),(வைகாசி-விசாகம்)
2. திருவாதிரை
3. அயனபுண்யகாலங்கள்
4. விஷுபுண்யகாலங்கள்
5. பர்வங்கள்
6. க்ரஹணங்கள்
7. வ்யதீபாதம் எனும் யோகம்
8. ஸங்கராந்தி
9. ராஜநக்ஷத்ரம். முதலியன ஆகும்.

மேற்கூறிய காலங்களுள் "பர்வ" என்ற காலத்தை விளக்க முனைந்த ஸ்ரீகணபதிபட்டர் அவ்விடத்தில்

'வஞ்ஷுவைா வ௨ணிபூஶா ஓஶபூயொமெவ வா'

அதாவது, ஐந்து பர்வங்களிலுமோ அல்லது பூர்ணிமை, அமாவாஸைகளிலோ என்று கூறி, பஞ்சபர்வங்கள் யாவை என்பதை "காலாதர்சம்" என்ற நூலில் இருந்து தருகிறார். அவை

சதுஓபூஶுஷ்டீ வக்ஷசயெ ஓஶபூஶு வ௨ணிபூஶா ।

ஸஞ்ரானிஷ்ரொதி வவபூாணி வஞ்ஷு வ்ாஹஓபூஹஷபூயீ ॥

சைவகாலவிவேகம். பக்-82

என்பன ஆகும்.

இதையே சைவபூஷணம், மஹோத்ஸவவிதி, அமரகோசம், வாசஸ்பத்யம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன.

சதுர்தசீ அஷ்டமீ க்ருஷ்ண பக்ஷயோ ரவிஸங்க்ரமே ।
ஏதே பர்வாணி விக்யாதானி தைர்ஜ்யோதிஷ

ஷாஸ்த்ர வேதிபி:॥

சைவ பூஷணம். பக்-95

சதுர்தசீ அஷ்டமீ க்ருஷ்ண பக்ஷயோ ரவி ஸங்க்ரமே ।
ஏதேபர்வாணி விக்யாதானி தைர்ஜ்யோதிஷ ஷாஸ்த்ர வேதிபி: ॥

- மஹோத்ஸவ விதி. பக்-413

சதுர்தசீ அஷ்டமீ சைவ பூர்ணிமாச அமாவஸ்யா ।
பர்வாண்யேதானி ராஜேந்த்ர ரவி ஸங்க்ராந்திரேவ ச ॥

- ஸுச்ருதொக்த வ்யாக்யா ச்லோ - 121 பக்-2

சதுர்தசீ அஷ்டமீ சைவ அமாவாஸ்யா ச பூர்ணிமா ।
பர்வாண்யேதானி ராஜேந்த்ர ரவி ஸங்க்ராந்திரேவ ச ॥

- வாசஸ்பத்யே

மேற்கூறிய வாக்யங்களின் மூலம் பஞ்சபர்வ என்ற காலவிஷயத்தில் பேதமில்லை என்பது விளங்குகிறது.

மாஸ பூஜைக்கான காலங்களில் பர்வ என்ற சொல்லுக்கு நாம் பஞ்சபர்வங்கள் என்று பொருள் கொண்டால், அங்கு இரண்டு இடர்பாடுகள் ஏற்படுகிறது.

1. மூலத்தில் மாஸ பூஜைக்கு ஸங்க்ராந்தி ஒரு காலமாகச் சொல்லப்பட்டுள்ளது. பஞ்ச பர்வங்களிலும் ஸங்க்ராந்தி உள்ளது. எனவே பர்வ என்பதற்கு பஞ்ச பர்வங்கள் என்று பொருள் கொண்டால் ஸங்க்ராந்தி ஏன் இருமுறைச் சொல்லப்பட்டது என்ற கேள்வி எழும்.

2. சைவாகமங்கள் மாஸபூஜைக்கான காலங்களை குறிப்பிடும்போது அதில் அஷ்டமியும், சதுர்தசியும் கூறப்படவில்லை.

மேலும் கணபதிபட்டர் மேற்கோளாகக் காட்டியுள்ள ஸ்ரீமத் அம்சுமதாகம வாக்யம்

“வவூசயெ ச ஸஜ்ஞாஷள” என்று காணப்படுகிறது.

எனவே சைவகால விவேகத்தில் கூறப்பட்டுள்ள பர்வ என்ற சப்ததிற்கு வவூசயழ என்று பொருள் கொள்ளுதலே சரியாக இருக்கும் எனக் கருத இடமுள்ளது.

அப்படியானால் ஸ்ரீகணபதிபட்டரது உரை தவறு எனக் கூறலாமா? ; எனில் அது முடியாது. ஏனெனில் பர்வ என்ற சொல்லுக்கு பஞ்சபர்வ எனப் பொருள் கொள்ளுதல் ப்ரஸித்தம். அது பற்றியே அவர் அங்ஙனம் உரை எழுதியிருக்க வேண்டும்.

அப்படியானால் பஞ்சபர்வங்கள் என்பதன் அவச்யம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். இதுவரை நாம் பார்த்த பஞ்சபர்வ நிரூபண வாக்யங்கள் யாவும் பஞ்சபர்வங்கள் யாவை என்பதைக் கூறியனவேயன்றி , (வாசஸ்பத்யம் தவிர) அக்காலத்தில் அனுஷ்டிக்க வேண்டிய க்ரியைகள் யாவை என்பதை விளக்கவில்லை.

வாசஸ்பத்யழ எனும் ஶப்த கொாஶத்தில் தான் அக்காலத்தில் என்ன செய்யவேண்டும்? என்ன செய்யக்கூடாது? என்பது விளக்கப்பட்டுள்ளது. அது பின்வருமாறு ;

சதுர்தஶ்யஷ்டமீ சைவ அமாவாஸ்யா ச பூர்ணிமா ।
வவூாணெ்யதாநி ராஜெந்த்ர ரவி ஸங்க்ராந்திரேவ ச ॥
இதி ஸ்மரதஸ்தைஷு வதுஸு காமுஹைஷு ச
ஸ்த்ரீதைல மாம்ஸ ஸம்போகீ வவூவஸ்வதெஷு
வைவர்மாநு ।

விண்மூத்ர போஜநம் நாம வ்யாதி நரகம் வ்ரஜேத் ॥

-விஷ்ணுபுராணம்

அதாவது,

ஸ்ம்ருதியில் கூறிய பஞ்சபர்வ காலங்களில், எவன், ஸ்த்ரீபோகம், தைலஸ்நானம், மாம்ஸபோஜனம் ஆகியவற்றை செய்கிறானோ, அவன், இறந்த உடன், விண்மூத்ர போஜனம் எனும் நரகத்தில் உழல்வான்.

-விஷ்ணுபுராணம்

என்று கூறி, அப்பொழுது செய்யப்படவேண்டியதாவது என்ன என்பதை,

நித்யம் சயொரயநயொ: நித்யம் விஷுவயொரபி ।

சந்த்ராக்கயொர்க்ரஹணயொ: வ்யதீபாதேஷு

பர்வஸு ॥

க்ருத்வா ஜாகரணம் ஸ்நாநம் ஸாங்கம் தாநம் ஜபம் ததா ।

ய: கரோதி பவித்ராத்மா தஸ்ய புண்யம் அக்ஷயம் லபேத் ॥

-ப்ரஹ்மபுராணம்

அதாவது,

இரண்டு அயனங்கள், விஷுக்கள், க்ரஹணங்கள், வ்யதீபாதம், பர்வங்கள் ஆகிய தினங்களில் முழுவதும் விழித்திருந்து ஸாங்க ஸ்நானம், தானம், ஜபம் இவைகளைச் செய்கிற புனிதமான மனிதன், எண்ணிலடங்கா புண்யத்தைப் பெறுவான்.

மேலும் இந்த பர்வ காலங்களில் வேத அங்கங்கள், இதிஹாஸ புராணங்கள், தர்ம சாஸ்த்ரங்கள் ஆகியவற்றைப் படிக்கக்கூடாது என்ற விதியையும் கூறுகிறது வாசஸ்பத்யம்.

எனவே பஞ்சபர்வங்கள் என்பது ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட அனுஷ்டானத்திற்குரியதாக இருக்குமேயன்றி ஆகமம் தொடர்பானதாக இருக்குமா என்பது அறிஞர்கள் கலந்து ஆலோசித்துத் தீர்மானம் செய்யவேண்டியதாகும்.

குறிப்புகள் :-

1. சில ஆலயங்களில் பஞ்ச பர்வ உத்ஸவங்கள் என்று தனியாக நடைபெறுவதாக கற்றரறிந்த பெரியோர்கள் குறிப்பிடுகிறார்கள்.

2. பாண்டிச்சேரியிலுள்ள புதுவை ஆய்வு நிறுவனத்தினரால் தொகுக்கப்பட்டுள்ள ஆகம விஷய அட்டவணையில் (Index) பஞ்ச பர்வங்கள் அல்லது பஞ்ச பர்வம் என்ற குறிப்பு இல்லை எனக்கூறினார் அங்கு ஆகமத்துறையில் பணியாற்றும் ஸ்ரீ டாக்டர் T. கணேசன் அவர்கள்.

சுபம்.

ஆதிசைவர் மரபும் ஆகமங்களும்

சிவாகம, சிற்பாகம கலாநிதி
சிவஸ்ரீ S. P ஸபாரத்ன சிவாசார்யார், சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆதிசைவர் மரபும் ஆகமங்களும்

சிவாகம, சிற்பாகம கலாநிதி

சிவஸ்ரீ S. P ஸபாரத்ன சிவாசார்யார், சென்னை.

ஆதிசைவ மரபு சீரோடும் சிறப்போடும் தமிழகத்தில் மட்டுமல்லாமல் பாரதநாடு முழுவதிலும் வேதகாலம், சங்க காலம் ஆகிய, மிகுபழம் காலத்திலிருந்தே விளங்கிக் கொண்டு வருவது. ஆதிசைவ் மரபும் ஸ்தாபத்ய மரபாகிய சில்பமரபும் பின்னிப் பிணைந்திருந்த காலநிலையும் உண்டு. சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் "அறுதொழில் மறையோர்" என்றும் "அறுதொழில் அந்தணர்" என்றும் குறிக்கப்படுகின்றவர்கள் ஆதிசைவ மரபினரே ஆவர்.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்"

எனத் திருவள்ளுவரால் கூறப்படும் அறுதொழிலோர் ஆதிசைவ மரபினரே.

திருமண அழைப்பிதழ் முதலானவற்றில் "யஜனாதி ஷட்கர்ம நிரதர்களான...... அவர்களுக்கு" என நாம் குறிப்பிட்டுக்கொண்டு வருகிறோம். யஜனம் என்பது அக்னி கார்யத்தை உள்ளடக்கிய சிவவழிபாடு. "இத்தகைய சிவவழிபாடு முதலான ஆறு செயல்களில் உளமார ஈடுபட்டிருப்பவர்கள்" என்பது அத்தொடரின் பொருள்.

அந்த ஆறு கிரியைகள் யாவை என்பதைப்பற்றிக் காரண ஆகமம் கூறுகிறது.

"அத்யாபனம் ச அத்யயனம் யாஜனம் யஜனம் ததா।
தான ப்ரதிக்ரஹம் சைவ ஷட்கர்ம நிரதஸ் ஸதா॥"

ஆசார்யலக்ஷண படலம்: 17 b-18a

- பூர்வ காரணம்: ஆசார்யலக்ஷண படலம்: 17 b-18a

இதனையே "ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்" எனத் தமிழ்நூல்கள் கூறும்.

அத்யாபகம் - ஓதுவித்தல்; வேதாகமப் பொருள்களை விளக்கிக் கூறுதல்; பயிற்றுவித்தல்

அத்யயனம் - ஓதல்; வேத ஆகமங்களை முறைப்படிப் பயிலுதல்

யாஜனம் - வேள்வி செய்வித்தல் (வேள்வியைச் செய்யச் செய்தல்)

யஜனம் - வேள்வி செய்தல்

தானம் - ஈகை

ப்ரதிக்ரஹம் - (பிறர் கொடுப்பதை) ஏற்றுக் கொள்ளல்.

இந்த ஆறு செயல்களிலும், சிரத்தையுடன் ஈடுபட்டு இருப்பவர்கள் அறுதொழில் அந்தணராகிய ஆதிசைவர்கள். இந்த ஆறையும் சுருக்கி, ஆன்மார்த்தம், பரார்த்தம் என இரண்டு வகைப்படுத்தியும் ஆகமங்கள் கூறும்.

அத்யயனம், யஜனம், தானம் – இம்மூன்றும் ஆன்மார்த்தம்

அத்யாபகம், யாஜனம், ப்ரதிக்ரஹம் – இம்மூன்றும் பரார்த்தம்.

ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய இரண்டையுமே சீரான முறையில் பரிபாலித்துக்கொண்டு ஆதிசைவமரபினர் ஆசார சீலர்களாய் வாழ வேண்டும் என்பது ஆகமவிதி.

பெரும்பாலான ஆகமங்கள் "ஆசார்ய லக்ஷணம்" எனும் படலத்தில் சிவாசாரியப் பெருமக்கள் எத்தகைய இலக்கணங்கள் வாய்க்கப் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என வரையறுத்துக் கூறியுள்ளன. இவற்றையெல்லாம் தொகுத்து அகோர சிவாசாரியார் பரார்த்த நித்ய பூஜாவிதி எனும் நூலின் தொடக்கத்தில் மூன்று சுலோகங்களில் தருகின்றார்.

"வேதாதி நானாவித மந்த்ர தந்த்ர
முத்ரா க்ரியா சில்ப ஸுவாக் ஸ்வரூபம் |
ஆசாரயுக்தம் ஸுகுணம் ஸுரூபம்
ஆசார்யமாஹு: சிவம் ஆதிசைவம் ||
ஸ தத்வக்ஞான ஸம்பன்ன: ஷடத்வஸ்தான சிந்தக: |

பரதாஷ்டாங்க யோகக்ஞோ க்ஞானஸம்பத்தி போதக: ||
தீக்ஷாபிஷேக சுத்தாத்மா, ஸர்வஜீவ தயாபர: |
ஜ்யோதி: சாஸ்த்ர க்ரியா யுக்தோ வாக் ப்ரஸாத சுபப்ரத: |
இத்யாதி குணஸம்பன்னோ தேசிகேந்த்ரோபிதீயதே ||"

இவற்றின் பொருள் வருமாறு:

"வேத ஆகமங்கள், இவை தொடர்பான பற்பல சாத்திரங்கள், பற்பலவான மந்திர சாத்திரங்கள், சாக்த சம்பந்தமான தந்திர சாத்திரங்கள், முத்திரை வகைகள், கிரியைகள், சிற்ப சாத்திரங்களாகிய வாஸ்து சாஸ்திரங்கள், பீஜாக்ஷரம் முதலான நல்ல மங்களகரமான வாக்குகளின் சொரூபங்கள் இவற்றை நன்கு அறிந்தவர்களாகவும், நல்ல ஆசார ஒழுக்க முறைகளை உடையவர்களாகவும், நற்குணம் உடையவர்களாகவும், நல்ல தோற்றம் வாய்ந்தவர்களாகவும், உலகோர்க்கு மங்களங்களை அளிக்கவல்லவர்களாகவும் திகழும் ஆதிசைவர்களையே, ஆசாரியர்கள் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர்."

"பற்பல சம்பிரதாயங்களில் தத்துவ ஞானம் நன்கு வாய்க்கப் பெற்றவர்களாகவும், ஆறு அத்வாக்களின் ஸ்தானபேதம், ரூப பேதம் ஆகியவற்றைச் சிந்தித்து இருப்பவர்களாகவும், பரத சாஸ்திரம், அஷ்டாங்க யோகம் என்னும் இவற்றை அறிந்தவர்களாகவும், சிவஞான தத்துவநுட்பங்களைப் போதிப்பவர்களாகவும், ஆசார்ய அபிஷேகம் எனும் உத்தமமான தீக்ஷாவிசேஷத்தால் பரிசுத்தமான ஆத்மாவை உடையவர்களாகவும், எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டு இருப்பவர்களாகவும், சோதிட சோதிட நூல்களை நன்கு பயின்றவர்களாகவும், சோதிட (வானசாஸ்திர) நூல்கள் கூறும் செயல் முறைகளில் வல்லவர்களாகவும், தமது வாக்குத் திறத்தால் அனைவர்க்கும் சுபமங்களங்களைக் கொடுப்பவர்களாகவும் திகழும் ஆதிசைவர்களே, மிகவும் உத்தமமான ஆசாரியர்கள் ஆவர் என ஆகமநூல்களில் கூறப்பட்டுள்ளது"

ஆதிசைவ மரபினர்க்கு என ஆகமங்கள் விதித்துக் கூறும் இலக்கணங்கள் மேலும் பற்பல உண்டு.

தம்முடைய நடைமுறைகளில் இந்த இலக்கணங்கள் பிரதிபலிக்குமாறு சிவாசாரியர்கள் தமது வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என ஞானசம்பு எனும் சிவாசாரியார் தமது 'சிவபூஜா ஸ்தவம்' எனும் நூலில் அறிவுறுத்துகின்றார்.

சங்ககாலத்திலும், ராஜராஜ சோழன் முதலான பேரரசர்களின் காலத்திலும், ஆதிசைவ மரபினர் அப்படித்தான் வாழ்ந்து இருக்கின்றனர். அவ்வாறு வாழ்ந்த பெரியோர்களையும் அருளாளர்களையும் நாம் இந்தத் தருணத்தில் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

பரிபாடல், பதிற்றுப்பத்து, புறநானூறு முதலான நூல்கள் தோன்றிய சங்ககாலத்தில், தமிழ்நாட்டில் இருந்த "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" ஆகிய சிவன் கோவிலிலும் "அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்" ஆகிய முருகப்பெருமான் கோவிலிலும், மலைமகள் கோவிலிலும், கொற்றவை (துர்க்கை) கோவிலிலும் சிறப்பான முறையில் ஆகம விதிப்படி வழிபாடுகள் செய்து கொண்டிருந்த விண்நயத்தார், கௌசிகர் முதலான சிவாசாரியர்களையும், அவர்களின் வழிவந்தோர்களையும் உளமார நினைந்து போற்றுகின்றேன்.

'திருத்தொண்டத் தொகை' எனும் அரிய தேவாரப் பதிகத்தை அருள்வதற்காகவே தமிழ்நாட்டில் ஆதிசைவ மரபில் அவதரித்தவரும், சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டுப் பாடும் பணியே பணியாக இருந்தவரும், முதலை உண்ட பாலகனை மீட்டுக்கொடுத்த அருளாற்றல் வாய்ந்தவரும் மற்றும் பற்பல அருள்விலாசங்களை வெளிப்படுத்தியவரும் ஆன சுந்தரமூர்த்தி சுவாமிகளை மனமாரப் போற்றுகின்றேன்.

சித்தர்களின் காலம் மிகமிகத் தொன்மையானது; இன்னது என உறுதி செய்யப்பட முடியாதது. சித்தர்களுள் ஒருவராக விளங்கிய வரும் இந்திய மருத்துவத்தின் தந்தை என இன்று போற்றப்படுபவரும் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் வைத்திய நூல்கள் பலவற்றை எழுதி உள்ளவரும் ஆன தன்வந்திரியார், விஷ்ணுவின் அம்சமாக ஆதிசைவ மரபில் அவதரித்தவர் - என இப்பொழுது சித்தர் தொடர்பான

ஆய்வுகளால் உறுதி செய்யப்படுகின்றது. போற்றுதற்குரிய இப்பெருமானின் திருவடிகளை வணங்கிக் கொள்கிறேன்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் புகழ்த்துணை நாயனார் என்பவர். இவரது வரலாறு, கடினப்பட்டு இருக்கும் உள்ளத்தையும் கரைத்து உருக்கக் கூடியது.

பெரியபுராணத்தில் இவரது வரலாறு கூறப்பட்டுள்ளது:

"திருப்புத்தூர் என்னும் தலத்தில் ஆதிசைவ மரபில் உதித்தவர்; மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானுக்கு ஆன்மார்த்தமான அடிமை பூண்டு, அந்த அன்புத்திறத்திலே தமக்கு நிகராக வேறொருவர் இல்லை எனத் திகழ்ந்தவர். புகழ்த்துணையார் எனும் பெயர் வாய்ந்தவர்; தமது தவச்சிறப்பால் சிவபெருமானை வழிபட்டு வரும் காலத்தில் நாடெங்கும் வறட்சி ஏற்பட்டுப் பஞ்சம் மிகுந்து பசிநோய் அனைவரையும் வாட்டி நின்ற போதும், சற்றும் மனம் தளராதவராய்ப் புகழ்த்துணையார் "என்ன நேர்ந்தாலும் நான் எம்பெருமானை விட்டுவிட மாட்டேன். அவரை வழிபடுவதினின்று ஒருபோதும் தவறமாட்டேன்" என்னும் உறுதிப்பாட்டுடன் நின்றார். இரவும் பகலுமாக, ஆகம விதிப்படி இறைவனுக்கு நன்னீரால் அபிடேகம் செய்து பல்வகை மலர்களாலும் பெருமானை அர்ச்சித்து வந்தார். அவ்வாறு தொடர்ந்து தளராமல் பூசித்து வரும்பொழுது ஒருநாள் பசிமிகுதியால் துன்பமும் தளர்ச்சியும் மிகுதிப்பட, அபிடேகக் குடத்தை நன்றாகப் பிடிக்க முடியாமல் போய்விட்டது. அதனால் அபிடேகப் குடம் கையிலிருந்து நழுவி சிவலிங்கத்தின் முடிமேல் விழுந்துவிட்டது. 'இப்படி அபசாரம் நேர்ந்துவிட்டதே' எனக் கவலையும் பயமும் கொண்டவராகி, மிகவும் அயர்ந்து போய் அங்கேயே தூங்கிவிட்டார். தூக்கத்தின்போது சிவபெருமான் அவரின் கனவில் எழுந்தருளி "அன்பரே! பயப்பட வேண்டாம். இந்தப் பஞ்சகாலம் நீங்கும் வரையிலும் தினந்தோறும் உனக்கு ஒரு பொற்காசு அருள்கிறோம். சுகமாக இரு" எனக் கூறினார். அவர் கூறியவாறே நாள்தோறும் லிங்கபீடத்தின் கீழே பொற்காசு கிடைக்க, அதனைக் கைக்கொண்டு நித்திய வழிபாட்டை நன்றாகச் செய்து முடித்துத் துன்பம் நீங்கப் பெற்றவராகவும்

முற்றுணர்வு (ஸர்வக்ஞத்துவம்) வாய்க்கப் பெற்றவராகவும் விளங்கி, இறுதியில் பெருமானின் அடித்தலத்தில் இரண்டறக் கலந்தார்."

பஞ்சமும் பசியும் மிகுதிப்பட்ட காலத்திலும் "எம் கோமான்தனை விடுவேன் அல்லேன்" எனும் உறுதிப்பாட்டுடன் இருந்த புகழ்த்துணை நாயனார் எனும் சிவாசாரியப் பெருமானை இத்தருணத்தில் போற்றி வணங்கிக் கொள்கிறேன்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான திருநீலநக்கநாயனார் என்பவரும்,

"மெய்த்த ஆகம விதிவழி வேத காரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமும் செய்தே
அத்தர் அன்பருக்கு அமுதுசெய்விப்பது முதலா
எத்திறத்தன பணிகளும் எற்றுஎதிர் செய்வார்"

ஆக விளங்கிய சிவாசாரியப் பெருந்தகையே; திருஞானசம்பந்தப் பெருமான், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகிய பெருமக்கள் இருவரையும் நேரே வழிபடும் பேறுபெற்ற அந்தப் பெருமானின் திருவடிகளையும் வணங்கிக் கொள்கிறேன்.

ராஜராஜப் பேரரசன் காலத்தில் திருநாரையூர் எனும் திருத்தலத்தில் ஆதிசைவ மரபில் நம்பியாண்டார் நம்பிகள் எனப்படும் பெருமகனார் அவதரிக்கவில்லை எனில், சைவத்திருமுறைகள் முறைப்படித் தொகுக்கப்பட்டிருக்காது. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வமிசத்தில் தோன்றித் தமது காலத்தில் விளங்கிய பாணினிப் பெருமாட்டியின் துணையால் தேவாரப் பதிகங்களுக்கு உரிய பண் - அடைவு கண்டு உணர்ந்து, ஆகம நெறிமுறைக்கு ஏற்றவாறு திருமுறைகளைப் பதினொன்று எனும் கணக்கில் தொகுத்து அமைத்துக் கொடுத்த நம்பியாண்டார் நம்பிகளின் தன்னிகரற்ற தமிழ்ப்பணியையும் ஆகமப்பணியையும் சைவப் பணியையும் நாம் மறக்கலாமா?

பதினொன்று என்ற கணக்கில் ஏன் தொகுத்தார்? ஆகம நெறிக்கு உயிர்நாடியாக விளங்கும் ஸம்ஹிதா மந்திரங்களின் எண்ணிக்கை பதினொான்று. ஸம்ஹிதா மந்திரங்களின் தாத்பரியத்தையும் உட்பொருளையும் நன்கு உணர்ந்தவர்களுக்கே வேதங்களின் பொருள் நன்கு விளங்கும்.

சைவத்திருமுறைகள் ஸம்ஹிதா மந்திர சாரத்தை விளக்குவன என நம்பியாண்டார் நம்பிகள் நன்கு தெளிந்துணர்ந்து, அவற்றைப் பதினொன்று எனும் கணக்கில் தொகுத்து அமைத்தார்.

"மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னும் அவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்று
ஆக்கினார்"

- திருமுறைகண்ட புராணம் : 28

என, உமாபதி சிவாசாரியார் விளக்கிக் காட்டுவார்.

(குறிப்பு: நம்பியாண்டார் நம்பிகள் காலத்திற்குப் பிறகு பெரிய புராணம் தோன்றிய பொழுது, அதனது பெருமையைக் கருத்தில் கொண்டு, சைவப் பெரியோர் பன்னிரண்டாவது திருமுறையாகப் பெரியபுராணத்தை இணைத்துக் கொண்டனர்)

பேரரசன் வேண்டிக்கொண்டவாறு பெருமை மிகு தேவாரத் திருமுறைகளையும், திருவாசகம், திருவிசைப்பா முதலான திருமுறைகளையும் முறைப்படிப் பதினொன்றாகத் தொகுத்துக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி முதலான நூல்களையும் இயற்றித் தமது அருளாற்றலை வெளிப்படுத்திய நம்பியாண்டார் நம்பிகள் எனப்படும் சிவாசாரியப் பெருந்தகையின் திருவடிகளையும் வணங்கிக் கொள்கிறேன்.

ஸம்ஸ்கிருதத்தில் இருந்த ஸ்காந்த மஹாபுராணத்தின் முதற்காண்டத்தின் முதல் ஸம்ஹிதையை மட்டும் ஏறக்குறையப் பத்தாயிரம் தமிழ்ப்பாடல்களால் விளக்கிக் காட்டித் தமிழில் கந்தபுராணம் தந்த காஞ்சியம்பதி கச்சியப்ப சிவாசாரியாரின் பெருமையை ஓரிரு பக்கங்களில் கூறிவிட முடியுமா? ஒவ்வொரு நாளும் கந்தகோட்டப் பெருமானே பயின்று மகிழ்ந்த காவியம் அன்றோ கந்தபுராணம்!

"இனிய வடமொழி அமுதம் உண்டு தென்மொழி வாரம்
என்ற கடலைக்குடித்து, ஓர்

இணையிலா உன்சரிதை கூறும் வலிகொண்டு, அன்பில்
ஏறும்ஒரு கச்சியப்பர்''

- பூரணானந்தகுகன் – 10

என்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளும் புகழுரைக்கு மேலாக நாம் என்ன கூறமுடியும்? கம்பனின் கவித்திறத்தையும் விஞ்சக்கூடிய வகையில் கவியமுதக் காவியம் வழங்கிய கச்சியப்ப சிவாசாரியப் பெருந்தகையின் திருவடிகளையும் வணங்கிக் கொள்கிறேன்.

சிவஞானபோத நூற்பொருளை விரிவாக விளக்கும் வகையில் சிவஞான சித்தியார் எனும் ஒப்பற்ற சித்தாந்த சாத்திரத்தை ஆகமநெறிநின்று, ஆற்றொழுக்கான கவிநடையில் அமுதத் தமிழில் அருளிய, அருள் நந்தி சிவாசாரியாரின் திருப்பாதங்களை உளமார நினைத்து வாயாரப் போற்றுகின்றேன்.

பட்டராமகண்ட பிரானைக் குருவாகக் கொண்டு, சைவாகமங்களின் நாற்பாதக் கருத்துக்களையும் ஆழ்ந்து பயின்று, கிரணாகமம், சர்வக்ஞானோத்தர ஆகமம் முதலான ஆகம நூல்களுக்கு வடமொழியில் பாஷியம் எழுதியும், தத்துவப் பிரகாசம், இரத்தினத்திரயம் முதலான காரிகை நூல்களுக்கு வடமொழியில் உரை எழுதியும், மிருகேந்திர ஆகம தீபிகை அருளியும், பாரத நாடு முழுவதிலும் தகுதி உடையார்க்கு உரிய தீக்ஷைகளை அருளியும் மிகப்பெரும் பணி ஆற்றிய ஸ்ரீமத் அகோர சிவாசாரியார், க்ரியா க்ரம த்யோதிகா என்ற தலைப்பில் பத்ததி நூல்கள் பலவற்றை அருளியுள்ளார். இக்காலகட்டத்தில் ஆதிசைவ மரபினர்க்குக் கிடைத்துள்ள ஜீவன உபாயம் அகோர சிவாசார்ய பத்ததியே எனக் கூறுவதில் தவறு இல்லை. கிரியாக்ரம த்யோதிகை என்ற பெரும் தலைப்பில் பத்ததி நூல்கள் பலவற்றை அருளிய ஸ்ரீமத் அகோர சிவாசாரியாரின் திருவடிகளையும், மற்றும் பத்ததி ஆசிரியர்களாகத் திகழ்ந்த சோமசம்பு சிவாசாரியார் வாமதேவ சிவாசார்யார், ராமநாத சிவாசார்யார், ஈசான சிவாசார்யார் முதலான ஆசாரியப் பெருமக்களின் திருவடிகளையும் இத்தருணத்தில் வணங்கிக் கொள்கிறேன்.

சுவாயம்புவ ஆகமத்திற்கும், ரௌரவ ஆகமத்திற்கும் உரை எழுதியும் தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை,

நாதகாரிகை, மோக்ஷ காரிகை முதலான காரிகை நூல்களை எழுதியும் ஆகமநெறி தழைக்கச் செய்த சத்யோஜோதி சிவாசாரியாரின் திருவடிகளையும் வணங்கிக் கொள்கிறேன்.

கோவிலில் பணியாற்றுவதில் மட்டுமல்ல, கோவிலையே உருவாக்கிக் கட்டிக் கொடுப்பதிலும் ஆதிசைவ மரபினர் வல்லமையும், திறமையும் மிக்கவர்களே, என ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் மெய்ப்பித்துக் காட்டிய சிவாசாரியப் பெருந்தகையே சர்வாத்ம சம்பு சிவாசாரியார் என்பவர். இவரால் கட்டப்பட்ட சிவாலயம், இன்றும் வந்தவாசி வட்டத்துத் தெள்ளாறு அருகே ஒரு சிற்றூரில் உயிர்ப்புடன் விளங்கிக் கொண்டிருக்கிறது. நாட்டின் நன்மைக்காகச் சிவாலயத்தைச் சிறப்புறக் கட்டித் தந்த இந்தப் பெருந்தகையின் திருப்பாதங்களையும் வணங்கிக் கொள்கிறேன்.

ஸ்கம்ப ஸூக்தம், கால ஸூக்தம் முதலான வேத ஸூக்தங்களுக்கும், ஸ்ரீருத்ரம் என்பதற்கும், காரண ஆகமத்தின் பூர்வபாகப் படலங்களுக்கும், பகவத்கீதைக்கும் மிகமிக அற்புதமான பாஷியம் எழுதி விஞ்ஞான நுட்பங்களை வெளிப்படுத்திய ஸ்ரீமத் ஸர்வக்ஞான ஹிருதய சிவாசாரியார் எனும் உத்தமப் பெருந்தகையின் திருப்பாதங்களை இத்தருணத்தில் வணங்கிக் கொள்கிறேன். (ஸர்வக்ஞான ஹ்ருதயன் என்பது முருகப்பெருமானின் திருப்பெயர்களுள் ஒன்று)

சிவாகமங்களின் சரியை முதலான நான்கு பாதங்களிலும் கூறப்பட்டுள்ளனவற்றின் சாரத்தைப் பிழிந்து எடுத்து, தாத்பர்ய முரண்பாடு ஏற்படாத வகையில் "சித்தாந்த சாராவளி" என்னும் அருமையான கிரந்தத்தைப் படைத்துள்ள திரிலோசன சிவாசாரியார், சித்தாந்த சாராவளிக்கு உரியமுறையில் பாஷியம் எழுதியுள்ள அனந்த சிவாசாரியார் ஆகியோரின் திருப்பாதங்களையும் இத்தருணத்தில் வணங்கிக் கொள்கிறேன்.

மற்றும், தம் பெயரையும் மகிமையையும் வெளிப்படுத்திக் கொள்ளாமல், "இலைமறை கனிகளாக" இருந்து கொண்டு, ஆதி சைவ மரபுக்குரிய தர்மங்களையும் சீலங்களையும் ஆகமங்களையும் பரிபாலித்துக் கொண்டு வருகின்ற சிவாசாரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் போற்றுதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சிவாகமங்களும் சிவதீக்ஷைகளும்

சிவாகம கலாநிதி, சிவாகம செல்வர்
சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாசார்யார்
முதல்வர், சிவபுரம் வேத சிவாகம பாடசாலை,
மயிலாடுதுறை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவாகமங்களும் சிவதீக்ஷைகளும்

சிவாகம கலாநிதி, சிவாகம செல்வர்
சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாசார்யார்
முதல்வர், சிவபுரம் வேத சிவாகம பாடசாலை,
மயிலாடுதுறை.

அம்மானே ஆகம சீலர்க் கருள் நல்கும்
பெம்மானே பேரருளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி யம்மானே.
(சுந்தரர்)

ஆரண மாகமங்கள ருளினா லுருவு கொண்டு
காரணன் அருளா னாகில் கதிப்பவர் இல்லையாகும்
நாரணன் முதலாயுள்ள சுரர் நரர் நாகர்க்கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே.
(சித்தியார் சுபக்கம்)

உலக நாயகனாகிய சிவபெருமான் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங்கருணையினால் அவை உய்தற் பொருட்டு வேதாகமங்களையருளிச் செய்திருக்கிறார். இவற்றில் வேதம் பொது எனவும், சிவாகமங்கள் சிறப்பு எனவும் வழங்கப் பெறுகின்றன. ஆன்மாக்கள் மலபந்தங்களினின்றும் நீங்கி இம்மையில் சுகானந்த வாழ்வும், அம்மையில் பேரானந்தப் பெருவாழ்வும் பெற வழி கூறும் நூல்களாக அமைந்துள்ளன சிவாகமங்கள். வினை நீக்கமும் வீடு பேறும் அருளுவது சிவபெருமானேயன்றி மற்றைத் தெய்வங்களால் இயலாது என்பதைக் கருத்தில் கொண்டே,

"சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில் சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச்
செம்பொருள்

வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாள் எம்
உயிர்த்துணையே"

சிவபெருமானை வழிபட்டால் பாசநீக்கம் பெறும் இயல்பினை,

"பாச வல்வினை தீர்த்த பண்பினன்"

"பாசமான களைவார்"

"வந்தித்திருக்கும் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித்திருக்கும் பாவந்தீர்க்கும் பரமன்"

"திறம் கொண்ட அடியார் மேல் தீவினை நோய் வாராமே
அறம் கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான்"

என வரும் ஞானசம்பந்தரது திருவாக்குகளாலும்,

"உள்ளம் உள்கி உகந்து சிவன் என்று
மெள்ள உள்க வினை கெடும் மெய்மையே"

எனும் வாகீசப் பெருமானது திருவாக்கினாலும், இன்னும் பிறதமிழ்வேத ப்ரமாணங்களினாலும் அறியலாம், இனி, பாசநீக்கம் பெற மெய்யுணர்வும், உண்மையறிவினால் சிவ பூசையும், பூசையினால் பேரின்பமும் அடையும் வழி கூறும் நூல்களாக அருளிச் செய்யப்பட்டவையே சிவாகமங்களாகும். வேத சிவாகமங்களே பதி சாஸ்திரம் எனவும், மற்றயவை பசு சாஸ்திரம் எனவும் உள்ளதாம். சித்தாந்த சைவ சமயத்திற்கு வேதாகமங்களே ப்ரமாணமாகக் கொள்ளப்பட்டு "வைதிக சைவம்" எனப் பெயருடையதாயிற்று. வேதாகமங்கள் பதிசாஸ்திரமாவது எவ்வாறெனில் ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டாலன்றி, அவற்றிற்கு மலநீக்கமும், வீடுபேறும் கிட்டாது எனும் பெருமானின் கருணை வெளிப்பாடே வேதாகமங்கள் என்பதனால் அறியலாம், இதனை

"தொகுத்தவன் அருமறையங்கம் ஆகமம்"

"மறையும் பல பாடி மயானத்து உறையும்"

"நுணங்கு மறை பாடி"

எனும் திருஞானசம்பந்தப் பெருமானது திருவாக்குகளாலும்,

"நான்மறையோடு ஆறங்கம் சொன்னார்தாமே"
"பாடினார் சாமவேதம்"

எனும் நாவரசரது திருவாக்குகளாலும்,

"அண்டர் தமக்கு ஆகமநூல் மொழியும் ஆதியை"

எனும் சுந்தரர் திருவாக்கினாலும், இன்னும் பிற பிரமாணங்களினாலும் அறியலாம்.

எனவே சிவ பெருமானே வழிபடத்தக்கவர் அவரது வழிபாட்டிற்குச் சிவாகமங்கள் மட்டுமே விதி நூல் என்பது சைவத்தின் மரபாகும். இனி சிவபெருமானது வழிபாட்டிற்குச் சிவாகமங்கள் மட்டுமே விதி நூல்களாயிருத்தல் வேண்டுமோ எனில், இதற்கு அவர் அருளிய சிவாகமங்களிலேயே சான்றுகள் காணக்கிடைக்கின்றன. சிவசாஸ்திரம், வேதஸாரம், ஆகமம், சிவாகமம், சித்தாந்தம், ஆப்தவாக்யம் எனும் சிறப்பு பெயர்களால் போற்றப்படும் சிவாகமங்களையும், வேதங்களைப் போன்றே எழுதாக்கிளவியாக சித்தாந்தம் எனும் அளவில் சிவபரம்பொருள் முதலில் உமையம்மைக்கும், பின்னர் விஷ்ணுமூர்த்திக்கும் உபதேசித்தருளினார். இதுவே "ஆகமம்" எனும் பெயர் வரக்காரணமாயிற்று.

"ஆகதம் பஞ்ச வக்த்ராத்து கதம் ச கிரிஜாநதே
மதம் ச வாஸுதேவனே ஆகம இத்யபிதீயதே"

(காமிகாகமம்)

இதன் பொருள்:-

ஆகதம் பஞ்ச வக்த்ராத்து	=	சிவபெருமான் திருவாய் மலர்ந்ததருளியது
கதம் ச கிரிஜானனே	=	உமையம்மையால் கேட்டருளப்பட்டது
மதம் ச வாஸுதேவனே	=	மஹாவிஷ்ணுவினால் ஏற்றுப்போற்றப்பட்டது.

மேற்கூறிய மூன்று வரிகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்தால் ஆகமம் என்ற சொல் வருவதையே காமிகாகமம்

கூறுகிறது. சிவாகமம் ஒரே நூலாயில்லாமல் இருபத்தெட்டாக இருப்பதனால் இவை ஒன்றே பலவாக விரிந்து ஒருமுகப்பட்டக் கருத்தினைக் கூற இயலுமோவெனில்,

"ஈசான வக்த்ராத் ஊர்த்வஸ்தாத் ஞானம்
யத்காமிகாதிகம்|
தசாஷ்டாதச பேதேன சிவருத்ர அவதாரகை:||
ஷட்ஷஷ்டிபி: க்ரமேணைவ கதிதம் து சிவாக்ஞயா|
ததைவ யுகபேதேன ஸத்யோஜாதாதி மூர்த்திபி:|| "

(காமிகாகமம் - தந்த்ராவதாரவிதி படலம்)

இதன் பொருள் :-

பெருமானிடத்து உபதேசம் கேட்டோரின் பக்குவத்திற் கேற்ப வேறு வேறு காலங்களில் வேறு வேறு சூழ்நிலைகளில் சிவபெருமான் தாமே மீண்டும் உபதேசித்து அருளியவாறு: உமையம்மைக்கு அருளிய நிலையில் ஸூக்ஷ்மா=பரா எனும் நாதவடிவிலும், (நுண்ணுணர்வு மிக்க ஞானசக்தியாதலால் நாதத்திலேயே ஆகமம் அருளிச் செய்யப்பட்டது) ஸதாசிவ வடிவில் நின்று பச்யந்தீ எனும் பிந்து வடிவில் அநந்தேச்வரர் ஆகிய விஷ்ணு மூர்த்திக்கும், அதே வடிவில் நின்று மத்யமா எனும் எழுத்து வடிவ உபதேசமாக ஸ்ரீகண்டருத்ரருக்கும் உபதேசித்தருளி, உலகத்தவருக்குச் சென்றடையும் பொருட்டு தமது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் எனும் ஐந்து திருமுகங்களினாலும், ப்ரணவர் முதலிய அறுபத்தறுவர்க்கும் முன் கூறியது போல் பெருங்கருணைத் திருவுள்ளம் கொண்டு தாமே மீண்டும் அருளிச் செய்திருக்கிறார். உபதேசித்தருளியது ஒருவர், உபதேசம் கேட்டது பலர், கேட்டவர்கள் அனைவரும் ஒரே சமயத்தில் உபதேசம் பெற்றாரில்லை. இதனை மேற்குறிப்பிட்ட சுலோகத்தில் வரும் "யுகபேதேன" அதாவது பல யுகங்களில் அந்தந்த யுகதர்மத்திற் கேற்றவாறும் கேட்டோரின் பக்குவநிலைக்குத் தக்கவாறும் விரித்தும், சுருக்கியும் ஆகமம் எனும் செம்பொருள் உபதேசிக்கப்பட்டு காமிகம் முதலான இருபத்தியெட்டுத் திருநாமங்களைத் தாங்கி ஞானக்கருவூலங்களாக நம்மை நெறிப்படுத்துகின்றன.

மேலும், "யுகபேதேன" என்பதற்குச் சிலபுராணச்செய்திகள் பின்னர் ஆகமங்களில் வருதற்கும் காரணமாயிற்று எனலாம்.

"சிந்தாமணிரிவ ப்ராஜி சைகதா பஹுதா திசேத்|

யத்யப்யேகோ பவேத்வக்தா ச்ரோத்ரு பேதாதநேகதா||"

(காமிகாகமம்)

இதன் பொருள்:-

சிந்தாமணி எனும் மிக்க ஒளிபொருந்திய மணியானது எப்படி ஒன்றேயாயினும் பலவாய் ஒளி வீசுமோ, அதுபோல சிவாகமங்கள் ஞானஜ்யோதிர் மயமான சிவபெருமான் ஒருவரிடத்தே தோன்றியனவாயினும் கேட்டோர் பலரானதால் பலவாய் ஒளிர்கின்றன. இனி யுகதர்மத்திற்கேற்றவாறு என்று கூறியதால் மூலச் செம்பொருள் முழுமையாய் கிடைத்திலதோ எனலாம். சிவாகமங்கள் ஒவ்வொன்றும் பல லக்ஷம் கிரந்தங்கள் (இவ்விடத்துச் செய்யுள் எனப்பொருள்) கொண்டவை. பின்னர் ஸனகாதி முனிவர்கள் ஸ்ரீகண்ட பரசிவத்தினின்றும் உபதேசம் பெற்று இக்கால ஒழுகுதலுக்கு ஏற்ப குரு சிஷ்ய பரம்பரையாக அருளிச் செய்துள்ளார்கள். திருமுறைக்கண்ட புராணச் செய்தியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. தில்லையில் நம்பியாண்டார் நம்பிகளும், இராஜராஜசோழரும் திருமுறை ஆசிரியர்கள் மூவரையும் எழுந்தருளப்பண்ணி தில்லை மூவாயிரவரொடும் சென்று திருமுறைகள் பாதுகாக்கப்பட்ட அறையினைத் திறக்க, சுவடிகளின் ஒரு பகுதி கரையான் புற்று மூடப்பட்டிருப்பதைக் கண்டும் அளவிலா ஏடுகள் பழுதாகியிருப்பதைக் கண்டும் மனம் நொந்தனர்.

"ஏந்து புகழ் வளவன் இவ்வாறன்பினாலே
இடர்க்கடலின் கரைகாணா திணையுங் காலைச்
சாந்தமலை மகள் கொழுநனருளால்
"வேத சைவநெறித் தலைவரெனு மூவர் பாடல்
வேய்ந்தனபோன் மண் மூடச்செய்தே ஈண்டு
வேண்டுவன வைத்தோ" மென்றுலகிலுள்ள
மாந்தரொடு மன்னவனுங் கேட்குமாற்றால்
வானகத்திலோசை எழுந்ததன்றே"

(உமாபதி சிவம்-திருமுறைக்கண்டபுராணம்)

என்றவாறு "ஈண்டு வேண்டுவன வைத்தோம்" என பெருமானின் அசரீரி அருளியது.எனவே இதுகாறும் சிந்தித்ததனடிப்படையில் இருபத்தியெட்டு ஆகமங்களும், கர்மமார்க்க ஞான-மார்க்கங்களைப் போதிக்கும் ஞான நூல்களாகப் பரமசிவம் துவங்கி சந்தானக்ரம சம்ப்ரதாயம் இடையறாது குருசிஷ்ய பாரம்பர்யமாய் இன்றளவும் வருகிறபடியாலும், மாறுபட்டக் கருத்துக்களைத் தாங்கி நில்லாது ஒருமுகப்பட்ட செம்பொருள் வாய்மை வைத்த ஞானக்கருவூலங்களேயாம். இனி ஆப்தர் அருளிய ஆப்த வாக்கியங்களாகிய சிவாகமங்களே சித்தாந்த சைவத்தின் பிரமாண நூல்கள் என்றவாறு. காருடம், பூததந்த்ரம், பைரவம், நியாயம் உலோகாயதம், மீமாம்சகம், பௌத்தம், ஆருஹதம் எனப் பெருமான் அருளிச் செய்துள்ள சாஸ்திரங்கள் எண்ணிலடங்கா. மேலும் இவை சித்தாந்த சைவத்திற்குப் புறம்பாயினும், ஞானநூல் என்ற அளவில் சிவனருள் பற்றியே தோன்றின. சிவ சமவாதிகள், மாயாவாதிகள், ஏகான்மவாதிகள் போன்ற சைவப்புறம்பிகள் இந்நூல்களுக்குத் தங்கள் கருத்துக்கு ஏற்புடைய உரைகளையெழுதியும், முப்பொருள் உண்மையை மறுத்தும் எழுந்தார்கள். கடலிலிருந்து ஒரு சொம்பு நீர் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, அச்சொம்பு நீரே சமுத்திரம் என ஏதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் வாதிடுவார் போல வேதாகம ஞானப்பெருங்கடலிலிருந்துச் சிதறியத் துளிகளைப் போன்ற மேற்படி நூல்களை வைத்துக் கொண்டு பரசமயங்கள் தோன்றின. அருணந்திசிவாச்சாரியாரின் சித்தியாரில் மேலும் கண்டுகொள்க. இனி சிவபெருமானுடைய ஊர்த்வ முகத்தினின்றும் ஸூக்ஷ்ம நாத வடிவில் முதற்கண் தோன்றியதாலும், சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை எனும் சித்தாந்த சைவக் கொள்கையே ஐயம் திரிபற எங்கும் பொதிந்திருப்பதாலும்,

"சிவேன ஸ்தாபிதம் சைவம் சைவேனஸ்தாபித: சிவ:"

எனும் காரணாகம வசனப்படி "சிவனால் அருளிச் செய்யப்பட்டது சைவம், சைவர்களின் முழுமுதற்கடவுள் சிவன்" எனும் நிலையில் சைவமே தமது உட்கருத்தாகவுடையதும், ஆதலால் சிவாகமங்களே பிரமாணங்களாயின.

"ஹேயோபாதேய வஸ்தூனாம் நிர்ணயே பரமார்த்தத: |
தத்ஸர்வமதரீ க்ருத்ய சைவ ஸித்தாந்த ஈரித: ||"

(காமிகாகமம்)

இதன் பொருள்

ஹேயம் = விடவேண்டியவை
உபாதேயம் = எடுத்துக் கொள்ள வேண்டியவை

இவற்றில் நிர்ணயம் செய்தலில் முழுமையான ஆய்வு செய்யப்படல் வேண்டும். இப்படி எக்காலத்தும் எங்கும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதையே "முடிந்த முடிவு" என்றும், சித்தாந்தம் என்றும் கூறுவர். சிவாகமங்களில் ஞானபாதம் முழுவதும், பெருமானுடைய தடஸ்த-ஸ்வரூப லக்ஷணங்கள் விளக்கப்பட்டு ஆன்மாக்களின் மீது கருணை கொண்டு ஸகள- நிஷ்கள- ஸகளாகள வடிவங்களில் அருள் பாலிப்பதையும், அவரது பெருங்கருணைத் திறத்தையும், மற்றைச் சிறுதெய்வங்கள் பெருமானது அருளாணைத் தாங்கி நிற்றலையும் எடுத்தியம்புகின்றன. ரௌரவாகம பாச விமோசன படலம் பனிரெண்டு சுலோகங்களையுடையது. இதுவே மெய்கண்டார் அருளிய சிவஞானபோத சாஸ்திரத்துக்கு மூலமாயிற்று இதனை, "ஏவம் வித்யாத் சிவஞான போதே சைவார்த்த நிர்ணய:" எனும் பனிரண்டாவது சுலோகத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

இதனை தருமையாதீனத்தில் வெளியிட்ட "சிவஞானபோதத் தெளிவுரை" நூலில், காசிவாசி செந்தில்நாதய்யரின் "சிவஞானபோத வசனாலங்கார தீபம்" எனும் நூலில் காண்க. சிவபரம்பொருளே கடவுள். அவரே தியானிக்கப்பட வேண்டியவர் பூஜிக்கப்பட வேண்டியவர் எனும் சைவத்தின் முடிந்த முடிபாக சிவாகமங்கள் நிர்ணயம் செய்திருப்பதனால் "சைவ சித்தாந்தம்" எனும் சிறப்புப் பெயரை அடைந்துள்ளன. சைவ சித்தாந்த நூல்களாகவும், சித்தாந்த சைவ சமயத்தின் பிரமாணங்களாகவும் உள்ள இருபத்தியெட்டு ஆகமங்களையுமே பெருமான் தமது திருமேனியாகக் கொண்டருள்வதாக அனைத்து ஆகமங்களும் கூறுகின்றன.

"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"

என மாணிக்கவாசகர் கூறியருளியது சிவாகமக் கருத்தன்றோ! இங்கு அண்ணித்தல் என்பது காத்தருளல் என்பதாகும்.

காமிகாதியிருபத்தெட்டு ஆகமங்களின் பெயர்களை-யறியுமாறு :

1. காமிகம்	2. யோகஜம்	3. சிந்தியம்	4. காரணம்
5. அஜிதம்	6. தீப்தம்	7. ஸூக்ஷ்மம்	8. ஸஹஸ்ரம்
9. அம்சுமான்	10. ஸுப்ரபேதம்	11. விஜயம்	12. நிச்வாசம்
13. ஸ்வாயம்புவம்	14. அனலம்	15. வீரம்	16. ரௌரவம்
17. மகுடம்	18. விமலம்	19. சந்திரஞானம்	20. பிம்பம்
21. ப்ரோத்கீதம்	22. லலிதம்	23. சித்தம்	24. சந்தானம்
25. சார்வோக்தம்	26. பாரமேச்வரம்	27. கிரணம்	28. வாதுளம்

இனி சிவாகமங்களையருளிச் செய்த பெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஸ்வயம்பூ, தைவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷகம், ராக்ஷஸம், பாணம், என்னும் எழுவகை லிங்கத் திருமேனிகளைக் கொண்டருளி ஆலயங்கள் தொறும் எழுந்தருளியிருக்கிறார். இவற்றில்,

ஸ்வயம்பு = தானே தோன்றியருளியது

தைவிகம் = உமையம்மை ஸ்தாபித்தது

திவ்யம் = தேவர்கள் வழிபட்டது

மானுஷம் = மனிதர்கள் (அரசர் முதலியோர்) ஸ்தாபித்தது

ஆர்ஷகம் = ரிஷிகளால் பூஜிக்கப்பட்டது

ராஷஸம் = அரக்கர்களால் ஸ்தாபிக்கப்பட்டது

பாணம் = அ) பாணம் மாத்திரம் வைத்து பூஜிப்பது

ஆ) பாணாஸுரனால் பூஜிக்கப்பட்டது

இ) கங்கை-யமுனை- கண்டகி- மானஸ ஸரோவரம் முதலிய புண்யதீர்த்தங்-களில் இருந்து எடுத்து பூஜிப்பது.

இப்படியாக எழுவகை இலிங்கங்களின் இலக்கணங்களைக் காரணாகமம் கூறுகிறது. மேலும், இலிங்க அளவின் ப்ரமாணத்திலேயே ஆலயம் அமைய வேண்டிய முறை

பற்றிச் சிவாகமங்கள் விரித்துக் கூறுகின்றன. பொதுவாகச் சிவாகமங்கள் ஒவ்வொன்றும் நான்கு பாதங்களையுடையன. அவையானவை.

1. சரியா பாதம் 2. கிரியாபாதம் 3. யோகபாதம் 4. ஞானபாதம்

இனி சிவாகமங்களைச் சிந்தித்த வகையில் சரியை கிரியை யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களின் சிந்தனையோடு, இக்கட்டுரையின் மற்றொரு பகுதியாகிய "சிவதீக்ஷையும்" திருவருளும் குருவருளும் துணைநிற்கச் சிந்திக்கப்படுகிறது.

சரியாபாதம்

சரியை என்பது திருக்கோயிலைத் தூய்மை செய்தல், நந்தவனம் அமைத்தல், சிவபூஜைக்கும், சிவனடியார்க்கும் தொண்டு புரிதல், சிவாலயநித்ய பூஜைகளுக்குப் புஷ்பம் சேகரித்துக் கொடுத்தல், திருமஞ்சன நீர் கொணரும் அடியவர்களுடன் பெருமானுடைய திருநாமங்களைப் புகழ்ந்து ஏத்துதல் ஆகியனவாம்.

"போதொடு நீர் சுமந்து ஏத்திப்புகுவார் அவர்பின் புகுவேன்"

என்றும்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

என்றும் நாவுக்கரசப்பெருமான் அருளிச்செய்திருக்கிறார்.மேலும், சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள சரியா பாதத்தில் ப்ராயச்சித்த விதி, பவித்திர உத்ஸவவிதி, சிவலிங்க இலக்கணங்கள், மாஹேச்வரபேர இலக்கணங்கள், அடியவர் இலக்கணங்கள், அவர்களின் உபயோகசாதனங்களாகிய ஜபமாலை, யோகபட்டம், கண்டம், கமண்டலம் முதலானவற்றின் இலக்கணங்களும், அந்தியேஷ்டிவிதி, சிராத்தவிதி முதலியனவும் அமைந்துள்ளன.

கிரியாபாதம்

இப்பகுதி நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அவையாவன,

1. கர்ஷணம் 2. ப்ரதிஷ்டை 3. உத்ஸவம் 4. ப்ராயச்சித்தம்

கர்ஷணம் : நிலத்தை உழுதலைக்குறிக்கும் சொல். ஆலய நிர்மாணத்திற்கு முன்னதாக அஸ்திவாரம் அமைக்க அவ்விடத்தைத் தோண்டுதல், சகுணம் பார்த்துத் தேர்வு செய்தல், வாஸ்து இலக்கண சில்ப இலக்கண முறைப்படி ஆலயம் அமைத்தல் ஆகியனவாம்.

ப்ரதிஷ்டை : பெருமானுடைய இலிங்கத் திருமேனியை, பீடத்தில் நிலைநிறுத்துதலை குறிக்கும் சொல். நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் சிவபெருமானுடைய இலிங்கத்திருமேனி உமையம்மை, விநாயகர், முருகன் மற்றும் பரிவார மூர்த்திகள், சிவபக்தர்கள் ஆகியோரை ப்ரதிஷ்டை செய்யும் ஸ்தானங்களை முதலில் கூறுகிறது. அடுத்து ப்ரதிஷ்டையை= மஹாகும்பாபிஷேக வைபவத்தைச் செய்வதற்கு யாகசாலை அமைக்க வேண்டிய முறை,ஒருகாலம், இரண்டு காலம் எனத்துவங்கி சக்திக்கிசைய யாகபூஜைச் செய்தல்,ப்ரதிஷ்டா மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்து சாத்துதல், அஷ்டமூர்த்தி நியாஸம், ஷடத்வ நியாஸம் முதற்கொண்டு ஸ்பர்சாஹுதி, நாடிசந்தானம் போன்ற மந்திரக் கிரியைக்ளை விளக்கி மஹாகும்பாபிஷேகம் செய்ய வேண்டிய முறையை விளக்குகிறது. மேலும், நித்ய பூஜை (தின வழிபாடு) நைமித்திகபூஜை (ஏதேனும் ஒரு காரணம் பற்றி சிறப்பு வழிபாடு செய்தல்-உத்ஸவம் முதலியனவுமாம்) காம்ய பூஜை (விருப்பினோடு சிறப்பு வழிபாடு - சங்காபிஷேகம் முதலியன) ஆகியவற்றைச் செய்ய வேண்டிய கிரியை முறைகளையும் அதற்குண்டான மந்திரங்களையும் விரிவாகக் கூறியுள்ளன.

உத்ஸவம் : உத்-ஞானம், ஸவம்-ஸ்ருஷ்டி, படைத்தல் முதலிய பெருமானுடைய ஐந்தொழில்களை விளக்கும் நிகழ்ச்சியாகவும், தரிசிப்போருக்கு ஞானம் அளிப்பதாலும் உத்ஸவம் எனக் கூறப்படுகிறது.

நித்யோத்ஸவம் : தினமும் பூஜையின் முடிவில் செய்வது

வாரோத்ஸவம் : வாரந்தோறும், வெள்ளிக்கிழமை, சோமவாரம் முதலிய நாட்களில் செய்வது

பக்ஷோத்ஸவம் : பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி முதலிய நாட்களில் செய்வது

மாஸோத்ஸவம் : மாதந்தோறும் கிருத்திகை, அஷ்டமி மற்றும் சிறப்பு நாட்களில் செய்யப்படுவது

வருஷோத்ஸவம் : வருடந்தோறும் செய்யப்படும் ப்ரம்மோத்ஸவம், ஸ்கந்தஷஷ்டி, ஆடிபூரம், விநாயகர் சதுர்த்தி முதலியன -

ஆகியவற்றின், நிர்ணயங்களும். சிவராத்ரி, நவராத்ரி, ஆகியவற்றின் நிர்ணயங்களும் த்வஜஸ்தம்பத்தின் (கொடிமரம்) இலக்கணம் த்வஜ படத்தில் (கொடித்துணியில்) வரையப்பட வேண்டிய படங்களின் இலக்கணம், திருவிழா நாட்களில் சுவாமி வீதிவலம் வரும் வாகன இலக்கணம் போன்ற அனைத்துச் செய்திகளையும் கூறுகின்றன.

ப்ராயச்சித்தம் : ப்ராய: = மறுபடியும், சித்தம் = நிறைவு செய்தல், அதாவது மேற்கூறிய கர்ஷணம் ப்ரதிஷ்டை, நித்யபூஜை, உத்ஸவம் முதலியனவற்றில் ஏதேனும் குறைகள் ஏற்படின், மறுபடியும் சிறப்புறச் செய்து நிறைவு செய்தல் என்ற பொருளில் வரும் சொல் ப்ராயச்சித்தம்.

சிவதீக்ஷை

மேலும், க்ரியா பாதத்தில் ஆன்மாக்கள் சக்திநிபாதம் பெறும்காலத்தில் அவற்றிற்குத்தாமே (இறைவனே) குருமூர்த்தியாய் எழுந்தருளி சமய, விசேஷ, நிருவாண தீக்ஷைகளைத் தந்தருளும் அற்புதம் பேசப்படுகிறது.தீ-அளித்தல், க்ஷ-அழித்தல், அதாவது ஞானத்தை அளித்து, அறியாமையை அழித்தல் என்றும், ஆன்மாக்களின் மும்மலங்களையழித்து வீடுபேற்றினை அளித்தல் என்றும் தீக்ஷா என்ற சொல்லுக்குப் பல்பொருள் கூறியும், (இவ்விடத்துத் தருமையாதீனம் 26-வது குருமஹா சந்நிதானமாக எழுந்தருளியுள்ள குருமூர்த்திகள்

கொடுத்துக் கெடுக்கும் இத்திறத்தை "குழந்தைகளுக்கு இனிப்புக்கொடுத்துத் திருந்துமாறு அறிவுறுத்தும் தாயின் கருணையை விட மேலானது பெருமானின் பெருங்கருணை" என வியந்து போற்றுவார்கள்) விக்ஞானகலர் ப்ரளயாகலர், சகலர் எனும் மூவகை ஆன்மாக்களின் பேதத்தையும் அவற்றிற்கான தீக்ஷை பேதங்களையும் கூறுகின்றன. ஒரு மலம் உடையோர் விக்ஞான கலர் எனவும், இருமலம் உடையோர் பிரளயாகலர் எனவும், மும்மலங்களையுடையோர் சகலர் எனவும் கூறுமிடத்து, சகல ஆன்மாக்களின் தீக்ஷையில் சிவதர்மிணீ, லோகதர்மிணீ என இருவகையும் கூறுகின்றன.

சிவதர்மிணீ முமுக்ஷுக்கள் எனப்படும் பற்றற்றாற்கும், லோகதர்மிணீ இல்லறத்தாற்க்கும் எனவும், லோகதர்மிணீ தீக்ஷை ஞானவதி, கிரியாவதி என இருவகைப்பட்டு ஞானவதீயாவது சீடனின் அதிதீவிர பரிபக்குவமறிந்த ஆசார்யர் தமது திருக்கண் நோக்கினால் சாக்ஷுஷீ தீக்ஷையும், திருக்கைகளினால் தீண்டி ஸ்பரிச தீக்ஷையும், திருவாய் மலர்ந்து உபதேசித்து வாசிகீ தீக்ஷையும், சீடர்தம் சிரத்தில் பொற்பாத மலர் வைத்துத் திருவடிதீக்ஷையும் என்ற முறைமையில் செய்தருளுவதாம் (திருப்பெருந்துறையில் பெருமான் மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டருளியதை ஓர்க). ஞானவதீ தீக்ஷாவிதியைக் காமிகாகமம் மற்றும் காரணாகமங்கள் சிறப்புறத் தெளிவுபடுத்துகின்றன. இனி கிரயாவதீ தீக்ஷையைப் பற்றிக் கூறுமிடத்து அநேகமாக எல்லா ஆகமங்களுமே விரித்துக்கூறியுள்ளன.. மூலாகம ப்ரமாணங்களைக் கொண்டு பத்ததியாசிரியர்கள் பதினெண்மரும் தீக்ஷாவிதி எனும் நூலை அருளியுள்ளனர். இவற்றில் அகோர சிவாசாரியார், சோ்மசம்பு சிவாசாரியார் ஆகியோரது பத்ததிகளே முழுமையாய் கிடைத்த வகையில் திருவாரூர் நிர்மல மணிதேசிகர் அவர்கள் அகோர சிவாசாரியாரின் தீக்ஷாவிதி கூறும் "க்ரியாக்ர்ம த்யோதி" எனும் நூலுக்கு "ப்ரபா' எனும் வ்யாக்யானம் (பேருரை)எழுதிய வகையில், மூலாகமங்கள், உபாகமங்கள், பத்ததிகள் என எல்லாவற்றிலிருந்தும் ப்ரமாணங்கள் எடுத்தாண்டிருப்பதும், எங்கெல்லாம் ஐயம் நமக்குஎழுமோ அங்கெல்லாம் விடை பகரும் முறையானே தெளிவுபடுத்தி யிருப்பதும் சிவனருளால் நிகழ்ந்த ஓர் அற்புதம் எனலாம். இனி தீக்ஷைப் பெறுதலில்

த்குதியுடையோர் யாவர் எனில் சக்தி நிபாதம் வந்த நால்வகை வருணத்தாருமாம். தீக்ஷைப் பெற்றுச் சமயம் ஒழுகுதலுக்குப் பல பிறவிகளில் செய்த புண்ணியப் பேறே காரணமாகும்.

“வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பி
தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது”.

என்பது அருணந்தி சிவத்தின் திருவாக்கு.

பல பிறவிகளில் செய்த நற்கருமப் பயனாய் இப்பிறவியில் தீய எண்ணங்கள் தோன்றாது. செல்வ வாழ்க்கையில் ஏற்படும் மையலும் (Superiority Complex) வறுமை வாழ்க்கையில் ஏற்படும் சிறுமையும் (Inferiority Complex) இல்லாத பண்பாளரிடத்தில் சிவபெருமான் கருணை நோக்கம் செய்தருள்வார். அந்நோக்கு அவரிடத்துள்ள ஆணவ மலத்தை வீழ்ச்சியுறச் செய்யும் ஆதி சக்தியாய் பதியுமாறு,

“மூலே காலேன பக்வே பததி நரவரே சக்தி ராத்யா
பவேஸ்மின்
த்வேஷோ நிச்ரேயஸேச்சா குருவர பஜனம்
தத்கதேஸோஸ்ய - ஹௌத்ர்யா
பாசான் ஸஞ்சித்ய .....

(சித்தாந்த சாராவளி)

பொருள் : மூலமலமாகிய ஆணவம் காலத்தினால் (பலபிறவிகளால்) பரிபாகம் பெறும்கால், பெருமானுடைய ஆதிசக்தித்திருக்கண் நோக்கு அவ்வான்மாவில் பதியும், அப்பொழுது உலக வாழ்வின் மையல் இயல்பாய் நீங்கும். சைவ அனுஷ்டானங்களில் நற்குருநாதரை உள்ளம் நாடும். இதனையே மலபரிபாகம் என்பர். இவர்களே விருப்புத்தோன்றும், இதனையே மலபரிபாகம் என்பர். இவர்களே சக்திநிபாதம் வந்த உத்தமர்களாவர். இவர்களுக்குச் சிவபெருமான் தாமே குருமூர்த்திகளாய் எழுந்தருளி பாசநீக்கம் செய்து மெய்ஞானம்(தீக்ஷை) உபதேசிப்பார். அதாவது சீடனுக்கு தீக்ஷை செய்விக்கும் ஆசாரியர் சிவோஹம் பாவனையில் நிற்கும் பொழுது அவரைப் பெருமான் அதிஷ்டித்திருப்பார். இப்படிக்கொத்தச் சீடனுக்குக் குண்ட மண்டல வேதிகைகளுடன் செய்யப்படும் தீக்ஷை ஹௌத்ரீ எனப்படும் கிரியாவதீ தீக்ஷையாகும். குண்டம்=ஹோமம், மண்டலம்=ஸர்வதோபத்ரம், ஜ்யோதிர்

லதாலிங்க மண்டலம் முதலியன. வேதிகை=யாகேச்வரன் யாகேச்வரியாக உமாமகேச்வரர்களை கலசங்களில் எழுந்தருளச் செய்யும் மேடை. அதாவது தீக்ஷையின் யாகத்தை காப்பவராக கலசங்களிலும், ஹவிர்பாகத்தை ஏற்றருளுபவராகவும் ஆன்மாவை சுத்திகரிப்பவராகவும்-வாகீச்வரி வாகீச்வரன் சிவாக்னியாக குண்டத்திலும், தீக்ஷையின் சாக்ஷியாக (பதியாக) மண்டலத்திலும், அனுக்ரஹ குருமூர்த்திகளாக ஆசார்யனிடத்தும், பாசமான களைவாராக சீடனிடத்தும் நின்று பாசநீக்கம் செய்தருளும் நிலையில் ஐந்து இடங்களில் பெருமான் எழுந்தருளும் அற்புதமே சிவதீக்ஷையாம். ஹௌத்ர "(ஔத்ரீ) எனும் சொல் யாகத்தினையும் யாகத்தின் தலைவனால் செய்யப்படும் கிரியையும் குறிக்கும். இல்லறத்தார்க்குச் செய்யப்படும் சமய, விசேஷ நிர்வாண தீக்ஷகள் குண்டமண்டல வேதிகைகளுடன் கூடிய ஹௌத்ரீ தீக்ஷையே உத்தமம் என்ற கருத்தினையே சித்தாந்த சாராவளி ச்லோகம் "ஹௌதர்யா அஸ்ய பாசான் ஸஞ்சித்ய" எனக் குறிப்பிடுகிறது. தருமையாதீனத் திருமடத்தின் ஏழாவது ஸந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ.திருவம்பல தேசிக பராமாசாரிய ஸ்வாமிகள் அவர்கள் மூலாகமம், உபாகமம், பத்ததி, ஸ்ம்ருதி, புராண, இதிஹாஸங்களினின்றும், ப்ரமாணங்கள் தொகுத்து "வர்ணாச்ரம சந்திரிகா" எனும் நூல் எழுதி-யுள்ளார்கள். இந்நூலில் தீக்ஷப் பற்றிய அனைத்துச் சங்கைகளுக்கும் ப்ரமாண நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூலினின்றும் சில முத்துக்கள் :

1. நால்வகை, வருணத்தாருக்கும், அவர்கள், சக்திநிபாதம், வந்த, உத்தமர்களாயின் தீக்ஷபெறுதலில் அதிகாரமுண்டு.

2. சிவகீதையெனும் நூலில் ராமருக்கு தீக்ஷையைப் பற்றிச் சிவபெருமான் அருளியதில் "எவருக்குச் சிவபூஜையில் பக்தி ஏற்படுகிறதோ அவர் சிவ தீக்ஷகளுக்குத் தகுதியுடையவர்" என உபதேசித்தக் குறிப்பு.

3. தீக்ஷையில் அக்னி முகமாகச் செய்யப்படும் ஔத்ரீ தீக்ஷயே உயர்ந்தது.

4. தீக்ஷப் பெற விரும்பும் சீடர்களை குருநாதர் ஒரு வருடகாலம் தம்மிடம் வைத்துப் பரிசோதித்தல் அவசியம். ஏனெனில் தீக்ஷக்குப் பிறகும் சீடர்கள் ஸர்வகாரணபூதராகிய

பெருமானிடத்தும், அவர் அருளிய வேத சிவாகமங்களிடத்தும், தீக்ஷாகுருவிடத்தும், நிந்தனையின்றிப் பற்று கொண்டிருக்க வேண்டும் என்ற நிலையில் அவர்களைப் பக்குவப்படுத்து-வதற்காம். இதனை மூலாகம ப்ரமாண ச்லோகத்தின் வாயிலாக இங்கு சிந்தித்தல் நலம்:

"ந நிந்தேத் காரணம் தேவம் ந சாஸ்த்ரம் தேந பாஷிதம்|
ஸ்வகுரும் சாதகம் சைவ லிங்கச்சாயாம் ந லங்கயேத் ||
நாத்யாத் சிவநிர்மால்யம் நதத்யாத் சிவ தீக்ஷிதே |
சிவாக்னி குரு பூஜாச கர்தவ்யா ஜீவிதாவதி || "

இதன் பொருள் :

தீக்ஷையில் மந்த்ரோபதேசம் முடிந்தபிறகுச் சீடனுக்கு உணர்த்தும் வகையில் அவரிடம் ஸத்யப்ரமாணம் பெறும் படியாக இச்சுலோகம் அமைந்துள்ளது. ஸர்வ காரண பூதராகிய சிவபெருமானையும், அவர் அருளிய வேதாகம சாஸ்திரங்களையும், தமது ஆசாரியரையும் தீக்ஷை பெற்ற அடியார்களையும், எக்காலத்தும், எத்தருணத்திலும், எக்காரணம் பற்றியும் நிந்திக்கலாகாது. சிவலிங்க நிழலைத் தாண்டலாகாது. சிவ நிர்மால்யத்தைப் புசிக்கக் கூடாது. சிவதீக்ஷைப் பெற்றவர்களுக்குக் கொடுக்கவும் கூடாது. ஜீவனுள்ள வரை சிவபூஜையும், யாகமும் குரு வழிபாடும் வழுவாது செய்தல் வேண்டும்.

5. சிவ சாஸ்திரங்களாக வேதாகமங்களை ஏற்காதோர் தீக்ஷைப் பெறுதலுக்கும், தீக்ஷையளித்தர்க்கும் ஒரு போதும் தகுதியாகார் எனப் பலவற்றானும் நிருபிக்கிறார்.

"தாந்த்ரிகேண விநா யா து சிவதீக்ஷா ச நிஷ்பலா"

இதன் பொருள் :

"சிவாகம விதியல்லாது செய்யப்படும் சிவதீக்ஷைப் பலனற்றது"எனும் சந்தானாகமவாக்யம் இங்கு சிந்திக்கத்தக்கது.

6. சீடர்களின் இலக்கணம் கூறுவது போல் தீக்ஷையளிக்கும் ஆசார்யர்களின் இலக்கணத்தையும், சிவாகமங்களின் ப்ரமாணங்களுடன் ஐயந்திரிபற நிலைநிறுத்துகிறார்.

"ராகத்வேஷ விநிர் முக்த: க்ருபா குண ஸமன்வித: |
நிர்மமோ நிரஹங்காரோ நிஸ்சம்ஸோ நிர்விகல்பக: ||

தமோ விஹீந: சாஸ்த்ரக்ஞ: பரமார்த்த விசிந்தக: |
ஏதல்லக்ஷண ஸம்யுக்த: ஆசார்யவர உத்யதே" ||

(சிந்தியாகமம்)

இதன் பொருள் :

ஆசை, கோபம் இவைகளினின்றும் விடுபட்டவரும், கருணையுள்ளம் கொண்டவரும், மமதை அஹங்காரம், பொய்யுரை, கீழ்க்குணங்கள் அலக்ஷியம், மேன்மையில்லாத வாசகங்கள் இவைகள் இல்லாதவராயும், சிவ சாஸ்திரங்களறிந்தவரும், அந்நெறி தவறாது நின்று மேலாக பரம்பொருளையே சிந்தித்திருப்பவரும் ஆகிய இலக்கணங்களுடையோரே ஆசார்யர்களாம். இவ்விலக்கணங்கள் சிவஞானிகளுக்கும், இல்லறத்தாருக்கும் பொது எனவும்,

"பௌதிகோபி விசேஷேண தர்மபத்னீ ஸமன்வித:"

சிறப்பாக இல்லறத்தார்க்கு மனைவியுடன் கூடியவரே ஆசாரியராம் எனவும் சிந்தியாகமத்தில் கூறப்பட்டுள்ளதை ப்ரமாணம் காட்டி நிரூபிக்கிறார்கள்.

இனி சமய தீக்ஷையில் பஞ்சகலா ப்ராஸாதமும், விசேஷதீக்ஷையில் அஷ்டகலா ப்ராஸாதமும், நிர்வாண தீக்ஷையில் த்வாதசகலா ப்ராஸாதமும், ஆசார்ய அபிஷேகத்தில் ஷோடச கலா ப்ராஸாதமும் என்ற நிலையில் பஞ்சாக்ஷர மஹா மந்த்ர உபதேசம் செய்யப்படவேண்டும் என்றவாறு :

சிவாகமங்களில் "ஷோடச கலா ப்ராஸாதம்" என்பது மஹா மந்திரமாகக் கருதப்படுகிறது. ஷோடசம்=பதினாறு. கலா=கலைகள், ப்ராஸாதம்= மஹாமந்திரம், மந்திரங்களை உச்சரிக்கும் பொழுது மந்திர ஒலியை நாபியிலிருந்து (தொப்புள்) கிளப்பி இடையில் மந்திரத்தை உச்சரித்தும், அதன் நாத அந்தத்தை உச்சிக்கு மேல் பனிரண்டங்குலத்திலுள்ள த்வாதசாந்தம் வரையில் சென்றடைவதாகவும், நாபியில் "அ" எனும் கலை துவக்கி, த்வாதசாந்தத்தில் "உன்மனா" எனும் பதினாறாவது கலையளவும், மந்திரரோச்சாரணம் செய்து, அக்கலையின் உள்ளிருக்கும் பரசிவத்தினிடம் சென்றடையுமாறும், ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதம் எனும் மூவகை இலக்கணப்படியும் அமைவதே ஷோடசகலா ப்ராஸாதமாகும்.

பதினாறு கலைகள் என்றவாறு,

1. அகாரம்	2. உகாரம்	3. மகாரம்	4. பிந்து
5. அர்த்தசந்திரன்	6. நிரோதினீ	7. நாதம்	8. நாதாந்தம்
9. சக்தி	10. வ்யாபினீ	11. வ்யோமரூபா	12. அநந்தா
13. அநாதா	14. அநாச்ரிதா	15. ஸமனா	16. உன்மனா

என்பனவாகும்.

ப்ராஸாத சந்த்ரிகா, சித்தாந்த சாராவளி, சிவபூஜாஸ்தவம் ப்ராஸாத ஷட்ச்லோகி போன்ற நூல்களை இயற்றியுள்ள ஞானாசாரியார்களும், "ஷோடச கலா ப்ராஸாத ஷட்கம்" அருளிய தருமையாதீனக் குரு முதல்வர் ஸ்ரீ-ல-ஸ்ரீ-குருஞான சம்பந்த மூர்த்திகளும், "ஷோடச கலா ப்ராஸாதம்" பற்றிக் கூறுமிடத்துக் கற்றுத்தெளிய முயலாமல் ஆசாரியரிடத்தில் உபதேச வாயிலாக உணர்வதே உசிதம் என அருளியுள்ளனர். மேலும், பஞ்சாக்ஷர மஹாமந்திரம், 1) தாரபஞ்சாக்ஷரம், 2) ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், 3) ஸ்தூல பஞ்சாக்ஷரம், 4) ஸ்தூல ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், 5) ப்ராஸாத பஞ்சாக்ஷரம், 6) சுத்த பஞ்சாக்ஷரம் என அறுவகைப்படும். சமய தீக்ஷையில் ஸ்தூல பஞ்சாக்ஷரமும், விசேஷ தீக்ஷையில் ஸ்தூல ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரமும், நிர்வாண தீக்ஷையில் ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரமுமாம். பீஜத்துடன் கூடிய (தார பஞ்சாக்ஷரம்) ஸபீஜ பஞ்சாக்ஷரம், முதல் மூவருணத்தவருக்கும், பீஜமில்லாத நிர்பீஜ பஞ்சாக்ஷரம் நான்காம் வருணத்தவர் மற்றும் பெண்களுக்காம். ப்ராஸாத பஞ்சாக்ஷரம் ஆசாரியர்களும் சுத்த பஞ்சாக்ஷரம் யோகிகளும், ஞானிகளும் ஜபிக்கத்தக்கது. எல்லாராலும் ஓதத்தக்க நமச்சிவாய என்னும் ஸ்தூல பஞ்சாக்ஷரமே மூவர் முதலிகளால் பஞ்சாக்ஷரப் பதிகமாக அருளிச் செய்யப்பட்டதையும் ஓர்க.

இனி தீக்ஷையில் ஆன்மா மந்திரக் கிரியைகளால் மலநீக்கம் பெறுமாறு,

சமய தீக்ஷை:-

இதற்கு சாமானிய தீக்ஷை என்று பெயர். சீடன் உலக மையலினின்றும் விடுபட்டு சைவ சமயத்தில் பிரவேசிப்பதை உணர்த்தும் வகையில் இக்கிரியை அமையும். தீக்ஷாமண்டபத்தில்

(யாக சாலை) மேற்கு வாயிலில் சீடனை ப்ரணவாசனத்தில் நிற்க வைத்து திவ்ய திருஷ்டி என்பதனால் ஞானத்திருக்கண் நோக்கம் செய்து சீடனின் பாபங்கள் அகலும் பொருட்டு, "அகமருஷணம்" எனும் மந்திரத்தினால் தர்ப்பைக் கொண்டு ஸம்ஸ்காரம் செய்து, அவரது கண்களைப் பட்டுத்துணியால் கட்டி உலகியல் இன்பங்களில் மயங்கி நில்லாது சமயப்ரவேசம் செய்யப் புகுவாராக அவரது கைகளைப் பிடித்து, யாக சாலைக்குள் தீக்ஷா மண்டபத்தில் பூஜிக்கப்பட்டிருக்கும் பெருமானிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு வடக்குமுகமாக ப்ரணவாசனத்தில் நிற்க வைத்து நேத்ர படத்தை (கண்களைக் கட்டியுள்ள துணியை) அவிழ்த்து மண்டலேச்வரரை தரிசிக்க செய்து, கையில் புஷ்பம் கொடுத்து, மண்டலத்தில் உள்ள ஐந்து லிங்கங்களில் ஏதாவது ஒன்றில் அர்ச்சிக்குமாறு செய்வர். ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்ற ஐந்து லிங்கத்திருவுருவச் சித்திரங்களில் எதன் மீது புஷ்பம் இடப்படுகிறது என்பதனைக் கவனித்து அந்த திருநாமத்தையே அவருக்கு தீக்ஷாநாமமாகச் சாற்றியருள வேண்டும். உதாரணமாக ஈசானலிங்கத்தில் புஷ்பம் விழுந்தால் ஈசானசிவம் என்று ப்ராம்மணர்களுக்கும், ஈசான தேவர் ஈசான கணம் என்று மற்றோருக்கும் நாமகரணம் செய்யப்படும்.

இனி சீடனை குண்ட ஸமீபத்தில் தமதருகே ப்ரணவாஸனத்தில் அமரச் செய்து இடை பிங்களை ஸுஷும்னா எனும் இருவருடைய மூன்று நாடிகளும் இணைந்ததாகப் பாவித்து சீடர் கையில் தர்ப்பைக் கொடுத்து அதன் நுனியை தமது முழந்தாளில் இடுக்கி கொண்டு, சீடரது ஆன்மாவில் சமய சிந்தனை நிலைத்து நிற்கும் பொருட்டு 108 முறை மூல மந்திரத்தினால் ஆகுதி செய்து பிறகு அக்னியிலும் சீடரது சிரஸிலுமாக ஸம்ஹிதா மந்திரங்களால் ஸம்பாத ஹோமம் எனும் ஆகுதி செய்து சீடரது வலது காதில் பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தையும், சமயாசாரங்களையும் உபதேசிப்பது சமய தீக்ஷையாம். இத்தீக்ஷைப் பெற்றவர்களை "சமயீ" எனக் குறிப்பிடுவர். (சைவ சமயீ)

சமயதீக்ஷைப் பெற்ற சீடர் முக்காலமும் திருநீறு பூசி சைவானுஷ்டானம் ஒழுகுதல் அவசியம்.

1. சகளீகரணம் (கரநியாஸம் - அங்கநியாஸம்) செய்தல் "சந்தி மூன்றிலுந்தாபர நிறுத்திச் சகளி செய்து இறைஞ்ச" என சுந்தரரும்,

2. சிரஸில் நீர் புரோக்ஷிப்பதை (தெளித்துக் கொளல்) "வீடுடன் எய்துவார்கள் விதியென்று சென்று வெறிநீர் தெளிப்ப விரலால்" என ஞானசம்பந்தப் பெருமானும்,

3. அர்க்கியம் கொடுப்பதை "கிழக்கே சலமிடுவார் தொழு கேதார மெனீரே" என சுந்தரரும்.

4. முக்கால சந்தியாவந்தனத்தை (அனுஷ்டானம்) "தெரிகாலே மூன்று சந்திதியானித்து வணங்க" என நாவுக்கரசரும் அருளியுள்ளதை உணர்க.

விசேஷ தீக்ஷை:-

சக்திநிபாதம் பெற்ற ஆன்மாக்களின் ஸஞ்சிதம் (பண்டை வினைகள்) ப்ராரப்தம் (உடலின் வினைகள்) ஆகாமியம் (மேலை வினைகள்) ஆகிய மூவகைக் கர்ம வினைகளை நீக்கி அவ்வான்மாவை வாகீச்வரியின் கர்பத்தில் வைத்து வினைநீக்க ஆகுதி செய்து அப்பொழுது ஏற்படும் தீயின் ஜ்வாலை, ஆகுதிப்புகையின் மணம் இவற்றைக் கவனித்து அதனடிப்படையில் வினை விகுதியின் தாரதம்யம் அறிந்து அதற்குண்டான எண்ணிக்கையில் ஆகுதிகளையும் செய்து, மீண்டும் வாகீஸ்வரியின் கர்பத்தில் இருந்து அவ்வான்மாவைப் பிறக்கச் செய்யும் முறையாலே ஆசார்யர் அக்னியிலிருந்து ஆன்மாவையெடுத்து ப்ராணாயாம விதியால் தமது ஹிருதயத்திலும், துவாதசாந்தத்திலும் பெருமானோடு ஒன்ற வைத்துச் சிவமாக்கி மீண்டும் சீடனது ஜீவ ஸ்தானத்தில் வைத்தருளுவர். இவ்விடத்து அஷ்டகலா ப்ராஸாத பஞ்சாக்ஷர உபதேசமும் ஆன்மார்த்த சிவபூஜை எழுந்தருளப் பண்ணிக் கொள்ளும் உபதேசமும் செய்தருள்வர்.

ஆன்மாவிற்குக் கர்மவினை நீக்கமும் மறுபிறப்பும் நிகழ்த்தப் பெறுதலால், ஆசார்யர் யோகப் பயிற்சி சாமர்த்தியராக இருந்தாலும் கூட, சீடனுடைய ஆன்மாவை (உயிரை) அவரது உடலிலிருந்து எடுப்பதும், சிவாக்னியின் பிறப்பிடமாகிய வாகீச்வரியின் கருப்பையில் மீண்டும் பிறக்கச் செய்வதும், தமது

இதயம் மற்றும் துவாதசாந்தத்தில் சிவனொடு ஒடுக்கியும், மீண்டும் சீடன் இரண்டாவது பிறப்பாளனாக உயிர்ப்பிக்கச் செய்வதுமாகிய இவ்வற்புதக் கிரியைகள் சிவனது திருவருளாலேயன்றி ஒருக்காலும் நிகழாது.

இதனை,

"பண்டை வினைகள் அறுப்பாய் போற்றி" (ஸஞ்சிதம்) முன்வினை

"உடலின் வினைகள் அறுப்பாய் போற்றி" (ப்ராரப்தம்) நிகழ்வினை

"மேலை வினைகள் அறுப்பாய் போற்றி" (ஆகாமியம்) எதிர்வினை

என நாவுக்கரசப் பெருமான் அருளியுள்ளதையும் ஓர்க.

விசேஷித்த கர்மாக்களினாலே செய்யப்படுவதால், விசேஷ தீக்ஷை"யெனவும், வாகீச்வரியின் புத்திரத்துவத்தையடைந்ததால் சீடனை "புத்ரகன்" எனவும் சிவாகமங்கள் கூறுகின்றன.

நிர்வாண தீக்ஷை:-

முன்னை வினைவசத்தினால் பெற்றோர்களின் அழுக்கினின்றும் இவ்வுடலைப் பெற்று ஆன்மாக்கள் பிறப்பெய்துகின்றன. ஆணவ மலத்தினால் பிறவியும், கர்மமலத்தினால் உடலும், மாயா மலத்தினால் வாழ்வெனும் மையலில் உழலுதலும் ஆகியன உயிர்களுக்கு வாய்க்கின்றன. ஏனைய சமயங்களுக்குக் கிட்டாத இவ்வறிய உண்மையை சித்தாந்த சைவம் எட்டியிருப்பதாலேயே,

"சைவத்தின் மேல் சமயம் வேறில்லை"

எனவும்,

"சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது"

எனவும் ஆன்றோர் அருளியுள்ளனர்.

இனி ஆன்மாக்கள் பேரின்பமாகிய பெருமானுடைய திருவடிகளையடையத் தடையாயிருப்பவை மும்மலங்கள். ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களும் "பாசம்" எனும் ஒரு சொல்லால் சைவ சித்தாந்தத்தில் குறிப்பிடப்படுகின்றன. குளத்தின் உள்ளே இருக்கும் தெளிந்த நீர் வெளியே தெரியவொட்டாது பாசம் (பாசி) படர்ந்திருப்பின் பாசிக்குளம் எனப்

பெயர் பெற்று இயல்பு மறைவது போல் மும்மலசம்பந்த முடையதால் அனாதியாயினும் உயிர்கள் நிலையற்றவைகளை நிலையானவையாகக் கருதி இடர்படுகின்றன. இயல்பாகிய அறுகுணங்கள் மலங்களாகிய பாசத்தினால் மறைந்து நிற்கும். சற்று விரித்துக் கூறின் எண் குணத்தான் என்பது பெருமானுக்கேயுரிய திருப்பெயர்.

"ஸர்வக்ஞதா த்ருப்திரநாதி போத:
ஸ்வதந்த்ரதா நித்ய மலுப்த சக்தி:
அனந்த சக்தி:ச நிராமயான்மா
விஶுத்த தேஹஸ்ஸ ஶிவத்வமேதி"

(ஸர்வ ஞானோத்தராகமம்)

இதன் பொருள்:-

ஸர்வக்ஞத்வம்	-	முற்றறிவுடைமை
த்ருப்திமத்வம்	-	வரம்பிலின்பமுடைமை
அநாதிபோதத்வம்	-	இயற்கையுணர்வு
ஸ்வதந்த்ரத்வம்	-	தன்வயமுடைமை
அலுப்தச்க்திமத்வம்	-	பேரருளுடைமை
அனந்தசக்திமத்வம்	-	முடிவிலாற்றலுடைமை
நிராமயான்மா	-	இயல்பாகவே பாசமின்மை
விசுத்ததேகத்வம்	-	தூயவுடலுடைமை

ஆகிய எண்குணங்களுடையவராதலின் எல்லாவற்றையும் கடந்தும் எல்லாவற்றிற்கும். ஈசனாகி "சிவம்" எனுத் திருநாமத்தில் அருளுகிறார். மேற்கூறிய எண்குணங்களில் கடையிருகுணங்கள் தவிர மற்றய அறுகுணங்கள் ஆன்மாக்களுக்கும் பொருந்தும்.

"பதியைப் போல் பசு பாசம் அநாதி" என்பார் திருமூலர்.

இதனுள் "ஸஹஜமலம்" எனப்படும் ஆணவ மல சம்பந்தமுடையதாகிய உயிர் கர்மாக்களைச் செய்து (கன்மவினை) மாயையில் பட்டு உழலுதலால் "நிராமயான்மா" (இயல்பாகவே

பாசமின்மை) எனும் குணத்தையிழந்தும், இளமை முதுமையெனும் நோய்த்தாக்கம் உள்ளதால் "விசுத்த தேஹத்துவம்" (தூய உடம்பினனாதல்) எனும் குணத்தை-யிழந்தும் தமக்கு இயல்பாக அறுகுணமுடைமையை அறியாமல் உள்ளன.

"தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்பார் மெய்கண்டார்.

இனி சமய தீக்ஷையில் ஆணவமல பரிபாகமும் விசேஷ தீக்ஷையில் கர்ம மல பரிபாகமும் பெற்ற நிலையில் அச்சீடரை ஒருவருட காலம் பரிசோதித்த பிறகு நிருவாண தீக்ஷயளிக்குமாறு, சமய விசேஷதீக்ஷகளைப் பெற்றோர் சைவானுஷ்டானங்களையும், சிவபூஜையையும் இடையறாது செய்தல் வேண்டும். அப்படிச் செய்வாராயின் மலபரிபாகமும் சக்திநிபாதமும் அவரிடம் நிலைபெறும். அதன் கண்ணே பிறப்பில் வெறுப்பும் வீடுபேற்றில் விருப்பும் தோன்றும். இப்பக்குவம் அறிந்தே ஆசாரியர் நிருவாண தீக்ஷயளித்தருள உறுதி செய்யும் பொருட்டு ஒரு வருட காலம் பரிசோதித்தல் எனக் கூறப்பட்டது. உலக வாழ்க்கையெனும் மையலில் (மாயாமலம்) இருந்து விடுதலை பெறாதநிலையில் உண்மையறிவும், வீடுபேற்றின்பமும் கைக்கூடாது. பெருமானுடைய திருக்கண்ணோக்கினால் ஆணவ மலநீக்கமும் (சமயதீக்ஷ) வாகீச்வரியின் கருப்பையடைந்து மறுபிறவி எடுத்தலினால் (விசேஷ தீக்ஷ) கர்ம மல நீக்கமும் பெறும் ஆன்மா மாயா மலநீக்கம், பெறுதலே நிர்வாண தீக்ஷயாம். நிர்வாணம் = மோக்ஷம், விடுதலை. பாசங்களினின்றும் விடுதலைப் பெற்று மெய்ஞானம் அடைவிப்பதும், மாயா காரிய சம்பந்தமுடைய உலகினின்றும் விடுதலையடைந்து பெருமானுடைய திருவடி நிழலாகியப் பேரானந்தப் பெருவாழ்வு அடையச் செய்வதுமாகிய இக்கிரியையே நிர்வாண தீக்ஷயாம். இதற்கு "அத்வசோதனம்" எனும் பெயருமுண்டு. "அத்வ" என்றால் வழி. சோதனம்" என்றால் சுத்திகரித்தல். வழி எனும் அத்வா அறுவகைப்படும். (1) மந்திராத்வா (2) பதாத்வா (3) வர்ணாத்வா (4) புவனாத்வா (5) தத்வாத்வா (6) கலாத்வா. இந்த அறுவழிகளிலும் சுத்தி செய்யப்படும் கிரியையாதலின் அத்வசோதனமாயிற்று. இவற்றில்,

1. ஈசான முதல் அஸ்திரமீறாயுள்ள மந்திரங்கள் பதினொன்றும் மந்திராத்வா.
2. ஓம் எனத்துவங்கி வ்யோமவ்யாபினே முதலாக உள்ள பதங்கள் எண்பத்தொன்றும் பதாத்வா.
3. "அ"காரம் துவங்கி "க்ஷ"காரம் ஈறாயுள்ள எழுத்துக்கள் ஐம்பத்தொன்றும் வர்ணாத்வா.
4. ஊர்த்வ காமினீ துவங்கி அநாச்ரிதா வரையிலான புவனங்கள் 224-ம் புவனாத்வா.
5. ப்ருதிவிதத்துவம் முதல் சிவதத்துவம் ஈறாயுள்ள முப்பத்தாறு தத்துவங்களும் தத்வாத்வா.
6. சாந்தியதீதா, சாந்தி, வித்யா, ப்ரதிஷ்டா, நிவ்ருத்தியாகிய கலைகள் ஐந்தும் கலாத்வா.

இனி யாக மண்டபம் அமைத்து குண்டமண்டல வேதிகைகளுடனே ஆயத்த விதிகளை வழுவாது செய்து நிர்வாண தீக்ஷையளிக்குமாறு.

ஆசார்யர் சமய, விசேஷ, தீக்ஷைகிரியைகளில் செய்தவாறு யாகத்தைக் காப்பவராக (யாகேச்வரன்) கலசங்களிலும், தீக்ஷையின் சாக்ஷியாக மண்டலத்திலும், யாகத்தை ஏற்றருள்பவராக குண்ட அக்னியிலும் அனுக்ரஹமூர்த்தியாக தமது ஆன்மாவிலும், மலநீக்கம் செய்தருள்பவராக சீடரது ஆன்மாவிலுமாக ஐந்திடங்களிலும் பெருமானை வழிபட்டு அவரது அனுமதி பெற்று விதிப்படி ஆகுதி செய்வர். குண்டத்தின் அருகில் ப்ரணவாசனத்தில் சீடரை நிற்க வைத்து அவரது சிரஸிலிருந்து பாதம் வரையிலாக வெண்பஞ்சு நூலொன்றினைத் தொங்கவிடுவர். இதற்குப் "பாசசூத்திரம்" எனப் பெயர். இதில் ஐந்து இடங்களில் மஞ்சள் குங்குமத்தினால் அடையாளம் செய்து கொள்வர். பாதத்திலிருந்து முழந்தாள் வரை நிவ்ருத்திகலையாகவும், முழந்தாளிலிருந்து நாபி வரை ப்ரதிஷ்டா கலையாகவும், நாபி முதல் ஹிருதயம் வரை வித்யா கலையாகவும், ஹிருதயம் முதல் புருவமத்தி வரை சாந்தி கலையாகவும், புருவ மத்தி முதல் உச்சிவரை (ப்ரம்ம ரந்திரம்) சாந்தியதீத கலையாகவும், அந்நூலில் பரவி நிற்பதாக எண்ணி முன்கூறிய

அத்வாக்கள் ஐந்து கலைகளிலும் பிரிந்து நிற்பனவாகவும், கீழுள்ளவற்றை மேலுள்ளவை சுத்திகரிக்கும் ஆற்றலுடையவை என்றும் எண்ணி அவற்றிற்குரிய மந்திரங்களினால் பாசசூத்திரத்தில் பூஜித்தும், அக்னியில் ஆகுதி கொடுத்தும் முதற்கண் அத்வாக்களைத் திருப்தி செய்வர். இது முதல்நாள் மாலைநேர நிகழ்வாகும். இரவு ஹவிஸ் அன்னத்தின் மீதியை மாத்திரம் சீடரைப் புசிக்கச் செய்து தர்ப்பையின் மேல் சூலபாணியின் காவலில் உறங்குமாறு அதற்குரிய மந்திரத்தையும் உபதேசிப்பர். இரவில் சீடர் கனா கண்டிருந்தால் குருநாதரிடத்தில் மறுநாள் காலை தெரிவிப்பர். சுபமாயிருந்தால் திருவருளை மகிழ்ந்தும் அசுபமாயிருந்தால் ப்ராயச்சித்த ஹோமமும் செய்வர். இரண்டாம்நாள் காலைநேர யாகத்தில் முதலில் மேற்படி கிரியையைச் செய்தபிறகு மீண்டும் முன்போல் சீடரது சிரஸிலிருந்து பாச சூத்திரம் தொங்கவிடப்படும். ஐந்து கலைகளிலும் அத்வாக்களைப் பூஜித்தும் ஆகுதி கொடுத்தும் ஒவ்வொரு கலையாக சுத்தி செய்வர். நிவ்ருத்தி கலை சுத்தமாகி ப்ரதிஷ்டாகலையில் ஒடுங்கும். அந்த மட்டில் பாதத்திலிருந்து முழந்தாள் வரையிலான பாச சூத்திரத்தை மந்திரத்தால் சுத்தி செய்யப்பட்டக் கத்திரிகோலால் அறுத்து அதனை பூர்ணாஹுதி செய்யும் கால் சீடரது நிவ்ருத்திகலைப் பாசம் அழிந்ததாக எண்ணுவர். இதுபோல் ஒவ்வொரு கலையையும் சுத்தி செய்தும் பூர்ணாஹுதியிலிட்டு அனைத்து மாயா பாசங்களும் அழிந்து மாயா மல விடுதலையானது நிகழ்த்தப்பெறும்.

இனி, ஒவ்வொரு கலைச் சுத்தரிக்கப்படும் பொழுதும் சீடரது ஆன்மாவானது, கிரஹணத்திலிருந்து விடுபடும் சந்திரனைப் போல கொஞ்சம் கொஞ்சமாக ஒளிர்வதை ஞானிகளாகிய ஆசார்யர்கள் உணர்வர். மேலும் ஒவ்வொரு கலைச்சுத்தியிலும் சீடரது ஆன்மாவைத் தமது ஹிருதயத்திலும், வாகீச்வரி கருப்பையிலும் மாற்றி மாற்றி வைத்துப் பூஜித்தும் ஆகுதி கொடுத்தும் சுத்திசெய்து சீடரது சரீரத்தில் வைப்பர். இதனால் இளைப்புறும் அவ்வான்மாவிற்கு ஊக்கம் தரும் வகையில் விசேஷார்க்கிய ஜலத்தைச் சீடர் மேல் தெளிக்குமாறும். பரவசமிகுதியினால் மூர்ச்சையடைந்தால் பால் அல்லது இளநீர் இவைகளைப் பருகுமாறு செய்யலாம் எனவும், பரமகருணா

மூர்த்தியாகிய பெருமான் ஆகமங்களின் வாயிலாக அருளிச் செய்துள்ளார்.

"கேழில் பரங்கருணை" இதுவன்றோ !

இனி மும்மலங்களின்றும் நீங்கிய சீடரது ஆன்மா சுத்தஸ்படிகம் போல் ஒளிர்வதாக எண்ணி மாயேயம் பைந்தவம் ஆகிய மலங்களும் நீங்குதற் பொருட்டு அவரது சிரஸிலிருந்தும் ஒரு முடியைக் கத்தரித்துக் கோமயத்தில் வைத்து அக்னியில் பூர்ணாஹுதியாகச் செய்து அது பஸ்மமாகும் மட்டும் மூலமந்திர ஹோமம் செய்வர். பிறகு சீடரும் தாமும் ஸ்நாநத்தினால் சுத்தமாகும்படிச் செய்து "சிஷ்ய சிவத்துவம்" எனும் கிரியையைச் செய்வர். அதாவது மலநீக்கம் பெற்ற ஆன்மாக்களுக்குப் பெருமான் கணப்போதும் தாமதியாது வீடு பேற்றின்பம் அருளுவர். இது இயல்பாய் சித்திப்பது, இவ்விடத்து, ஸம்ஸ்காரங்களினால் மலநீக்கம் பெற்ற சீடரின் ஆன்மாவிற்கும் சிவபதம் அடைதலையும், சிவத்துவம் பெற்று ஸர்வக்ஞத்துவம் முதலாகிய அறுகுணங்களைப் பெறுதலையும் செய்து மீதமுள்ள வாழ்நாட்களை இப்புவியில் சுகமாய் கழிப்பான் வேண்டி சிவபதம் கண்ட அவ்வான்மாவை மீண்டும் சீடரது ஆன்மாவில் வைத்தும், அறுகுணங்களைப் பெறுதற் பொருட்டு கீழ்காணும் ஆறு மந்திரங்களினால் கருணையுள்ளம் கொண்ட ஆசார்யர் ஆகுதி செய்வார்.

1. ஓம் ஹாம் ஆத்மன் ஸர்வக்ஞோ பவ ஸ்வாஹா
2. ஓம் ஹீம் ஆத்மன் பரித்ருப்தோ பவ ஸ்வாஹா
3. ஓம் ஹூம் ஆத்மன் அநாதிபோதோ பவ ஸ்வாஹா
4. ஓம் ஹைம் ஆத்மன் ஸ்வதந்த்ரோ பவ ஸ்வாஹா
5. ஓம் ஹௌம் ஆத்மன் அலுப்தசக்திர் பவ ஸ்வாஹா
6. ஓம் ஹ: ஆத்மன் அனந்தசக்திர் பவ ஸ்வாஹா

பொதுவாக உலகில் ஒருவர் "அவரது திறம்பற்றி அவரே அறியார்" என்பர். இதனையே அருளியலில் ஆன்மாவின் இயல்பினையும் அதன் திறத்தையும் அறியவொட்டாது மறைக்கும் மலங்கள் பெருமானது பெருங்கருணைத் திறத்தால் நீங்கப் பெற்று தம்மையும் தம்மையாளுடைய தம்பிரானையும் உணரச் செய்வதே தீக்ஷை என்ற சிந்தனை விரிவஞ்சி நிறைவடைகிறது.

நிர்வாண தீக்ஷைப் பெற்ற சீடரே ஆசார்ய அபிஷேகம் பெற்று அவரே ஆசாரியராய் பிறருக்கு தீக்ஷையளித்தருளும் தன்மையடைவர். இவையனைத்தும் சிவாகமங்களில் கிரியா பாதத்தில் காணக்கிடைக்கின்றன.

இனி, இக்கட்டுரையின் நிறைவுப் பகுதியாக யோகபாதத்தில் இயமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், த்யானம், தாரணம், ஸமாதி ஆகிய யோகப் பயிற்சியின் எண்வகையும், மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம் விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களின் இலக்கணங்களும், ப்ரம்மரந்திரம், த்வாதசாந்தம் ஆகியவற்றின் இலக்கணங்களும் கூறி யோகப்பயிற்சியையும் கூறுகின்றன. ஞானபாதத்தில் சிவபெருமானுடைய ஸ்வரூப-தட ஸ்தலக்ஷணங்களும், ஸகலர், ப்ரளாயகலர், விக்ஞானகலர் ஆகிய ஆன்மாக்களின் இலக்கணங்களும், ஆன்மாக்கள் மலநீக்கம் பெற்று பெருமானுடைய திருவடி நிழலை அடைய தனு கரண புவன போகங்களைப் பெருமானே அருளிச் செய்துள்ள கருணைத் திறத்தையும் காணலாம்.

சித்தாந்த சைவம் என்பது நாம் அறிந்த வகையில் தமிழகத்தில் மட்டுமே தமிழர்களால் ஆசரிக்கப்படும் உயர்ந்த தன்மையுடையது. இதன் ப்ரமாண நூல்களான சிவாகமங்களும், தமிழகத்தில் மட்டும் தமிழர்களால் (மற்ற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் கூட தமிழர்களால் மட்டுமே) வழக்கத்தில் கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே தமிழர்களின் தனிப் பெரும்சொத்தாகிய ஞானக் கருவூலங்களாம் சிவாகமங்களைப் பேணிப் பாதுகாப்பது நம் போன்றோரின் கடமை என்பதைப் பெருமானுடைய திருவருளாற் சிந்தித்து நிறைவடைகிறோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தன்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது, எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே !

❀ ❀ ❀ ❀ ❀

சிவாகமங்களில் சைவசித்தாந்தம்

சிவாகமச் செல்வர்-வ்யாகரண சிரோமணி
சிவஸ்ரீ S. அருணஸுந்தர சிவாசார்யார்
வடமொழிப் பேராசிரியர்,
சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, சென்னை.

சிவாகமஞானி



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவாகமங்களில் சைவசித்தாந்தம்

சிவாகமச் செல்வர்-வ்யாகரண சிரோமணி
சிவஸ்ரீ S. அருணஸுந்தர சிவாசார்யார்
வடமொழிப் பேராசிரியர்,
சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, சென்னை.

உலகில் பல்வேறு வித்யாஸ்தானங்கள் (கல்வித்துறைகள், சாஸ்த்ர ஸ்ரோதஸ்) உள்ளன. அவற்றுள், 'தர்சனம்' என்ற தத்துவத்துறை மிகமிக உயர்ந்ததாகும். பலவகையான தத்துவத் துறைகளுள், 'சைவசித்தாந்தம்' ஒன்றாகும். பௌத்தம், சமணம் போன்ற பல தத்தவத்துறைகளுக்கு மூல பிரமாண நூல்கள் கிடையாது. புத்தர், ஜைனர் போன்றவர்களே அத்துறைகளைத் தோற்றுவித்தவர்கள். அவர்களே அத்துறைகளுக்கு மூல பிரமாண நூல்களையும் தோற்றுவித்தவர்கள்.

சைவசித்தாந்தம் என்ற தத்துவத்துறை அவ்வாறு கிடையாது. சந்தானக் குரவர்களுள் முதல்வராகக் கருதப்படும் மெய்கண்ட தேவநாயனார் சைவ சித்தாந்தத்தை மேம்பட நிலை நிறுத்தியவராகினும், அகச் சந்தானத்தின் வாயிலாகவே மெய்கண்ட தேவநாயனாருக்கு சைவசித்தாந்த ஞானம் எற்பட்டதை சித்தாந்தமரபு உறுதி செய்கிறது.

சைவசித்தாந்தம் சிவபெருமானுடன் பரம்பரைத் தொடர்பு

அகச்சந்தானமும், சைவசித்தாந்த ஞானத்தினைத் தாமாகவே பெறவில்லை. சிவபெருமானிடமிருந்தே பெற்றனர். எனவே, சைவசித்தாந்தம் என்ற தத்துவத்துறைக்கு சிவபெருமானுடன் நேரடியாகவே தொடர்பு உண்டு. இறைவனாலேயே உபதேசிக்கப்பட்ட, நிலைநிறுத்தப்பட்டத் துறையாகும் சைவசித்தாந்தத்துறை.

சைவ சித்தாந்தத்தினை அருளிய அதே சிவபெருமான் அருளியவைதான் சிவாகமங்கள். ஒரே ஆப்தர் (அனைத்துச் சொல்

பொருள்கள் பற்றியத் துல்லியமான அறிவு பெற்றவராகவும், வேண்டுதல் வேண்டாமையின் காரணமாக ஒருபோதும் பொய் பேசாதவராகவும் இருப்பவர் ஆப்தர்) இரு நூல்களையோ விஷயங்களையோ அருளும்போது, அவற்றுள் தக்கக் காரணமின்றி, வேறுபாடு அறவே இருக்காது. ஒருவேளை வேறுபாடு காணப்பட்டால், அது காண்பவரின் குற்றமாகத்தான் இருக்கும். இவற்றையும் மீறி, வேறுபாடு நிருபிக்கப்படாமல் இருந்தால், அந்த ஆப்தர் ஆப்தத் தன்மையை இழந்து விடுகிறார். அல்லது, அந்த நூல்களுள் ஏதேனும் ஒன்று, அந்த ஆப்தர் அருளாததாக நிச்சயிக்கப்படும். (உதாஹரணம் பார்க்க: ரத்னத்ரயபரீக்ஷா 11-ம் ச்லோகம், தத்வஸங்க்ரஹம், 56-ம் ச்லோகம் ஸ்ரீமத் அகோரசிவாசார்யர் உரை)

ஆனால் நாம் சிவபெருமானை நமது பரம ஆப்தராக நம்புகிறோம். சிவாகமங்கள், சைவ சித்தாந்தம் ஆகிய இரண்டுமே சிவபெருமான் அருளியவைதான் என்றத் திண்ணமான எண்ணமும் நமக்கு உள்ளது.

அஷ்டாதச-புராணானாம் கர்தா ஸத்யவதீ-ஸுத: |

காமிகாதி-ப்ரபேதஸ்ய யதா தேவோ மஹேச்வர: ||

(பொருள்: காமிகம் முதலியவற்றிற்கு இறைவன் மகேச்வரன் எவ்வாறு கர்தாவோ, அதுபோல் 18 புராணங்களுக்கும், ஸத்யவதியின் மைந்தனான வியாஸர் கர்த்தா ஆவார்) என்ற ஸூதஸம்ஹிதாவாக்கியம் போன்றவையும் சிவபெருமான், சிவாகமங்களை அருளியதற்குப் பிரமாணமாய் உள்ளன. அதே சிவபெருமான் சைவசித்தாந்தத்தினை நந்தியெம்பெருமானின் வாயிலாக அருளியதற்கு,

'நந்தியருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னொடு எண் மருமாமே'

என்ற திருமூலர் திருமந்திரமும்,

'........அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி மயர்வு
அறநந்தி முனிகணத்து அளித்த உயர்சிவஞான போதம்
உரைத்தோன்

(சிவஞான போதம், சிறப்புப் பாயிரம்)

'எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய் நந்தி
உரைத்து அருளு ஞான-நூல் சிந்தை செய்து தான்
உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர ஏது
திருட்டாந்தத்தால் இன்று.

(சிவஞானபோதம், நூல்மரபு)

போன்ற பாடல்களும் பிரமாணமாய் உள்ளன.

எனவே, சிவாகமங்களுக்கும், சைவசித்தாந்தத்திற்கும் ஒருபோதும் முரண் கிடையாது என்பது எடுத்த எடுப்பிலேயே நிச்சயமாகிறது.

அடுத்து, இரண்டாம் நிலையில் 'சைவசித்தாந்தம்; என்ற பெயர், சிவாகமங்களுக்கும் சைவசித்தாந்ததிற்கும் உள்ள தொடர்பினை உறுதி செய்கிறது. 'சைவ, சித்தாந்த' என இரண்டுச் சொற்களைக் கொண்ட ஒரே தொகைச்சொற்றொடர் (ஸமாஸம்) சைவசித்தாந்தம் என்பது. அவற்றுள் 'சைவ' என்பது பெயர்விகுதிபெற்ற சொல்லாகும். (தத்திதாந்தம்) 'சித்தாந்த' என்பது தொகைச் சொற்றொடராகும், எனவே, பெயர்விகுதி பெற்றசொல் மற்றும் தொகைச் சொற்றொடர் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கிய தொகைச் சொற்றொடரே 'சைவசித்தாந்த' என்பதாகும்.

சைவ என்ற சொல்லிற்கு 1, சிவனைச் சார்ந்தது, 2. சிவனைக் குறித்துச் செய்யப்பட்ட நூல், 3. சிவனிடமிருந்து வந்தது., 4. சிவனால் சொல்லப்பட்டது, 5. சிவனுடைய குழந்தை என்பதுபோல பல பொருள்கள் உண்டு. அவற்றுள் முதல் நான்கு பொருள்கள் சிவாகமங்கள், சைவசித்தாந்தம் ஆகிய இரண்டிற்கும் பொருத்துபவை. எனவே மேற்படி இரண்டு நூல்களுமே சைவ எனப்படுபவைதான்.

சித்தாந்தம் எனும் தொகைச்சொற்றொடர் (ஸமாஸம்) எல்லா சாத்திரங்களிலும் கையாளப்படக்கூடிய ஒன்று.

'சித்த' - என்றால் தயார் நிலையில் உள்ள, முடிந்த என்பது போன்று பொருள். 'அந்த' என்றால் முடிவு தயார் நிலையில் உள்ள முடிவு என்பது பொருள். இதனை 'முடிந்த முடிவு' என்றும் கூறவர். எந்த ஒன்றினைப் பரீக்ஷகர்கள் பலவிதங்களில் பரீக்ஷை செய்து, பல்வேறு ஹேதுக்களால் (காரணங்களால்) சாதித்து, நிலைநிறுத்துகிறார்களோ, அந்த நிர்ணயத்திற்கு, தீர்மானத்திற்கு 'சித்தாந்தம்' என்று பெயர், என்று சரகர் என்பவர் கூறுகிறார். அதாவது பூர்வபக்ஷமாக எழக்கூடிய வாதங்களையும், மற்றுமுள்ள சந்தேஹங்களையும், தக்க காரணங்களைக் காட்டி நிராகரித்துவிட்டு, சரியான ஒன்றினை ஸ்தாபனஞ் செய்வதே சித்தாந்தமாகும்.

மேற்படி இந்த சித்தாந்தமானது, எல்லா சாஸ்திரங்களிலும் இருக்கக் கூடியதுதான். அப்படியானால் சைவ சித்தாந்தமானது, பிற சாஸ்திர சித்தாந்தத்திலிருந்து எந்த வகையில் சிறப்புடையது. இதில் உள்ளது போலவே பிற சாஸ்திரங்களிலும் பூர்வபக்ஷங்களும் அவற்றிற்கு சித்தாந்தங்களும் இருக்கத்தானே செய்கின்றன! ஏன் இதனை மட்டும் 'சித்தாந்தம்' என்ற பெயர் கொண்டு குறிப்பிடவேண்டும்? என்றால் இதற்கான தக்க பதிலை சிவாகமத்திலிருந்து மட்டுமே பெற முடியும்! இந்த சாத்திரத்திற்கு, சித்தாந்தம்' என்ற பெயரினை அளித்ததே சிவாகமங்கள்தான். ஏனெனில் சிவாகமங்களுக்கு உள்ள பல பெயர்களில் 'சித்தாந்தம்' என்பதும் ஒன்று. அப்பெயர் வருவதற்குக் காரணம் என்ன? என்றால், அந்தந்த அதிகாரிகளுக்குத்தக்கவாறு அபரஞானமாகிய 18 வித்யாஸ்தானங்களையும், ருத்ரன், விஷ்ணு போன்றோர் வாயிலாக மோஹ சாஸ்திரங்கள் பலவற்றையும் பூர்வபக்ஷ ஸ்தானத்தில் (முதலில் எழுகின்ற, நிராகரிக்கப்படுகின்ற வாதம்) அருளிவிட்டு, பிறகு சித்தாந்த ஸ்தானத்தில் (கடைசியில் முடிந்த முடிவாய்ச் சொல்லப்படுகின்ற ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வாதம்). பரஞானமாகிய சிவாகமங்களை அருளினார். எனவே அந்தந்த வித்யைகளுக்குள்ளேயே பலபல பூர்வபக்ஷங்களும், பலபல சித்தாந்தங்களும் இருப்பினும், ஒட்டு மொத்தமாக எல்லா வித்யைகளையும் சேர்த்துப் பார்க்கும் போது, சிவாகமங்களைத் தவிர பிற வித்யைகள் பூர்வபக்ஷமாகவும், சிவாகமங்கள் சித்தாந்தமாகவும் (தீர்மானம்) சிவபெருமானால்

உரைக்கப்பட்டதால் சித்தாந்தம் என்பது சிவாகமங்களின் காரணப்பெயராய் அமைந்தது. இவை அனைத்தையும் கீழே முறையே காணலாம்.

அதிகாரிக்குத்தக்கவாறு ஞானம்

ஆதௌ அபூ த்விதா -ஜ்ஞானம் அதிகாரி-விபேதத:|
பர-அபர-பேதேன.......... ||

- ச்லோ. 14B., 15A, தந்திரவதாரபடலம்,
ஸ்ரீமத்காமிகம், பூர்வம்.

பொருள்: ஞானமானது அதிகாரிக்கு= பயனுறுவோர் பக்குவநிலைக்கேற்ப, பரம், அபரம், என்ற வேற்றுமையோடு, முதலில் இருவிதமாய்த் தோன்றியது.

வேதாதிகள் அபரஞானம்

'வேதாத்யம் அபரம் ஜ்ஞானம் பஶுபாஶார்த்த தர்ஶகம்|'

- ச்லோ, 16A, தந்த்ராவதாரபடலம்,
ஸ்ரீமத்காமிகம். பூர்வம்

பொருள் : பசு மற்றும் பாசம் ஆகிய இரு பொருள்களைப் பற்றி விளக்கக்கூடிய வேதாதிகள்- அபரஞானம் எனப்படும்.

18 வித்யாஸ்தானங்கள்

'அஷ்டாதஶாநாம் ஏதாஸாம் வித்யாநாம் பிந்ந-வர்த்மநாம்!
ஆதிகர்தா கவி: ஸாக்ஷாத் ஶூலபாணி: இதி ச்ருதி: ||

- ஸ்ம்ருதி, பாஶுபதாதிகரணம், ஸ்ரீகண்ட பாஷ்யம்

பொருள் : வெவ்வேறு வழிகளைக் கொண்ட இந்த 18 விதமான வித்யாஸ்தானங்களுக்கும், கவியாகிய (அறிஞர்) சூலபாணியே நேரடியான முதல் கர்த்தா என்று வேதம் கூறுகிறது.

ருத்ரன், விஷ்ணு போன்றோர் சாஸ்திரங்களைச் செய்தல்

'ஏவம் ஸம்போதிதோ ருத்ரோ மாதவேந முராரிணா |
சகார மோஹ-ஶாஸ்த்ராணி கேஶவோऽபி ஶிவேரித: ||
காபாலம், நாகுலம், வாமம், பைரவம், பூர்வ பச்சிமம்|
பஞ்சராத்ரம், பாஶுபதம் ததா அந்யாநி ஸஹஸ்ரஶ: ||

- 14வது அத்யாயம், கூர்மபுராணம், சப்தகல்பத்ருமம்

பொருள் : இவ்வாறாக விஷ்ணுவால் தூண்டப்பட்ட ருத்திரனும், ருத்ரனால் தூண்டப்பட்ட விஷ்ணுவும், காபாலம், நாகுலம், வாமம், பைரவம், பூர்வம், பச்சிமம், பஞ்சராத்ரம், பாசுபதம் மேலும் பல்லாயிரக்கணக்கான மோஹ-சாஸ்திரங்களைச் செய்தனர்.

அபர-ஞானமாகிய மோஹ சாஸ்திரங்களைப் பூர்வபக்ஷமாக சிவபெருமான் வைத்தல்

'காருடம் பூததந்த்ரம் ச பைரவம் வாமதந்த்ரகம் ‖ 114
காபாலம் பாஞ்சராத்ரம் ச லாகுலம் குல ஶாஸ்த்ரகம் |
தந்த்ரம் பாஶுபதம் சாந்யத் புராணம் தர்ம சாஸ்த்ரகம்115
இதிஹாஸம் ஷடங்கம் ச ருக்-யஜுஸ்-ஸாம-ஸம்ஜ்ஞகம் |
அதர்வணம் ததா பௌத்தம் ஆர்ஹதம் மதமேவ ச ‖ 116
ஊர்த்வ-ஸ்ரோத: அக்ஷபாத்-ஶாஸ்த்ரம் அபரம் ததநுக்ரமாத் | 117a
பூர்வ பக்ஷதயா தாநி கதிதாநி இஹ ஶம்புநா 118 b

- தந்த்ராவதாரபடலம், ஸ்ரீமத்காமிகம், பூர்வம்.

பொருள் : காருடம், பூததந்த்ரம், பைரவம், வாமதந்த்ரகம், காபாலம், பாஞ்சராத்ரம், லாகுலம், குலசாஸ்த்ரம், பாசுபதம், புராணம், தர்மசாஸ்த்ரம், இதிஹாஸம், ஷடங்கம், 4 வேதங்கள், பௌத்தம், சமணம், ஊர்த்வ-ஸ்ரோதஸ், அக்ஷபாத சாஸ்த்ரம் (கௌதம-ந்யாய-ஸூத்ரம்) ஆகிய அபர-ஞானங்களை, சம்புவானவர் இங்கு பூர்வபக்ஷமாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு :

இதர சாஸ்த்ரங்களைப் பற்றி தெரிந்து கொள்ளாமல், நமது சைவ சாஸ்த்ரத்தினைப் பற்றி மட்டுமே தெரிந்துகொள்வதென்பது வலுவானதாகாது போலும்! எனவே தான் சிவபெருமான் இங்கு இதர சாஸ்த்ரங்களையும், பூர்வபக்ஷமாகக் கூறியுள்ளார்! இப்பழக்கமே சைவர்களிடையே ஊறி, சிவஞானசித்தயார்-பரபக்கம், சங்கற்ப நிராகரணம், ஸித்தாந்தப்-ப்ரகாசிகா போன்ற இதர சாஸ்த்ரக் கோட்பாடு-களையும் விளக்கும் சைவ நூல்கள் உருவாகக் காரணமாய் அமைந்தது எனலாம், சிவாகமங்களே பரம சித்தாந்தம் எனில், அதனை நிரூபிக்கப், பிற சாஸ்திரங்களைப் பூர்வபக்ஷமாக நிரூபிக்க வேண்டுமல்லவா!

சிவாகமங்களே பரஜ்ஞானம்

ஶிவ ப்ரகாஶகம் ஜ்ஞானம் ஶிவஜ்ஞானம் பரம் ஸ்ம்ருதம் || 15B

-தந்த்ராவதார படலம், ஸ்ரீமத்காமிகம் பூர்வம்.

பொருள் : சிவபெருமானை விளக்கக்கூடிய ஞானநூலே சிவஞானம் ஆகும். அதுவே (சிவாகமங்களே) பரஞானம்.

காமிகாதி ஶிவஜ்ஞானமே தலையாய பிரமாணம்

'காமிகாதி ஶிவஜ்ஞானம் மூர்த்தா பகவத: ஸதா ||117B

-தந்த்ராவதார படலம், ஸ்ரீமத் காமிகம், பூர்வம்.

பொருள் : காமிகம் முதலிய சிவஞானமே இறைவனுக்குத்தலை போலுள்ளது.

ஒட்டுமொத்தமாக அனைத்து வித்யைகளும் பூர்வபக்ஷம், சிவாகமங்களே சித்தாந்தம்

'ஹேய-உபாதேய-வஸ்தூநாம் நிர்ணயே பரமார்த்தத: |

தத்ஸர்வம் அதரீக்ருத்ய ஶைவ ஸித்தாந்த ஈரித: ||

பொருள் : ஏற்றுக் கொள்ளத்தக்க மற்றும் விடத்தக்க வஸ்துக்களை மிகமிக வாஸ்தவமாக நிர்ணயிக்கும் விஷயத்தில், அபரஞானமாகிய இதர சாஸ்திரங்களைப் புறக்கணித்து விட்டு, சைவ ஸித்தாந்தமானது சொல்லப்பட்டது.

குறிப்பு :

இங்கு "சைவஸித்தாந்த" என்ற தொகைச்சொல் ஆகமத்திலேயே மூல ஆகமங்களின் பெயர்ச்சொல்லாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை,

'தத்ராபி ஶைவஸித்தாந்த ஸர்வேப்யோ ஹி உத்தமோத்தமம்'

ஆசார்யாபிஷேக விதி, ச்லோ.எ.81B, ஸ்ரீமத்காமிகம், உத்தரம்,

'ஶிவஸித்தாந்த தந்த்ரேணப்ராரப்தம் கர்ஷணாதிகம்'

தந்த்ராவதாரவிதி, ச்லோ.எண்.113A, ஸ்ரீமத்காமிகம், பூர்வம்.

என்பன ஆகும்.

எனவே ஞானபாதம் மற்றுமின்றி 4 பாதங்களையும் உள்ளடக்கிய சிவாகமங்களுக்கு 'சைவசித்தாந்தம்' என்பதும்

ஒரு பெயர் எனத் தீர்மானமாகிறது. பல பகுதிகளைக்கொண்ட மரத்தின் ஒரு பகுதியைக்கூட "மரம்" என்று சொல்வது எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ, அதுபோலவே 4 பாதங்களைக் கொண்ட 'சைவஸித்தாந்த' என்று கூறும் மரபு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே சிவாகமங்களே சைவஸித்தாந்தம் என்பது தெளிவாகிறது.

இதுவரை 'ஸித்தாந்தம்' என்பது சிவாகமங்களுக்கே உரிய 'சிறப்புக் காரணப்பெயர்' என்பதைப் பார்த்தோம். அதோடு மட்டுமில்லாமல், 'ஸித்தாந்தம்' என்பது சிவாகமங்களின் காரண இடுகுறிப்பெயர் என்பதனைக் கீழ்வரும் மூல ஆகமவசனங்கள் போன்றவற்றிலிருந்து தெளிவுறலாம்.

'ஸித்தாந்த: மந்த்ரதந்த்ரம்ஸ்யாத்'

-ச்லோ,எண்.82, ஆசார்யாபிஷேகவிதி, ஸ்ரீமத்காமிகம் (உத்தரம்)

பொருள்: மந்த்ரதந்த்ரம் (சிவாகமங்கள்) ஸித்தாந்தம் என்றழைக்கப்படும்.

'ஸித்தாந்தம் காமிகாதி ஸ்யாத் ந அஸ்மாத் பரம் அநுத்தமம்'

-ச்லோ,எ.109B ஆசார்யாபிஷேகவிதி, ஸ்ரீமத்காமிகம், (உத்தரம்)

பொருள் : காமிகம் முதலியனவே 'ஸித்தாந்தம்' எனப்படும். இதனைவிட மேலானதொன்றுமில்லை.

'ஆப்தோக்தி: அத்ர ஸித்தாந்த: ஶிவ:ஏவ ஆப்திமாந் யத:'|

-ச்லோ எ.10A, ரத்னத்ரய பரீக்ஷை

"ஸித்தாந்த- ஶப்த: பங்கஜ-ாதிஶப்தவத் யோகரூட்யா ஶிவப்ரணீதே காமிகாதி தஶ அஷ்டாதஶஸு தந்த்ரே ப்ரஸித்த........"

-ஸ்ரீமத் அகோரசிவாசார்யர் விருத்தி

பொருள் : சிவபெருமானே ஆப்தர், எனவே சிவபெருமான் அருளிய 'ஸித்தாந்தமே' ஆப்தவாக்கியமாக, ப்ரமாணமாக அமையும்.

வ்ருத்தி - பொருள் :

பங்கஜம் போன்ற சொல் எவ்வாறு காரண இடுகுறியோ

அதுபோலவே 'ஸித்தாந்த:' எனும் சொல்லும் காரண இடுகுறியாயமைந்து, சிவபெருமானால் செய்யப்பட்டு, பத்து மற்றும் பதினெட்டாக (28) விளங்கும் காமிகம் முதலிய தந்திரங்களைக் குறிக்கும்.

மேற்படி எல்லா விஷயங்களையும் பிழிந்தெடுத்த ஸ்ரீ அருள்நந்தி சிவாசார்யரின் திருவாக்கு,

'.............பிற நூல்
திகழ் பூர்வம், சிவாகமங்கள் சித்தாந்தமாகும்'

-பா. 15., சுபக்கம், சிவஞானசித்தியார்.

எனவே 'ஸித்தாந்தம்' என்பது சிவாகமங்களுக்கே உரிய காரண இடுகுறி என்பது திண்ணம்.

'சைவசித்தாந்தம்' எனும் சொல்லில் 'சைவ' என்பதின் பயன் :

'சித்தாந்தம்' எனும் சொல்லே சிவாகமங்களின் காரண இடுகுறிப் பெயராய் இருக்க 'சைவ' எனும் அடைமொழிக்கு ஏதேனும் பயன் உண்டா? எனில் உண்டு.

சிவத்தொடர்புடைய மதங்கள் நான்கு. அவை 1, சைவம், 2. பாசுபதம், 3. சோமசித்தாந்தகம், 4. லாகுலம் என்பவை. இந்த நான்கு மதங்களுக்கும் மூன்று உட்பிரிவுகள் உள்ளன.

1. சைவத்தில் 1. வாமம் 2) தக்ஷிணம், 3) சித்தாந்தம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன.
2. பாசுபதத்தில் 1) வாமம் 2) தக்ஷிணம், 3) சித்தாந்தம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன.
3. சோமசித்தாந்தகத்தில் 1) வாமம் 2) தக்ஷிணம், 3) சித்தாந்தம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன.
4. லாகுலத்தில், 1) வாமம் 2) தக்ஷிணம், 3) சித்தாந்தம் என்று மூன்று பிரிவுகள் உள்ளன.

இந்த முதலாவதாகிய சைவமதத்திலுள்ள ஸித்தாந்தம் என்பதுதான், நமது 10+18=28 சிவாகமங்கள்.

முதலில் பார்த்தப்பிரமாணங்களால் நமது 28 சிவாகமங்களுக்கு 'சித்தாந்தம்' என்பது காரணஇடுகுறிப்பெயராக

இருப்பினும், பாசுபதம், சோமசித்தாந்தம், லாகுலம் ஆகிய பிற மூன்று மதங்களிலுள்ள 'சித்தாந்தம்' எனும் உட்பிரிவிலிருந்து, இவற்றினைப் பிரித்துக்காண்பிக்க ஒரு அடைமொழி அவசியம் தேவை. எனவே 'முதலாவதாகிய சைவமதத்தினைச்சார்ந்த சித்தாந்தம்' என்று பொருள்படும்படி, 'சைவ' எனும் சொல்லினைப் பிற மூன்று மதங்களைத்தவிர்க்கும் பொருட்டு, அடைமொழியாய்ச் சேர்த்து, 'சைவத்தின் சித்தாந்தம் சைவசித்தாந்தம்' என்று கூறப்பட்டது. இவ்விஷயங்களைக் கீழ்வரும் பிரமாணங்களில்

'................ஸித்தாந்த: ச்ரேஷ்டஉச்யதே.

தத்ராபி ஶைவஸித்தாந்த:'

என்பதனைக் கூர்ந்து கவனித்து உணரலாம்.

'ஶைவம் சதுர்விதம் ஜ்ஞேயம், ஶைவம் பாஶுபதம் ததா || 78B

ஸோமஸித்தாந்தகம் சைவ லாகுலம் ச சதுர்விதம்|

சதுர்வக்த்ராத் மஹேஶாத் ச புருஷாதி-ஆநந-உத்பவம்|| 79

பூர்வம் பூர்வம் குணோத்க்ருஷ்டம் தத்ர து ஏவம் சதுர்விதே|

ப்ரத்யேகம் த்ரிவிதம் ப்ரோக்தம் வாம-தக்ஷிண பேதத:|| 80

ஸித்தாந்தாக்யேந, தேஷாம் ச ஸித்தாந்த: ச்ரேஷ்ட: உச்யதே

தத்ராபி ஶைவஸித்தாந்த: ஸர்வேப்ய: ஹி உத்தமோத்தமம் ||81

- ஆசார்யாபிஷேக விதி, ஸ்ரீமத் காமிகம் உத்தரம்.

எனவே, 28 சிவாகமங்களின் பெயராகிய 'சைவசித்தாந்தம்' என்பதே 14 சாத்திரங்களுக்கும் பெயராய் அமைந்தது.

இதுவரை சைவசித்தாந்த என்ற சொல்லிற்கு சிவாகமங்களே மூலமானவை என்பது நிரூபணமானது. இனி, சைவசித்தாந்தச் சாத்திரத்தின் பொருளும் சிவாகமங்களே மூலமாகக் கொண்டவை என்பது நிரூபிக்கப்படுகிறது.

14 சாத்திர நூல்களை உள்ளடக்கிய சைவசித்தாந்தச் சாத்திரத்தினை தமிழில் மேம்பட விளங்க வைத்தவர் மெய்கண்டார் ஆவார். மெய்கண்டாரின் சித்தாந்தக் கோட்பாடுகள், அகச்சந்தானத்தின் வாயிலாக,

சிவபெருமானிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டவையாயினும், மெய்கண்டார் இயற்றிய நூலாகிய சிவஞான போதமானது, அதே சிவபெருமான் அருளிய 16வது மூல சிவாகமமாகிய ஸ்ரீமத் ரௌரவாகமத்தின் பாஶவிமோசநப் படலத்தினைத் தழுவி, தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகும். ஸ்ரீமாதவ சிவஞானசுவாமிகள் அருளிய சிவஞானபாடியவரிகள் இதனை உணர்த்துகின்றன.

"ஈண்டு வடமொழி சிவஞான போதத்துட் கூறியவாறே

.........முதற் சூத்திரத்துக்கு வார்த்திகமாகிய பொழிப்புரைப்பான் புகுந்து, சூத்திரத்தை மொழி பெயர்த்தருளிச் செய்கின்றார்.

...........இங்ஙனம் பாடத்தை மொழிபெயர்த்துக் கொண்டு......"

-சிவஞான பாடியம் முதற் சூத்திரம்

மேலும் தமிழ் சிவஞானபோதத்தின் மூலமென மேலே சொன்ன, சிவாகமத்தின் சிவஞானபோத 12 சூத்திரங்கள் இன்றும் கிடைக்கின்றன. சிவாகமத்தின் சிவஞானபோத 12 சூத்திரங்களை ஒத்தாற்போலவே மெய்கண்டாரின் சிவஞானபோதம் அமைந்துள்ளது.

மேலும் ஸ்ரீமாதவசிவஞானசுவாமிகள் குறிப்பிட்ட 'வடமொழி சிவஞானபோத' மென்பது ஸ்ரீமத்ரௌரவாகமத்தின் பாஶவிமோசந படலமாய் உள்ளது என்பதனை அதன் உரையாசிரியர்களனைவரும் கீழ்காணுமாறு கூறுகின்றனர்.

'த்வாதஶ-ஸூத்ராத்மகம்........ காமிகாதி-அஷ்டாவிம்ஶதிபேத பிந்நாந் ஆகமாந் நிர்மிதவத: பரமஶிவாத், அநுக்ரஹ பூர்வகம் அதிக்ருத்ய, அனந்தேஶேந ஸ்வஸ்மை போதிதம், ரௌரவ-தந்த்ராந்தர்கதம், ஶிவஜ்ஞாந போதாக்யம் ஶாஸ்த்ரம் உபதிஶதி'

-1ம் ஸூத்ரம்-ஶிவாக்ர பாஷ்யம் மற்றும்

ஶிவஞான போத ஸங்க்ரஹபாஷ்யம்.

..........ஏதேஷாம் உபதேஶ காலே, உபச்ரோத்ரா ருரு-ஸம்ஜ்ஞகேந 'ஸங்க்ரஹரூபேண ஜ்ஞாநமார்கம் உபதிஶ! இதி ப்ருஷ்ட:- ஸந், ததைவ இதி அநுக்ருஹ்ய, ஸகலாகமே

ஸாரம் ஸமுத்ருத்ய, ஶிவஜ்ஞாந போதாக்யம் அநுஷ்டுப் சந்தோரூபம் த்வாதஶ ஸூத்ராத்மகம் ஶாஸ்த்ரம் ப்ரணீய, தஸ்மை ஸமுபாதிஶத்- தத் ஸஹிதம் ஸர்வாகம ஜாலம் மஹௌக-ப்ரகாரேண அநந்தேச்வராய உபதிஷ்டவாந், ஸோऽபி யதாச்ருதம் மஹ்யம் உபாதிஶத்.. அஹமபி தத் ரௌரவாகமாந்தஸ்த-பாஶவிமோசந படலபடிதாநி ஶிவஜ்ஞாந போத ஸித்தாந்த ஸூத்ராணி ததர்தான்- ச துப்யம் உபதிஶாமி, த்வமபி பக்வாத்மந: து அஸ்ய அர்த்தாந் உபதிஶ! இதி உபதிஷ்டவாந்..

- 1ம் சூத்திரம் சிவஞானபோதம், ஸ்ரீ ஸதாஶிவசிவாசார்யர் உரை.

பொருள் :

கைலாயத்தில் விளங்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை, நந்தியெம்பெருமான் வணங்கி, ஞானபாதத்தினை அருள வேண்டினார். அவரும் அதனை ஆமோதித்து, நடந்தபடி உபதேசிக்க ஆரம்பித்தார்.

ஸ்ருஷ்டியின் முன்பு நிஷ்கள பரசிவத்திடமிருந்து, ஸகள நிஷ்களமாகிய ஸதாசிவப் பெருமான், நாதரூபமாக சிவாகமங்களை அறிந்து, ப்ரணவாதிகளுக்கு உபதேசிக்கும் சமயம், உபச்ரோதாவாக அருகில் கேட்டுக் கொண்டிருந்த 'ருரு' என்பவர் 'சுருக்கமாக ஞானமார்க்கத்தினை அருள' வேண்ட, ஸதாசிவரும் 'எல்லா ஆகமங்களின் ஸாரமாக 'சிவஜ்ஞாநபோதம்' என்ற பெயரில் 12 சூத்ரங்களையும் அனந்தேச்வரருக்கு அருளினார். அவரும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு அவற்றை உபதேசித்தார். ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியும், ரௌரவாகமத்தில் பாசவிமோசந படலத்திலுள்ள சிவஜ்ஞாநபோத ஸூத்திரங்களையும் பொருளையும் நந்தியெம்பெருமானுக்கு அருளி, பக்வான்மாக்களுக்கு அதனை உபதேசிக்கப் பணிக்கிறார்.

எனவே, சிவஞானபோதமாகிய சைவஸித்தாந்தம், சிவாகமமாகிய ஸ்ரீமத்ரௌரவத்தினையே மூலமாய்க் கொள்வது திண்ணம். ஸ்ரீசிவாக்ரயோகி போன்றோர் இயற்றிய, பாஷ்ய நூல்களில் காணப்படும் 12 ரௌரவாகம ஸூத்திரங்களின் பொருளும், சிவஞானபோதஸூத்திரங்களின் பொருளும் ஒன்றாகவே இருப்பதும் நேரடிப் பிரமாணமாகின்றது.

பொருள்களின் எண்ணிக்கையைப் பற்றிய விசாரத்தில் ஒவ்வொரு தத்துவத்துறையும் ஒரு கொள்கையைக் கொண்டுள்ளது.

சைவசித்தாந்தமோ பொருள்கள் மூன்றே என உரைக்கின்றது. 'மூன்று' என்று நிர்ணயித்ததற்குப் பிரமாணம் என்ன? என்றால் சிவாகமமாகிய சப்தபிரமாணமே (அளவை) ஆகும்.

'த்ரிபதார்த்தம் சதுஷ் பாதம் மஹாதந்த்ரம்' என்பது ஸ்ரீமந்-ம்ருகேந்த்ர-ஆகம வசநம்.

"பஶு-பாஶ-பதி-ஜ்ஞான-விசார-ப்ரதிபாதகம் |

கிரணாக்யம் மஹாதந்த்ரம்............"என்பது ஸ்ரீமத்-கிரணாகம வசநம்.

'பாச்ய: பாஶயிதா பாஶா: த்ரயம் ஏதத் வ்யவஸ்திதம்'

- தத்வப்ரகாஶம். 5ம் ச்லோ, 'தாத்பர்ய தீபிகா' உரை

என்பது ஸ்ரீமத்-பாரமேச்வராகமவசநம். எனவேதான் போஜதேவர் தத்ப்ரகாசத்தில், (ச்லோ.5)

சைவாகமேஷு முக்யம் பதி-பஶு-பாஶா: இதி க்ரமாத் த்ரிதயம்', என்று குறிப்பிட்டார். எனவே முப்பொருளுண்மைக்கு சைவாகமங்களே முதற் பிரமாணம். அதனை அவ்வாறே புரிந்துகொள்ள உலகத்தவர்களால் முடியாது என்பதாலேயே, வாதங்களோடு எடுத்துரைக்கவே அனுமானம் முதலிய பிரமாணங்களோடு 'சிவஞானபோதம்' இயற்றப்பட்டது என்பதனை கீழ்கண்ட வரிகள் வலியுறுத்துகின்றன.

'எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய் நந்தி
உரைத்து அருளு ஞானநூல்-சிந்தை செய்து தான்
உரைத்தான் மெய்கண்டான் தாரணியார் தாமுணர ஏது
திருட்டாந்தத்தால் இன்று.'

- நூல் மரபு, சிவஞானபோதம்.

சைவசித்தாந்தசாத்திர நூல்களில் விளக்கப்பட்டுள்ள, சிவபெருமான் சர்வவ்யாபகர், 36 தத்துவங்கள், பசுக்களின் மூன்று வகை, உயிருக்கு சற்குருவாய் சிவபெருமானே வருதல், பஞ்சாக்ஷர

மந்திரம் வாஸனாமலத்தினைப் போக்க வல்லது, தீக்ஷையின் வகைகள், குரு-லிங்க-சங்கம வழிபாடு போன்ற எல்லா விஷயங்களும் சிவாகமங்களைச் சார்ந்தே உள்ளன.

எனவே ‘சிவாகமங்களில் சைவசித்தாந்தம்’ என்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தாலும், சைவ சித்தாந்தசாத்திர நூல்களில் விளக்கப்பட்டுள்ள விஷயங்கள் அதுபோன்றே சிவாகமங்களில் உள்ளதைக் கண்டால், ‘சிவாகமங்கள் மூலநூல்’ என்பதும், சைவசித்தாந்த சாத்திரம், அதன் அரியதொரு உரை நூல் என்பதும் உள்ளங்கைக்கனி என விளங்கும். எனவே சில உதாரணங்களைப் பார்ப்போம்.

திருவதிகை மனவாசகம் கடந்தாரின் உண்மை விளக்கத்தின் ஒரு பாடல் இவ்வாறுள்ளது.

‘தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.’ 36

நடராசப்பெருமானது ரூப அமைப்பு பஞ்சகிருத்யங்களை விளக்குகிறது. என்ற இதன் பொருள் வெறும் கற்பனையா? அல்லது உண்மையா? எனில், சிவாகமத்தின் மொழிபெயர்ப்பாய் இது திகழ்வதால், இது உண்மை என்றே ஆகிறது.

‘டமரோ: ஜாயதே ஸ்ருஷ்டி அபயாத் ஸ்திதி: உச்யதே|
அக்நே: து ப்ரோக்த:ஸம்ஹார: திரோதானம் து குஞ்சிதாத்|
அநுக்ரஹோ ஹி ஊர்த்வபதம் க்ருத்யம் பஞ்ச ஸபாபதே:|
-ச்லோ. எ.53., பக்.52., ஆகம வசநபூஷணம்

என்ற ஆகமவரிகள் இதனை உண்மை என்று பறை-சாற்றுகின்றன.

ஸ்ரீ உமாபதி தேவ நாயனார் அருளியதாக உள்ள உண்மை நெறியில் (உண்மை நெறி விளக்கம்) 1) தத்வரூபம், 2) தத்வ தர்சனம், 3) தத்வசுத்தி, 4) ஆன்மரூபம், 5) ஆன்மதர்சனம், 6) ஆன்மசுத்தி, 7) சிவரூபம், 8) சிவதர்சனம், 9) சிவயோகம், 10) சிவபோகம் என தசகாரியங்கள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு என்ன பிரமாணம் எனில்,

'ப்ரதமம் தத்வரூபம் ச த்விதீயம் தத்வதர்ஶநம்|| 10B
த்ருதீயம் தத்வஶுத்தி: ச சதுர்த்தம் ச ஆத்மலக்ஷணம்|
பஞ்சமம் ச ஆத்ம-ஸந்தர்ஶம் ஷஷ்டம் ஸ்யாத் ஆத்மசோதநம்||
ஸப்தமம் ஶிவரூபாக்யம் அஷ்டமம் ஶிவதர்ஶநம்|
நவமம் ஶிவயோகம் ச தஶமம் ஶிவபோககம் || 12

என்ற ஸ்ரீமத் காமிகம் (உத்தரம், ஞானதீக்ஷாவிதி), பிரமாணமாய் அமைகிறது.

உண்மை விளக்கத்தில் பஞ்ச பூதங்களைப் பற்றி விரிவான விஷயங்கள் தரப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கூட கற்பனையோ, வெறும் மரபோ அல்ல! ஸ்ரீமந்-ம்ருகேந்த்ரம் போன்ற ஆகமங்களில் மிகமிக விரிவாக உபதேசிக்கப்-பட்டவையே. இவற்றின் அடிப்படையிலேயே இன்றும், சிவபூஜையில் பூதஶுத்தி செய்யப்படுகிறது.

சிவஞான சித்தியார் சுபக்கம் (பா. 18) நால்வகை நெறிகளை கீழுள்ளவாறு உணர்த்துகிறது.

சன்மார்கம், சகமார்கம், சத்புத்ரமார்கம்,
தாசமார்கம் என்றும் சங்கரனை அடையும்
நன்மார்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியை என நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க முக்திகள் சாலோக்கிய சாமீப்ய
சாரூப்ய சாயுச்யம் என்று சதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முக்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முக்தி பதம் என்பர்.

இந்த நால்வகை நெறிகளும் சிவாகமங்களில் கூறப்பட்டவையே என்பதனைக் குறிப்பிடவே மேலே "என்பர்" என்று கூறினார்.

'ஸந்மார்கீ புத்ரமார்கீ ச ஸஹமார்கீ ததா அபர:'
தாஸமார்கீ சதுர்தா ஏஷாம் க்ரமாத் வைஶிஷ்யம் இஷ்யதே14

என்று ஸ்ரீமத் காமிகம் (உத்தரம், வைஶிஷ்ய விதான விதி) என்று ஸ்ரீமத் காமிகம் உபதேசிக்கிறது. நிஷ்களமாய் மேற்படி நான்கு வகைகளை உபதேசிக்கிறது.

அருவாய் உள்ள இறைவன், பக்தர்கள் அறிந்து தியானிக்கும் பொருட்டே ஸகளநிலையினைத்தானே எடுக்கிறார். என்பதனை,

'அகளமாய் யாரும் அறிவு அரிது அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீபற
தானாகத் தந்தது என்று உந்தீப்ற'

எனத் திருவுந்தியாரில் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் கூறுகிறார். இதற்கும் பிரமாணமுண்டு.

'ஸாதகஸ்யது லக்ஷ்யார்த்தம் தஸ்ய ரூபம் இதம் ஸ்ம்ருதம்'

என்று ஸ்ரீமத் பௌஷ்கராகமம் கூறுவதை,

'சித்-அசித்-அநுக்ரஹ ஹேதோ:
ரூபாணி ஏதாநி ஸ: ப்ரபு: க்ருத்வா..
குருதே சிதாம் அனுக்ரஹம்
அனாதி-மல-ருத்தச் ஶக்தீநாம்..'

என்று தத்வப்ரகாசத்தில் போஜ தேவரும்,

'ஸர்வேஷாம் த்யான பூஜார்த்தம்
நிஷ்களம் ஸகளம் பவேத்' - ச்லோ.எ.851.ஆ

என்று வாமதேவபத்ததிகாரரும் உறுதிப்படுத்துகின்றனர். அதுபோலவே,

'யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம்
வருவர்...............'

என, சிவஞான சித்தியார் சுபக்கத்தில் ஸ்ரீ. அருள்நந்தி சிவாசாரியார் கூறுவது, சொந்தக் கருத்தல்ல ஆகமங்களின் மறுமொழியே என்பதனை,

யேந யேந ஹி ரூபேண ஸாதக: ஸம்ஸ்மரேத் ஸதா|
தஸ்ய தந்மயதாம் யாதி சிந்தாமணி:இவ ஈச்வர:||
-11ம் சூத்ரஉரை, சதரத்னஸங்க்ரஹம்

என்று ஸர்வ-ஸ்ரோதஸ்-ஸங்க்ரஹ-ஸார: எனும் நூல் உறுதி செய்கிறது. எனவே, இவ்விசாரங்களால் இவை தெளிவாகின்றன.

சிவாகமங்களையும் சைவசித்தாந்தத் தத்துவங்களையும் அருளியவர் ஒருவரே என்பதால் இரண்டிற்கும் தத்துவநிலையில் வேற்றுமை கிடையாது.

சித்தாந்த, சைவசித்தாந்த, சிவசித்தாந்த போன்ற பெயர்கள் சிவாகமங்களின் 'காரண இடுகுறிப்பெயர்' என்பதால், சிவாகமங்களின் ஞானபாதத்தின் பேருரை போன்று விளங்கும் மெகண்டாரின் தத்துவத் துறைக்கும் 'சைவசித்தாந்தம்' அல்லது 'சித்தாந்த சைவம்' என்பதே பெயராய் அமைந்தது.

சிவஞானபோதம் சிவாகமங்களையே மறுமொழிகிறது என்பது அருளாளர்கள் வாக்கினால் உறுதிப்படுகிறது.

சைவசித்தாந்த சாத்திரம், சிவாகமங்களையே தனது பிரமாணமாகக் கொண்டுள்ளது. என்பது சைவசித்தாந்தசாத்திர நூல்களிலிருந்தே புலப்படுகிறது.

சக்திநிபாதம் பெற்றவர்களை நோக்கியே இச்சைவம் அருளப்பட்டதால், சக்திநிபாதம் பெற்றவருக்கே மேற்படி விஷயங்களில் ச்ரத்தா. நம்பிக்கை உண்டு என்பதனை சித்தியார் வரிகளும், சிவாகமவரிகளும் உணர்த்துவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

'............சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சக்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது...............'

.15.சிவஞானசித்தியார், 6 பக்கம்.

'யேஷாம் ஶரீரிணாம் ஶக்தி: பததி அவிநிவ்ருத்தயே|
தேஷாம் தல்லிங்கம் ஔத்ஸுக்யம் முக்தௌ, த்வேஷோ பவஸ்திதௌ ||
பக்தி: ச ஶிவபக்தேஷு ச்ரத்தா தச்சாஸகே விதௌ ||

- ஸ்ரீமந்ம்ருகேந்த்ரம் (ரத்னத்ரய-உல்லேகிநீ)

சிவம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

காசிவாஸி
சாம்பவஸ்ரீ செந்திநாதையர்
வாழ்வும் பணியும்

சிவாகம பாஸ்கர சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம்
திருப்பரங்குன்றம்.

உ
ஸ்ரீ குருப்யோ நம:
திருச்சிற்றம்பலம்

காசிவாஸி சாம்பவஸ்ரீ செந்திநாதையர் வாழ்வும் பணியும்

சிவாகம பாஸ்கர சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம்
திருப்பரங்குன்றம்.

குருவணக்கம்

தருமணியின் றருமணியாய்த் தமையடைந்து
வேண்டிநினை தகைய வெம்மைப்
பொருமணியின் மதிமலிநூல் போதித்துப்
போதவுயர் போதராக்கிக்
குருமணியின் எமக்கென்றுங் குருமணியாய்க்
குலவுசெந்தி நாதரென்னும்
திருமணியின் மணிமலர்த்தாள் சிந்தையினும்
சென்னியினும் சேர்த்தி வாழ்வாம்

தோற்றுவாய்

எப்பொழுதெல்லாம் உலகில் அநீதிகள், அதர்மங்கள் அதிகரிக்கின்றனவோ அப்பொழுதெல்லாம் இறைவன், அவற்றின் வன்மை மென்மைகளுக்கேற்பத் தானே தோன்றியோ, அல்லது அருளாளர்களின் வாயிலாகவோ தர்மத்தை நிலைநிறுத்துகிறான் என்பது ப்ரஸித்தமான விஷயம்.

அவ்வகையில், பௌத்த சமண ஸமயங்களின் தவறான வழிகாட்டுதலை முறியடித்து, வேதநெறி தழைத்தோங்கி, சைவத்துறை விளங்க அவதாரம் செய்தார், ஸ்ரீமத் ஞானஸம்பந்தப் பெருமான்.

அதே வழியில், 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி, அப்பொழுது நம்மக்களை வலைவீசி மதம் மாற்றிக் கொண்டிருந்த,(க்கிற) விவிலிய மதத்தினரை, அவர்களது

பிழையை உணர்த்தி, அவர்களது தீய செயலை அழிக்கப்பாடுபட்டவர்கள் யாழ்ப்பணத்து "நல்லூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர்" பெருமான் மற்றும் அவரது சிஷ்யர் "காசிவாஸி சாம்பவஸ்ரீ செந்திநாதையர்" ஆகிய இருவரும் என்றால் அது மிகையாகாது.

இவ்விருவருள், ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரை அறிந்த அளவு, காசிவாஸி சாம்பவஸ்ரீ செந்திநாதையரை நம்மக்கள் அறியவில்லை என்பது, நமது தவக்குறைவின் வெளிப்பாடு.

ஐயரவர்களின் தோற்றமும் இளமைக்காலமும்

காசிவாஸி சாம்பவஸ்ரீ செந்திநாதையர் அவர்கள், 1848ம் ஆண்டு, கீலக வருஷம், ஐப்பசி மாதம், 2ம் தேதி, "யாழ்ப்பாணத்தில் உள்ள குப்பிழான்" (மல்லாகம்) என்ற ஊரில், "ப்ரஹ்மஸ்ரீ சின்னய்யர், ஸ்ரீமதீ கௌரியம்மாள்" தம்பதியினருக்கு, மூத்த மகனாகப் பிறந்தவர். இவர் [1]யஜுர்சாகையையும், காச்யப கோத்திரத்தையும், ஆபஸ்தம்ப ஸூத்ரத்தையும் சேர்ந்தவர். இளைய சகோதரர்கள் இருவர்: சம்புநாத ஐயர், பொன்னையர்.

இவர், தமது இளவயது முதல் தனது மாமனார், புன்னாலைக்கட்டுவன் "[2]கதிர்காம ஐயர்" என்பவரிடம் தமிழ், வடமொழி இரண்டையும் கற்றார். இளமையிலேயே இவரிடத்தில் அன்பு, அருள், வாய்மை முதலிய நற்குணங்கள் நிறைந்து விளங்கின. பின்னர் 1853ல், யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூரியில் ஆங்கிலமும், நல்லூர் "சம்பந்தம் பிள்ளை" என்பவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றார்.

1871ல், தனது தந்தையார் ஸ்ரீ சின்னையருடன் இந்தியாவிற்கு வந்து, சிதம்பரம் முதலான சிவத்தலங்களை தரிசித்துச் சென்றுள்ளார்.

---

[1]காண்க:- சூரியனார் கோவில் ஆதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமார தேசிகர் அருளிய சத்தியரூபச் சிறப்புப்பாயிரம். தேவாரம் வேதசாரம். வெளியீடு: கலாசம்ரக்ஷண சங்கம், தஞ்சாவூர் 1996.

[2] இங்கு கதிர்காம ஐயரை மாமனார் என்றுகூறி, பின்னர் விச்வநாத ஐயரின் மகளை மணந்தார் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப் பணி

1872ல், யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் தனது நேர் மாணவராகிய இவரை, இவரது தகுதியுணர்ந்து, தமது சைவப்ரகாச வித்யாசாலையில் ஆசிரியப்பணியில் அமர்த்தினார்.

[3]1872முதல் 6 ஆண்டுகள் அவரது வண்ணாரப் பண்ணை வித்யாசாலையிலும், ஓராண்டு ஆங்கில வித்யாசாலையிலுமாக, சுமார் 7 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

இக்காலத்தில் தான், இவர், [4]நாவலரின் கட்டளைக்-கிணங்க, அவரது "விவிலிய குற்சிதம்" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார்.

இக்காலத்தில், வண்ணார்பண்ணை வாசரும், சைவசித்தாந்தத்துறையில் வல்லவருமாகிய விச்வநாதையரின் புதல்வியும், ஜோதிடசாஸ்த்ரவல்லுனராகிய ஸபாபதி ஐயரின் ஸஹோதரியுமாகிய சிவகாமியம்மையாரை மணந்து, மீனாக்ஷீ எனும் புதல்வியைப் பெற்றார். 1878-ல், தனது முப்பதாவது வயதில் மனைவியை இழந்த இவர், அக்கவலையில் இருந்து மீள, சிவபெருமானின் தனிப்பெருங்கருணையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். பின்னர், சிறிது காலத்தில், தனது ஒரே மகள் மீனாக்ஷிக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டு, ஸம்ஸ்க்ருதம் பயில ஆர்வம் கொண்டு திருவனந்தபுரம் சென்றார்.

---

[3] இக்காலத்தில் நாவலர் பெருமான் தினமும் வண்ணாரப்பண்ணை சிவாலயத்தில் ஆற்றும் ப்ரஸங்கங்களைத் தவறாதுகேட்டு, அதை அன்றிரவு உறங்குமுன்னரே குறிப்பெடுத்து எழுதிக் கொள்வதை விரதமாகவே கொண்டு வாழ்ந்துள்ளார் ஐயரவர்கள். அது பிற்காலத்தில் இவர் எழுதிய கண்டனங்களுக்குப் பேருதவியாக அமைந்தது.

[4] இவர் பின்னும் விவிலிய நூலிலுள்ள அஸப்யங்களை (அவைக்கு அடாத பேச்சு) எடுத்துத் திரட்டி விவிலிய குற்சிதம் எனப்பெயர் கொடுத்து சி. செந்திநாதையரைக் கொண்டு வெளிப்படுத்தினார். காண்க ஆறுமுக நாவலர் சரித்திரம்.பக்கம் 70 வெளியீடு:- ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்ரகாச வித்யாசாலை அறக்கட்டளை. சிதம்பரம் 1999.

திருவனந்தபுரத்தில் தங்கி ஸம்ஸ்க்ருதம் பயிலுதல், நாவலரின் மறைவு

அங்கு, திருவனந்தபுரத்தின் பிரதம நீதிபதியாயிருந்த ஸ்ரீமான் தா. செல்லப்பா பிள்ளை என்பவரது உதவியாலும், நாவலர் பெருமான் அனுப்பிய நன்னடக்கைப் பத்திர உதவியாலும், அங்குள்ள சுப்பா சாஸ்த்ரியாரிடத்தும், அரண்மனை ஸம்ஸ்க்ருத பரீக்ஷாதிகாரிகளில் ஒருவருமாகிய, ப்ரஹ்மஸ்ரீ அனந்த க்ருஷ்ண சாஸ்த்ரியாரிடத்தும், வடமொழி இலக்கணமாகிய வ்யாகரணம், காவ்யங்கள், தர்க்கம் ஆகியவற்றை ஆழமாகக் கற்றுத் தேர்ந்தார்.

நாவலர் வழங்கிய நன்னடக்கைப் பத்திரம்

ம-ா-ா ஸ்ரீ சி. செந்திநாதையரை நான் ஏழுவருட காலம் அறிவேன். ஆறுவருடம் என்னுடைய தமிழ் வித்யாசாலையிலும், ஒருவருடம் என்னுடைய இங்கிலீஷ் வித்தியா-சாலையிலும் உதவி உபாத்தியாயராக இருந்து, தமது கடமையைச் ஜாக்கிரதையோடு பிறழாமல் நடாத்திக்கொண்டு வந்தவர். ஒழிவுள்ள பிற நேரங்களிலே நான் பொதுநன்மையின் பொருட்டெடுத்துக் கொண்ட பிறகருமங்களையும் நிறைவேற்றினவர்.

இங்ஙனம்
க. ஆறுமுக நாவலர்
1879 புரட்டாதி 19ம் தேதி யாழ்ப்பாணம்.

இவர் திருவனந்தபுரத்தில் இருக்கும் பொழுதே, 1879-ம் ஆண்டு, ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் சிவபதம் அடைந்தார்.

அச்செய்தியைக் கேட்டு மனம் உருகினார் ஐயரவர்கள். அவருக்குப் பழைய விஷயங்களெல்லாம் நினைவிற்கு வந்தது. நாவலர் பெருமான் பூஜை செய்யும் பொழுது, ஐயரவர்கள் தேவாரம் ஓதுவது வழக்கம்.[5] அச்சமயத்தில் நாவலரின்

---

[5] இந்நிகழ்வு ச.பொன்னம்பலம் பிள்ளை வாழ்வில் நடந்ததாகக் குறிப்பிடுகிறார். த. கைலாச பிள்ளை.

காண்க:- ஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம். பக்கம் - 120 - வெளியீடு:- ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்ரகாச வித்யாசாலை அறக்கட்டளை. சிதம்பரம் 1999

ஆனால் ஐயரது இரங்கற்பாக்களைப் பார்க்கும்போது இது அவரது வாழ்விலும் நடைபெற்றதாகக் கருதமுடிகிறது.

கண்களில் நீர் தாரை தாரையாகப் பொழியும். அப்படி ஒரு சமயம் செந்திநாதையர் அவர்கள் ஸ்ரீமத் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளின் திருப்பாடல் ஒன்றைப் பாடினார்.

ஒவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை என்றலாற்கரு தேன்கிளப்புனற் காவிரி
பாவுதண்புனல் வந்திழி பரஞ்சோதிப்பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே

என்ற பாடலைப் பாடினார். அப்பொழுது கடைசியடியில் "நாவலா" உனை என்ற சொற்கள் வரும்போது, ஐயரவர்கள் தயங்க, நாவலர் கண் விழித்து, 'உள்ளவாறே பாடுக' எனக் கட்டளையிட்டாராம்.

அந்தச் சம்பவத்தை நினைந்து ஐயரவர்கள், நாவலர் சிவஸாயுஜ்யம் அடைந்த போது

தேவாரம் யான் சொலக்கேட்டு மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவபூசைப் பொலி வழகும்
பாவாணர் மெச்சச் செயும் பிரசங்கமும் பார்த்தினிநா
நாவார வாழ்த்திருநாளுமுண்டோ நல்லை நாவலனே

வன்றொண்ட னாவல்கோன் வாழ்வா வதுமாய
மென்றுரைத்த தேவாரத்தின் பொருளை -நன்றியுடன்
சிந்தை செய்தே னாவலனே சேர்ந்தாய்நீ என்பதனாற்
புந்தி நொந்து துக்க மிக்க போது

— என்று இரங்கற் பா பாடினார்.

அதேபோல, நாவலர்பெருமான் ஐயருக்கு வழங்கியிருந்த நன்னடத்தைப் பத்திரிகையை நினைவுகூர்ந்த ஐயரவர்கள்

நன்னடக்கைப் பத்திரிகை நாவலனே நீயனுப்ப
வென்ன தவஞ் செய்தனே யானறியே — னன்னதனு
ளுள்ள சில வாசகங்க ளுற்றுணரும் போதெல்லாம்
வெள்ளம் பொழியும் விழி. - என்று புலம்புகிறார்.

அச்சான்றிதழுக்கு நன்றிதெரிவிக்கும் வண்ணமாக, ஐயரவர்கள் நாவலர் பெருமானுக்கு ஒரு கடிதம் அனுப்புகிறார். அக்கடிதம் நாவலர்பெருமானிடம் சேரும் முன்னரே, அவர்

சிவலோகப் பிராப்தி அடைந்துவிடுகிறார். அதை நினைந்து வருந்திய ஐயரவர்கள்

சுன்னைக் குமாரசுவாமியிடத் தோர்கடித
முன்னைக் குறித்தனுப்பி யுள்ளுவந்தே - னன்னதுன்பாற்
சேருமுன்ன னாவலனே சென்றாய் சிவலோகம்
யாரும் பதைபதைக்க விங்கு - என்று வருந்துகிறார்.

கொழும்பில் சொற்பொழிவு

பின்னர், தந்தையாரின் அழைப்பிற்கிணங்க திருச்செந்தூர், பழனி ஆகிய தலங்களை தரிசித்து, யாழ்ப்பாணம் சேர்ந்தார். பின்னர், "கொழும்பு ஸ்ரீமான் தம்பையா முதலியாருடைய" வேண்டுகோளுக்கிணங்க, அவருடைய தர்மசத்திரத்திலே, 1880ம் ஆண்டு, தைமாதம் முதல், ஆறுமாதகாலங்கள் தங்கி, பல்வேறு இடங்களில் வைதிக சைவசித்தாந்தபரமாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு, அங்கிருந்து கதிர்காம யாத்திரை செய்தார். அங்கே, 12 தினங்கள் உபவாஸத்தோடு கந்தபுராணத்தைப் படித்துமுடித்து யாழ்ப்பாணம் வந்தார்.

இந்தியாவில் ஆசிரியப்பணியும், புத்தகாசிரியப்பணியும்

1882ல் மூன்றாவது முறையாக இந்தியாவிற்கு வந்த ஐயரவர்கள், திருநெல்வேலியிலுள்ள சைவவித்யாசாலையில் பணியாற்றத்துவங்கினார். 1883ம் ஆண்டு முதல், அவ்வூர் முனிசீப் சுப்பிரமணிய பிள்ளை நடத்திக்கொண்டிருந்த "ஸுஜன மனோ ரஞ்ஜனீ", என்ற பத்திரிகையின் உதவி ஆசிரியரானார்.

அக்காலத்தில், சாத்தூர் உதவிப் பதிவுக் கார்யஸ்தராயிருந்த சாமுவேல் சற்குணர் என்பவர், "சாணாரெல்லாஞ் க்ஷத்ரியர்" எனுங் கருத்தினோடு, ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டனர். அதுகண்ட கிறிஸ்தவர்கள், இவரை அப்புத்தகத்திற்கு மறுப்பு எழுதுதித்தரும்படி வேண்ட, இவர், [6]"சாண் க்ஷத்ரியப் பிரசண்ட மாருதம்" எனும் புத்தகத்தை

[6] திருநெல்வேலி சாணார்களைப் பற்றி கிறிஸ்தவ பிஷப் கால்வெல் என்பவர் கூறிய கருத்துக்களுக்கு மறுப்பாக சாமுவேல் சற்குணர் எழுதிய நூலுக்கு மறுப்பாக எழுதப்பட்டது இந்நூல். கிறிஸ்தவர்களாகிய இவர்களது விஷயத்தில், அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவ்விருவர்க்கிடையே வழக்கை விசாரித்து நீதி செலுத்தும் நீதிபதி போல இப்பத்திரிக்கை வாயிலாக நீதியைப் பிரகடனம் செய்கின்றேன் என்கிறார் ஐயரவர்கள். காண்க: மேற்படி நூலின் முன்னுரை.

எழுதிக்கொடுத்து, வெளியிடச் செய்தார். அதைக்கண்ட சற்குணரும் பிறரும், இவர் மீது "அவதூற்றுப் பத்திரிகை" ஒன்றை எழுதி வெளியிட்டார்கள். அதைக்கண்ணுற்ற இவர், வழக்குத் தொடுத்தார். விசாரணையில், சாணார்கள் குற்றமுடையவராகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்.

இவர் ஒரு சமயம், திருநெல்வேலியிலே உள்ள திருஞானஸம்பந்தமூர்த்தி நாயனாரது ஆலயத்திலே, "ஞானத்தின் திருவுருவை" எனத் தொடங்கும் பெரியபுராணத் திருவிருத்தத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் பிரசங்கம் செய்தார். அது ஸுஜன மனோ ரஞ்ஜனீ பத்ரிகையில் பிரசுரிக்கப்பட்டது. அதைகண்டு மகிழ்ந்த கோயமுத்தூர் சைவசித்தாந்த சபைத் தலைவர் திருச்சிற்றம்பலப் பிள்ளை அவர்கள், இவரை அங்கு வரும்படி வேண்டிக்கொண்டார். இவரும் அதற்கியைந்து, அவ்வாண்டு ஆவணிமாதத்திற் புறப்பட்டு, மேலைச்சிதம்பரம் எனும் திருப்பேரூரையடைந்து, "உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்" என்று தொடங்கும் பெரியபுராணக்காப்புச் செய்யுளையும், "அளவாயளவதனளவாய்" எனத்தொடங்கும் பேரூர்புராணத் திருச்செய்யுளையும், பீடிகையாகக்கொண்டு, அச்சபையிலே உபந்யாஸம் செய்தார்.

பின்னர், "உடுமலைப்பேட்டை கல்யாணஸுந்தரம் பிள்ளை" என்பவருடைய அழைப்புக்கிணங்கி, அங்குசென்று வைதிகசைவ உபந்யாஸங்கள் செய்தார்.

அங்கிருந்து காசிக்குச்சென்று, சிவாலயதரிசனஞ் செய்துவிட்டு காசிக்கு அருகிலுள்ள "சிக்களூர்" என்னுமிடத்தையடைந்து, அங்குள்ள ஐரோப்பிய வைத்திய-சாலையில், [7]"பண்டிட்" எனும் மாச சஞ்சிகையில் அச்சிடப்பட்ட [8]ஸ்ரீ நீலகண்ட பாஷ்யத்தைப் பெற்றுக் கொண்டு, தமது ஜன்மபூமியான யாழ்ப்பாணம் சேர்ந்தார்.

[7] இதன் பிரதிகள் பாண்டிச்சேரி ப்ரெஞ்சு இந்திய ஆய்வியல் நிறுவனத்தின் புத்தகாலயத்தில் உள்ளன.

[8] வாரணாஸிக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில், ப்ரஹ்மஸூத்ரத்திற்கு நீலகண்ட சிவாசார்யார் செய்த சிவபரத்வமான பேருரையின் ஏடு கிடைத்தது. நீலகண்டரது பாஷ்யம், சங்கரர், ராமானுஜர், மாத்வர் ஆகியோரின் பாஷ்யங்களுக்கு முற்பட்டதாகும். நீலகண்ட பாஷ்யத்தை ப்ரதி செய்ய,

மஹாமஹோபாத்யாய. டாக்டர், உ.வே ஸ்வாமிநாத ஐயரைப் போலவே, அவரைவிட ஏழுவயது இளவயதினராகிய இவரும், முறையாக சிவதீக்ஷை பெற்றவர். 1884ம் ஆண்டு நிர்வாண தீக்ஷையும், ஆசார்யாபிஷேகமும் பெற்றுக்கொண்ட இவரது தீக்ஷாநாமம், அகோரசிவன் என்பதாகும்.

1886ல், "கந்தபுராண நவநீதம்" என்ற நூலை எழுதி, கொழும்பிலிருந்த, சேர். அருணாசலந்துரை முதலிய பிரபுக்களின் உதவியிடன் வெளியிட்டார். இக்காலந்தொடங்கி இவருடன் வசிக்கலானார், இவரது இளையஸஹோதரர் ப்ரஹ்மஸ்ரீ சிவ. சம்புநாதையர் அவர்கள். 1887ல், ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலரின் சீடர்களுள் ஒருவராகிய [9]இணுவில் நடராஜ ஐயர் என்பவர், செந்திநாதையரை சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சிக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஐயரவர்கள் இவரிடமே சிவஞான ஸித்தியார் எனும் சாத்திரத்தை, அதனுரைகளுள் ஒன்றாகிய ஞானப்ரகாசர் உரையோடு பயின்றார்.

பின்பு, மறுபடியும் சென்னைக்கு வந்து அங்கு வசித்தார். அங்கிருந்தபோது, பெரியபுராணத்திலுள்ள "சிவனடியே சிந்திக்கும்" எனத்தொடங்கும் செய்யுட்கு, ஒருவர் கூறியபொருளைக் கண்டித்து, உண்மைப்பொருள் இதுவாம்,

---

ஐயரவர்கள், காசியில் ப்ராஹ்மண போஜனம் வழங்கும் போஜனசாலைகளுக்குச் சென்று, அங்கே கொடுக்கப்பெறும் இரண்டுஅணா பூரிதக்ஷிணையைப் பெற்று, அதில் எண்ணைவாங்கி விளக்கெரித்து அவ்வெளிச்சத்தில் எழுதுவார். அதற்கும் பணம் போதாத காரணத்தால், ஒரு இடத்தில் மட்டுமில்லாமல், ஐந்து இடங்களுக்குச் சென்று, சாப்பிட்டேன், என்று பெயர் செய்து, பத்தணா பூரிதக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு, எண்ணை வாங்கிவந்து, அரும்பாடுபட்டு நீலகண்ட பாஷ்யத்தை பிரதி செய்துள்ளார் ஐயரவர்கள், என்றுக் குறிப்பிடுகிறார்

காண்க: மதுரை. திரு. யாழ். பாலசுந்தரம் அவர்கள்.l 4வது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டுச் சிறப்புமலர். தருமை ஆதீனம்: பக்கம்: 279

[9] இவர், சிவஞான சித்தியார் முதலிய தமிழ் சைவசித்தாந்த சாத்திர நூலகளிலும், பௌஷ்கரம் முதலிய ஸம்ஸ்க்ருத நூலகளிலும், பாண்டித்யமுடையவராயும், சிறந்த சைவசித்தாந்தியாயும், பலமாணாக்கர்களுக்கு சைவசித்தாந்த உபதேசஞ் செய்பவராயும், யோகாப்யாஸம் செய்பவராயுமிருந்து, சோபக்ருத் வருடம், மார்கழி மாதம், 1903ல் சிவபதமடைந்தவர்.

என உணர, "ஞானபோத விளக்கச் சூறாவளி", எனும் நூலினை வெளியிட்டார். பின்னர், சேலம் ஜில்லாவைச் சேர்ந்த திருப்பற்றூர் என்ற ஊருக்குச் சென்று, அங்கிருந்து "அம்ருத போதினி", என்ற பெயரில் பத்திரிகை நடத்தத் துவங்கி, சிலகாலம் நடத்திவந்தார். இதன்மூலம், சைவஸமயத்தைத் தூஷித்துத் தவறாகக் காட்டும் விவிலிய மத நூல்களைக் கண்டித்து, பல்வேறு கட்டுரைகள் எழுதினார். இயல்பாகவே வாதத்திறமையும், தர்கசாஸ்த்ரத்தில் ஆழ்ந்தபயிற்சியும் உடையவர் ஐயரவர்கள், மேலும் [10]நாவலர் பெருமானிடமும் பயின்றவர், என்பதால் இவரது கண்டனங்கள் மறுக்க-முடியாதவைகளாக விளங்கின.

---

[10] நாவலர் பெருமானது காலத்தில், சுமார் 290 சைவப்பள்ளிக்கூடங்கள் கிறிஸ்தவப்பள்ளிக்கூடங்களாகின. நாடெங்கிலும், சுமார் 9 புரொடெஷ்டண்ட் பாதிரிமார்களும், கத்தோலிக்கப் பாதிரிமார்களும், இவர்களுக்கு உதவியாக, எண்ணற்ற போதக போதகிகளும் நியமிக்கப்பட்டு, பிரசாரம் வெகு தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவர்கள் அனைவரையும் எதிர்த்து, முதலில் தனியே யுத்தம் செய்தவர் நாவலர்பெருமான்.

கிறிஸ்தவர்கள், தமது சமயபோதனையைக் காட்டிலும், சைவசமயத்தை இகழ்வதையே அதிகம் செய்துகொண்டிருந்தனர்.

அதைக்கண்டிப்பதைத் தன் உயிரினும் மேலான பணியாகச் செய்தவர் இவர். இவரது பணியைக்கண்ட சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர், நீர்வேலி சங்கரபண்டிதர் ஆகியோரும், நாவலர் பெருமானுடன் இணைந்து பணியாற்றினர். கிறிஸ்து மதத்தை கண்டனம் செய்யும் முகமாக, நாவலர் பெருமான், சைவதூஷண பரிஹாரம், சுப்ரபோதம், வச்சிரதண்டம், விவிலிய குற்சிதம் ஆகிய நூல்களையும், சுன்னாகம் முத்துக்குமாரசுவாமிக் கவிராயர் ஞானக்கும்மி, யேசு மத பரிகாரம் எனும் நூல்களையும், நீர்வேலி சங்கர பண்டிதர், கிறிஸ்து மத கண்டனம், மிலேச்ச மத விகற்பம் ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டு, சைவசமயத்தை நிலைநாட்டியுள்ளார்கள்.

பரசமயக் கோளரியாகிய நாவலர், அவதாரம் செய்திலராயின், யாழ்ப்பாணம் முழுதும் கிறிஸ்து நாடாகவும், சைவஆலயங்கள் யாவும் கிறிஸ்தவ ஆலயங்களாகவும் மாறியிருக்கும் என்று குறிப்பிடுகிறார் த. கைலாச பிள்ளை.

காண்க. ஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம். பக்கம். 68, 69, 70, 71. அவரது அடிச்சுவற்றை ஒட்டியே வந்தவர் ஐயரவர்கள். எனவே தான் கிறிஸ்துமத கண்டனம், கட்டாயம் செய்யவேண்டிய ஒன்று, என்பதை உணர்ந்து, அனேக கண்டன நூல்களை இயற்றுகிறார்.

அக்காலத்தில், சென்னையிலுள்ள கிறிஸ்தவருள் சிலர், "சிவனுந் தேவனா" என்னும் பெயரில், துண்டு பிரசுரம் ஒன்றை வெளியிட்டார்கள். இதனைக் கண்ணுற்ற சென்னைக் காசிச் செட்டியாரது வீதியிலேயுள்ள "இந்து லகுலேக" சங்கத்தின் தலைவராகிய சை. இரத்தினச் செட்டியார் என்பவர், இவரை ஒரு கண்டனம் எழுதித் தரும்படிக் கேட்டார். அதற்கிணங்கச் [11]"சிவனுந் தேவனா எனும் தீய நாவுக்கு ஆப்பு", எனப்பெயர் கொடுத்து, ஒரு நூலை எழுதிக் கொடுத்தார். இதுவும், "வஜ்ரடங்கம்" எனும் மற்றொரு நூலும், "கிறிஸ்துமத கானன குடாரி" என்னும் பெயரோடு, அச்சங்கத்தாரால் வெளியிடப்பட்டன. பின்னர் ஒரு நாளில், இவரது பிரசங்கத்தின்போது, சிதம்பரம், "ப்ரஹ்ம வித்யா" பத்ராதிபரும், பல பண்டிதர்களும் கூடி, "கிறிஸ்துமத கானன குடாரி" என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினர்.

திருமங்கலக்குடி, சூரியனார்கோயில் ஆதீனத்து, ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமார தேசிகர் என்பவர், இவருக்கு "சித்தாந்த சிகாமணி", என்னும் பட்டத்தை வழங்கியுள்ளார் என்பது

"நிறைகல்வி தவவொழுக்கம் சான்றாண்மை
கண்ணோட்ட நெடுகுமன்பு
பொறைமேன்மைச் சிவஞான முதிர்ச்சியனுபூதிமுதற்
குணங்களெல்லாம்
குறையாம னிறைசெந்தி நாதமறை யோய்நின்னைக்
குறித்தியாமிட்ட
மறைவாய்மைச் சித்தாந்த சிகாமணியாம்
பெயர்பிறர்க்கு வழங்கலாமோ"

என்னுஞ் செய்யுளால் அறியமுடிகிறது.

---

[11] ஐயரவர்கள், நாவலர்பெருமானது வித்யாசாலையில் பணியாற்றிவரும் பொழுது ஒருநாள் நாவலர்பெருமான், ஐயரவர்களுக்கு, கைலாயத்திலே சுவாமியும் தேவியும், சூதாடினகதையின் உண்மைப்பொருளை எடுத்துக்கூறியபோது, ஐயரவர்கள் பரவசமானதாகவும், அக்கருத்தை அவர் இந்நூலில் விளக்கியிருப்பதாகவும் குறிப்பிடுகிறார் த. கைலாச பிள்ளை. காண்க: ஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம். பக்கம் 16

1882ஆம் ஆண்டு, [12]"ஞான ரத்னாவளீ", எனும் ஒருநூலை எழுதி வெளியிட்டார். அக்காலத்துச் ஸன்யாஸி ஒருவர், சென்னைத் தங்கச்சாலைத் தெருவில், "ஸூத ஸம்ஹிதா" ப்ரஸங்கம் செய்து வந்தார். அப்போது அறுபத்து மூன்று நாயன்மார்களுள் சிலரைத் தூஷித்துவந்தார். இதையறிந்த இவர், "வீரபத்ராஸ்த்ரம்" எனும் ஒரு நூலை எழுதி, அச் ஸன்யாஸியாரது போலி ந்யாயங்களைத் தகர்த்தார்.

பின்னர் திருவாளர்கள்: கு. ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியார், சை. ரத்தினச் செட்டியார், விஜயத்துவஜ பத்ராதிபர் முதலிய பெரியோர்களது கருத்துக்கிசைந்து, "விவிலிய குற்சித கண்டன திக்காரம்", என்னும் நூலைஎழுதி வெளியிட்டார். இது, ஆறுமுகநாவலரது "[13]விவிலிய குற்சிதம்", எனும் நூலுக்கு, கிறிஸ்தவரால் எழுதப்பெற்ற மறுப்பு.

சைவாகம ஸித்தாந்தங்களின் மேல்கொண்ட காதலால் காசிப்பயணம்

இணுவில் நடராஜ ஐயரிடம் பயின்றதால், சைவாகம ஸித்தாந்த நுட்பங்களைத் தெரிந்துகொள்ளப் பேரார்வம் கொண்டிருந்த ஐயரவர்கள், 1888ல், [14]காசிநகரத்துக்குச் சென்று, பத்துவருடகாலம் வாழ்ந்தார். அக்காலத்தில், வேத சிவாகமங்களை வேறூன்றிப்படித்தார். அச்சமயத்தில், ஸமய நூல்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, அருகிலுள்ள பல ஊர்களுக்கும் சென்று, சுவடி சேகரித்து வந்தார்.

[12] கிறிஸ்தவ மத பிரசாரம் அதிகமாக நடந்துகொண்டிருந்ததனால், நம்மக்கள் நமது சமய உண்மையை உணர்ந்துகொள்ளும் பொருட்டு, இதை எழுதி, 1892ல் வெளியிட்டுள்ளார் ஐயரவர்கள். இவர் காசியில் வசித்தகாலம் இது.

[13] இந்நூலை, ஐயரவர்கள், தாம் இயற்றியதாகவே விவிலிய குற்சித கண்டன திக்காரத்தில் குறிப்பிடுவதாகக் கூறுகிறார் திரு. க. கணேசலிங்கம் அவர்கள். காண்க:- காசிவாசி செந்திநாதையர், பக்கம். 62.

[14] இவர் காசிக்குக்குச் செல்லும்முன் இயற்றி வெளியிட்ட "சென்னை ஆரியனார் பிரமம், பரபிரமம் ஆகாத சீவபிரமம்" என்ற நூலுக்கு பேதவாத திரஸ்காரம், செந்திநாதையர் துர்வாத மறுப்பு என்ற ஒரு நூலை ஆர்யன் என்பவர் எழுதி 1897ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். ஐயரது இந்நூலைப் பற்றிய குறிப்புகள், இவரைப் பற்றி எழுதப்பட்ட இரண்டுநூல்களிலும் காணப்படவில்லை.

அங்கு வசிக்கும் காலத்தில், சிதம்பரம், "ப்ரஹ்ம வித்யா", முதலிய பத்திரிகைகளிலே, வைதிக சைவசித்தாந்தக்கு மாறாக வெளிவந்த விஷயங்களைக் கண்டித்து எழுதியவற்றை, "இந்து சாதனம்", "விவேக திவாகரன்", "நாகை நீலலோசனீ", "விஜய த்வஜம்", "வெற்றிக் கொடியோன்" முதலிய பத்திரிகைகளிலே வெளிப்படுத்தி வந்தார்.

இவர், "இந்து சாதனம்" இதழில் எழுதிய, "வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயம்", என்னும் விஷயத்தைக் குறித்த கட்டுரைகளைத் தொகுத்து, நல்லூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ கைலாச பிள்ளை அவர்கள், ஏவிளம்பி வருடம் சித்திரை மாதம் வெளியிட்டுள்ளார்.

காசிவாசி எனப்படுதல்

காசிக்ஷேத்திரத்தில் ஒரு கர்பகாலமாகிய 10மாதங்கள், யார் தொடர்ந்து வசிக்கிறாரோ, அவர், காசிவாசி ஆகிறார் என்பது மரபு. அவ்வகையில், பத்துஆண்டுகாலம் காசியில் தங்கி, காசிவாசியானார் ஐயரவர்கள்.

திருவொற்றியூர் வாஸம்

1898ல், காசியில் இருந்து திரும்பிய இவர், திருவொற்றியூரில் சிலகாலம் வசித்தபின், அங்குள்ள பழவேற்காடு, எனும் சிற்றூரிற் சிலகாலம் தங்கியிருந்து, அனேக உபந்யாஸங்களைச் செய்துவந்தார். அப்போது, ஸ்ரீ-ல-ஸ்ரீ ஸோமஸுந்தர நாயகர் அவர்களது விருப்பத்தின் பேரில், "சென்னையிலுள்ள ஏகாம்பரேச்வரர் ஸன்னிதானத்திலே", ஒரு உபந்யாஸம் செய்தார். இவரது சொல்வன்மையும். கல்வியின் ஆழமும் கண்ட பலர், இவரின் சீடர்களானார்கள். அவர்களுள், ஸ்ரீ-ல-ஸ்ரீ ஸோமஸுந்தர நாயகர், அவரது சிஷ்யர் வேதாசலம், ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை, புரசை ஏகாம்பரமுதலியார், அவரது மனைவி ஆண்டாளம்மாள் எனப் பெயரிய மங்கையர்க்கரசியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலத்தில், இவர், சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள அறிஞர்கள் சிலரால் அமைக்கப்பட்ட சபைக்குத் தலைவராயும், யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி, நா.கதிரைவேற் பிள்ளையவர்கள் சிறந்த உபந்யாஸகராயும் இருந்துள்ளனர்.

மாயாவாதத்தை எதிர்த்து, கதிரைவேற் பிள்ளையவர்கள் ஆற்றிய ஒரு பேருரையைக்கேட்ட சபையோர், அவருக்கு, "மாயாவாத த்வம்ஸ கோளரீ", என்ற பட்டத்தை, ஐயரவர்கள் மூலம் வழங்கினர்.

பின்னர், இவர் 1901ம் ஆண்டு, பாண்டிநாட்டிலுள்ள சிவஸ்தலங்களையும், குஹஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு, அமராவதிப்புதூரில் வசிக்கும் மதுரை, மீனாக்ஷியம்மன் திருக்கோயிலின் தேவஸ்தானசபை அங்கத்தவர்களுள் ஒருவராகிய திருவாளர், வயி. நாக. ராம. இராமநாதஞ் செட்டியார், என்பவரின் வேண்டுகோளின்படி, மதுரையம்மை குருபூஜா மடத்திலே வசித்து வந்தார். அப்போது, மதுரையிலுள்ள "ப்ரஹ்மஞானஸபா" மண்டபத்திலே, திருவாளர். திரவியம்பிள்ளை, என்பவர் வேண்டிக்கொண்டபடி, ஒரு உபந்யாஸம் செய்தார்.

திருப்பரங்குன்ற வாஸமும், வித்யாலய ஸ்தாபனமும்

1902ம் ஆண்டு, ஸுப்ரஹ்மண்யப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம் வந்து சேர்ந்த ஐயருக்கு, அப்போது வயது 54. அயராது, ஓயாது பணிசெய்த காரணத்தால், உடல் பல்வேறு வகையில் பலவீனம் அடைந்திருந்தது. ஆனாலும், அதைப் பொருட்படுத்தாமல், முன்பைவிட அதிகமான பணிகள் செய்யத்துவங்கினார் ஐயரவர்கள்.

அக்காலத்தில், அங்கிருந்த சைவாபிமானிகளின் ஆதரவில், [15]"வைதிக சுத்தாத்வைத சைவஸித்தாந்த வித்யாசாலை", என்ற பாடசாலையை நிறுவி, அதன் மூலம், தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும், சைவஸித்தாந்த தத்துவநுட்பங்களைப் போதித்து வந்தார்.

---

[15] இது திருப்பரங்குன்றம் ஸன்னிதிவீதியில் அமைந்துள்ள மயில் மண்டபத்துக்குக் கிழக்குபாகத்தில் அமைந்திருந்ததாகக் தமது ஈழத்துத் தமிழ் புலவர் சரித்திரம் எனும் நூலில் குறிப்பிடுகிறார். சி. கணேசையர் அவர்கள். இக்கருத்தையே அந்நாளில் ஐயரவர்களிடம் சிலகாலம் பயின்ற சென்னிமலை காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகளும் கூறியதாகக் குறிப்பிட்டார் ஸ்வாமிகளின் மாணவர்களுள் ஒருவராகிய புலவர் மதுரை திரு நீ. சீ. சுந்தரராமன் அவர்கள்.

அப்போது, பாலவனத்தம் ஜமீன்தாரும், நான்காவது தமிழ்ச்சங்க ஸ்தாபகருமாகிய, ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் விரும்பிய வண்ணம், "செந்தமிழ்" எனும் பத்ரிகைக்கு, 'திருப்பாசுரம்', 'உள்ளது', 'திருச்சிற்றம்பலம்', 'கடவுள்' என்னும் தலையங்கங்களோடு கூடிய விஷயங்களை, எழுதி உதவினார். இவ்விஷயங்கள், செந்தமிழ் முதல் தொகுதியிலும், இரண்டாம் தொகுதியிலும் வெளிவந்துள்ளன.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார், "ஞானாமிர்தம்", என்ற நூலைத் திருத்தி அச்சிட்டபோது, இவரும் சங்கத்தினர்க்கு வேண்டிய உதவிபுரிந்துள்ளார்.

"வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்தப் படம்" என்ற ப்ரணவப் படத்தை, 1904ல் வெளியிட்டார். இதனைப் பாராட்டி, இவருக்கு, "ஸித்தாந்த பானு" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

இக்காலத்தில், கருங்குழி ராமலிங்கம்பிள்ளை அவர்களின் பாடல் காரணமாக, சென்னையிலுள்ள சிலருக்கும், கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கும், சென்னை நீதிமன்றத்தில் ஒருவழக்கு நடைபெற்றது. அவ்வழக்கில், நேரில் சென்று ஸாக்ஷியம் அளித்துள்ளார் ஐயரவர்கள். வழக்கு முடிந்தபின்னர், பிள்ளையவர்கள் இவருக்கு எழுதி அனுப்பிய கடிதத்தின் ஸாரம்:-

"நீதிபதியவர்கள் முதல் பலரும் வியக்கும்வண்ணம், ஸ்வாமிகள் எழுந்தருளித் திருவாய்மலர்ந்தருளிய வாக்கன்றோ எமக்கு இப்பெரும் வெற்றியை உண்டாக்கியது. ஸ்வாமிகள் பரங்குன்று நோக்கி, என்னைப் பார்த்துநின்று, "நின் வழக்கு நினக்குச் செயமாகவே முடியும்; அங்ஙனமன்றி மாறுபடவரின் நீறுகண்டிகை வேல்மயில் என்பனவற்றை வேண்டிலன்", என அன்பால் நைந்து அருளிய ஆசிமந்த்ரம், என்மனதை விட்டு அகலாது. இத்துணை அன்பும் ஆர்வமும் உளதேல், எமக்கு அபஜெயமும் எய்துவதாமோ?" என்றுத் துதிக்கின்றார்.

1906ஆம் ஆண்டிலே, தேவகோட்டைச் சைவசீலர்களாகிய திருவாளர்கள்:- அரு. சோம. சோமசுந்தரம்

செட்டியார், மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் ஆகிய இருவருடைய பொருளுதவியைப் பெற்று, திருமங்கலத்தில், "செந்திநாதசுவாமி அச்சு யந்த்ரசாலை" என்னும் பெயரால், ஒரு அச்சகத்தை நிறுவி, தாம் எழுதிய [16]"நீலகண்டபாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு", "ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ய மாட்சி", "வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்தத் தத்துவப் பட வினாவிடை", "விவிலிய குற்சிதக் குறிப்பு", முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார்.

அக்காலத்தில், கோட்டையூரில் வசித்த ஸந்யாஸி ஒருவர், 'ஆதிசைவகுலத்தில் உதித்தவனது முகத்தைத் தகர்க்கும் கோல்' எனப் பொருள் தரும் [17]"ஆதிசைவநாமக கௌலேயக முகபங்க முத்கரம்" என்னும் புத்தகவாயிலாகவும்,

---

[16] இக்காலத்தில் ஆதிசைவகுலத்தில் உதித்தவரும் சைவசித்தாந்த சரபமும், பின்னாளில் ஐயரவர்களின் அடிச்சுவட்டை ஒட்டி காசிவாசியானவரும், சென்னிமலை என்ற ஊரைச்சேர்ந்தவரும் பழனி வாசருமான ஸ்ரீ-ல-ஸ்ரீ ஈசான சிவாசார்ய ஸ்வாமிகளும் மற்றும் அறுவரும் வந்து சிலகாலம் இவரிடம் சைவசித்தாந்த நுட்பங்களைப் பயின்றுவந்துள்ளனர். அப்போது ஐயரவர்கள் இவர்களை "ஸப்த ரிஷிகள்" என்று அழைப்பார்களாம். காண்க: தேவகோட்டை, சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் மணிவிழா மலர், 1975 பக்கம்.

[17] திருச்சி ஜில்லா, பச்சாம்பேட்டை எனும் ஊரைச் சேர்ந்தவர், சிவஸ்ரீ ஸத்யோஜாத சிவாசார்ய ஸ்வாமிகள். இவர், 1908ம் வருடம், தியோஸபிக்கல் ஸொஸைடி, எனும் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்ட ஒரு குறிப்பை, (சித்தாந்த சாஸ்த்ர தூஷணம்) கண்டித்தெழுதும்போது, அதற்கு "வேதாகம தாரதம்யம்", என்று பெயர் கொடுத்துள்ளார். இம்மறுப்பு முடிவடையும் முன், தேவகோட்டையில் இருந்த யோகானந்த ஸ்வாமி என்ற ஸன்யாஸி ஒருவர், சிவாகமங்களை நிந்தித்ததாக, காளையார்கோயில் குருக்களொருவர் இவரிடம் தெரிவிக்க, ஆசிரியர், வேதாகம தாரதம்யத்தின் 73ம் பக்கத்திலிருந்து 100ம் பக்கம் வரை வேதாந்த சாஸ்த்ரம், பசுமேதம், கலிஸன்யாஸம் முதலியவைகளை மிகவும் கண்டித்துள்ளார். இதற்கு மறுப்பாகவே இந்நூலை எழுதுகிறார் அந்த ஸன்யாஸி. ஸன்யாஸியாரது சிவாகம நிந்தனையை சகிக்க முடியாமல், அவரது இரண்டு நூல்களையும் கண்டித்து எழுதுகிறார் ஐயரவர்கள். ஆனால், சிவஸ்ரீ ஸத்யோஜாத சிவாசார்ய ஸ்வாமிகளோ ஸன்யாஸியக் கண்டித்து, "சிவநிந்தக ப்ரச்சன்ன பௌத்த க்ரோடபங்க வஜ்ராயுதம்" எனும் நூலையும், அவரது சிஷ்யர், தத்புருஷ சிவன் என்பவர், ஐயரவர்களைக் கண்டித்து, "சிவாகம தூஷண பரிஹாரம்", என்று ஒருநூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.
காண்க:- விரதநிர்ணய விபரீத கண்டனம். கண்டனூர் சிவஸ்ரீ. அரு. இராமநாத குருக்கள். பக்கம்10, 11.

"தாந்த்ரிக துண்ட கண்டனம்" எனும் புத்தகவாயிலாகவும் சிவாகமங்களையும், ஆதிசைவர்களையும் கண்டித்து எழுதியிருந்தார்.

ஐயரவர்கள் இவ்விரு நூலகளையும் முறையே "வஜ்ரதண்டம்" "தாந்த்ரிக துண்ட கண்டகண்டனம்" என்னும் இரண்டு நூல்களை எழுதிக் கண்டித்தார்.

இன்னும் இவர் எழுதிய "மஹா உக்ர வீரபத்ராஸ்த்ரம்", திருச்செங்கோடு, சாம்பவஸ்ரீ சதாசிவபண்டித சிவாசார்யர் என்பவராலும், "சிவஞானபோத வசனாலங்காரதீபம்", "தேவாரம் வேதசாரம்" என்னும் நூல்கள், புரசைச் சுந்தர முதலியார் புதல்வர், ஏகாம்பரம் முதலியாரலும், "தத்துவவிளக்கம், மூலமும் உரையும்", காரைக்குடி, ஆ.வி. பழ சிதம்பரம் செட்டியாராலும், "சைவவேதாந்தம்" எனும் நூல், அதே ஊரைச் சேர்ந்த மூத்த. வெ. வெள்ளைச் செட்டியாராலும், அச்சிடுவிக்கப் பெற்று வெளிவந்தன.

பல்வேறு வகைகளில் சைவத்தொண்டுபுரிந்து வந்த ஐயரவர்கள், சிலநாட்கள் ஜ்வரநோயால் பீடிக்கப்பட்டிருந்து, ரக்தாக்ஷீ ஆண்டு, வைகாசிமாதம் 2ம் நாள், (15.05.24)ம் தேதி, வியாழக்கிழமை, பிற்பகல் 3 மணியளவில், சிவசிந்தையோடு தேகவியோகமடைந்தார்.[18]

செந்திநாதையரைப் பற்றிய அறிஞர்களது கருத்துக்கள்:-

ஆறுமுகநாவலர் பெருமான்:-

இலக்கண இலக்கியங்கற்றுச் சைவநூலுஞ் சிறிது ஓதி, விவிலிய நூல் முழுதுமுணர்ந்து, அவ்வளவிலமையாது, இங்கிலாந்திலே, எத்தனையோ பிரசித்த சபைகளிலே, கிறிஸ்துமத குருமார்களும், கிறிஸ்து மத விரோதிகளும் வாதித்த வாதப் புத்தகங்கள் பலவும் வாசித்தவர் (நம் ஐயரவர்கள்)

---

[18] கடைசி வரையில் இவருடன் வாழ்ந்து, இவரது பல்வேறு பணிகளுக்கும் உறுதுணையாயிருந்த இவரது ஸஹோதரர் சிவ. சம்புநாதையரவர்கள், இதற்கு பின்னர், மீண்டும் யாழ்ப்பாணத்திற்கே சென்று விடுகிறார் என்பது, இவர், 1936ம் ஆண்டு, ஏழாலை எனும் ஊரிலிருந்து, அச்சுவேலி குமாரசுவாமி குருக்களுக்கு, விரதநிர்ணய சம்பந்தமாக எழுதிய கடிதத்தின்மூலம் அறியமுடிகிறது.
காண்க:- விரத நிர்ணயம் சம்பந்தமான கடிதங்கள். வெளியீடு மாவிட்டபுரம் சைவசித்தாந்த சங்கம். பக்கம், 12, 13.

சைவசித்தாந்த மஹாஸமாஜ உதவித் தலைவர் J. M நல்லசாமிப் பிள்ளை:-

எமக்குத் தெரிந்தமட்டில், இத்தமிழ்நாட்டில், இருமொழியினும் வல்லுனராகி, அதிலும் வேதாகமநூல்களில் பயின்று, நம் ஆகமாந்தங்களையும் அதன் பூர்வோத்தரங்களையும் பூர்த்தியாயுணர்ந்து, அதிலும் அவ்வுண்மைகளை நம்மனோர் உணரும்பொருட்டு அனேக நூல்களையும் பத்திரிக்கைகளையும் பதிப்பித்து நம் சைவசமயத்தை வளர்த்துவந்தவர்களில் நம்மையரைவிட இன்னும் பெரியாரைக்கண்டிலம். நம் சைவத்துக்குப் பூர்வாசார்யாராகிய ஸ்ரீ நீலகண்ட சிவம் செய்தருளிய வேதாந்தசூத்ரபாஷ்யத்தைத் தமிழில் விருத்தியுரையுடன் வெளிப்படுத்தியது ஒன்றே நம் ஐயரவர்களின் புகழை நம் வடமொழி, தென்மொழி வாழ்ந்திருக்கும் வரை நிலைநாட்டும் என்பதில் ஐயமின்று.

தென்மொழியில் பயில்வோர்க்கு வடமொழிப்பயிற்சி இல்லை; வடமொழிவல்லுனர்க்குத் தென்மொழியில் தேர்ச்சியில்லை; ஆகவே சைவநூல் பயின்று வருவோர்கள் சைவசமயம் வேதாகம ஸ்மிருதி புராண இதிகாசங்களினால் பிரதிபாதிக்கப்பட்டது எனச் சொல்லிக்கொண்டுவரினும், வடமொழியில் உள்ள ஆதாரங்களை எடுத்துஆளாமலும், இவ்விருமொழியிலும் உள்ள நூல்களுக்கு ஒற்றுமையை எடுத்துக்காட்டாமலும் வாளா போயினர். அங்ஙனமாகவும், ஐயரவர்களே வடமொழியிலுள்ள ஆதாரங்களை எடுத்தாண்டும், அவ்விருமொழிகளினுமுள்ள நூல்களுக்கு ஒற்றுமையை எடுத்துக்காட்டியும் விளக்கியுள்ளார்கள்.

சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துக்குமார தேசிகர்:-

நிகழ்காலத்திலே தங்களைப் போல வேதாகமசாரமாகிய மெய்கண்டநூல் சொரூப தடஸ்த சித்தாந்த நுட்பமறிந்தவர்களாய் நாம் இதுகாறும் ஒருவரையும் கண்டதில்லை; அந்த நுட்பமறிந்த தங்களுக்குச் சித்தாந்த சிகாமணி என்கிற பெயர் அடுக்கும் என்று அளித்தேமன்றி [19] முகமனாய் அளித்தேமில்லை.

---

[19] முகமன் = உபசாரம்

சுவாமிநாத பண்டிதர்

"வடமொழி தென்மொழிகளில் வல்லுனராய் அவற்றோடு ஆங்கிலமும் பயின்று, ஸ்வமதஸ்தாபனமும் புறமத நிராகரணமும் செய்து சைவசமயத்தைப் பரப்புதற்பொருட்டும் தமிழ்க்கல்வியை விளக்குதற் பொருட்டும், உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்த ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் போல இருமொழியிலும் வல்லுனராய் ஆங்கிலமும் பயின்று ஸ்வமத ஸ்தாபனமும், புறமத நிராகரணமும் செய்தலினாற்றானே தம் காலம் கருத்து முதலியவற்றைப் போக்குகின்ற காசிவாசி- ஸ்ரீ-ல-ஸ்ரீ செந்திநாதையரவர்கள்".

பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை

"ஆறுமுகநாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர். டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் தமிழுக்குச் செய்த பணி போன்ற பெரும் பணியைச் செந்திநாதையர் சைவசமயத்துக்குச் செய்திருக்கிறார். அவர் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரதிநிதி". அவரைப்பற்றி பிரத்யேகமாக அறிதல் வேண்டும்.

நீலகண்டபாஷ்யத்திற்கான தமிழ்மொழி பெயர்ப்பில் உபக்ரமணிகை என்ற பெயரில் செந்திநாதையர் எழுதிய இருநீண்ட பகுதிகள் உண்டு. இதில் ஒவ்வொரு பகுதிக்கும் செந்திநாதையருக்கு ஒவ்வொரு கலாநிதிப் பட்டம் கொடுக்கலாம்.

தமிழ்நாட்டுக்கும் தாம் பிறந்த ஈழநாட்டுக்கும் அந்த மகான் அளப்பில்லாத சேவை செய்திருக்கிறார். மாயாவாத மாருதத்தை ஆசமனம் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேஷனாகவே காட்சியளித்தார். தென்னிந்தியாவிலே நல்லசாமிப் பிள்ளை அவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தற்கும், ஆண்டாளம்மையார் சைவசித்தாந்த மழைபொழிதற்கும் நமது ஐயர் உறுதுணையாயிருந்தார். வேதாசலம் அவர்களின் குருவாகிய சோமசுந்தர நாயகர் அவர்களின் மாயாவாத கண்டன சண்டமாருதத்துக்கும் ஐயர் ஊன்றுகோலாயிருந்தார். இங்கே மாயாவாத த்வம்ச கோளரீ திரு. நா. கதிரைவேற் பிள்ளையின் கர்ஜனைகளுக்கும், சுவாமிநாத பண்டிதர் அவர்களின் வீராவேசத்துக்கும், சிவஞானபோத திராவிட மாபாடிய வெளியீட்டுக்கும் மகான் செந்திநாதையரே மூலபுருஷர்.

காசிவாஸி
சாம்பவஸ்ரீ செந்திநாதையரின் நூல்களும் கட்டுரைகளும்
(அறிந்தவரையில்)

எண்	பெயர்	ஆண்டு
1	கந்தபுராண நவநீதம்	1886
2	ஞானபோத விளக்கச் சூறாவளி	1887
3	ஞானரத்னாவளீ	1888
4	சிவனுந் தேவனா எனும் தீயநாவுக்கு ஆப்பு	1888
5	சிவஞான போத வசனாலங்கார தீபம்	1916
6	சாண் க்ஷத்ரியப் பிரசண்ட மாருதம்	1883
7	சென்னை ஆரியனார் பிரமம் பரப்பிரம்மமாகாத சீவபிரமம்	1896
8	சைவ வேதாந்தம்	1920
9	ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ய மாட்சி	1892
10	தத்துவ விளக்க உரை	1918
11	தாந்த்ரிக துண்ட கண்ட கண்டனம்	1910
12	நீலகண்ட பாஷ்யத் தமிழ்மொழி பெயர்ப்பு	1907
13	தேவாரம் வேதசாரம்	1917
14	மஹா உக்ர வீரபத்ராஸ்த்ரம்	1915
15	வஜ்ர டங்கம்	1888
16	வஜ்ரதண்டம்	1910
17	விவிலிய குற்சிதக் குறிப்பு	1906
18	விவிலிய குற்சித கண்டன திக்காரம்	1888
19	வீரபத்ராஸ்த்ரம்	1888
20	வைதிக சுத்தாத்வைத சைவசித்தாந்தப் பட வினாவிடை	1907
21	வைதிக சுத்தாத்வைத சைவசித்தாந்த சமயம்	1897

சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப் படம் எனும் பிரணவ படம் – 1904

கட்டுரைகள்

1. அளவாயளவதனளவாய்
2. உள்ளது
3. உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்
4. கடவுள்
5. ஞானத்தின் திருவுரு
6. சாண க்ஷத்ரிய ப்ரசண்ட மாருதம்
7. திருச்சிற்றம்பலம்
8. திருப்பாசுரம்
9. நால்வகை வழிபாடு
10. vaidika saiva siddantha

Bibliography - உசாத்துணை நூல்கள்

என்	நூல்பெயர்	ஆசிரியர், வெளியீடு	ஆண்டு
1	ஆறுமுகநாவலர் சரித்திரம்	த. கைலாசபிள்ளை ஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்ரகாச வித்யாசாலை, சிதம்பரம்.	1999
2	ஈழநாட்டுப் புலவர் சரித்ரம்	சி.கணேசையர் சுன்னாகம் திருமகள் அழுத்தகம்	1939
3	காசிவாசி செந்திநாதையர்	க. கணேசலிங்கம், செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, குப்பிழான்.	1978
4	காசிவாசி செந்திநாதையர் {4வது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டுச் சிறப்பு மலரில் இடம்பெற்ற கட்டுரை}	யாழ். பாலசுந்தரம், மதுரைதருமை ஆதீனம்	2008
5	தத்துவ உலகில் தடம் பதித்தபண்டிதர் மு. கந்தையா	கலாநிதி க.கணேசலிங்கம் உலக சைவப்பேரவை, லண்டன்.	2002
6	தேவாரம் வேதசாரம்	தி.ந ராமச்சந்திரன் கலாஸம்ரக்ஷண சங்கம், தஞ்சாவூர்.	1999
7	பேதவாத திரஸ்காரம்	ஆர்யன் மதராஸ் ரிப்பன் ப்ரஸ்	1897
8	மணிவிழா மலர் தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்	சுப. அண்ணாமலை	1975
9	விரத நிர்ணய விபரீத கண்டனம்	அரு. ராமநாதகுருக்கள், கண்டனூர்மாவிட்டபுரம் வேதாகம சைவசித்தாந்த சங்கம்	1937
10	விரதநிர்ணயம் சம்பந்தமாகக் கிடைத்த கடிதங்கள்	அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள்மாவிட்டபுரம் சைவசித்தாந்த சங்கம்	1937
11	Saiva siddantha - An Explication and assessment by scholars the world over (Volume 1)	Sekkizhar adi-podi T.N. Ramachandran Dharmapura Adheenam	1984

நிறைவுரை

சைவசமயத்தைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த ஒரு மகான் காசிவாசி சாம்பவஸ்ரீ செந்திநாதையர். அவர்களைப் பற்றிய இக்கட்டுரையை எழுதுமாறு என்னைப் பணித்த, பிள்ளையார்பட்டி, ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில் அர்ச்சகர், ஸ்ரீ கற்பக விநாயகர் வேதாகம வித்யாலய முதல்வர், சிவநெறிக் கழக ஸ்தாபகர், சிவநெறிச்செம்மல், விகாஸ ரத்ன, டாக்டர். சிவஸ்ரீ கி. பிச்சை சிவாசார்யார் அவர்களது சரணாரவிந்தங்களை, மனம், மெய், மொழிகளால் வணங்குகின்றேன். ஐயரவர்களைப் பற்றி அடியேன், எனது தாயின் தாய்மாமன், மானாமதுரை, சைவசித்தாந்த சரபம் டாக்டர். சிவஸ்ரீ தெ. தக்ஷிணாமூர்த்திபட்டர் அவர்களிடமிருந்த, ஐயரவர்களின் சில நூல்களின் மூலம், முன்னமேயே அறிந்திருந்திருக்கிறேன். ஆனாலும், இக்கட்டுரை எழுதியதன் மூலம், அவரைப்பற்றி அதிகமாக அறியமுடிந்தது. மேலும், நாமும் இவ்வாறு பணிசெய்ய முயற்சிக்க வேண்டும், என்ற எண்ணம் இதை எழுதிவரும்போதே, பன்மடங்காகியுள்ளது. இக்கட்டுரையை எழுதுவதற்கு, எனக்கு, இவரது வாழ்க்கைக் குறிப்பு நூலகள் இரண்டையும், ஐயரவர்கள் இயற்றிய நூல்கள் சிலவற்றையும் தந்துதவிய, தஞ்சாவூர், சேக்கிழார் அடிப்பொடி, ப்ரஹ்மஸ்ரீ தி. ந ராமச்சந்த்ரன் அவர்களுக்கும், அடியேன் சைவசமய நூல்களை சேகரிக்கும் பொருட்டு 2003ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது எனது வேண்டுகோளுக்-கிணங்க தனது புத்தகங்கள் பலவற்றை, குறிப்பாக செந்திநாதையரின், தத்துவ விளக்கம், மூலமும் உரையும், மற்றும் வைதிக சுத்தத்துவித சைவசித்தாந்தத் தத்துவப் படவினாவிடை ஆகிய இருநூ;ல்களையும், ப்ரதி செய்து, எனக்கனுப்பிய, கோப்பாய் சிவம் எனும் இணுவில் சிவானந்த சர்மா அவர்களுக்கும், மதுரை, நான்காம் தமிழ்ச் சங்கத்தின் “செந்தமிழ்” எனும் மாதப் பத்திரிகையில், 1904, 05 ஆண்டுகளில் வெளிவந்த, ஐயரது கட்டுரைகளை, அரும்பாடுபட்டு, மிகக் குறுகியகாலத்தில், எனக்கு வழங்கிய, மதுரை, போலிஸ் அதிகாரி DR. திரு.P.ஆறுமுகம் அவர்களுக்கும், அவரை

எனக்கு அறிமுகம் செய்துவைத்த, மதுரை, இம்மையில் நன்மை தருவார் திருக்கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ தர்மராஜ சிவம் அவர்களுக்கும், எனது, மனமார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

பேரன்புடன்
க. கார்த்திகேய சிவம்
ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்,
திருப்பரங்குன்றம்.

சாம்பவஸ்ரீ செந்திநாதையரின் வேண்டுகோள்

மத்துவர்களுக்கு ஆனந்ததீர்த்தரும், வைணவர்களுக்கு இராமானுஜாசாரியரும், ஏகான்மவாதிகளுக்குச் சங்கராசாரியரும் ஆசார்யர்களாய் அமைந்தாற் போல, சிவபெருமானை ஆண்டவர் என்றும், ஆன்மாக்களை அடிமை என்றுங் கொண்டு சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் சிவத்விஜர்-களுக்கும், மற்றைச் சைவசமயிகளுக்கும் ஆசாரியராய், (ஒரே முக்கியப் பொருள் பொதிந்த) பிரமசூத்திரங்களுக்குச் சத்தியார்த்தம் செய்து வைதிகசைவசமய ஸ்தாபனம் செய்த பரமாசார்யராகிய ஸ்ரீ நீலகண்ட சிவாசார்யாரது திருவுருவ பிம்பத்தைத் தொண்டைமண்டலத்து வடதிருமுல்லைவாயிலில் போல மற்றைய சிவாலயங்கள் தோறும் ப்ரதிஷ்டை செய்து, ஆவணி மாசத்துப் பூசநக்ஷத்திரத்திற் குருபூசை செய்து, இராப்போதிலே உற்சவம் நடாத்தி வைதிக சைவ சமயப் ப்ரபு திலகர்கள் யாவரும் பெரும்புகழையும் சிவபுண்ணியத்தையும் பெற்று நீடு வாழ்வார்களாக.

சிவம்.

இத்தொகுப்பில் காணப்படும் கட்டுரைகள் இடம் பெற்ற புத்தக விவரணம்

எண்	கட்டுரை இடம்பெற்ற நூல்	கட்டுரை பெயர்	வெளியீடு	ஆண்டு
1	கோலாலம்பூர் ஸ்ரீ மஹாமாரியம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக மலர்	சமயமும் சமுதாயமும்	ஸ்ரீ மஹாமாரியம்மன் தேவஸ்தானம் கோலாலம்பூர்	1986
2	சிங்கப்பூர் ஸ்ரீ ருத்ரகாளியம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக மலர்	உள்ளொளி பெருக்கும் வழி	ஸ்ரீ ருத்ரகாளியம்மன் ஆலயம் சிங்கப்பூர்	
3	சிவயோகம்	ஈசர்பாகத்து நேரிழை	டூடிங் ஸ்ரீ மஹாமாரியம்மன் ஆலயம் லண்டன்	2003
4	இலங்கை உசன் கந்தசுவாமி கோயில் மஹாகும்பாபிஷேக மலர்	சைவகாலப் பகுப்பு	உசன் கந்தசுவாமி கோயில் இலங்கை	1968
5	சிவாகம வித்யா (மாத இதழ்)	ஆகமம்	கொங்கு ஆதிசைவசபை கோவை	1941
6	சிவாகம வித்யா	சைவஸித்தாந்தம்	கொங்கு ஆதிசைவசபை கோவை	1939

என்	கட்டுரை இடம்பெற்ற நூல்	கட்டுரை பெயர்	வெளியீடு	ஆண்டு
7	சிங்கப்பூர் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக மலர்	கும்பாபிஷேக க்ரியா விளக்கம்	ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயம், சிங்கப்பூர்	2000
8	திருக்கேதீச்வரம் ஸ்ரீ திருக்கேதீச்வரர் ஆலய மஹாகும்பாபிஷேக மலர்	நித்யபூஜையும் அதன் தத்துவமும்	அருள்மிகு திருக்கேதீச்வரர் ஆலயம், திருக்கேதீச்வரம்	1976
9	மலேஷியா, பங்சார் ஸ்ரீ ராமலிங்கேச்வரர் ஆலய ப்ரஹ்மோத்சவச் சிறப்புமலர்	மஹோற்சவ விளக்கம்	ஸ்ரீ ராமலிங்கேச்வரர் ஆலயம் பங்சார், மலேஷியா	1986
10	மலேஷியா, ஜோகூர்பாரு ஸ்ரீ ராஜமாரியம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக மலர்	மாரியம்மன் மகிமை	ஸ்ரீ ராஜமாரியம்மன் ஆலயம், ஜோகூர்பாரு, மலேஷியா	1986
11	சாஸ்த்ர சூடாமணி, பேராசிரியர் சிவஸ்ரீ K.A ஸபாரத்ன சிவாசார்யாரின் பவளவிழா மலர்	உண்மைநெறி விளக்கம்	விழாநாயகரின் மாணவர்கள்	1997

என்	கட்டுரை இடம்பெற்ற நூல்	கட்டுரை பெயர்	வெளியீடு	ஆண்டு
12	நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டு மலர், மதுரை	மஹோத்ஸவம்	தருமை ஆதீனம்	2008
13	தேனி ஸ்ரீ ப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீட கும்பாபிஷேக மலர்	சிவாகமங்களின் சிறப்பு	வேதாந்த சாஸ்த்திர பிரசார டிரஸ்ட், தேனி	2005
14	சிவாகம - சிற்பாகம கலாநிதி சிவஸ்ரீ S. P ஸபாரத்ன சிவாசார்யாரின் மணிவிழா மலர்	ஆதிசைவர்மரபும் ஆகமங்களும்	சிவஸ்ரீ S. P ஸபாரத்ன சிவாசார்யார், சென்னை	2002
15	மயிலாடுதுறை அருள்மிகு மாயூரநாத ஸ்வாமி ஆலய மஹாகும்பாபிஷேக மலர்	யாகசாலை தத்துவமும் கும்பாபிஷேகமும்	திருவாவடுதுறை ஆதீனம்	2005
16	நான்காவது அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டு மலர், மதுரை	சிவாகமங்களில் சைவஸித்தாந்தம்	தருமை ஆதீனம்	2008